ராஜாஜி

— இரு நூல்கள்

# ஸோக்ரதர், ஆத்ம சிந்தனை

வாசகர் வட்டம் — சென்னை —

வாசகர் வட்டப் பிரசுரம் -1

இப்பதிப்பு "வாசகர் வட்டம்" — சிறந்த தமிழ்ப் புத்தகச் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கென அதன் பதிப்பாளரான "புக்வெஞ்சர்" (BOOKVENTURE) நிறுவனத்தினரால் நெ. 14, தணிகாசலம் செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை-17 — என்ற முகவரியில் வெளியிடப் பெற்றது.

பத்து பாயின்ட் ரோமன் எழுத்துக்களில், சென்னை தியாகராயநகர், "எவர்ரெடி அச்சக"த்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ. எஸ். வீரபத்ரனால் பைண்டு செய்யப்பட்டது.

மேலுறை, ஓரத்தாள் ஓவியம் :
கலாசாகரம் ராஜகோபால்

R ஒ'A600 N65
110311



# பொருளடக்கம்

## ஸோக்ரதர்

| | | | |
|---|---|---|---|
| ராஜாஜியின் கடிதம் | ... | ... | 6 |
| நூன்முகம் | ... | ... | 9 |
| தோற்றுவாய் | ... | ... | 11 |
| விசாரணைச் சபை முன்னிலையில் ஸோக்ரதர் | ... | ... | 15 |
| ஸோக்ரதர் பிரசங்கம் - 1 | ... | ... | 17 |
| ஸோக்ரதர் பிரசங்கம் - 2 | ... | ... | 37 |
| ஸோக்ரதர் பிரசங்கம் - 3 | ... | ... | 41 |
| சிறைச்சாலையில் ஸோக்ரதர்-கிருதர் சம்பாஷணை | ... | ... | 46 |
| ஸோக்ரதரின் மரணம் | ... | ... | 66 |

## ஆத்ம சிந்தனை

| | | | |
|---|---|---|---|
| ராஜாஜியின் முன்னுரை | ... | ... | 85 |
| சிந்தனை - 1— 52 | ... | ... | 87 |
| சிந்தனை - 53—103 | ... | ... | 127 |
| சிந்தனை - 104—157 | ... | ... | 142 |
| சிந்தனை - 158—180 | ... | ... | 164 |

Salem
30. 11. 24

Dear Satyamurti

Some parts of your Jail diary appear to have impressed you somewhat favourably. It induces me to send you another little thing over which I whiled away my time in prison. Here it is Socrates in Tamil as I rendered it. I confess I am desirous that people should read this little book. Will you read it for my sake.

Yours sincerely
C. Rajagopalachar

காலஞ்சென்ற ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி அவர்களுக்கு "ஸோக்ரதர்" புத்தகம் பற்றி ராஜாஜி எழுதிய கடிதம் மேலே உள்ளது.



# ஸோக்ரதர்

# நூன் முகம்

**ச**த்திய நெறியில் நின்று, அச்சம் என்பது சிறிதும் இல்லாமல் அதர்மத்தைக் கண்டவிடத்து அதனுடன் போர்புரிந்து நிற்கிறவனே சத்தியாக்கிரகி. அத்தகைய சத்தியாக்கிரகியின் போர் எப்பேர்ப்பட்டது? பிறருடைய அசத்தியம், அதர்மம், ஹிம்ஸை இவைகளை உண்மையில் வெல்ல வேண்டுமானால், தானும் அசத்தியம், அதர்மம், ஹிம்ஸை இவைகளை எவ்விதத்திலும் செய்யாமல் இருப்பதுதான். பிறரிடத்துள்ள சினம், பகை, தீமை இவைகளைப் போக்குவதற்கு வழிதான் அவைகளுக்கு மாறான பொறுமை, அன்பு, நன்மை இவைகளைச் செய்வதேயாகும். பழிக்குப் பழி வாங்கும் உலகப் போக்கையொழித்து,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

—என்ற திருக்குறள் வாக்கியத்தின் வழி நிற்றலுமாம். அநீதி செய்வாருடைய வலிமையைக் கண்டு அஞ்சாமல், உடல், பொருள், ஆவி

அனைத்தையும் அவருடைய அநீதிக்கு இரையாக்கி, மற்றவர்களைக் காத்தலுமாம்.

இந்நெறியில் வாழ்பவனுக்குச் சத்தியாக்கிரகி என்னும் புதிய பெயரைக் காந்தி மகாத்மா இட்டாரானாலும், இது புதிய கோட்பாடன்று; பழைய தர்மமே. சநாதனமான ஆரிய தர்மமும், கௌதம சாக்கிய முனிவரான புத்தர் உலகத்திற்கு உபதேசித்ததும், ஏசுநாதர் மீண்டும் உலகத்திற்கு எடுத்துக் காட்டியதும் இந்தத் தர்மமேயாகும்.

உலகத்தில் சிறந்தோங்கி விளங்கின சத்தியாக்கிரகிகள் நால்வர்: அவர்கள் புத்தர், ஸோக்ரதர், ஏசுநாதர், காந்தியடிகள் என்பவர். இவர்களில் ஸோக்ரதர், பாரத தேசத்தில் அவதரித்தவர் அல்ல; தமிழர்களுக்குச் சாதாரணமாய்த் தெரிந்தவரும் அல்ல. இந்த மகானது வெகு அற்புதமான மரண வரலாற்றை ஒருவாறு தமிழ் மக்கள் படித்துணரும் பொருட்டு இச்சிறு புத்தகத்தை, வேலூர் சிறைச்சாலையில் என்னை ஆங்கில அரசாங்கத்தார் தனி அறையில் அடைத்து வைத்திருந்த காலத்தில் பொழுதுபோக்காக எழுதினேன். நூலிலுள்ள பிழைகளைப் பொருட்படுத்தாமல், மகானது சரித்திரத்தில் அறியக்கிடக்கும் தத்துவங்களை உட்கொள்ளுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.



# ஸோக்ரதர்

## தோற்றுவாய்

கிரேக்க மகரிஷியாகிய ஸோக்ரதர், தர்மத்திற்காகப் பிராணனை அர்ப்பணஞ் செய்த மகாத்மாக்களில் ஒருவர். அவர் பரமபதமடைந்த சரித்திரத்தைத் தமிழ் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் குழந்தைகளும் அறிய வேண்டியது அவசியம். அவர் சுமார் இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்குமுன் கிரேக்க தேசத்தில் ஆதன்ஸ் நகரத்தில் அவதரித்தவர். அவர் தகப்பனார் ஒரு சில்பத் தொழிலாளர்; தாயார் ஒரு மருத்துவச்சி. ஸோக்ரதர் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மெய்யறிவுக்காகத் தத்தம் செய்தவர்; தம்முடைய கிரக கிருத்தியத்தையும் கவனியாமல் உண்மையான துறவு பூண்டவர்.* ஜனங்களுடன் சம்பாஷணை செய்து, அதன் வாயிலாய் அவர்களுக்குத் தர்மோபதேசம் செய்வதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தவர்.

ஸோக்ரதர் காலத்தில் ஆதன்ஸ் நகரம் மகா உன்னதமான கீர்த்தியைப் பெற்றுத் தனி அரசாட்சி யடைந்த

* மாத்தானவத்தையும் மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே.

—என்று பட்டினத்துப்பிள்ளையார் பாடியபடி, உண்மையான துறவுக்கு மழித்தலும் நீட்டலும் வேண்டா.'

இராஜாங்கமாக இருந்தது. காளிதாச பவபூதிக்குச் சமான மான கவிஞர்களும் நாடகாசிரியர்களும் கீர்த்தி பெற்ற இதி காச பௌராணிகர்களும் சில்பிகளும் இராஜதந்திர நிபுணர் களும் ஆதன்ஸ் நகரில் நிரம்பி யிருந்தார்கள். உஜ்ஜினி யைப் போலவும், பாடலிபுத்திரம் போலவும் மேல் நாட்டில் சிறப்புற்றிருந்தது அந்த நகர்.

ஆதன்ஸ் அரசாட்சி குடியாட்சி. நகரத்திலுள்ள பிரஜை களனைவரும் கூடிய மகாநாடே சர்வ அதிகாரத்தையும் வகித்துவந்தது. மகாநாடு கூடுங்காலத்தில் ஒவ்வொருவரும் தவருமல் பிரசன்னமா யிருக்க வேண்டுமென்பது விதி. பிரஜைகள் தங்களுக்காகப் பிரதிநிதிகளை மகாநாட்டுக்கு அனுப்புவது கிடையாது. நேராக அவர்களே கூடி இராச் சிய விவகாரங்களை நடத்தி வந்தார்கள். நியாய விசாரணை முறையிலும் இதே மாதிரி எல்லாரும் அதிகாரம் வகித்து வந்தனர். விவகாரங்களை விசாரித்துத் தீர்ப்புச் சொல்ல நீதிபதிகளைச் சீட்டுப் போட்டு ஜனங்கள் நியமிப்பார்கள். அந்த நீதிபதிகள் நியாய ஸ்தலத்தில் அமர்ந்து தங்கள் கடமைகளைச் செய்வார்கள். நகரத்தார் ஒவ்வொருவரும் இவ்விதம் நியாய ஸ்தலத்தில் அமர அருகராயிருந்தார்.

போடீயோ முற்றுகையில் தமது தாய் நாட்டின் ஆதீனத்தைக் காப்பதற்காக ஆதன்ஸிலிருந்து சென்ற சேனையில் ஸோக்ரதர் சேர்ந்திருந்தார். பசி, தாகம், குளிர் இவைகளைப் பாராமல் மகா வீரத்துடன் போர் முனையில் அவர் தம் கடமையைச் செலுத்தினர். அந்தச் சமயத்தில் மகாவீரர் ஆல்கிபியாதருடைய உயிரை ஸோக்ரதர் காப்பாற் றினர். அது மாத்திரம் அல்ல. அந்த யுத்தத்து வீரச் செயல்களுக்காக ஆதன்ஸ் மகா ஜனங்கள் கொடுத்த பெரும் பட்டத்தை ஆல்கிபியாதரே அடையும்படி, தாம் செய்த வீரச் செயல்களை யெல்லாம் மறைத்துக் கொண்டார். அதற்குப் பின் மற்ரெரு போர் நடந்தது. அதில் ஆதன்ஸ் நகரத் தார் பெரிய தோல்வியடைய நேர்ந்தது. தோல்வி யடைந் ததும், பயத்தினுல் மதிகுழம்பிச் சேனை சிதறி யோடிற்று. அச்சமயம் தைரியத்தையும் மன உறுதியையும் இழந்து





விடாமல் நின்று, ஒழுங்காகப் பின் சென்றவர் சிலரே. அச் சிலருள் ஸோக்ரதர் ஒருவர். சில காலத்துக்குப் பின்னர் அம்பிபள்ளியில் நடந்த யுத்தத்திலும் ஸோக்ரதர் மூன்ருவது தடவை ஆதன்ஸ் நகரத்தார் படையில் சேர்ந்து உழைத் தார். சாதாரணமாகச் சாதுக்களும் ஞானிகளும் வீரமற்றவர் களென்று ஜனங்கள் நினைப்பதும் சொல்வது முண்டு. அவ் வாறு நினைப்பதும் சொல்வதும் தவறென்பதையும், தைரிய மும் ஞானமும் சாத்துவிகமும்கூட ஞானிகளிடம் இருக்கு மென்பதையும் ஸோக்ரதர் வரலாற்ருலும் மற்ற மகாத்மாக் களின் வரலாற்ருலும் அறியலாம்.

ஸோக்ரதர் காலத்தில் கிரேக்க நாட்டில் ஒரு புதிய உணர்ச்சி பரவ ஆரம்பித்தது. புராதன தர்மத்தையும் மதத்தையும் சிலர் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அது காரணமாக, அவைகளின்மீது கொண்டிருந்த பற்று குறைய வும் அவைகளை மறுக்கத் துணியவும் ஏற்பட்டது. இவ் விதப் புதிய உணர்ச்சி அதர்மத்திற்குக் காரணமாகு மென்று கருதி, உலகப் பிரசித்தி பெற்ற நாடகக் கவிஞர் அரிஷ்ட வாணர் அதை யடக்கப் பெரு முயற்சி செய்தார். ஸோக்ரதர் கொண்டுள்ள உண்மையான தத்துவங்களையும் உபதேசங் களையும் அரிஷ்டவாணர் சரியாய் அறிந்து கொள்ளாமல், அவரையும் புதிய நாஸ்திகத்தில் சேர்ந்தவராகவே எண்ணி, நாடக மொன்றும் எழுதினர். ஆதன்ஸ் மகா ஜனங்கள் நாடகங்களைப் பார்ப்பதிலும் படிப்பதிலும் உற்சாக முள்ளவர் கள். ஸோக்ரதர் தம் அழகற்ற முகம், தட்டை மூக்கு, இவை களுடனும், உடுத்திய கந்தலோடும், தெருத் தெருவாய்த் திரிந்து எங்கேயாவது நின்று பேசுவார். நகரத்தில் உள்ள வர்களில் இவரை அறியாதார் இல்லை. இவ்வித ஆண்டி யொருவர் ஊரில் இருப்பதை மறவாமல், இவரைப் புதிய நாஸ்திகத்திற்கு நாயகராக வைத்துப் பெரிய நாடகம் ஒன்று எழுதுவது நாடகாசிரியருக்கு எளிதாய்விட்டது.

'சிறுவர்களுடைய ஒழுக்கத்தைத் தார்க்கிகர்கள் என்ற கோஷ்டியார் கெடுத்து வருகிருர்கள்; மெய்யைப் பொய்யாக் கிப் பொய்யை மெய்யாக்கி வருகிருர்கள்' என்று அவர்கள்

மீது, சநாதன தர்மத்தில் பற்றுடைய சமூகத்தாருக்குக் கோபாவேசம் மூண்டிருந்தது. இந்தத் தார்க்கிகர்களுள் ஸோக்ரதரையும் ஒருவராக வைத்து அரிஷ்டவாணர் நாடகம் ஒன்றும் வெளி வந்துவிட்டது. தர்க்க சாஸ்திரிகள் போதித்து வந்த வீண் தத்துவங்களையும் நாஸ்திகத்தையுமே ஸோக்ரத மகரிஷி பலமாய் எதிர்த்து வந்தார். அப்படி எதிர்த்து வந்தும், ஏதோ அவரும் நாஸ்திகம் போதித்து, வாலிபர்களின் புத்தியை மயக்கி, அவர்களது ஒழுக்கம் கெடுமாறு செய்துவிட்டார் என்றும், அவருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டு மென்றும் ஜனங்கள் அவர்மீது குற்றம் சாட்டினார்கள்.

விசாரணைக் காலத்தில் ஸோக்ரதர் பேசிய பேச்சுக்களையும், மரண தண்டனையை எதிர்பார்த்துச் சிறைச் சாலையில் இருந்தபோது அவருக்கும் அவருடைய ஆப்த சிநேகிதருக்கும் நடந்த சம்பாஷணையையும், மரணமடைந்த வரலாற்றையும் கிரேக்க பாஷையில் நூலாக எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த அரிய நூலுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று இருக்கிறது. அம் மொழிபெயர்ப்பைத் தமிழ் மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் வேலூர் சிறைச்சாலையில் இந்நூலை எழுதலானேன்.

# விசாரணைச் சபை முன்னிலையில் ஸோக்ரதர் பேசியது

கிரேக்கர்கள் தொழுதுவந்த தேவர்களைப் பொய்த் தேவர்களென்று சொல்லிப் புதிய தெய்வங்களை உண்டாக்கியதாகவும், சிறுவர்களை ஒழுக்கத்தினின்று வழுவச் செய்ததாகவும் ஸோக்ரதர்மீது குற்றம் சாட்டினார்கள். மரண தண்டனை விதிக்கவேண்டு மென்றே வழக்கு விசாரணைச் சபையில் ஐந்நூற்றொருவர் அமர்ந்திருந்தனர். இவர்களைத் தவிர அக்கிராசனராகத் தனியாக ஒருவரும் அமர்வதில்லை. விசாரணைக்கு மெலேதன் என்ற ஒரு சிறு கவிஞன் வாதியாய் நின்றான். அநீதன் என்ற செல்வாக்குள்ள தோல் வியாபாரி வாதி பக்கம் நின்று வழக்கை நடத்தினான். ஆதன்ஸ் நகரம் குடியரசு இழந்து சில நாள் வருந்தியது. அந்தக் காலத்தில் குடிகள் சார்பாக உழைத்த காரணம்பற்றி அவனுக்கு அந்தச் செல்வாக்கு. வாதி மெலேதனும் அவனுக்குப் பக்கத் துணையாக அநீதனும், மற்றொருவனும் குற்றத்தை ருசுப்படுத்துவதற்காகப் பேசினார்கள். அதன் பிறகு தாம் நிரபராதியென்று உறுதிப்படுத்த ஸோக்ரதர் பேசினார். அவரது முதல் பிரசங்கம் முடிந்தவுடன் நியாய விசாரணைச் சபையார் 'குற்றம் ஏற்பட்டதா, இல்லையா?' என்று கேட்ட கேள்விக்கு 281 பேர் 'ஸோக்ரதர் குற்றவாளி' என்றும், 220 பேர்

‘குற்றவாளியல்ல’ என்றும் அபிப்பிராயம் சொன்னார்கள். அதற்குப் பிறகு விதிக்க வேண்டிய தண்டனையைக் குறித்து வாதி மறுபடியும் பேசினான். மரண தண்டனையே விதிக்க வேண்டும் என்று வாதி எடுத்துச் சொன்ன பிறகு, குற்றவாளி இஷ்டப்பட்டால், ஏதாவது குறைந்த தண்டனை விதிக்கக் காரணம் காட்டுவது முறை. இம்முறைப்படி ஸோக்ரதர் மீண்டும் பேசிய பிறகு சபையார் மரண தண்டனையே விதித்தனர். ஸோக்ரதர் மற்றுமொரு முறை பேசினார். அதன்பின் அவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டு போனார்கள்.



# ஸோக்ரதர் பிரசங்கம்

## 1

“ஆதன்ஸ் நகரத்தார்களே! வாதிகள் பேசியதையெல்லாம் நீங்களும் கேட்டீர்கள்; நானும் கேட்டேன். அவைகளில் ஒரு வார்த்தையும் நிஜமில்லை. ஆனாலும் அவர்கள் பேசிய சாதுரியத்தைப் பார்த்து நானே பிரமித்துப் போனேன். ‘பேசுவதில் இவன் அதிகத் திறமையுள்ளவன், நீங்கள் ஏமாந்து போகக்கூடாது, ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்’ என்று சொன்னார்களே, அதுதான் அவர்கள் சொன்ன பொய்களில் எல்லாம் பெரிய பொய். நான் வாயைத் திறந்தவுடனேயே நீங்கள் உண்மையைக் கண்டுகொள்வீர்கள். ஜனங்களை வசப்படுத்தும்படியான பேச்சுத் திறம் எனக்குக் கிடையாது. இவ்விதமான பெரும் பொய்யை வெட்கமின்றி உங்களுக்கு வாதிகள் சொன்னார்களே, அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் பொய்யை ஒழித்து மெய்யைச் சொல்வதே நற்பிரசங்கத்தின் இலக்கணம். அப்படியானால், பேசுவதில் வாதிகளைவிட நானே திறமையுள்ளவன் என்று ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் பிரசங்கங்களில் மெய்யென்பதைக் காண்பது அரிது. நானோ உண்மை முழுவதையும் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அழகிய பதங்களைத் தேடி, அலங்காரங்களைக் கட்டிப் பெருத்த பிரசங்கம் செய்ய நான் முன்கூட்டி யோசித்து வரவில்லை. தர்மமும் நியாயமும் என் பக்கம் இருப்பதாக நம்பி யிருப்பதால் அழகிய பதங்களைத் தேட நான் முயலவில்லை. என் மனமும் வாக்கும் ஒன்றுபட்டு

இயங்குவதால் அப்போதைக்கப்போது தோன்றுகிறபடியே பேசுகிறேன். நண்பர்களே ! வயது முதிர்ந்தவனாகிய நான் பொய்யையும் அலங்காரங்களையும் கட்டி உங்கள் முன்னிலையில் சிறுவனைப் போலப் பேசுதல் தகாது. உங்களை ஒன்று மாத்திரம் கேட்டுக் கொள்கிறேன். கடைத் தெருவிலும் சந்தைக் கூட்டத்திலும் மற்ற இடங்களிலும் நான் எவ்விதம் பேசி வந்தேனோ, நீங்களும் எவ்விதம் கேட்டீர்களோ, அவ்விதமே சொல்லலங்காரம் இன்றி இங்கேயும் உங்கள் முன்னிலையில் பேசுகிறேன். அதைக் கண்டு, நியாய சபையில் பேச வேண்டிய முறையை விட்டுத் தவறினேன் என்று கோபியாதீர்கள். பொறுமையுடன் நான் சொல்லுவனவற்றைத் தடை செய்யாமல் கேட்கும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன். எனக்கு எழுபது வயதுக்கு மேலாயிற்று. நியாய ஸ்தலத்திற்கு நான் வந்தது இதுதான் முதல் முறை. இவ்விடத்தைய பேச்சு முறைகளை நான் அறியேன். அன்னிய தேசத்திலிருந்து வந்திருந்தால் எப்படி அன்னிய பாஷையில் பேச அனுமதி கொடுப்பீர்களோ, அதே விதம் என்னை மன்னித்து, என் பேச்சில் உள்ள முறைத் தவறுகளைக் கவனியாது, பொருளை மட்டும் கவனித்து, ஒரே முகமாய் ஆலோசிப்பீர்களாக. பொய்யை விலக்கி மெய்யைப் பேசுவது எப்படி நற் பிரசங்கத்தின் இலக்கணமோ அவ்விதமே, வாதிப் பிரதிவாதிகள் சொல்லுவது நியாயமா இல்லையா என்பதை மாத்திரம் கவனிப்பது நியாயாதிபதியின் சிறந்த இலட்சணம்.

"ஆதன்ஸ் நகரத்தார்களே ! என்மேல் குற்றம் சாட்டியது இப்போதுதான் என்று எண்ண வேண்டாம். இப்போது சுமத்தும் குற்றத்தை முன்னேயே அனேக வருஷங்களாய் என்மேல் சிலர் சுமத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் என்மேல் சொல்லி வந்த பழிகள் உங்கள் மனதை பாதித்தே யிருக்கும். அவைகளினின்று நான் தப்புவது கஷ்டம். இப்போது கொண்டு வந்திருக்கும் வழக்கு பெருத்த வழக்காயிருந்தாலும், சொல்லிவந்த பழைய பழிகளே பெரியவையென்று நினைக்கிறேன். சபையங்கத்தினரான நீங்கள்





எல்லாரும் சிறு பிள்ளைகளாயிருந்தது முதலே உங்கள் மனதைக் கெடுக்கும்படியான பழிகளை என்மீது சுமத்தி வந்திருக்கிறார்கள். பாலியப் பருவத்தில் ஓர் அபிப்பிராயம் மனதைக் கவர்ந்துவிட்டால் அதனின்றும் விடுபடுவது அரிது. 'ஸோக்ரதன் என்பவன் ஒருவன் இருக்கிறானே ; அவன் பூமி பாதாள ஆகாயத்திலுள்ள தத்துவங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்கிறான்; மிகுந்த சாதுர்யமுள்ளவன்; பொய்யை மெய்யாக்கியும், மெய்யைப் பொய்யாக்கியும் ஏமாற்ற வல்லமையுள்ளவன்' என்று அனேக வருஷங்களாக என்மீது பழி. ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள பூத தத்துவங்களை ஆராய்ச்சி செய்கிறவர்கள் எல்லாரும் நாஸ்திகர்கள் என்றே ஜனங்கள் சாதாரணமாய் எண்ணுகிறபடியால், என்னையும் துராத்மாவென்று நீங்கள் நிச்சயம் செய்திருக்கிறீர்கள். மெலேதனையாவது அநீதனையாவது ஒரு பெரிய விரோதியாக நான் எண்ணவில்லை. இந்தப் பழைய பழிகளைப் பரப்பினவர்களே எனக்குப் பெரிய சத்துருக்கள். அவர்கள் ஒருவர் இருவர் அல்ல; பலபேர். அனேக வருஷகாலமாய் என்மேல் குற்றங்கள் சொல்லிவந்ததும் தவிர, சொல்லுவதை யெல்லாம் நம்பும் பருவமாகிய பாலியப்பருவத்தில் உங்கள் மனதைக் கெடுத்துமிருக்கிறார்கள். மேலும், அவர்கள் சொன்ன பழிகளுக்கு யாரும் பதில் சொல்லவில்லை. ஒரு கட்சியாகவே அவர்கள் என்னைத் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். இக் காரணங்களினால்தான் இந்தப் பழைய பழிகளைக் குறித்து நான் பெரிதும் பயப்படுகிறேன். அவைகளைப் பற்றியே முதலில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில நாடகங்கள் இப்படி என்னை அவதூறு செய்துவந்தன. மற்றும் விஷயம் தெரியாத பலரும் அதே விதம் பொய்யைப் பரப்பி யிருக்கிறார்கள். உண்மையில் நான் நாஸ்திகன் என்றும், ஒழுக்கத்தைக் கெடுப்பவன் என்றும் நினைத்தே சிலர் இப்படி என்னைச் சொல்லி யிருப்பார்கள். ஆனால் அநேகமாய் என்மேல் சிலர் கொண்ட பொறாமையும் துவேஷமுமே இதற்குக் காரணம். இந்த வழக்கில் நான் அவர்களை யெல்லாம் உங்கள்முன் நிறுத்திக் கேள்வி கேட்டு,

அவர்கள் சொன்னது பொய் என்று அவர்கள் வாக்கு மூலத் தாலேயே காட்டுவது அசாத்தியம். நிழல்களுடனும் கண் ணுக்குப் புலப்படாதவர்களுடனும் யுத்தம் செய்வது கஷ்டம்.

"ஆனபோதிலும், ஆதன்ஸ் மகாஜனங்களே! எனக்குக் கொடுத்துள்ள சிறிது நேரத்துக்குள் சொல்ல வேண்டியதை நான் சொல்லி, என்னைக் குறித்துப் பல நாளாக நீங்கள் கொண்டுள்ள தப்பான அபிப்பிராயங்களைச் சரிப்படுத்த முயல்கிறேன். இது கஷ்டமான காரியம் என்று நான் அறியாமலில்லை. நான் சொல்லுவது உங்கள் மனதுக்குள் புகுந்து நீங்கள் என்னை நிரபராதி என்று தீர்மானிப்பது ஆண்டவன் இச்சை. முடிவைக் கடவுள் கிருபைக்கு விட்டு விட்டு, நான் சொல்ல வேண்டியதை முறைப்படி சொல்லி விடுகிறேன்.

"எந்த ஆஸ்பதத்தைக் கொண்டு மெலேதன் தைரிய மாய் என்மேல் வழக்குக் கொண்டு வந்திருக்கிறானே, எந்தப் பழியை என்மேல் என்விரோதிகள் பல நாட்களாய்ச் சொல்லி வந்தார்களோ, அதை ஆராய்ந்து பார்ப்போம். அந்தப் பழியை நியாய ஸ்தலத்துக்குக் கொண்டுவந்த ஒரு பிராதா கவே வைத்துப் பரிசோதிப்போம். அவர்கள் சாட்டும் குற் றம் என்னவென்றால், 'ஸோக்ரதன் ஒரு துராத்மா; வானத் திலும் பாதாளத்திலும் நடக்கும் விஷயங்களைச் சோதிக்கிற அதிகப் பிரசங்கி; தன் குதர்க்கத்தால் பொய்யை மெய்யாக்கி, மெய்யைப் பொய்யாக்குகிறான். தன்னுடைய துஷ்டச் செயல்களைப் பிறருக்கும் போதிக்கிறான்' என்பதுதான் என் மேல் நீண்ட நாளாய்த் தொடர்ந்துவந்த வழக்கு. அரிஷ்ட வாணர் நாடகத்தைப் பார்த்திருப்பீர்கள். அதில் ஸோக்ர தன் என்னும் ஒருவன், ஒரு கூடையில் உட்கார்ந்துகொண்டு சுற்றிச் சுற்றி வந்து வாயுஸ்தம்பம் செய்ததையும், இன்னும் அநேகவிதமாய் அர்த்தமின்றிப் பேசினதையும் நாடகத்தில் பார்த்திருப்பீர்கள். அந்த ஸோக்ரதன் செய்ததையும் பேசின வையும் உண்மை ஸோக்ரதனாகிய எனக்கு ஒன்றும் தெரி யாது. வாயு ஸ்தம்பமும் மற்ற விநோதமான பூத தத்துவ ஆராய்ச்சியும் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை.





அவைகளைக் கற்றவர்கள் மேலானவர்களா யிருக்கலாம். ஆனால் அவைகளுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. நான் அவைகளைக் கற்றவனல்ல என்றே சொல்லுகிறேன். இதன் உண்மை உங்களுக்கே தெரியும். நீங்களனைவருமே எனக்குச் சாட்சிகள். நான் அனேக வருடங்களாகப் பேசி வந்ததை உங்களில் அநேகர் கேட்டு வந்திருக்கிறீர்கள். ஒரு போதாவது இவ்விஷயங்களைப் பற்றி நான் பேசின துண்டா? கிடையாது. உங்களில் என் சம்பாஷணையைக் கேட்டறிந்தவர்கள் இதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல் லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் ஆதாரமின்றி என்மீது மற்றப் பழிகளும் எப்படிச் சுமத்தப்பட்டிருக்கின் றன என்பதை நீங்கள் அறிந்துகொள்ளக் கூடும்.

"நான் வாலிபர்களுக்கு வித்தியாப் பயிற்சி செய்வித்து அதனால் பணம் சம்பாதித்து வந்தேன் என்று யாராவது சொன்னால் அதுவும் முழுப் பொய் என்று நீங்கள் அறிய வேண்டும். வாலிபர்களுக்குத் திறமையுடன் போதிப்பது மேன்மையான தொழில்தான். அதற்குத் தகுந்த மேதா விகள் சிலர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் குதிரைக் குட்டியையாவது மாட்டையாவது சவாரிக் கும் வண்டிக்கும் பழக்குவதற்காகக் குதிரைக்காரர்களும் குடி யானவர்களும் சுலபமாய்க் கிடைப்பார்கள். ஆனால் மானிட கர்மங்கள், தேசத்தை ஆண்டுவரும் நகரத்தார் கடமைகள், இவைகளைச் சாதிப்பதற்கான திறமையையும் அறிவையும் வாலிபர்களுக்குப் புகட்டி அவர்களை நல்வழியில் நிறுத்த வல்ல மேதாவிகளைக் காண்பது அரிது. எனக்கு அவ்விதத் திறமை இருந்தால் நான் அதை மறைத்திருக்க மாட்டேன்; அதை வெளிப்படுத்தியே யிருப்பேன்; ஒருவேளை இறுமாப் புங் கொண்டிருப்பேன். மகாஜனங்களே! எனக்கு அவ் விதத் திறமையில்லையென்பதே உண்மை.

"நீங்கள் ஒருவேளை என்னைக் கேட்கலாம்: 'ஸோக் ரதனே! நீ சொல்லுவது சரி. ஆனால் நீ என்ன செய்து வரு கிறாய்? ஏன் உன்மேல் வீண் அபவாதம் சுமத்தப் பட்டிருக் கிறது? நீ ஏதோ செய்துவருவது ஜனங்களுக்குப் பிடியாமல்

இருப்பதனுலல்லவா இப்பழிகள் கிளம்பி யிருக்கவேண்டும்? மற்றவர்களைப் போல் நீ சாதாரணமான விருத்தியிலிருந்து கொண்டு வந்திருந்தால், இம்மாதிரி உன்மேல் ஜனங்கள் வீணுகப் பழி சுமத்தமாட்டார்களே! ஆகையால், நீயே உண்மையைச் சொல். உன் செயல்களை நீயே சொல்லி வெளிப்படுத்தினுல் நாங்கள் தீர்ப்புக் கொடுக்க முடியும்' என்று நீங்கள் கேட்பது நியாயமாகும். நான் என்ன செய்து வந்தேன் என்பதையும், ஏன் என்மீது இவ்வளவு பேருக்கு அசூயை ஏற்பட்டது என்பதையும் சொல்லுகிறேன்; கேளுங்கள். சுருங்கக் கூறின், நான் கடவுளின் ஆணைவழி ஒழுகி வந்தமையே என்று கூறலாம். ஆதென்ஸ் நகரத்தார்களே! தெல்பி மகா சன்னிதியில் எழுந்தருளியுள்ள சுவாமி ஒரு வாக்கு அருளினுர். நான் ஒன்றும் அவரைக் கேட்கப் போகவில்லை. ஆனுல் பாலியத்திலிருந்து எனக்குச் சகாவான சேரவான் என்னும் கனவானை உங்களுக்குத் தெரிந்திருக்குமே. நமது நகரம் குடியரசு இழந்த காலத்தில், அவர் நகரத்திற்கு நேர்ந்த பெருங்கேட்டைக் கண்டு சகிக்க முடியாமல் நகரத்தையே விட்டு விலகி யிருந்தார். மறுபடி குடியரசு நிலைத்த பின்னரே திரும்பி வந்தார். அவர் தெல்பியில் சுவாமி சன்னிதானத்தில் போய்க் கேட்ட கேள்விக்கு அர்ச்சகர் மூலமாய் 'ஸோக்ரதனைவிட யாரும் ஞானியில்லை' என்று தெய்வத்தின் பதில் வந்தது.

" இதை நான் அறிந்து, 'இது என்ன விபரீதம்! அஞ்ஞானியான என்னைப்பற்றிச் சுவாமி இம்மாதிரி சொல்வதற்கு என்ன காரணம்?' என்று வியப்புற்றேன். ஆயினும், 'தெல்பி கோயிலில் கொடுத்த வாக்குப் பொய்யாகாதே!' என்று சிந்தித்தேன். அதன்மேல் இதன் பொருள் அறிய வேண்டுமென்று என்னைவிட அறிவு நிறைந்து புகழ் பெற்ற தத்துவ சாஸ்திரிகள், புலவர்கள், மற்றும் தர்ம நிபுணர்கள் இவர்களில் சிலரைக் கண்டு சம்பாஷித்தேன். தெல்பி சன்னிதியின் வாக்கைப் பரீட்சித்துப் பார்த்தேன். எனக்கே வியப்புண்டாயிற்று. யாரை மகா ஞானிகள் என்று அதற்குமுன் நான் எண்ணியிருந்தேனே அவர்கள்





சுத்த அஞ்ஞானிகள் என்பது எனக்கு விளக்க மாயிற்று. இதைக் கண்டதும் கடவுள் கொடுத்த வாக்கின் பொருள் எனக்கு நன்கு விளங்கிற்று. 'அனைவரும் அறியாமையில் மூழ்கி யிருக்கிறுர்கள். ஆனுல் அவர்கள் தங்கள் அறியாமையை உணராமல், தாங்கள் மகா பண்டிதர்கள், அறிவு நிறைந்தவர்கள் என்று எண்ணி அஞ்ஞானத்தில் மூழ்கிக் காலம் சழிக்கிருர்கள். என் அறியாமையை நான் நன்கு அறிந்திருக்கிற காரணத்தால் ஞானியென்று என்னை தெல்பி சுவாமி குறிப்பிட்டது' என்று அறிந்துகொண்டேன். அது முதல் மற்ற ஜனங்களும் தங்களுடைய அஞ்ஞானத்தை நன்கு அறியும்படிக் காட்டுவதே ஆயுள் நாளில் நான் செய்ய வேண்டிய கடமை என்றும் அறிந்து கொண்டேன். இதைக் கடவுள் எனக்கென்று இட்ட பணியாக எண்ணினேன். அதனுல் விளையும் பகைமையையும் துயரத்தையும் பொருட்படுத்தாமல் இந்தத் தொண்டு செய்துவருகிறேன்.

" ஒருவர்பின் ஒருவராய்ப் புகழ்பெற்ற பண்டிதர்கள், மேன்மையடைந்த கவிஞர்கள், ராஜதந்திரிகள், அறிஞர்கள் என்று நினைக்கும் ஒவ்வொருவரிடமும் சென்று கடவுள் அறிவென்ற ஒன்றின் ஏவுதலைச் செய்தேன். உண்மையில் ஓரறிவுமில்லை யென்பதையும், அஞ்ஞானத்தில் உலகம் மூழ்கியிருப்பதையும் விளக்கி வந்தேன். எல்லாரையும் பார்த்ததில், யார் தம்மை அதிக அறிவுள்ளவர்கள் என்று கருதி வந்தார்களோ அவர்களேதான் கொண்டதுவிடா மூடர்கள் என்றும், தங்களுக்கு அறிவில்லை என்று நினைக்கும் பாமர ஜனங்கள்தான் கொஞ்சமாவது ஞானம் ஏற்படக் கூடிய நிலையில் இருப்பதாகவும் நான் கண்டேன். புலவர்களைப் பார்த்தால் தெய்விகக் கிருபையாலும் இயற்கைச் சக்தியாலும் நல்ல காவியங்களை எழுதி விட்டார்கள் என்று சொல்ல வேண்டியதே யொழிய, தாங்கள் இயற்றிய நூல்களின் பொருள்களை அவர்களே அறியவில்லை. மேலான காவியங்களை இயற்றின காரணத்தினுல் உலகத்திலுள்ள எல்லா விஷயங்களையும் தாங்கள் அறிந்து விட்டதாக அவர்கள் கருதினுர்கள். இப்படியே மற்றப் பண்டிதர்களும்

சாஸ்திரிகளும், தாங்கள் அறிந்த ஒரு விஷயம், அல்லது செய்யவல்ல ஒரு தொழில் இருக்க, தாங்கள் எல்லாவற்றை யும் அறிந்துவிட்டதாகச் செருக்கடைந்து கிடந்தார்கள். இப்படி அறிவீனத்தையும் அஞ்ஞானத்தையும் நான் அவர் களுக்கு எடுத்துக் காட்டின பொழுது அவர்கள் என்மேல் கோபங்கொண்டு என்னைப் பகைத்தார்கள். நான் செய்வது கடவுளின் ஏவல் என்றும், என்னுடைய சாதுரியத்தைக் காட்டுவதற்காக எதுவுஞ் செய்வதில்லை யென்றும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. எவ்விஷயத்தில் தாங்கள் நிறைந்த நிபுணர்கள் என்று எண்ணியிருந்தார்களோ அவ்விஷயத் தைப் பற்றிச் சம்பாஷித்ததில், அவர்களுக்கு ஒருவிதமான உண்மையறிவும் கிடையாது என்று நான் எடுத்துக் காட்டு வதைப் பார்த்துப் பக்கத்திலுள்ளவர்கள் நகைப்பார்கள். இதைக் கண்டு அவர்களுக்குக் கோபம் பின்னும் அதிகமாகும். தவிர, நான் எவ்வெவ் விஷயங்களில் மற்றவர்களுக்கு உண்மை அறிவு இல்லையென்று நிரூபித்து வந்தேனோ அவ் வறிவை நான் அடைந்திருப்பதாக ஜனங்கள் எண்ணி விட்டார்கள். உண்மையில், எனக்கும் அறிவில்லை; மற்றவர் களுக்கு மில்லை ; ஆனால் முன் சொன்னபடி என் அறிவீனத் தை நான் அறிந்தேன்; மற்றவர்கள் அறியவில்லை. 'இதுவே என்னிடமுள்ள உயர்வு, மற்றவர்களிடமுள்ள தாழ்வு' என்ப தைக் கண்டுகொள்ளாமல், அவர்களை நான் மூடர்களாக்கி விட்டதாகவும், என்னைச் செருக்குக் கொண்டவனாகவும் கருதிப் பகைத்தார்கள். இப்படிச் செல்வாக்குள்ளவர்கள் என்மேல் பகை கொண்டிருக்க, என்னுடன் பழகிவரும் கன தனவான்களது குடும்பங்களைச் சேர்ந்த வாலிபர்கள் நான் சம்பாஷிக்கும் முறையைப் பார்த்துத் தாங்களும் அதேவிதம் தங்களுக்குள் சம்பாஷிக்கப் பயின்றார்கள். அவ்வாலிபர்களும் தாங்கள் கண்ட பண்டிதர்களைக் கேள்விகேட்டு அவர்க ளுடைய பொய்யறிவை வெளிப்படுத்தி வந்தார்கள். இதனால், செருக்கு மிகுந்து நான் கெட்டதும் தவிர வாலிபர்களையும் கெடுத்தேன் என்று ஜனங்கள் நினைத்தார்கள். இவ்வித மாய்ப் பண்டிதர்கள் என்று பேர் பெற்றவர்கள், கவிராயர்கள்,





பலவித சாஸ்திர நிபுணர்கள் எல்லாரும் என்மேல் அசூயை கொண்டு பழி சுமத்திவந்தார்கள். 'என்ன குற்றம் ஸோக்ர தன் செய்தான் ?' என்று கேட்டால், தங்களுடைய உண்மை அறிவீனத்தைக் காட்டி விட்டதை ஒரு குற்றமாகச் சொல்ல முடியாமல், 'இவன் நாஸ்திகன், இவன் கிரேக்கருடைய சநாதன தர்மத்தைக் கெடுக்கிறான், பொய்யை மெய்யாக்கு கிறான், மெய்யைப் பொய்யாக்குகிறான், ஜனங்களை மயக்கித் துர்ப்புத்தி யுண்டாக்குகிறான்' என்று பழி சுமத்தினர்.

"இவைகள் எல்லாம் அனேக வருஷங்களாய் உங்கள் மனத்தைப் பாழ்படுத்தி யிருக்கின்றன. எனக்குக் கொடுத் திருக்கும் சொற்ப காலத்தில் எப்படி அதை நிவர்த்திப் பேனோ தெரியவில்லை. நான் உண்மையை மறைக்காமல் சொல்லிவிட்டேன். இது உங்களுக்கு இப்போது புலப்படா மற் போனாலும் பின்னேயாவது அறிந்து கொள்வீர்கள். கடவுள் எனக்கு இட்ட கடமையைச் செய்து வந்தேன். வந்த பழியைப் பாராமலும், என் குடும்பக் காரியத்தைக் கவனியாம லும், மிகுந்த வறுமையடைந்தும், இவ்விதம் என் காலத் தைக் கழித்துவந்தேன்.

"இனி என்மேல் சாட்டிவந்த பழைய பழிகளை இவ்வள வோடு நிறுத்திவிட்டு, இப்போது கொண்டுவரப்பட்ட வழக்கைக் கவனிப்போம். வாதிகள் சாட்டும் குற்றம் என்ன ? 'ஸோக்ரதன் தீயசெயல் செய்பவன் ; அவன் சிறுவர்களுக் குத் துர்ப்புத்தி புகட்டுகிறான்; நாடு வணங்கும் தெய்வங்களை அவன் நம்பி வணங்குவதில்லை ; புதிய தெய்வங்களை உண் டாக்கிக் கொண்டிருக்கிறான்' என்று அவர்கள் சொல்லுகிறார் கள். இதில் ஒவ்வொன்றாய் எடுத்துக் கொள்வோம். நான் வாலிபர்களைக் கெடுத்து விடுகிறேனா என்று பார்ப்போம்.

"அப்பா, மெலேதனே! இங்கே வா. வாலிபர்களை நான் கெடுக்கிறேனல்லவா ?"

"ஆம்!"

"சரி, இதைப்பற்றி நீ கவலைப்பட்டுப் பிராது செய்திருக் கிறாய் ; சிறுவர்கள் விஷயத்தில் உனக்கு அதிகக் கவலை

பல்லவா ? அவர்கள் விஷயத்தை ஆழ்ந்து யோசித்தல்லவா நீ இந்தப் பிராது கொண்டு வந்திருக்கிருய் ?"

"ஆம்."

"சிறுவர்கள் சரியான முறையில் பயின்று வருவது இராஜ்யத்திற்கு இன்றியமையாதது அல்லவா ?"

"ஆம்."

"யார்தான் அவர்களுக்குத் தகுந்த போதகாச்சாரியர் கள் ? தயவு செய்து சொல்லவும்." (மெலேதன் பதில் சொல்லவில்லை.)

"அப்பா, ஏன் சும்மா வாய் மூடிக்கொண்டிருக்கிருய் ? பதில் சொல்ல முடியவில்லையா ? இதைப்பற்றி நீ யோசிக்க வில்லைபோலும் ! கவனியாமல் என்மீது குற்றம் சாட்டுவது அநியாயமல்லவா ? வெட்கக் கேடல்லவா ? தயவு செய்து பதில் சொல்ல வேண்டும். நம் இளைஞர்களை நல்ல பிரஜை களாக்கும் திறமை யுள்ளவர்கள் யார் ?"

"சட்டங்கள்."

"நண்பனே ! அதை நான் கேட்கவில்லை. நம் வாலிபர் களைச் சட்டங்கள் அறிந்துள்ள எவர் நல்லொழுக்கத்தில் திருப்புபவர்கள் ? அதைச் சொல்லவும்."

"நியாயாதிபதிகள் தான்."

"என்ன நீ சொல்லுவது ! நியாயாதிபதிகள் நமது வாலிபர்களுக்கு வித்தியாப்பியாசஞ் செய்வித்து அவர்களுக்கு நல்லொழுக்கம் போதிக்கக் கூடுமா ?"

"ஆம், சந்தேகமென்ன ?"

"எல்லாருமா ? அவர்களில் சிலரைச் சொல்லுவாயா ?"

"எல்லாருந்தான்."

"ஓகோ ! இது பெரிய வேடிக்கை. சரி, நியாய சபையார் தவிர நமது மந்திராலோசனை சபையார்களும் தகுந்த போதகாச்சாரியர்களா ?"





"ஆம், அவர்களுந்தான்."

"நமது நகரத்து மகாநாட்டு அங்கத்தினரோ ?"

"அவர்களுந்தான்."

"அவர்கள் எல்லாரும் சிறுவர்களுக்குப் போதிக்கத் தகுந்தவர்களா? அல்லது, அவர்களில் சிலரும் வாலிபர்களைக் கெடுத்துவிடுகிருர்களா ?"

"இல்லை ; அவர்கள் எல்லாரும் சிறுவர்களை நல் வழியில் நிறுத்துவார்கள்."

"அதாவது, மெலேதனே, ஆதென்ஸ் நகரத்தில் நான் ஒருவன்தான் குழந்தைகளைக் கெடுக்கக் கூடியவன், மற்ற எல்லா நகரத்தார்களும் அவர்களுக்கு நற்போதம் செய்யக் கூடியவர்கள் அல்லவா ?"

"அதுதான் நான் சொல்லுவது."

"ஆகா ! நான் எப்படிக் கெட்டுப்போனவன் பார்த்தீர் களா? ஆனுலும் பாதகமில்லை. இவ்வளவு பேர் சிறுவர் களைச் சரியான மார்க்கத்தில் நிறுத்தக்கூடியவர்களாயிருக்க, நான் ஒருவன் மாத்திரம் அவர்களுக்குத் துர்ப்போதனை செய்பவனுயிருந்தாலும் சிறுவர்கள் கெடமாட்டார்கள். இந்தப் பொய்க் கதையைக் கேட்டீர்கள். மெலேதன் இவ் விஷயத்தைக் குறித்துத் தன் புத்தியைச் செலுத்தினதே கிடையாது என்பது உங்களுக்கு நன்ருய் விளங்கியிருக்கும். வாலிபர்களைக் குறித்து இவன் கவலைப்பட்டதே பொய்.

"மெலேதனே ! நான் மனதறிந்து வாலிபர்களுக்குத் துர்ப்புத்தி யுண்டாக்குகிறேனு? அல்லது, அறியாமையால் செய்கிறேனு ?"

"மனமறிந்துதான் செய்கிறீர்."

"அப்பா ! கெட்ட மனிதர்களினுல் மற்றவர்களுக்குத் தீமைதானே உண்டாகும் ?"

"ஆம்."

"எவனாவது தனக்கே தீமையுண்டாக்கும் வழியை மனமறிந்து தேடுவானா?"

"மாட்டான்."

"ஆனால், நீ சொல்லுவது என்ன? நான் சிறுவர்களை யெல்லாம் தீய வழியில் கொண்டுவிட்டு, நாட்டுக்கே, அதாவது, மற்றவர்களுடன் எனக்குமே அவர்கள் தீங்கிழைக்கும் படிச் செய்கிறேன் என்றல்லவோ நீ சொல்லுகிறாய்? என் மனமார நான் எனக்கே தீங்கு விளையும்படி செய்துகொள்ளுகிறேன் என்பதை நீ அறிந்து சொல்லுகிறாய்! என் நன்மை எனக்குத் தெரியவில்லை! நீ பாலியனாயிருந்தாலும் இது உனக்குத் தெரிந்துவிட்டதல்லவா? அப்பா! இதை நான் நம்ப முடியவில்லை; யாரும் நம்பமாட்டார்கள்.

"ஆதென்ஸ் நகரத்தார்களே! சிறுவர்களை மனமறிந்து நான் கெடுக்க முடியாது. இது ஆதாரமற்ற பழி. ஆனால், அறியாமையால் ஒருவேளை நான் இப்படிச் செய்யலாம். அறியாமையால் செய்யும் குற்றத்திற்குத் தண்டனை எப்படி விதிக்கலாம்? மெலேதன் என்ன செய்திருக்க வேண்டும்? என்னைத் தனித்துக் கூப்பிட்டு, எனக்கு நற்புத்தி புகட்டி யிருக்கவேண்டும்; அவனால் எனக்கு அறிவு வந்தவுடன் அறியாமையால் நான் செய்யும் தீய செயலை நானாகவே நிறுத்திவிடுவேனல்லவா? அப்படிச் செய்யாமல் என்னைத் தண்டனைக்காக நியாய ஸ்தலத்திற்குக் கொண்டுவந்து நிறுத்திவிட்டான்! உண்மை உங்களுக்கு விளங்கியிருக்கும். நகரத்தார்களே! தனக்குச் சற்றும் அக்கறையில்லாத விஷயங்களில் மெலேதன் புகுந்து, பொய் வேஷம் போடுகிறான்."

[மறுபடியும் ஸோக்ரதர் மெலேதனைக் கேள்விகள் கேட்டார். அவன் பதில் சொல்ல முடியாமல் திகைத்து நின்றான். புதிய தேவதைகளைத் தாம் உண்டாக்கினால், ஏதோ தேவதைகள் உண்டென்றுதானே நம்பி யிருக்க வேண்டும்? உண்டாக்கினது உண்மையானால் தாம் நாஸ்திகராக மாட்டார் என்றும், தேவதைகள் எவைகளையாவது தாம் நம்பியிருப்பதை ஒப்புக்கொண்டால், தெய்வமும் பரம்பொருளும் உண்டென்று ஒப்புக் கொண்டதாகவும் ஏற்படுமல்லவா? இப்படியிருந்தால், தம் பேரில் சாட்டும் நாஸ்திகக் குற்றம் பொய்யாகுமென்றும் காட்டினார்.]





"ஆதென்ஸ் நகரத்தார்களே! மெலேதன் சாட்டும் குற்றம் பொய்யென்று நான் இன்னும் காட்டவேண்டுவதில்லை. பலரை எனக்குப் பகைவர்களாக்கிக் கொண்டுவிட்டேன். அதனால்தான் நான் தண்டனையடைய வேண்டுமே யொழிய இப்போது வாதிகளாய் நிற்பவர்கள் என்மேல் குற்றத்தை நிரூபித்து என்னைத் தண்டனைக்குள்ளாக்க முடியாது. ஜன சமூகத்தாருடைய மனதைக் கெடுத்து அவர்களுக்கு என்மேல் சந்தேகமும் கெட்ட எண்ணமும் உண்டாகும்படி செய்துவிட்டார்கள். உலகத்தில் இது புதிய செய்கையல்ல. இதற்குமுன் எவ்வளவோ சத்புருஷர்களைப் பாமர ஜனங்கள் கோபத்தினாலும் அஞ்ஞானத்தினாலும் வதை செய்திருக்கிறார்கள். நானும் ஜனங்களுடைய அறியாமைக்கு இரையாவேன். எனக்குப் பிறகும் எவ்வளவோ பேர் தர்மத்திற்காகப் பிராணத் தியாகஞ் செய்யப் போகிறார்கள். இது நிச்சயம்."

[இம்மாதிரி ஐந்நூறு வருஷங்களுக்குப் பின் ஏசுநாதரை அவர் தேசத்து ஜனங்கள் பழித்துப் பெருங் குற்றஞ் சாட்டிக் கொன்றார்கள் என்பதைக் கிறிஸ்து சரித்திரமாகிய 'பைபிலி'ல் காண்க.]

"உங்களுள் சிலர், 'நீ சொல்லுவது சரிதான். ஆனால் இம்மாதிரி உன் பிராணனுக்கு ஹானி உண்டுபண்ணுங் காரியங்களை ஏன் செய்துவருகிறாய்? அக்காரியங்களை விட்டு விடலாமே?' என்று கேட்கலாம். அதற்கு என் விடை: 'தாங்கள் சொல்லுவது நீதியன்று; மனிதனாய்ப் பிறந்தவன் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யப் புகும்போது, அது தர்மமா அதர்மமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டுமே யொழிய, அதனால் தன் பிராணனுக்கு ஏதாவது அபாயம் வருமா வராதா என்பதையோ வேறு விஷயத்தையோ மனதில் எண்ணக் கூடாது. நற்செயலா, தீச்செயலா, தர்ம நெறியில் நிற்பவன் செய்யத் தகுந்த காரியமா அல்லவா என்பதை மாத்திரம் பார்க்க வேண்டும். அரக்கர்களுடன் போர் செய்யப்போன வீரர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார்களா? அல்லது தர்மத்தை மாத்திரம் கருதினார்களா? உயிரைத் திரணமாக

எண்ணி மானத்தையும் தர்மத்தையும் பெரிதாகக் கருதி யல்லவோ அவர்கள் போருக்குச் சென்றார்கள்? 'அக்கிரமம் செய்தவனைக் கொன்று, உடனே என் பிராணனையும் விடச் சம்மதிப்பேனே யொழிய உலகத்தால் இகழப்பட்டு, வெறும் பூபாரமாய்ப் பிழைத்திருக்க என்னால் முடியாது' என்றல்லவோ வீரன் சொன்னான்? தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்று யோசித்தானா அவன்?"

[நமது இராமாயணம், மகாபாரதம் இவைகளை நாம் பாராட்டுவது போல் கிரேக்கர்களுக்கும் தெய்விக இதிகாசமுண்டு. அதிலிருந்து ஸோக்ரதர் திருஷ்டாந்தம் எடுத்துச் சொன்னார்.]

"என் மனத்தில் எள்ளளவும் சந்தேகமின்றி நான் நம்பியிருக்கும் தர்ம வழி ஒன்றே. அவ்வழியில்தான் நான் நடப்பேன். ஒருவன் தானாக எடுத்துக்கொண்டதோ, அல்லது தன் எஜமானன் இட்டதோ, தனக்கென்று ஏற்பட்ட கடமையை எந்த அபாயம் அல்லது கஷ்டம் வந்த போதிலும் செய்தே தீரவேண்டும். மரணத்தையாவது, மானம் தவிர வேறு எதையாவது மனதில் எண்ணிப் பின்வாங்கக் கூடாது.

"போடியாவிலும் அம்விப்பள்ளியிலும் தேலியத்திலும் நீங்கள் நியமித்தனுப்பின சேனாதிபதிகள், என்னை யுத்த களத்தில் எந்த இடத்தில் எந்த வேலையிட்டு நிற்கச் சொன்னார்களோ அந்த இடத்தை விட்டு நகராமல், மரணத்தைக் கண்டு பயப்படாமல், மற்றவர்களைப்போல நானும் நின்றேனல்லவா? இப்போது மாத்திரம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளவோ அல்லது வேறு பயத்தினாலோ, என் ஆண்டவன் எனக் கிட்டதாக நான் அறிந்து செய்கிற கருமத்தைச் செய்யாமலிருப்பேனா? செருக்கிலும் அறியாமையிலும் மூழ்கியிருக்கிறவர்களைச் சோதனை செய்து, அவர்கள் அறியாமையை அவர்களுக்குக் காட்டுவதே கடவுள் எனக்கு இட்ட வேலையென்று நான் அறிந்தேன். அந்தக் கருமத்தை விடாமல் நான் செய்தே தீரவேண்டும். மரணம் அல்லது வேறு துன்பம் வருமோ என்று பயந்து ஆண்டவன் கட்டளையை நிறைவேற்றாமல் உயிரையும் சுகத்தையும்





பெரிதாய் நினைத்தேனானால் அப்போதுதான் நாஸ்திகன் என்று என்னை நீங்கள் நிச்சயமாய்ச் சொல்லலாம். அதற்காக நியாய ஸ்தலத்தில் நிறுத்தி விசாரணையும் செய்து தண்டிக்கலாம். அப்படிச் செய்தேனானால், தெல்பி சன்னிதியில் சுவாமி கொடுத்த வாக்கை நான் உபேக்ஷை செய்து, கடவுளிடம் பக்தியும் தர்மத்தில் நம்பிக்கையுமில்லாமல் உயிருடன் தப்பிப் பிழைத்தவனாவேன். அஞ்ஞானத்தைப் பூரண ஞானமாக நினைப்பதே உலகத்தாருடைய பெருங் குற்றம். மரணத்தைக் கண்டு பயந்தேனானால் நானும் அந்தப் பெருங் குற்றத்திற்கு உள்ளாவேன். மரணத்தை நான் ஏன் துன்பமாகக் கருத வேண்டும்? மரணாந்தரம் ஆத்மாவுக்கு என்ன நேரிடும் என்பதை நாம் அறியாதிருக்க, ஏன் அதை ஒரு பெரிய விபத்தாகத் தீர்மானித்துக் கொண்டு அதைக் கண்டு பயப்பட வேண்டும்? ஆகையால், மகாஜனங்களே! நான் மரணத்தை ஒரு பெருந் துன்பமாக நினைக்கவில்லை. மரணத்தைக் கண்டு பயப்படுவது அஞ்ஞானம். இறந்தபின் நான் எவ்வித மிருப்பேனோ, அது எனக்குத் தெரியாது. ஆகையால், மரணத்தைக் கண்டு பயந்து நான் ஒரு காரியத்தைத் தொடரவும் மாட்டேன்; விடவும் மாட்டேன். குற்றம் என்று நான் அறிந்ததை ஒருகாலும் செய்யவும் மாட்டேன்; செய்ய வேண்டிய கருமத்தை மரண பயத்தினால் செய்யாமலிருக்கவும் மாட்டேன்.

"என்னை விடுதலை செய்துவிட்டால் என் மீது விசாரணை தொடர்ந்தது குற்றமாகும் என்றும், எனக்கு மரண தண்டனை விதியாமல் விட்டுவிட்டால் உங்களுடைய குழந்தைகள் எல்லாம் என் குதர்க்கங்களைப் பின் தொடர்ந்து சுத்தமாய்க் கெட்டுப் போவார்களென்றும், ஆகையால், எனக்கு மரண தண்டனை விதித்தே தீர வேண்டும் என்றும் அநீதன் சொன்னானே; ஒருவேளை நீங்கள் அதை ஒப்புக் கொள்ளாமல், 'இந்தத் தடவை உன்னை மன்னித்திருக்கிறோம்; உனக்கு மரணம் விதிக்கவில்லை; நீ உயிருடன் போகலாம்; ஆனால், நீ இனிமேல் இந்தக் காரியத்தை விட்டுவிட வேண்டும். இனிமேல்

ஜனங்களைச் சோதனை செய்வதை விட்டுவிடு; மறுபடியும் இந்தக் காரியத்தில் நீ புகுந்தாயானால் மரணத்தை அடைவாய்" என்று எனக்கு உத்தரவிட்டீர்களானால், நான் வணக்கத்துடன் சொல்லிக்கொள்வதாவது: ஆதென்ஸ் மகா நகரப் பிரஜைகளே! உங்களிடம் எனக்கு அன்பு குறையவில்லை. ஆனால் எனக்கு நீங்கள் இடும் ஆணையை விடக் கடவுள் இட்ட ஆணை பெரிது. எனக்கு உயிரும் சக்தியுமிருக்கும் வரையில் நான் மெய்யறிவைத் தேடுவதில் வாழ்நாளைக் கழிப்பேன். நான் காணும் ஒவ்வொருவனையும், 'ஐயா, நண்பனே! ஆதென்ஸ் நகரம் மகா கீர்த்தி வாய்ந்த நகரம்; அறிவில் புகழ்பெற்ற நகரம். இந்த மகா நகரத்தையுடையவர்களில் ஒருவனாகிய நீ, ஏன் நிலையில்லாத செல்வம், பெயர், மரியாதை இவைகளுக்கு ஆசைப்பட்டு வீணே வாழ்நாளைக் கழிக்கிறாய்? ஞானத்தையும் உண்மையையும் அடைய முயல மாட்டாயோ? உன் ஆத்மாவைப் பரிபக்குவப் படுத்திக்கொள்ள மாட்டாயோ?' என்று கேட்டுக்கொண்டேயிருப்பேன். 'இல்லை, நீ சொல்லுவது சரியல்ல. ஞானமும் உண்மையும் எனக்குத் தேவையில்லை போ' என்று அவன் எனக்கு மறுமொழி சொல்லிவிட்டால், அவனை அதனுடன் விட்டுவிட மாட்டேன். அவனைக் கேள்விகள் கேட்டும் சோதித்தும், 'ஐயோ! அரும்பெரும் பொருளை அலட்சியம் செய்து உபயோகமற்ற பொருள்களின்மேல் ஆசையைச் செலுத்திக் காலத்தைக் கழிக்கிறாயே?' என்று அவனைக் கண்டிப்பேன். சிறுவனானாலுஞ் சரி, வயது முதிர்ந்தவனாலுஞ் சரி, எவனையும் இம்மாதிரி சோதித்துக் கண்டிப்பேன். என் நகரத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கு மிகவும் அருமையானவர்களாகையால் அவர்களையே இப்படி அதிகம் சோதிப்பேன். இது கடவுள் எனக்கு இட்ட ஆணை என்று நீங்கள் அறிய வேண்டும். நான் கடவுளின் ஏவலைத் தலைமேற்கொண்டு என் வாழ்நாளெல்லாம் இம்மாதிரியாகக் கழிப்பதால், நமது நகரத்திற்கு நான் பெருந் தொண்டு செய்கிறேன் என்றே நினைக்கிறேன். நான் உங்களை என்ன செய்யச் சொல்கிறேன்? முதலில் ஆத்மாவைக் கவனியுங்





கள்; அதைச் சுத்தப் படுத்திக்கொண்டு அதற்கு பலம், பக்குவம் உண்டாக்கிக் கொண்ட பிறகு, உங்கள் தேகம், செல்வம் இவைகளைக் கவனியுங்கள்; செல்வத்திலிருந்து ஆத்மசுத்தியும் தர்மமும் உண்டாகா. ஆனால், ஆத்மசுத்தியிலிருந்தும் தர்மத்திலிருந்துமே செல்வத்தையும் இன்பத்தையும், உலகம் அடையக் கூடிய எல்லாப் பொருளையும் அடையலாம். பழியையும் வறுமையையும் மரணத்தையும் கண்டு பயப்படாமல் நான் சதா இப்படிப் போதித்து வருவது ஒரு குற்றமானால், நான் குற்றம் செய்தவனே யாவேன். ஆனால் இதைத் தவிர நான் வேறு ஏதோ செய்கிறேன் என்று சொல்வது பொய்யாகும். ஆகையால், ஆதென்ஸ் மகா நகரத்தை யுடையவர்களே! அநீதன் சொற்படி எனக்கு மரண தண்டனை விதியுங்கள். அல்லது, நான் சொல்வதை ஒப்புக்கொண்டு என்னை விடுதலை செய்யுங்கள். நான் இதுவரை செய்துவந்த கடவுள் தொண்டை விட்டு விடும்படி சொல்லாதீர்கள். அதற்காகப் பதின்மடங்கு என் உயிரைக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்.

"என்னைக் கொல்வதானால் நீங்களாவது மெலேதனாவது அநீதனாவது என் ஆத்மாவுக்குத் தினையளவு துன்பமும் செய்ய முடியாது. கடவுள் தர்மத்தில் நிற்பவனுக்கு எவ்விதத் துன்பமும் உண்டாகாது. எனக்கு மரணம் அல்லது தேசப் பிரஷ்டம் குடிப்பிரஷ்டம் விதித்துவிட்டால் இவை பெரிய துன்பமாகுமென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படியல்ல. இறத்தலை ஒரு பெரிய கஷ்டமாகவோ துன்பமாகவோ நான் கருதவில்லை. இவ்வளவு நேரம் நான் பேசினதும் என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவல்ல. 'அநியாயமாய்க் கடவுள் உங்களுக்குக் கொடுத்த ஒரு பெரும் பொருளைத் தள்ளிவிட்டு அதர்மத்தி லிறங்காதீர்கள்; உங்களுக்கே துன்பத்தையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணிக் கொள்ளாதீர்கள்' என்றே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைக் கொன்றுவிட்டால் நான் உங்களுக்குச் செய்யும் தொண்டு செய்ய வேறு யாரும் உங்களுக்கு எளிதில் கிடைக்க மாட்டார்கள். ஒரு பெரிய சிங்கம் தன் பலத்தை

மறந்து தூங்கிக் கொண்டிருக்குங்கால், ஓர் ஈயானது அதைக் கடித்துத் தொந்தரவு பண்ணி எழுப்புவதுபோல், நான் ஆதென்ஸ் மகா நகரத்தார், தங்கள் கடமைகளையும் உண்மைச் சக்தியையும் மறந்து உறங்கிக் கிடக்க, அவர்களைத் தொந்தரவு செய்து தட்டி எழுப்பி வந்தேன். ஈயை நசுக்குவதுபோல் என்னை நீங்கள் சுலபமாய் நசுக்கிவிட்டு, மயக்கமும் நித்திரையும் கெடாமல் இருந்துவரலாம். தூங்குகிறவனை எழுப்பினால் கோபம் வருவது சகஜம். ஆனால் உங்களை நான் அஞ்ஞானத்திலிருந்து தட்டி எழுப்புவது நன்மையா தீமையா என்று யோசித்தீர்களானால் அவ்விதம் என்னை நசுக்கிவிட மாட்டீர்கள். இந்த ஈயை நீங்கள் நசுக்கிவிட்டால் கடவுள் உங்களை எழுப்ப வேறொரு ஈயை அனுப்புவாரோ, இல்லையோ; அதைச் சொல்லுவது முடியாது. கடவுள் எனக்கு இந்த ஏவலிடாதிருந்தால், நான் என் குடும்பம், என் காரியம் எல்லாவற்றையும் இவ்வளவு வருஷங்களாகக் கவனியாமல், ஏன் உங்களுள் ஒவ்வொருவரிடமும் போய், 'கெட்டுப் போக வேண்டாம்; ஆத்மா பெரியது; தர்மம் பெரியது; நல் வழியில் இறங்கு; உண்மை ஞானத்தைத் தேடு' என்று மனஞ் சலியாமல் தகப்பனைப் போல், அண்ணன் மாதிரி, அல்லும் பகலும் அலைந்து போதித்து வரவேண்டும்? இதனால் எனக்கு எவ்விதப் பிரயோஜனமாவது இருந்தால் சுய நலத்தைக் கருதி இப்படிச் செய்தேன் என்று நினைக்கலாம். ஆனால் என்மேல் எவ்வளவு குற்றம் சுமத்தப் பார்த்தாலும், சுயநலத்திற்காகவாவது ஓர் இலாபத்திற்காகவாவது இம்மாதிரி செய்து வந்தேன் என்று என் விரோதிகளும் சொல்லவில்லை.

"மரணத்திற்குப் பயந்து நான் ஒருவித அக்கிரமமும் செய்யமாட்டேன் என்று நீங்கள் அறிந்துகொள்ள வெறும் பேச்சுக்கள் மாத்திரம் பேசாமல், நடந்த இரண்டு சமாசாரங்களை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன்; கேளுங்கள்: ஆர்கினுஸா யுத்தம் நடந்ததும் தளகர்த்தர்கள் பத்துப் பேர்களையும் விசாரணைக்குக் கொண்டுவந்தீர்களல்லவா? அப்போது 'அந்தப் பத்துப் பேர்களையும் ஒன்று சேர்த்துக்





குற்றம் சாட்டித் தண்டனை விதிப்பது நியாயத் தவறு' என்று நான் நினைத்தேன். என் குலம் அந்த மாதத்தில் சபையில் அக்கிர குலமாய் நியமிக்கப்பட்டு, நான் அக்கிராசனத்திலிருந்த நாளில், தளகர்த்தர்கள் பத்துப் பேரையும் ஒரே வாக்காகத் தண்டிக்கப் பிரேரணை செய்தபோது, நான் 'அது கூடாது' என்று தீர்ப்புக் கொடுத்து, உங்களுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாய், பிடிவாதமாய் நின்றேனல்லவா? நீங்கள் செய்தது நியாயத் தவறு என்று பின்னால் உங்களுக்கே தெரிந்தது. ஆனால் அப்போது மற்ற நாளில் அமைந்த அக்கிராசனர்கள் எல்லாம் உங்களோடு ஒத்து வந்ததும், எல்லாரும் என்மேல் மிகுந்த கோபங்கொண்டு என்னை அக்கிராசனப் பதவியிலிருந்து நீக்கிச் சிறைப்படுத்தவும் சித்தமாயிருந்தீர்களாயினும் நான் அவைகளையெல்லாம் கவனியாமல் நியாயப்படி என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன் அல்லவா? அப்போது சிறையையாவது மரணத்தையாவது கண்டு நான் பயப்படவில்லை. பிறகு, குடியரசு போய், இராஜாங்கத்தைக் கவர்ந்த முப்பது பேர் என்னையும் இன்னும் நால்வரையும் கூப்பிட்டு, 'ஸ்வாமி நகரத்திலிருந்து லியான் என்பவரை அழைத்து வாருங்கள்' என்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அவரைக் கொன்று விடுவதற்காக இந்த அக்கிரம ஏவலையிட்டார்கள் என்பதை நான் அறிந்து, 'அக்கிரமத்திற்கு நான் பாத்தியப்பட மாட்டேன்' என்று சொல்லி, முப்பதின்மருடைய கொடுங்கோல் அரசில் என் உயிரை இழக்கச் சித்தமாகி, அவர்களுடைய உத்தரவை மறுத்துவிட்டேன். மற்ற நால்வர் அக்கிரமத்திற்கு ஒப்புக்கொண்டு லியானை அழைத்து வந்தார்கள். சர்வ அதிகாரத்தையும் வகித்து மகாபலம் பொருந்திய அந்த முப்பது பேருடைய அதிகாரத்தையும் நான் பொருட்படுத்தாமல், அவர்கள் இட்ட அக்கிரம ஏவலைச் 'செய்ய மாட்டேன்' என்று மறுத்தேன். சீக்கிரத்தில் அவர்கள் அதிகாரம் குலைந்து மறுபடியும் குடியரசு ஏற்பட்டுவிட்டது. இல்லாதிருந்தால் என்னை அவர்கள் கொன்றேயிருப்பார்கள். இது உங்களுள் அனேகருக்கு நேரில் தெரிந்த விஷயம்.

"என்னை மன்னியுங்கள் என்றும், என் பக்கம் தீர்ப்புக் கொடுங்கள் என்றும் உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளவில்லை. அப்படிக் கேட்டுக் கொள்வது ஆதென்ஸ் நகரத்தில் பிறந்தவனுக்குத் தகுதி யன்று. நீங்கள் நியாயப்படி தீர்ப்புக் கொடுக்க வேண்டுமே ஒழியத் தயை தாட்சண்யத்தினுல் ஒரு தீர்ப்புச் செய்யவே கூடாது. அப்படியிருக்க, நான் உங்களை ஏன் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள வேண்டும்? தர்மத்திலிருந்து தவருமல் இருக்கவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்க, என் குழந்தைகளையாவது என் குடும்பத்தையாவது குறித்து என்னை விடுதலை செய்யும்படி நான் உங்களைக் கேட்பது தவருகும். அப்படிக் கேட்டுக் கொண்டேனுனல் நான் உங்களைச் சத்தியத்திலிருந்து வழுவும்படி ஏவினவன் ஆவேன். அப்போது நான் தெய்வத்தில் நம்பிக்கை இல்லாதவனுவேன்; நான் நாஸ்திகன் என்று நானே ஒப்புக்கொள்வதாகும். மகா நகரத்தார்களே! என்னை நாஸ்திகன் என்று சொல்லுவது சுத்தத் தவறு. என்னைக் குற்றஞ் சாட்டுகிறவர்களுக்குள்ள தெய்வ பக்தியைவிட எனக்குத் தெய்வ பக்தி மிகவுமுண்டு; அதிகத் திடமான பக்தியுடன் நான் கடவுளை நம்பியிருக்கிறேன். உங்களுக்கும் எனக்கும் நன்மையைத் தரும்படியான வழியைக் கடவுள் அறிவார். அதன்படி அவர் உங்களுக்குப் புத்திகொடுத்து எவ்விதம் தீர்ப்புச் செய்யும்படி ஏவுகிருரோ அவ்விதம் செய்வீர்களாக."

[சபையாரில் 281 பேர் 'ஸோக்ரதர் குற்றவாளி' என்றும் 220 பேர் 'குற்றவாளி அல்ல' என்றும் வாக்குக் கொடுத்தனர். இதற்குப் பிறகு குற்றவாளியென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டவனுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டியது என்பதைப் பற்றி வாதியும் குற்றவாளியும் பேச வேண்டிய முறை.]

'ஸோக்ரதருக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும்' என்று வாதி பேசினுன். பிறகு ஸோக்ரதரும் அது விஷயமாகப் பேசுகிருர்:



# ஸோக்ரதர் பிரசங்கம்

# 2

'ஆதன்ஸ் மகா நகரத்தார்களே! நீங்கள் கொடுத்த தீர்ப்பைக் கண்டு நான் ஆயாசப்படவில்லை. என்னைக் குற்றவாளி யென்றே சொல்வீர்கள் என்று எனக்கு முன்னமே தெரியும். இதைக் கண்டு நான் ஆச்சரியப் படவில்லை. ஆனுல் இவ்வளவு குறைந்த வாக்குகளே என்னைக் குற்றவாளி யாக்கினவே என்று மட்டும் சிறிது வியப்படைந்தேன். முப்பது வாக்குகள் மாத்திரம் மறுபக்கம் திரும்பியிருந்தால், தீர்ப்பு மாறியேயிருக்கு மல்லவா? இது நிற்க, எனக்கு 'மரண தண்டனையே விதிக்க வேண்டும்' என்று வாதிக்கப்பட்டது சரியே. வேறு தண்டனையைப் பிரரேபிக்கும்படி என்னைக் கேட்கிறீர்கள். வேறு என்ன தண்டனையை நான் ஒப்புக்கொள்ளக் கூடும்? நான் செய்த காரியத்திற்குத் தகுதியான கைம்மாருக வல்லவோ தண்டனை இருக்க வேண்டும்? நான் சுகமாய் இல்லற சுகங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கச் சம்மதியாமல், ஜனங்கள் பெரிதாக மதிக்கும் செல்வம், குடும்ப வாழ்வு, சேனையிலும் இராஜாங்கத்திலும் அதிகாரம் பொருந்திய பெரிய பதவிகள், மேடைகள் ஏறிப் பிரசங்கங்கள் செய்து குடியரசில் செல்வாக்கு அடைவது, நகரத்துக் கட்சிகளில் முதன்மை யடைவது, இவைகளை யெல்லாம் மதியாமல் துறந்தேன். இவைகளில் நான் மனமும் முயற்சியும் செலுத்தி யிருந்தேனுனல் என் ஆத்மாவுக்குப் பயனுமில்லாமல், உங்களுக்கும் நான் எவ்வித நன்மையுஞ் செய்யாமல் போயிருப்பேன். ஆகையால் பெரிய பதவியை

யும் செல்வத்தையும் விரும்பாமல் உங்கள் ஒவ்வொருவரிடமும் போய், ஒவ்வொருவருக்கும் ஞானமுண்டாக்குவதற்காகப் பாடுபட்டேன். ஞானமே பெரும் பொருளாகையால் ஒவ்வொருவருக்கும் இவ்விதம் அரும்பெரும் நன்மையைச் செய்யப் பாடுபட்ட ஒருவனுக்கு நியாயப்படி என்ன தண்டனை விதிக்கலாம்? 'உன் பொருளையும் உன் அலுவல்களையும் பற்றி நீ கவலைப்படுவதற்கு முன் உன் ஆத்மாவைப் பற்றிக் கொஞ்சம் கவலை செலுத்து' என்று ஒவ்வொருவனுக்கும் சொன்னேன். இம் மாதிரியான குற்றம் செய்கிறவனுக்கு நீங்கள் கொடுக்கத்தக்க தண்டனை என்னவென்றால், அப்படியே இன்னும் செய்துவர அனுகூலமாய், போதுமான சாவகாசத்தோடு, பசியும் பிணியு மில்லாமல் ஜீவனம் நடத்த அவனுக்கு இராஜாங்கத்திலேயே ஒரு மானியம் கொடுப்பதுதான். தேரோட்டத்திலும் குதிரையோட்டத்திலும் வென்றவர்களுக்கு இம்மாதிரி மானியம் தந்து வெகுமதி செய்கிறீர்கள். அதைவிட இம்மாதிரி உங்களுடைய உண்மை நன்மைக்காகப் பாடுபட்ட ஏழைக்கு இந்த ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் தர்மம். இந்தத் தண்டனையையே நான் பிரேரணை செய்கிறேன்.

“இம்மாதிரி நான் சொல்லுவதால். நான் கர்வங்கொண்டு பேசுவதாக நீங்கள் நினைக்கலாம். ஆதன்ஸ் மகா நகரத்தார்களே! அப்படியல்ல. நான் தெரிந்து எவனுக்கும் ஒரு தீங்கும் செய்யவில்லை. அப்படியிருக்க நான் வேறு எவ்விதம் பேச முடியும்? என் மனதுக்குள் நான் நிரபராதி யென்று விளங்கி யிருக்கிறபடி உங்களுக்கும் விளங்காம லிருப்பதற்குக் காரணம், பிரமாணங்களை எடுத்துக் காட்டப் போதுமான அவகாசமில்லாமையே. சில இராஜ்யங்களில் மரண தண்டனை வழக்குகள் ஒரே நாளில் முடிவு பெறக் கூடாதென்று விதித்திருக்கிறார்கள். நமது நகரத்திலும் அவ் விதி யிருந்தால் ஒரு வேளை நான் குற்றம் செய்யவில்லை யென்று உங்களுக்குத் திருப்திப்பட நிரூபித்திருக்கக் கூடும்.





“நமக்கிருந்த சிறு காலத்தில் என் பகைவர்கள் என் மேல் சூட்டிவந்த பெரும் பழிகளை நீக்கிக் கொள்ளச் சாவகாசப் படவில்லை. ஆனாலும், என் மனச்சாட்சிப்படி நான் யாதொரு குற்றமும் செய்யாதிருக்க, எப்படி எனக்கே நான் ஒரு தண்டனையைச் சொல்ல முடியும்? மரணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. இந்த உடலிலிருந்து என் உயிர் நீங்கிப் போவது எனக்கு இன்பத்தைத் தருமோ, துன்பத்தைத் தருமோ என்பதை நான் அறியாமலிருக்க, அறியாத துன்பத்திற்குப் பதிலாக அறிந்த துன்பம் ஒன்றை ஏன் இச்சித்து, 'மரணத்திற்குப் பதில் வேறு தண்டனை கொடுங்கள்' என்று நான் கேட்கவேண்டும்? மரண தண்டனை வேண்டாமென்றால், சிறைச்சாலையி லிருக்கும் தண்டனைக்கு ஒப்புக் கொள்ளட்டுமா? ஏன் எனக்கு இனியுள்ள வாழ்நாட்களைச் சிறைச்சாலையில் வரும் ஒவ்வொரு அதிகாரியினுடைய அடிமையாக இருந்து கழித்துப் பிழைத்திருக்க வேண்டும்? இது மரணத்தைவிட நலம் என்று எப்படிக் கருதக்கூடும்? 'அபராதம் விதியுங்கள்' என்றால் தகுந்த அபராதம் கொடுக்கக்கூடிய சக்தி எனக்கில்லை; சிறைச்சாலையில்தான் இருக்கவேண்டும். 'நகரத்தைவிட்டு அப்புறப்படுத்தி விடுங்கள்' என்று சொல்லலாம்; அதற்கு நீங்களும் ஒப்பலாம். சகோதரர்களே! என் பிராணனை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்ற ஆசை எனக்கு இல்லை. என் நகரத்தார்களாகிய உங்களுக்கே நான் பேசுவதும் சோதிப்பதும் சகிக்க முடியாமற் போனால் மற்ற ஊரார் அதைக் கேட்டுப் பொறுத்திருப்பார்களோ? என் கேள்விகளையும் சோதனைகளையும் நீங்கள் பொறாமல் என்னை 'ஊரை விட்டுப் போ'வென்று துரத்தினபின், இனி எனக்கு இருக்கும் ஆயுள் நாட்களை ஊரூராய் அலைந்து கழிக்கக் கிழவனாகிய எனக்கு மனமொப்பவில்லை. எந்த ஊருக்குப் போனாலும் ஜனங்களை நான் இதே கேள்விகள் கேட்க வேண்டும். இதே விதம் ஆத்ம சோதனை செய்ய வேண்டும். உங்களுக்கு எப்படி அது வெறுப்பைத் தந்ததோ அப்படியே எல்லா ஊராருக்கும் அது வெறுப்பைத் தரும். இந்த உயிரைக் காப்பாற்று

வதற்காக ஏன் என் சொந்த நகரத்தைவிட்டுப் பிரஷ்டனாகி ஊரூராய் அலைய வேண்டும்?

"வேறு தேசத்திற்குப் போய் இந்த மாதிரி ஆத்ம சோதனை செய்யாமல் சும்மா சுகமாயிருக்கலாமே' என்று நீங்கள் சொல்லலாம். நான் சும்மாவிருக்க முடியாதென்று உங்களுக்குச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். இதுவே என் துர்ப்பாக்கியம். 'கடவுள் ஏவலுக்கு விரோதமாய் நான் எப்படி நடக்க முடியும்' என்று சொன்னால் வேடிக்கை பேசுகிறேன் என்று நினைக்கிறீர்கள். என்னை நம்ப மாட்டீர்கள். 'தர்மத்தைப் பற்றியும் உண்மைக் கடமைகளைப் பற்றியும் பேசித் தானும் மற்றவர்களுடன் ஆத்ம ஞானம் அடைவதைவிட வேறு பிழைப்பு மனிதனுக்கு வேண்டியதில்லை. அவ்வாறு செய்ய அவகாசமில்லாவிட்டால் உயிரை விடுவது நலம்' என்று நான் சொன்னால் அதையும் நம்ப மாட்டீர்கள். இதற்கு நான் என்ன செய்ய முடியும்?

"நான் பணக்காரனா யிருந்தால் என் ஆஸ்தியையே அபராதமாகக் கொடுத்துவிடச் சந்தோஷமாய் இசைந்திருப்பேன். பொருளை இழப்பதனால் எனக்கு எவ்விதத் துன்பமும் உண்டாகி யிராது. ஆனால் நான் ஏழை. அபராதம் கொடுக்கச் சக்தியில்லை. என் சக்திக்குத் தகுந்த அபராதம் விதித்தால் கொடுக்கலாம். ஒரு 'மினா'* அபராதமாகப் போடுவீர்களா? அவ்வளவு கொடுக்க முடியும். இல்லை, இங்கிருக்கும் என் நண்பர்கள் 'முப்பது மினா போடலாம்' என்று சொல்லச் சொல்லுகிறார்கள். அவர்கள் அதற்கு உத்தரவாதமா யிருப்பார்கள்."

[மரண தண்டனை விதிக்கப்படுகிறது. மறுபடியும் ஸோக்ரதர் பேசுகிறார்.]

* ஒரு 'மினா' என்பது சுமார் அறுபது ரூபாய் மதிப்புள்ள கிரேக்கர் நாணயம்.



# ஸோக்ரதர் பிரசங்கம்

# 3

"ஆதென்ஸ் மகா நகரத்தார்களே! எனக்கு நீங்கள் மரண தண்டனை விதித்தீர்கள். ஆனால் உங்களுக்கு இதனால் அதிக லாபம் கிடையாது. என்னை விட்டுத் தப்ப நீங்கள் எனக்கு மரண தண்டனை விதியாமலிருந்தாலும், சீக்கிரத்திலேயே என் ஆயுள் நாள் சுபாவமாகவே முடிந்து நான் இறக்கும் காலம் நெருங்கியிருந்தது. ஆனால், நீங்கள் எனக்கு விதித்த அநியாய தண்டனையினால், உங்களுக்குத் தீராத பழி வந்துசேர்ந்தது. ஆதென்ஸ் நகரத்தை இகழ வேண்டியவர்கள் எல்லாரும், 'ஸோக்ரதன் ஞானி, அவனை அநியாயமாய்க் கொன்றார்கள் ஆதென்ஸ் நகரத்தார்' என்று எந்நாளும் வசை கூறுவார்கள். நான் ஞானத்தை அடைந்தவனல்லாதிருந்தாலும், உங்களைப் பழிப்பதற்காகவே என்னை ஒரு ஞானி என்றும், நீங்கள் என்னைக் கொலை செய்தீர்கள் என்றும் ஜனங்கள் சொல்லுவார்கள். சில நாள் பொறுமையுடன் இருந்தீர்களானால் நானாகவே காலங்கழிந்து இறந்திருப்பேன்; உங்களுக்கு என் தொந்தரவு நீங்கியிருக்கும். போதுமான காரணம் காட்டாதபடியாலும், சரியானபடி வாழ்க்கை நடத்தாதபடியாலும், நான் தண்டிக்கப்பட்டேன் என்று சிலர் நினைக்கக் கூடும். அப்படியல்ல, தகுதியற்ற வழியில் நான் பேசவில்லையென்கிற காரணத்தால் நான் தண்டனையடைந்தேன். அதற்காக வருத்தப்படக்கூடாது. அழுதும் கெஞ்சியும் வேறு சிலரைப்போல் தகாத காரியங்களைச் செய்திருந்தால் நான்

தப்பியிருக்கலாம். ஆனால் அவை எனக்குத் தகாதென்று விலகி நின்றேன். மரணத்தைக் கண்டு பயந்து சத்புருஷனும் வீரனும் தகாத வகையில் உயிரைக் காப்பாற்ற வேண்டியதில்லை. யுத்தகளத்தில் எப்படியோ அப்படியே நியாய ஸ்தலத்திலும் நடந்துகொள்ள வேண்டியது. எதிரியால் தாக்கப்பட்டு வருந்தும் காலத்தில் ஆயுதத்தைக் கீழே போட்டுப் பகைவன் காலில் விழுந்து, 'உயிரைக் கொடு' என்று கெஞ்சிக் கேட்டால் போர்க்களத்திலிருந்து உயிருடன் தப்பி வரலாம். அது எப்படி மனிதனுக்குத் தகாதோ அப்படியே, மானத்தையும் தைரியத்தையும தர்மத்தையும் விட்டால் மற்ற எல்லா அபாயங்களிலிருந்தும் தப்பிப்பிழைக்கலாம். ஆனால் அது தகாது. மரணத்தைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. அதர்மமே மனிதனுக்கு ஆபத்து. நான் மரணத்தை இன்று நாளை யென்று எதிர்பார்த்தே யிருந்தேன். முதுமையில் அது கொஞ்சம் முன்னதாக என்னை வந்து சேர்ந்தது. ஆனால் என்மேல் பகை கொண்டு என்னை நியாயஸ்தலத்திற்கு இழுத்து எனக்கு மரணம் விதிக்கச் செய்தவர்களை அதர்மமானது வலிய வந்து பிடித்துக்கொண்டது. அவர்களுக்கு நேரிட்டது பெருந் துன்பமேயொழிய, எனக்கு நேரிட்டது ஒரு பெருந்துன்பமாகாது. எனக்கு விதித்த மரண தண்டனையை அடைய நான் செல்கிறேன். அவர்களும், அதர்மமும் பாவமும் செய்தவர்களாகி, அவர்களின் தண்டனையைத் தப்பாமல் அடையப் போகிறார்கள். கடவுளின் ஆக்ஞையால் இப்படி நடந்ததில் எவ்விதத் தவறுமில்லை; இது நன்மையே பயக்கும் என்பது நிச்சயம்.

"மகா நகரத்தார்களே! மரணத்தை எதிர்கொண்டு செல்பவனாகிய நான், உங்களுக்குச் சொல்கிறேன்; கேளுங்கள்: நான் இறந்தவுடன் நீங்கள் எனக்குக் கொடுத்த தண்டனையைக் காட்டிலும் பதின்மடங்கு கடுமையான தண்டனையை அனுபவிப்பீர்கள். நீங்கள் ஆத்ம தருமத்தை மறந்து வாழ்நாளைக் கழித்து வருவதை நான் சோதிக்கிறேன் என்று என்மேல் வெறுப்புற்று அல்லவா என்னை விட்டுத்





தப்புவதற்காக எனக்கு மரண தண்டனை விதித்தீர்கள்? ஆனால் அவ்வளவு எளிதில் சோதனையிலிருந்து நீங்கள் தப்பமுடியாது. நான் இருந்தவரையில் முன்வராத அநேகர், எனக்குப் பின் நான் செய்த சோதனையைவிட மிகக் கடினமான சோதனைக்கு உங்களை உள்ளாக்குவார்கள். அவர்கள் இப்போது வாலிபர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடன் நீங்கள் போராடி வெல்லமுடியாது. ஒழுக்கங் கெட்டு வாழும் ஜனங்கள் அறிவுள்ளவர்களுடைய பழியிலிருந்து தப்புவதற்கு வழி, அறிவுள்ளவர்களைக் கொல்வதல்ல. தர்ம மார்க்கத்தை அறிந்து நல்வழியில் செல்வதே தக்க வழியாகும்.

"என்மேல் குற்றம் இல்லையென்று வாக்களித்தவர்களாகிய உங்களுக்கும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுகிறேன். எனக்கு நேர்கிற மரணம் என் நன்மைக்காகவே யிருக்கவேண்டும் என்று நான் பூரணமாய் நம்பியிருக்கிறேன். ஏனென்றால், எனக்கு எப்போதும் தெய்வவாக்கு ஒன்று, நான் செய்யக்கூடாத காரியத்தில் பிரவேசிக்கும் காலத்திலெல்லாம் 'வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்வதுண்டு. என் மனத்துள் அந்தர்யாமியாய் நின்று ஆண்டவன் எனக்குச் சொல்லும் அந்த வாக்கு ஒருபோதும் தவறினது கிடையாது. இதுவரையில் சிறியதும் பெரியதுமான எல்லா விஷயங்களிலும் அது எனக்குத் துணையாய் நின்று என்னைக் காப்பாற்றி வந்தது. இன்று காலை நியாய ஸ்தலத்திற்கு வந்தபோதோ, நான் உங்கள் முன்னிலையில் பேசும்போதோ என்னை அது தடுக்கவேயில்லை. அனேக காலங்களில் நான் பேச்சுத் தவறி ஒரு சொல் சொல்லப்போகும் சமயத்திலும் அது என்னை 'வேண்டாம்' என்று தடுத்திருக்கிறது. ஆனால் இந்த விஷயத்தில் நான் சொன்னதிலும், செய்ததிலும், எதிலும் அது என்னைத் தடுக்கவில்லை. இதனால் நான் அறிவது என்னவென்றால், 'இம் மரணம் எனக்குப் பெரிய நன்மையே என்று ஆண்டவன் எனக்குக் காட்டுகிறார்' என்பதே. ஜனங்கள் நினைக்கிறபடி மரணம் உண்மையில் ஒரு பெருந் துன்பமா யிருந்திருந்தால் என்னுள் நிற்கும்

தெய்வமானது என்னை 'வேண்டாம்' என்று தடுத்திருக்கும். வேறு வழியிலும் யோசித்துப் பாருங்கள். மரணத்தை ஏன் துன்பமாய்க் கருதவேண்டும்? ஒருவன் இறந்தால் இரண்டில் ஒன்று ஆகவேண்டும். ஆத்மாவும் உடலுடன் அழிந்து போய், அறிவு, இன்பம், துக்கம் ஒன்றுமில்லாமல் நாஸ்தியாய்ப் போகவேண்டும்? இப்படியாயின் மரணத்தை ஏன் வெறுக்க வேண்டும்? இல்லையானால், சநாதனமாய் நாம் நம்பி வந்தபடி மரணம் வாய்த்த காலத்தில் ஆத்மாவானது வேறு உலகத்திற்குச் செல்லும். இதுவரையில் இறந்த பெரியோர்கள் எல்லாரும் இருக்குமிடத்திற்கு நாம் போவதானால் அதை ஏன் வெறுக்கவேண்டும்? நம் முன்னோர்களையெல்லாம் நேரில் நாம் காண்பதும் பேசுவதும் என்ன பெரும் பாக்கியம்! இதை அளிக்கும் மரணத்தை ஏன் நாம் ஒரு துன்பமாக எண்ணவேண்டும்? நமக்கு முன் இறந்த பெரியோர்களோடு கூடிப் பேசி ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதை ஒரு பெரிய நன்மையாகவே நான் கொள்கிறேன்.

"என் நண்பர்களே! உங்களுக்கு மரணம் நேர்ந்த காலத்தில் நீங்களும் தைரியமாயிருங்கள். 'நல்லவனுக்கு ஒரு போதும் தீங்கு நேரிடாது' என்று திடமாய் நம்புங்கள். தர்ம வழியில் நின்றவனுக்கு இம்மையிலாவது மறுமையிலாவது ஒரு துன்பமும் வராமல் கடவுள் பாதுகாப்பார். இப்போது உலகத்திலிருந்து நான் விடுதலையடைவது எனக்கு நன்மையென்று கருதியே கடவுள் எனக்கு மரணத்தைக் கொடுக்கிறார். ஆகையால் என்மேல் பழிசாட்டினவர்கள் மேலாவது எனக்குத் தண்டனை விதித்தவர்கள் மேலாவது எனக்குக் கோபமில்லை. அவர்கள் நன்மை நாடி மரண தண்டனை விதிக்கவில்லை. தீமை கருதியே அத் தண்டனை விதித்தார்கள் என்று அவர்கள்மேல் நான் குற்றம் சொல்லலாமேயொழிய, அவர்கள்மேல் எனக்கு எவ்வித வருத்தமுமில்லை. ஒன்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்: என் பிள்ளைகள் வளர்ந்து வயது முதிர்ந்தவர்களான காலத்தில், பொருளையாவது அல்லது வேறு எதையாவது தர்மத்தைவிடப் பெரி





தாக அவர்கள் நினைத்தார்களானால் அவர்களை விடாதீர்கள். நான் உங்களை எப்படி விடாமல் சோதனை செய்துவந்தேனோ அப்படியே அவர்களையும் தொந்தரவு செய்து, தண்டனையும் விதியுங்கள். என் மக்கள் அறியாமையில் மூழ்கியிருப்பதைத் தெரிந்துகொள்ளாமல், அறிவுடையவர்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டாலும், அல்லது, கேவலம் பயனற்ற வாழ்வை நடத்தி, மேன்மை பெற்ற பெரியோர்களாகத் தங்களை அவர்கள் எண்ணிக் கர்வமடைந்தாலும், நான் மற்றவர்களை இரக்கமின்றித் தூற்றினமாதிரி நீங்களும் அவர்களைத் தூற்றுங்கள். இப்படி நீங்கள் செய்வீர்களாயின் எனக்கும் என் மக்களுக்கும் நன்மை செய்தவர்களாவீர்கள்.

"காலம் அதிகமாகிவிட்டது. நீங்கள் இன்னும் சில நாள் உயிருடன் இருக்கவும், நான் இப்போதே உங்களை விட்டு நீங்கவும் ஆண்டவன் திருவருள் பாலிக்கும் பாக்கியம் உங்களுடையதா என்னுடையதா என்பது கடவுளுக்கே தெரியும். விடை கொடுங்கள்."

[ஸோக்ரத மக ரிஷியின் நியாயஸ்தலப் பிரசங்கம் முடிந்தது.]

# க்ருதருடன் ஸோக்ரத மகரிஷி
## சிறைச்சாலையில் செய்த சம்பாஷணை

[வருஷம் ஒருமுறை ஆதன்ஸ் நகரத்தார், கிரேக்கத் தீவிலுள்ள ஜனங்கள் கோயிலில் அர்ச்சனை செய்யச் சாமக்கிரியைகள் வைத்து ஒரு கப்பலை அனுப்புவது வழக்கம். இது மாதிரி ஆதன்ஸிலிருந்து கப்பல் புறப்பட்டது முதல் அது திரும்பி வரும் வரையில் நகரத்திற்குச் சில நியமங்களுண்டு. 'அந்த நோன்புக் காலத்தில் மரண தண்டனையை நிறைவேற்றி உயிரை மாய்க்கக் கூடாது' என்பது ஒரு விதி. ஸோக்ரதருக்கு விதித்த மரண தண்டனை அந்த விரத காலத்தில் நேர்ந்தபடியால் அதை நிறைவேற்ற ஒரு மாத காலம் தாமதமாயிற்று. அந்த ஒரு மாத காலம் ஸோக்ரதர் சிறைச்சாலையில் இருக்க நேர்ந்தது. அங்கே அவருடைய நண்பர்கள் அடிக்கடி அவரைப் பார்த்து வந்தார்கள். அச்சமயங்களில் நடந்த சம்பாஷணைகளில் இது ஒன்று:]

ஸோக்ரதர்: க்ருதரே! இதென்ன இந்நேரத்தில் வந்தீர்? நாழிகை என்ன இப்போது?

க்ருதர்: ஆம்; அதிக சீக்கிரமே வந்தேன். இப்போது உதயம் ஆகப்போகிறது.

ஸோ: இவ்வளவு சீக்கிரம் காவற்காரர் உம்மை உள்ளே விட்டது அதிசயம்!

க்ரு: அவர் எனக்கு இப்போது அதிகப் பழக்கமாய் விட்டாரல்லவா! அடிக்கடி வந்திருப்பதனுலும், அவருக்கு நான் செய்த ஓர் உபகாரத்தை நினைத்தும் அவர் என்னைத் தடுக்கிறதில்லை.





ஸோ: நீர் வந்து அதிக நேரமாயிற்று?

க்ரு: ஆம், முன்னமேயே வந்தேன்.

ஸோ: ஆனல் ஏன் என்னை எழுப்பவில்லை? சும்மா பேசாமல் உட்கார்ந்திருந்தீர்?

க்ரு: ஸோக்ரதரே! எனக்குத்தான் துக்கம் மேலிட்டு நித்திரை பிடிக்கவில்லை. உம்மைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. கவலையில்லாமல் சுகமாய்த் தூங்குகிறீர்! அதைப் பார்த்து உம்மை எழுப்ப எனக்கு மனம் வராமல் சும்மாவிருந்தேன். எப்போதுமே உம்முடைய மனநிலை சுகதுக்கங்களால் அசைவற்று ஒரே வழியிருந்ததை அறிவேன். ஆனல் இப்போது இவ்வளவு பெரிய துயரத்தினிடையில் சாந்தமாயும் சுலபமாயும் நீர் எல்லாவற்றையும் பொறுத்திருப்பதைப் பார்த்து நான் என்ன சொல்வேன்!

ஸோ: இதென்ன நீர் சொல்லுவது? இந்த வயதில் எனக்கு மரணம் வந்ததுபற்றி நான் மனங் கலங்கினுல் சிரிப்பாயிராதா?

க்ரு: உம்மைப் போன்ற வயோதிகர்களும் இவ்விதச் சந்தர்ப்பங்களில் மனநிலை தவறித் தங்களுக்கு வந்த விதியைப் பொருமல் வருத்தப்படுவதைப் பார்த்திருக்கிறேமே.

ஸோ: உண்மைதான். இப்போது நீர் இவ்வளவு சீக்கிரம் காலையில் வந்த சந்தர்ப்பம் என்ன?

க்ரு: கெட்ட சமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறேன், ஸோக்ரதரே! அது உமக்கு ஒன்றும் கெட்ட சமாச்சாரம் அல்ல. ஆனல் எனக்கும் உம்முடைய நண்பர்கள் அனைவருக்கும் மட்டும் இதைப் போன்ற துக்க சமாச்சாரம் கிடையாது. மற்றவரைவிட இது என்னுல் பொறுக்க முடியவில்லை!

ஸோ: என்ன அது? கப்பல் திரும்பி வந்துவிட்டதா, என்ன? என் தண்டனை நிறைவேற்றுங் காலம் வந்துவிட்டதென்று இப்படிச் சொல்கிறீரா?

க்ரு : கப்பல் இன்னும் வந்துவிடவில்லை. ஆனால் இன்று வந்து சேரும் என்று நினைக்கிறேன். சூனியத் துறை முகத்திலிருந்து வந்த சிலர், செய்தி கொண்டுவந்தார்கள். அவர்கள் சொன்னதில் கப்பல் இன்று நமது நகர் வந்து சேரும் என்று தெரியவருகிறது, ஸோக்ரதரே! நாளை உமது ஆயுள் முடியுமே, நாம் எப்படிப் பொறுப்பது ?

ஸோ : க்ருதரே ! ஆண்டவன் கட்டளை நிறைவேறட்டும். ஆனால், கப்பல் இன்று வராது ; நாளையே வரும் என்று நினைக்கிறேன்.

க்ரு : ஏன் அப்படி நினைக்கிறீர் ?

ஸோ : கப்பல் வந்த மறு நாளே நான் உயிரிழக்க வேண்டியது ?

க்ரு : ஆம் ; அதுவே அதிகாரிகளுடைய ஏற்பாடு.

ஸோ : அப்படியானால் கப்பல் நாளையே வரும் என்று நினைக்கிறேன். நான் கண்ட ஒரு கனவினால் அப்படி நினைக்கிறேன். நீர் வந்து என்னை எழுப்பாமல் இருந்தீரே, அப்போதுதான் அந்தக் கனவைக் கண்டேன், எழுப்பாததும் நல்லதே.

க்ரு : என்ன கனவு ? எனக்குச் சொல்லுவீரா ?

ஸோ : விலக்ஷணமுள்ள ஒரு ஸ்திரீ ரூபம், மங்கள உடுப்புத் தரித்து என்னைக் கூப்பிட்டு, 'இன்றைக்கு மூன்றாவது நாள் நீர் அழகிய சுவர்க்கத்திற்கு வருவீரல்லவா' என்று சொன்னது போலக் கனவு கண்டேன். இதன் பொருள் ' கப்பல் நாளை வரும் ' என்று கண்டு கொண்டேன்.

க்ரு : ஐயோ, உமது கனவின் பொருள் மிகத் தெளிவாயிருக்கிறது. ஓ, ஸோக்ரதரே ! என் பிரியமானவரே !! மறுபடியும் நான் உம்மை வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் பேச்சைக் கேளும். உயிர் தப்பித்துக் கொள்ளலாம். நீர் இறந்தால் என் துக்கத்தை எப்படிச் சகிப்பேன் ? உமக்குப் பின் உம்மைப்போல் வேறொரு நண்பரை நான் காண்பேனோ ? என்னையும் உம்மையும் நன்றாய் அறியாதவர்கள்





என்ன சொல்லுவார்கள் ? 'நான் இஷ்டப் பட்டிருந்தால் பணச் செலவு செய்து உம்மைச் சிறையிலிருந்து தப்ப வைத்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் நான் லோபம் செய்தேன்' என்று என்மேல் பழியும் சொல்லுவார்கள். 'ஒருவன் தன் அன்பிற்குரிய நண்பரைவிடப் பணத்தைப் பெரிதாய்க் கருதினான்' என்று ஜனங்கள் சொல்வதினும் வேறு ஒரு அவமானமும் பெரிய பழியும் மனிதனுக்குக் கிடையா. 'சிறையிலிருந்து போகமாட்டேன் என்று நீர் பிடிவாதம் செய்தீர்' என்று உலகம் நம்பவே மாட்டாது ; நாங்கள் பிரயத்தனம் செய்யவில்லை என்றே ஜனங்கள் நினைப்பார்கள்.

ஸோ : என் அன்புள்ள க்ருதரே ! ஏன் இப்படிப் பேசுகிறீர் ? நாம் பாமரர்களுடைய சொல்லைக் கண்டு ஏன் கவலைப்பட வேண்டும் ? சான்றோருடைய சொல்லையே நாம் கவனிக்க வேண்டும் ; அவர்கள் என்ன நினைப்பார்கள் என்றே நாம் யோசிக்க வேண்டும். அவர்கள் உண்மையை அறிவார்களல்லவா ?

க்ரு : அப்படியில்லை, ஸோக்ரதரே ! உலக வாழ்க்கையையும் நாம் கவனிக்க வேண்டும். இப்போது உமக்கு நேர்ந்த விபத்தையே பாரும். உலக வாக்கால் என்ன பெரிய துன்பம் வந்தது பாரும். பொய்ப் பழி சுமத்திப் பாமர ஜனங்களின் தப்பான அபிப்பிராயத்தாலன்றோ நீர் கெட்டீர் ?

ஸோ : க்ருதரே ! அப்படியல்ல. அவர்களால் பெருந் துன்பம் உண்டாகாது ; பெரு நன்மையும் உண்டாகாது. உண்மையாவது அறிவாவது அறிவின்மையாவது உலகத்தாருடைய வாக்கால் மாறுபடாது.

க்ரு : அப்படியே யிருக்கலாம். ஸோக்ரதரே ! என்னைக் கேளும். என்னைப் பற்றியாவது நமது மற்ற நண்பர்களைப் பற்றியாவது நீர் கவலைப்பட வேண்டாம். 'நீர் சிறையிலிருந்து தப்பியோடினால் எங்கள் மேல் குற்றம் வரும் ; உம்மைத் தப்புவித்த குற்றத்திற்காக எங்களுக்குத் திரவியச் செலவு நேரும் ; சொத்து முழுதும் பறிமுதலாகலாம் ; தவிர

வேறு தண்டனைகளுக்கும் நாங்கள் உள்ளாவோம்' என்று இம்மாதிரி நீர் பயப்படுகிறீரா? சொல்லும்! அவ்விதக் கவலை உமக்கு வேண்டாம். இவ்விதக் கஷ்ட நஷ்டங்களைக் கண்டு நாங்கள் பின்வாங்கக் கூடாது. உம்மை உயிர் தப்புவிப்பது எங்கள் கடமை. அதற்கு இவ்வித அபாயங்களை நாங்கள் பொருட்படுத்தக் கூடாது. நான் சொல்லுவதை மறுக்க வேண்டாம். வருந்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸோ : நீர் சொன்ன ஆக்ஷேபனையும் உண்டு; இன்னும் அனேக விஷயங்களு மிருக்கின்றன.

க்ரு : அவைகளைப் பற்றி யோசிக்கவே வேண்டாம். எங்களுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். அதிகப் பணச் செலவில்லாமலே அவர்கள் உம்மைச் சிறையிலிருந்து மீட்கத் தயாரா யிருக்கிறார்கள். இதற்காக அதிகப் பணச் செலவு செய்ய வேண்டியதில்லை. என் ஆஸ்தியெல்லாம் உம் விஷயத்தில் செலவு செய்ய நான் மனமுள்ளவனா யிருப்பது போதாதா? என் பணத்தை உபயோகிக்கக் கூடாது என்று நீர் ஒரு வேளை எண்ணினால், இன்னும் நமக்கு வேண்டியவர்கள், வேறு நகரங்களிலிருந்து வந்திருப்பவர்கள், ஆதென்ஸில் இருக்கிறார்கள். அவர்களை உமக்குத் தெரியுமே! அவர்கள் தங்கள் பணத்தைச் செலவு செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஸிம்மியஸ் பிரபு இதற்காக வேண்டிய பொருளுடன் தயாராய் வந்திருக்கிறார். இன்னும் ஸீபிஸ் பிரபுவும் வேறு பலரும் அப்படியே சித்தமாயிருக்கிறார்கள். ஆனபடியால் இவ்வித சந்தேகங்களினால் பின்னடையாதீர்; உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும். நமது நகரத்தை விட்டு அயல் தேசங்களுக்குச் சென்று என்ன விதமாய்க் காலம் கழிப்பது என்று நியாய ஸ்தலத்தில் சொன்னீரே, அதை ஓர் ஆக்ஷேபனையாக நினைக்க வேண்டாம். நீர் போனால் எதிர்கொண்டு நல்வரவு சொல்ல அனேக ஊர்கள் இருக்கின்றன. தெஸ்ஸிலி இராஜ்யத்திற்கு நீர் சென்றால், அவ்விடம் எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உமக்கு வேண்டுவன செய்து, யாதொரு இடையூறும் உமக்கு வராமல் பார்த்துக் கொள்ளக் கூடியவர்கள்.





தவிர, ஸோக்ரதரே! நீர் உயிரை வீணே மாய்த்துக் கொண்டீரானால், அது பெரும் பாவமாகும். உமது பகைவர்களுடன் நீரும் சேர்ந்து கொண்டு அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுவது நியாயமல்ல. உம்முடைய குழந்தைகளை அனாதைகளாய் விட்டுவிடலாமா? நீர் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல், அவர்களுக்குக் கல்வி பயிற்றுவியாமல், அவர்களை இவ்விதம் விட்டுவிட்டு இறப்பது தகுதியன்று. அனாதைக் குழந்தைகளின் கதியையே அவர்கள் அடைவார்கள். சரியாய் வளர்த்து வித்தை கொடாமல் போனால் குழந்தைகளைப் பெற்றே யிருக்கக் கூடாது. தர்மத்தை வாழ்நாள் முழுதும் போதித்த நீர் அதை மறந்து விட்டீர் போலும்! தைரியத்தையும் தர்மத்தையும் விட்டு விட்டு முயற்சியில்லாமல் உயிரை விடுவது பாவமாகும். அப்படித்தான் இருக்கிறது நீர் செய்வது. உம்மீதும் உமது நண்பர்களாகிய எங்கள்மீதும் இது ஒரு பெரிய அபவாதமாகும். 'நாம் பயந்து முயற்சி செய்யாமல் இருந்தபடியால் இம்மாதிரி யெல்லாம் நடந்தது' என்றே நினைக்க வேண்டி வரும். நீர் நியாய ஸ்தலத்திற்குப் போகாமலே தப்பி யிருக்கலாம்; போயும், வழக்கை வேறு விதமாகவாவது நடத்தி யிருக்கலாம். பிறகு, இப்போதும் உயிர் தப்பித்துக் கொள்ள வழிதேடாமலிருப்பது எங்களுடைய முயற்சியின்மையும் பயமுமே காரணம் என்று ஜனங்கள் நினைப்பார்கள். நாங்கள் ஜன்மமெடுத்தும் உமக்கு நண்பர்களாக இருந்தும் என்ன பயன்? இப்போது உம்மை உயிர் தப்புவிக்காமல் விட்டு போனால், 'செய்யக் கூடிய காரியத்தைச் செய்யாமல் விட்டு விட்டோம்' என்கிற பழி எங்கள் மேல் நிற்கும். நீர் வீணே உயிர் மாய்ப்பது எங்களுக்கும் உமக்கும் மானக்குறைவாகும். ஆழ்ந்து யோசித்துப் பாரும். இனி யோசிப்பதற்கும் அவகாசம் கிடையாது. உடனே தீர்மானித்துச் செய்யவேண்டிய சமயம் நெருங்கிவிட்டது. எல்லாம் இன்றிரவு செய்து முடிக்க வேண்டும். இனித் தாமதம் செய்தால் காரியம் கெட்டுப்போகும். ஐயோ, ஸோக்ரதரே! மறுக்க வேண்டாம்; நான் சொல்லுவதைத் தட்ட வேண்டாம்.

ஸோ : என் பிரிய நண்பரே! நான் சொல்லுவதைக் கேளும். என் உயிரைத் தப்புவிக்க நீர் இவ்வளவு கவலைப் படுவது நியாயமா யிருந்தால் சரி; தர்மத்திற்கு விரோதமா யும் தீமையைத் தருவதுமா யிருந்தால், என்னைத் தப்புவிக்க நீர் இவ்வளவு கவலைப்படுவது கூடாதல்லவா? இப்போது பார்ப்போம்: நீர் சொல்லுகிறபடி செய்வது தகுமா? தகாதா? ஆராய்ந்து பார்த்து, எது உண்மையானது, எது நல்வழி யென்று கண்டபின், அவ்வழியையே நான் பின் பற்றுவேன். என் வாழ்நாள் முழுதும் நான் நடந்த முறை இதுவே. அப்படியே இப்போதும் செய்வேனே யொழிய, இந்த மரண தண்டனை வந்ததே யென்று என் ஒழுக்கத்தி னின்றும் நான் நழுவ மாட்டேன். மரண தண்டனை மாத் திரமன்று; குழந்தைகளைப் 'பேய், பிசாசு, பூதம்' என்று சொல்லி மிரட்டுவதுபோல் என்னைப் பயமுறுத்த நகரத்தார் கள் இன்னும் புதிய தண்டனைகளை உண்டுபண்ணினாலும் என் தர்மத்தை நான் கைவிட முடியாது. இப்போது நீர் சொல்லுவதை ஆராய்ந்து பார்ப்போம்: 'ஜனங்கள் எங்களை இகழ்வார்கள். இப்படிச் சொல்வார்கள், அப்படிச் சொல் வார்கள், என்று சொன்னீரல்லவா? இதை முதலில் எடுத்து ஆராய்வோம். நாம் இதுவரையில் ஐயமேயின்றி ஒரு அபிப்பிராயம் கொண்டிருந்தோம். அடிக்கடி மற்றவர்களி டம் வற்புறுத்தியும் வந்தோமல்லவா? அதாவது, ஜனங் களுடைய வாக்கு என்று எல்லாரும் சொல்வதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. அறிந்தோர் சிலருடைய அபிப் பிராயமே கவனிக்கத் தக்கது என்று நீரும் நானும் எத்த னையோ முறை பேசியிருக்கிறோமே. இது தவறு, அல்லது உண்மையா? வெறும் பேச்சுக்காகவா? நன்றாய் ஆராயா மல் நாம் அம்மாதிரிச் சொல்லி வந்தோமா? இதை முதலில் சொல்லும். நீர் இப்போது உயிரை இழக்கும் தறுவாயில் இல்லை. ஆகையால், அபாயத்தைக் கண்டு புத்தி மயங்கா மல் நீர் அபிப்பிராயம் கொடுக்கலாம். யோசித்து எனக்குப் பதில் சொல்லும். அறிவில்லாத வெகு ஜனங்களின் அபிப் பிராயங்களை நாம் கவனிக்க வேண்டியதா, அல்லது அறிந்





தோராகிய சிலருடைய அபிப்பிராயங்களையே நாம் பெரி தாய்க் கொள்ள வேண்டுமா?

க்ரு : பெரியோராகிய சிலர் அபிப்பிராயமே மேலானது.

ஸோ : ஆகையால் அந்தச் சிலருடைய பழியையும் நன் மதிப்பையுமே நாம் பார்த்து நடந்துகொள்ள வேண்டும்.

க்ரு : ஆம்.

ஸோ : அப்படிச் செய்யாமல் மற்றவர்களுடைய பழிக்குப் பயந்தும், நன்மதிப்பை எதிர்பார்த்தும் நடந்தால் ஒழுக்கம் கெடுமல்லவா?

க்ரு : ஆம்.

ஸோ : வைத்தியன் சொல்லைக் கேளாமல், ஆரோக்கிய சாஸ்திரமறியாத மற்றவர்கள் பலர் சொல்லைக் கேட்டு நடந் தால் உடம்பு கெட்டுப் போகுமல்லவா?

க்ரு : ஆம்.

ஸோ : வைத்தியன் பேச்சைக் கேளாமற் போனால் எப்படித் தேகம் கெடுமோ அப்படியே, நல்ல ஞானி ஒருவரின் சொல்லைக் கேளாமல் பலர் சொல்லைக் கேட்டுப் பயந்தும் நயந்தும் நடந்தால் நமது ஆத்மாவுக்குத் தீங்கு நேரிடு மல்லவா?

க்ரு : ஆம்.

ஸோ : தேகத்தைவிட ஆத்மா சிறந்த பொருளல்லவா? தேகத்தை இரட்சித்துக்கொள்ள நாம் அனைவரும் இந்த நியாயத்தை ஒப்புக்கொண்டு நடந்தால், தேகத்தைவிடச் சிறந்ததும் நித்தியமாயுமுள்ள ஆத்மாவை இரட்சித்துக் கொள்ள அதே நியாயத்தைச் சிறிதேனும் தவறாமல் ஒப்புக் கொள்ள வேண்டும் அல்லவா?

க்ரு : ஆம், உண்மை.

ஸோ : ஆகையால், க்ருதரே! இது தர்மம், இது அதர் மம் என்கிற பகுத்தறிவுள்ளவர்களுடைய அபிப்பிராயத்

தையே நாம் மதிக்கவேண்டும். வெகு ஜனங்கள் இழிசொல் கூறுவார்கள் என்று நாம் பயப்படக் கூடாது அல்லவா ?

க்ரு : ஆம், அப்படியே ஏற்படுகிறது.

ஸோ : ஆனுல் 'பாமர ஜனங்கள் மரண தண்டனை விதிக்கக்கூடும், உயிரை மாய்க்கும் அதிகாரம் அவர்களுக்கு உண்டே' என்று சொல்லலாம் அல்லவா ?

க்ரு : ஆம், அது ஓர் ஆக்ஷேபனையா யிருக்கிறது.

ஸோ : இதிலும் நாம் அனேக நாளாய் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோ மல்லவா ? அது இப்பொழுது மாறிப் போய் விட்டதா ? உயிருடன் இருப்பதே பெரிதா, அல்லது நல் வழியில் பிழைத்திருப்பதே பெரிதா, சொல்லும்.

க்ரு : நல்வழியில் பிழைத்திருப்பதே பெரிது.

ஸோ : ஆகையால், இப்போது யோசித்துப் பார்ப்போம். நான் சிறைச்சாலையிலிருந்து தப்பிப் போக முயல்வது சரியா தவரு என்பதை ஆராய்வோம். சரியாயிருந்தால் அப்படியே செய்யலாம் ; தவருயிருந்தால் அந்த எண்ணத்தை விட்டு விடுவோம். தப்பிப்போவதற்காக வேண்டிய பணச் செலவு, ஜனங்களுடைய நன் மதிப்பு, பழி, குழந்தைகளுடைய யோக க்ஷேமம் இவைகளைப்பற்றி யெல்லாம் பார்க்கக் கூடாது. நன்மையா தீமையா என்று சோதிப்பதற்கு இவை சரியான உரைகல் ஆகமாட்டா. சரியான பிரமாணங்களை எடுத்துப் பார்ப்பதே முறை. நானும் நீரும் மற்றவர்களும் என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து சிறையிலிருந்து தப்பிப்போவது நல்வினையாகுமா, தீவினையாகுமா என்பதையே பார்க்க வேண்டும். தீய கருமமென்று நாம் கண்டால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது, அல்லது வேறு கஷ்டங்களை நீக்கிக்கொள்ளவாவது நாம் அந்தக் காரியத்தைச் செய்யக் கூடாதல்லவா ?

க்ரு : ஆம், ஸோக்ரதரே! உண்மையே. ஆனுல் நாம் என்ன செய்வது ?





ஸோ : நண்பரே ! நான் சொல்லுவதைக் கேட்டு, அதில் பிழை ஏதாவது இருந்தால் நீர் தடுத்து, அப்பிழையைத் திருத்தும் ; நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் சொல்லுவதில் பிழையொன்று மில்லாவிட்டால் ஏன் என்னை வீணே திரும்பத் திரும்ப உயிர் தப்பி ஓடச் சொல்லுகிறீர் ? உம்முடைய அபிப்பிராயத்தை நான் மிகவும் மதிக்கிறேன். ஆகையால் இவ்விஷயத்தில் உம்மைத் திருப்தி பண்ண விரும்புகிறேன். நான் கேட்கிறவைகளுக்குப் பதில் சொல்லும்.

க்ரு : அப்படியே.

ஸோ : நாம் தவருன காரியங்களை மனதறிந்து எப்பொழுதும் செய்யக் கூடாதா ? அல்லது, சில சமயங்களில் சில விஷயங்களில் அப்படிச் செய்வது தகுமா? நீரும் நானும் வயது முதிர்ந்தவர்களாயிருந்து, அனேக முறை நாம் இருவரும் இந்தத் தர்மத்தை முடிவாக ஏற்று வந்தோமல்லவா ? 'தவருன காரியத்தை ஒரு போதும் செய்யக்கூடாது ; ஜனங்கள் என்ன சொல்லுவார்கள் என்று கவனிக்கக் கூடாது ; மரணம், அல்லது அதற்கு மேலான வேறு தண்டனைகளையும் நாம் பார்த்துப் பயப்படக்கூடாது' என்று நாம் இதற்கு முன்னமே கொண்ட முடிவு சரியா ? அல்லது, அதில் பிழையுண்டா ?

க்ரு : சரிதான்.

ஸோ : ஆகையால், நாம் ஒருபோதும் தவருனதைச் செய்யக் கூடாதல்லவா ?

க்ரு : கூடாது.

ஸோ : தவிர, எப்போதும் தீயன செய்யக் கூடாது என்ருல், ஒருவர் நமக்குத் தீயன செய்தால் அதற்குப் பதிலாகவும் நாம் தீயசெயலைச் செய்யக் கூடாது அல்லவா? ஜனங்கள் 'பிரதிக்குப் பிரதி செய்யலாம்' என்று நினைப்பது தவறுதானே ?

க்ரு : ஆம்.

ஸோ: ஆகையால், க்ருதரே! நாம் யாருக்கும் தீங்கு செய்யக் கூடாதே?

க்ரு: கூடாதுதான்.

ஸோ: நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையும் செய்யலாம் என்று ஜனங்கள் நினைப்பது பிசகுதானே.

க்ரு: சந்தேகமில்லை; பிசகுதான்.

ஸோ: தவறான செயல் செய்வதும் தீங்கிழைப்பதும் எல்லாம் ஒன்றுதானே? நமக்கு ஒருவன் என்ன தீங்கிழைத்திருந்தபோதிலும், அவனால் நமக்கு எவ்வளவு பெரிய துன்பம் நேரிட்டிருந்த போதிலும், அவனுக்கு நாம் தீங்கிழைக்கக் கூடாது; தவறான செயலும் செய்யக் கூடாது. இது உண்மையான தர்மம் என்று ஒப்புக்கொள்கிறீரா? யோசித்துச் சொல்லும். இப்படிப் 'பழிக்குப் பழி வாங்கக் கூடாது; ஒருவன் நமக்குத் தீமை செய்யினும் நாம் அவன்பால் தீமை செய்யக்கூடாது; நெறிதப்பி நடக்கக் கூடாது' என்று சிலரே ஒப்புவர்; மற்றப் பலர் இதை ஒப்பமாட்டார். ஒப்பினும் அவ்வாறு நடக்கமாட்டார். ஆகையால், தீர யோசித்துச் சொல்லும். 'ஒருவன் நமக்குத் தீமை செய்தால் அதற்குப் பதிலாக நாம் தீங்கு இழைக்கலாம்' என்று கொள்வாரும், 'தீமைக்குப் பதிலாகவும் தீமையிழைக்கக் கூடா'தென்கிற தர்மத்தைக் கொண்டவரும் சேர்ந்து எவ்விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வர முடியாது. அடிமுதல் வேறுபாடான கொள்கைகள் உள்ளவர்கள் ஒரு முடிவுக்கு வர முடியாது. ஒருவன் நன்மை செய்யினும் தீமை செய்யினும், 'நமது கடமை நன்மை செய்வதே' என்கிற கொள்கையை நான் நீண்ட நாளாகக் கொண்டவன். இப்போதும் நான் அதையே உறுதியாய் நம்புகிறேன். நீர் வேறு அபிப்பிராயப் படுகிறீரா? சொல்லும்.*

* கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.





க்ரு: நானும் அதே கொள்கைக்கு இணங்குகிறேன்.

ஸோ: அடுத்தபடி, நான் உம்மைக் கேட்பது, ஒருவன் தான் செய்த வாக்குறுதியை நடத்த வேண்டியதல்லவா? நியாயத் தவறில்லாத உடன்படிக்கைகளை நிறைவேற்ற வேண்டியதுதானே?

க்ரு: ஆம், நிறைவேற்ற வேண்டும்.

ஸோ: இப்போது பார்ப்போம். நான் இராஜாங்கத்தின் அனுமதியின்றித் தப்பியோடினால், நான் இராஜாங்கத்திற்குத் தீங்கு இழைப்பேனா இல்லையா? என்னைக் கட்டுப்படுத்தும்படியான, நியாயமான உடன்படிக்கைகளை மறுத்தவறுவேனா இல்லையா?

க்ரு: நீர் கேட்பதற்குப் பதில் சொல்ல முடியவில்லை; விளங்கவில்லை.

ஸோ: ஆராய்ந்து பாரும். நமது சுதர்மங்களும் சுயராஜ்யமும் உருவங்கொண்டு வந்து, நம் முன் நின்று கேட்பதாக வைத்துக்கொள்ளும்: 'ஸோக்ரதரே, சிறையிலிருந்து தப்பியோடுகிறீரே! என்ன காரியம் செய்கிறீர்? நம்மைக் கொலை செய்யவல்லவா முயலுகிறீர்? ஜனங்களால் செய்யப்பட்ட சட்டங்களை அவரவர் இஷ்டப்படி அவரவர் மறுத்துவிட்டு, அச்சட்டங்களின்படி நியாய ஸ்தலத் தீர்மானங்கள் மதிக்கப் பெறாமல் போனபிறகு, ஓர் இராஜாங்கம் நிற்குமா? நீர் எங்களைக் கொலை செய்யவல்லவோ நினைக்கிறீர்?' என்று அவை என்னைக் கேட்பது நியாயமாகும். இதற்கு நாம் என்ன பதில் சொல்வோம், க்ருதரே? சுயராஜ்யத்தில் ஜனங்கள் ஏற்படுத்திக் கொண்ட நியாய முறைகளின்படி நியாய ஸ்தலத்தில் உண்டான தீர்மானத்திற்குமேல் ஒரு

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

—என்ற திருக்குறளாசிரியருடைய உறுதி வாக்கையும் கவனிக்க. கௌதம புத்தர், ஏசுநாதர் இவர்கள் உலகத்தில் எடுத்துக் காட்டிய முக்கிய தர்மமும் இதுவே.

மறுப்பும் கூடாதல்லவா? ஒரு வேளை சொல்லலாம்: எனக்கு இராஜாங்கம் தீங்கிழைத்ததல்லவா? தவருகச் செய்யப்பட்ட தீர்மானத்தை நான் ஏன் ஒப்பவேண்டும்? இம்மாதிரி நான் சொல்லலாமா?

க்ரு : ஏன் சொல்லக் கூடாது?

ஸோ : இப்படி நான் வாதித்தால் நமது சுதர்மம் எதிர் நின்று அடியில் கண்டபடி பதில் சொல்லும் : 'ஸோக்ரதனே! இதுதானு நம்முடைய உடன்படிக்கை? இராஜாங்கத்தில் செய்யப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்தையும் ஒப்புக்கொள்வதாக நீ சம்மதிக்கவில்லையா?' 'எப்போதேனும் இம்மாதிரி உடன்படிக்கை கொடுத்ததாக அறியேனே' என்று நான் சொன்னுல், நமது சுதர்ம தேவதை பதில் சொல்லும்: 'அப்பா! மாற்றிப் பேசாதே. ஏன் என்னையும் என் நகரத்தையும் கொலை செய்து அழிக்கப்பார்க்கிருய்? நாங்கள் உனக்கு என்ன தீங்கு செய்தோம்? முதலில் உனக்குத் தாய் தந்தை போல் நாங்களிருந்தோமல்லவா? நகரத்துள்ள ஆட்சியின் துணைகொண்டல்லவோ உன் தகப்பனுர் உன் தாயைக் கொண்டு உன்னைப் படைத்தார்? விவாக முறைகளைப்பற்றி நமது நகரத்தின் விதிகளைப் பற்றி உனக்கு ஏதாவது ஆக்ஷேபனையுண்டா சொல்' என்று என்னைக் கேட்டால் நான் 'இல்லை' யென்று தானே சொல்லவேண்டும்? தவிர, 'குழந்தைப் பருவத்தில் உன்னையும், நகரத்தில் மற்றக் குழந்தைகளையும் பாதுகாத்து வந்த நமது சட்டங்களில் எதையாவது நீ ஆக்ஷேபித்தாயா?' என்று கேட்டால் அதற்கும் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. 'நம்மால் நீ பிறந்து வளர்ந்து பாதுகாக்கப்பட்டவன். எங்களுக்குக் குழந்தையாகவும் அடிமையாகவும் உன் முன்னேர்போல் நீயும் இராமல் எங்களைத் தள்ளிவிடுவது தர்மமாகுமா? உன் சிறிய பாத்தியங்களும் சிறிய ஆதீனங்களும் உனமேல் எங்களுக்குள்ள பெரிய ஆதீனத்திற்கு அடங்கியே நிற்கவேண்டும். நாங்கள் உனக்கு ஒரு துன்பம் செய்தால் அதற்குப் பதிலாக நீ எங்களுக்குத் துன்பம் உண்டாக்கலாமா? உன் தகப்பன் உனக்கு ஒரு கெடுதி செய்தால் நீ





அதற்குப் பழி வாங்குவாயா? நீ அடிமையாயிருந்து உன் எஜமான் உனக்கு ஓர் ஊறு உண்டுபண்ணினுல் அதற்குப் பதிலாக நீ அவனுக்கு ஊறு செய்ய முடியுமா? அவர்கள் உன்னைக் கஷ்டப்படுத்தினுலாவது, வசைச் சொற்கள் சொன்னுலாவது, அடித்தாலாவது, அல்லது வேறு துன்பம் செய்தாலாவது நீ அவர்களுக்குப் பதில் கஷ்டப்படுத்தவாவது, வசைப் பேச்சுப் பேசவாவது, அடிக்கவாவது, பழிவாங்கவாவது முயல்வாயா? முயல்வது நியாயமாகுமா? உன் தேசமும் சுதர்மமும் உனக்குத் தாயும் தந்தையும் எஜமானர்களும் போன்றவை. அவைகளின்மேல் நீ பழிக்குப் பழி வாங்குவது தகாது. உன்னைக் கொன்று உயிர் மாய்த்தாலும், அது நியாயம் என்று கருதி அவ்விதம் நாங்கள் செய்தால், நீ அதற்குப் பதிலாக எங்களைக் கொல்லவும் அழிக்கவும் தகுமா? தர்ம ஒழுக்கங்களை அதிகமாக மதிக்கிற நீ, உன் தேசத்திற்கும் இராஜ்யத்திற்கும் சுதர்மத்திற்கும் இவ்வளவு பெரிய தீங்கிழைப்பது சரிதானு? உன் தாய் தந்தையர், மற்ற முன்னேர்கள், அனைவரையும்விட உன் தேசம் அதிகம் பெரிதும், அதிகம் மதிக்கத் தகுந்ததும், சநாதனமுமானது; புண்ணியம் பொருந்தியது; தெய்வங்களாலும் பெரியோர்களாலும் மதிக்கப் பெற்றது என்பது உண்மையல்லவா? நீ அதை அறியவில்லையா? அப்படிப்பட்ட சுதேசத்தையும் அதன் சுதர்மத்தையும் சுய ஆட்சியையும் நீ நன்கு மதித்துப் பக்தி செலுத்தி, அவைகளுக்கு எவ்விதக் கேடும் உண்டாகாதபடி தாய் தகப்பனுரைவிட அதிகமாய்ப் போற்றி வரவேண்டுமல்லவா? அவர்கள் உன்னிடம் கோபித்தாலும் நீ சாந்தமாயும் பக்தியுடனும் அவர்களின் கோபத்தைச் சரியான வழியில் மாற்றவோ, அல்லது அவர்கள் சொல்லுக்கு அடங்கவோ வேண்டும். அவர்கள் உனக்குச் சாட்டையடி, அல்லது கால் விலங்கு தண்டனையாகக் கொடுத்தாலும் அதை நீ சாவதானமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா? 'சண்டையில் போய் உயிரைக் கொடுத்தோ காயம்பட்டோ வா' என்ருலும் நீ சந்தோஷமாய்ப் போகவேண்டியவன் அல்லவா? பின் திரும்பி ஓடுவாயா? யுத்தத்திலும் நியாயஸ்தலத்திலும் மற்றெங்கேயும் உன் தேசமும் உன் நகரமும் என்ன செய்யச் சொல்லு

கின்றனவோ அதை நீ செய்தே தீரவேண்டும்; அல்லது அந்த உத்தரவுகள் நியாயத் தவறு என்று அவை திருப்திபடக் காட்டவேண்டும். தாய் தந்தையருக்கு விரோதமாய்த் துராக்கிரகம் செய்வது கடவுள் இட்ட விதிக்கு விரோதம். உன் தேசத்தின்மேல் துராக்கிரகச் செயல் செய்வது அதை விடப் பெரிய அதர்மம்.' இப்படி நமது நகரும் நமது சுதர்மமும் வாதித்தால் நாம் என்ன பதில் சொல்லக் கூடும், க்ருதரே? சொல்லும்.

க்ரு: நியாயமென்று ஒப்புக்கொள்ளுகிறேன்.*

ஸோ: இன்னும், நமது நகர தேவதையும் சுதர்ம தேவதையும் சொல்லும்:

'நீ தப்பியோடுவது எங்களை நாசஞ் செய்யும்படியான தீவினையாகும். உன்னைப் படைத்ததும், குழந்தைப் பருவத்தில் காத்ததும், அறிவு ஊட்டி வித்தை கொடுத்ததும், நீ வேண்டின பொருள் உனக்குத் தந்து காத்ததும் நாங்களல்லவா? தவிர, எங்களைக் கண்டு யாருக்காவது திருப்தியில்லாவிடில், வயது வந்தவுடனே தம் பொருளை எடுத்துக்கொண்டு நம்முடைய நகரத்தைவிட்டு வேறு இராஜ்யத்திற்குப் போய்விடலாம் என்றும் அவகாசம் கொடுத்தோம். இம்மாதிரி இளமைப் பருவம் நீங்கிப் புத்தியடைந்த ஒவ்வொருவனும் நகரத்தில் வழங்கும் அரசாங்க முறையும் சட்டங்களும் நியாயமும் தனக்குப் பிடியாவிடின் நகரத்தை விட்டு விலகிப்போகும் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறோமல்லவா? நம்முடைய குடியேற்ற நாடுகளுக்காவது, அன்னிய இராஜ்யங்களுக்காவது, வேறு எங்கேயாவது போகலாம். ஆதன்ஸிலேயே இருந்து தீரவேண்டும் என்று ஒருவரையும் நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.

* இவ்விடம் ஒரு சந்தேகம் தோன்றலாம். ஸோக்ரதர் உபதேசம் நியாயமாயின், சட்ட மறியல் இயக்கமும் ஒத்துழையா இயக்கமும் எவ்விதம் நியாயம் என்று கேட்கலாம். சுயராஜ்ய தர்மத்திற்கும் குடிகள் சம்மதமின்றி துராக்ரக பலத்தால் நடத்தப்படும் அன்னிய அரசாட்சியில் குடிகள் எடுத்துக்கொள்ளக்கூடிய தர்மத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஆராய்ந்து சந்தேகத்தை நீக்கிக்கொள்க.





ஆனால், நம்முடைய நகரத்தின் நீதி பரிபாலனத்தையும் மற்ற அரசாட்சி முறைகளையும் அறிந்து, வயது வந்த பின்னும் நகரத்திலேயே தங்கியிருக்கும் ஒவ்வொருவனும் நகரத்தின் விதிகளை ஒப்புக்கொண்டவனாகிறான். அப்படி எங்களை ஒப்புக்கொண்டு எங்கள் நகரத்தில் இருக்கும் ஒருவன் எங்களை நிராகரித்துவிட்டால், அவன் மூன்று குற்றங்கள் செய்தவனாகிறான். பெற்றோரை மீறி நடந்த குற்றம்; எடுத்து வளர்த்தவருக்குத் துரோகம் செய்த குற்றம்; உடன்படிக்கையை நிறைவேற்றாமல் சத்தியத்தைத் தவறின குற்றம் — ஆகிய மூன்றும் செய்தவனாகிறான். நாங்கள் சொன்னதை யெல்லாம் செய்ய வேண்டும் என்று முரட்டுத்தனமாயும் நாங்கள் சொல்லவில்லை. நியாய ஸ்தலத்தில் நாங்கள் சொல்லுவது தவறு என்று நிரூபிக்கவும் அவகாசம் கொடுத்தோம். இத்தகைய முப் பாவமும் நீ செய்யத் துணிந்தாயா? ஸோக்ரதனே! மற்றவர்களை விட உன் குற்றம் பெரிதாகும். நம்முடைய நகரத்தை விட்டு நீ வெளியே போகாமல் எப்போதும் ஆதன்ஸிலேயே இருந்து வந்தாய். மற்றவர்களைப்போல் நீ அடிக்கடி திருவிழாக்களுக்குக்கூட ஊரை விட்டுப் போனது கிடையாது. போர்முனைக்குப் போனது தவிர, நீ எப்போதும் இவ்வூரிலேயே இருந்து வந்தாய். நம்முடைய நகரமும் அதன் பரிபாலனமும் உனக்குத் திருப்தியா யிருந்ததா லல்லவா, நீ மற்ற ஊர்களையும் தேசங்களையும் விரும்பிப் போகாமலிருந்தாய்? எங்களை நீ ஒப்புக்கொண்டு நகரத்தில் வாழ்ந்து, இல்லற சுகமும் அனுபவித்தாய்? உன்மேல் வழக்குத் தொடர்ந்த காலத்திலும் உனக்கு அவகாச மிருந்தது. ஆதன்ஸ் நகரத்தைவிட்டு அப்புறப்படுத்திவிடும் தண்டனை கொடுக்கும்படி நீ நியாய ஸ்தலத்தில் கேட்டிருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. இப்போது நீ செய்யப் போகும் காரியத்தை அப்போது நீ நம்முடைய அனுமதி பெற்றே செய்திருக்கலாமே! ஆனால் அப்போது நீ என்ன சொன்னாய்? 'ஊரை விட்டுப் போவதைவிட நான் மரணத்தையே விரும்புகிறேன்' என்று தைரியமாய்ச் சொன்ன பேச்சை இப்போது மறந்தாயோ? எங்களை மதியீனப்படுத்தி

நாசஞ் செய்யப் பார்க்கிறாய். கேவலம் ஒரு மானமற்ற அடிமை தன் எஜமானனை விட்டு ஓடுவதுபோல் எங்களிடம் நீ செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி அசத்தியத்தில் புக நினைக்கிறாய். எங்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறேன் என்று நீ ஒப்பினது பொய்யா, அல்லது மெய்யா? சொல்லு' என்று கேட்டால் நாம் என்ன சொல்லுவது, க்ருதரே? 'ஒப்பினேன்' என்றுதானே சொல்ல வேண்டும்?

க்ரு: ஆம்.

ஸோ: க்ருதரே! இன்னும் அந்தத் தேவதைகள் சொல்லும்: 'ஸோக்ரதனே! நீ செய்த உடன்படிக்கையை மீறுகிறாயே. உன்னை நாங்கள் எதாவது மோசமாவது பலவந்தமாவது செய்து எங்களுக்கு உட்பட்டிருக்க வாக்குறுதி வாங்கினோமா? அல்லது, அவசரத்தில், யோசனை செய்யப் போதுமான அவகாசம் கொடாமல் உன்னிடம் வாக்குப்பெற்றுவிட்டோமா? எழுபது வருஷங்கள் நீ நம்முடன் வாழ்ந்தாய்; இந்த எழுபது வருஷங்களில் எப்போதாவது நகரத்தின் பரிபாலனம் உனக்குத் திருப்தியில்லாதிருந்தால் நீ நகரத்தை விட்டுப் போயிருப்பாய்; உடன்படிக்கையை ரத்து செய்து கொண்டிருப்பாய். அண்டையிலுள்ள இராஜ்யங்கள் ஆதன்ஸைவிட உனக்கு அதிகத் திருப்தியைக் கொடுத்திருந்தால் அவ்விடங்களுக்குப் போய்விட உனக்கு எழுபது வருஷங்கள் இருந்தனவே! கிரேக்க தேசமே விட்டுக் கீழ் நாட்டுக்காவது மேல் நாட்டுக்காவது நீ போய்விட்டிருக்கலாமே? நொண்டியும், குருடனும், முடவனும் ஊரை விட்டுச் சில நாள் வெளியே சென்றாலும் கூட. நீ மட்டும் இவ்வூரை விட்டுப் போனது கிடையாதே! இப்போது நாங்கள் சொல்லுவதைக் கேள் கொடுத்த உறுதிவாக்கை மறுக்காதே. ஊரைவிட்டு ஓடிப்போகாதே. எங்களுக்குத் துரோகம் செய்யாதே.

'ஸோக்ரதனே! யோசனை செய்து பார். இந்த அக்கிரமச் செயலால் நீ என்ன நன்மையை அடையப்போகிறாய்? அல்லது, உன் நண்பர்கள் என்ன லாபம் பெறுவார்கள்?





உனக்கு உதவி செய்து சிறையிலிருந்து மீட்ட குற்றத்திற்காக அவர்களும் குடிப் பிரஷ்டம் அடையலாம்; தேசப் பிரஷ்டம் அடையலாம்; அவர்களுடைய சொத்தும் பறிமுதலாகலாம். நீ பக்கத்தில் வேறு இராஜ்யத்திலுள்ள ஒரு நகரத்திற்குப் போவாய் என்று வைத்துக் கொள்வோம். நீ போன இடத்திலெல்லாம் அந்தத் தேசத்து அரசாங்கத்திற்கு நீ ஒரு பகையாகக் கருதப்படுவாய். தங்கள் தங்கள் அரசாங்கத்தில் பக்தியும் பற்றுமுள்ளவர்களெல்லாம் உன்னை என்ன நினைப்பார்கள்? சட்டத்தை மீறி, அரசாங்கத்தின் அதிகாரத்தை நிராகரித்து வந்தவன் என்றே ஒவ்வொருவரும் உன்னைக் கருதுவர். தன் தாய்நகர பரிபாலனத்தை மீறிச் சட்டத்தை நிராகரித்துவிடக் கூடியவன் வாலிபர்களையும் அறிவீனர்களையும் துர்ப்புத்தியுண்டாக்கிக் கெடுத்துவிடவுங் கூடும். உன் மேல் மெலேதன் சாட்டின குற்றம் உண்மையே ஆகும். செய்த தீர்மானமும் நியாயமாகும். நீ எங்கேதான் போவாய்? தங்கள் தங்கள் அரசாங்கத்தில் பற்றில்லாத ஜனங்கள் நிறைந்த அராஜக ஊர்களைத் தேடிப் போவாயா? தங்கள் தேச பரிபாலனத்திலும் சுதர்மத்திலும் பக்தியில்லாதவர்களிடமே பேசித் திரிவாயா? அவர்களிடம் நீ என்ன சம்பாஷணை செய்து காலம் போக்குவாய்? தர்மத்தைப் பற்றிப் பேசுவாயா? நியாயம், நீதிஸ்தலம், அரசாங்கம், இராஜ்ய பரிபாலனம், சுயாட்சி இவைகளைப் பற்றிப் பேச உனக்கு நா எழுமா?

'இன்னும் யோசித்துப் பார். இராஜ பக்தியில்லாத ஊர் ஒன்றைத் தேடி, நீ செய்த குற்றத்தைப் பெரிதாக நினையாத இடமாக ஒன்றைப் பார்த்துப் போவாய் என்று வைத்துக் கொள்வோம். அவ்விடத்திலுள்ள ஜனங்கள் உன் கதையைக் கேட்டு ஆனந்தமடைவார்கள். ஸோக்ரதன் உடுப்பு மாற்றி, மாறு வேஷம் பூண்டு, ஏமாற்றி யோடிப் போன கதையைக் கேட்டுச் சிரித்துச் சந்தோஷிப்பார்கள். ஆனால் ஒருவர் இருவராவது உன்னைக் கேட்பார்களல்லவா? "ஐயா, கிழவரே! நீர் இன்னும் எவ்வளவு நாள் பிழைத்திருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு இம்மாதிரி உம்

முடைய அரசாங்கத்தை மீறி ஓடி, உயிர் தப்பி வந்தீர்?" — இப்படி ஒருவர் கேட்டால் நீ வெட்கப் படுவாயல்லவா? இப்படி நீ வெட்கப் படும்படியான கேள்விகளை ஒருவரும் உன்னைக் கேட்காமலிருக்க, நீ கண்டவர்கள் எல்லாரையும் முகமன் பேசிச் சந்தோஷப்படுத்தி, எல்லாரிடமும் வேஷம் போட்டு வரவேண்டும். இம்மாதிரிக் காலம் கழித்து என்ன இன்பத்தை யடையப்போகிறாய்? நல்ல உணவுகள் தின்பதில் காலம் போக்குவாயா? இதற்குத்தானா தர்மத்தைப்பற்றியும் நல்வினை தீவினைகளைப் பற்றியும் இவ்வளவு பேச்சுக்கள் நீ பேசி வந்தாய்? ஒரு வேளை, உன் குழந்தைகளுக்காக உயிர் தப்பிப் போகலாம் என்று நினைக்கிறாயா? தான் பிறந்த ஊருக்குப் பிரஷ்டமாய் நீ போவதுடன் உன் மக்களையும் அப்படியே செய்யப்போகிறாயா? ஒரு வேளை, அவர்களை ஆதென்ஸிலேயே விட்டுப் போவாயா? அவர்களுடன் நீ இல்லாமல், அவர்கள் நீ எங்கேயோ உயிருடனிருக்கிற காரணத்தினாலேயே என்ன வித்தை அதிகமாய்க் கற்றுக் கொள்ளப் போகிறார்கள்? நீ உயிருடன் இல்லாதிருந்தாலும் அவ்வளவுதான் கற்கப் போகிறார்கள். உன் நண்பர்கள் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள் என்று நீ நினைப்பது சரிதான். ஆனால் அவர்கள் நீ உயிருடன் இருந்தால் பார்த்துக் கொள்வார்களா? நீ உயிரிழந்துவிட்டால் பார்க்க மாட்டார்களா? உன் நண்பர்களிடம் உனக்குப் போதுமான நம்பிக்கையில்லை போலும்! இல்லை, ஸோக்ரதனே! கேள்: மக்கள் உயிர் எதுவும் நியாயத்திற்கு மேலல்ல. நியாயம் தவறினாயானால் யமனிடம் செல்லும் காலத்தில் என்ன பதில் சொல்வாய்? நீ இப்போது ஓடினாயானால் நீயும் சுகப் படப்போவதில்லை, உன் நண்பர்களும் சுகப்படப்போவதில்லை; ஒருவித மேன்மையையாவது புண்ணியத்தையாவது, நீயோ உன் நண்பர்களோ அடையப் போவதில்லை. இப்போது நீ மரண மடைந்தால், நீ அடைந்த துன்பத்துக்குக் காரணர், அநியாயத்தைச் செய்த மனிதர்கள்; நியாயம், நகரம், தர்மம் இவைகள் உனக்கு ஒரு துரோகமும் செய்யவில்லை. அவைகளைப் பரிபாலித்த ஜனங்களே உன்னை அக்கிரமத்திற்குப் பலியாக்கினவர்களாவார்கள். இதற்கு நீ செய்யவேண்டிய





தென்ன? அதர்மம் உன்பால் செய்யப்பட்டதால், நீ அதர்மத்தில் இறங்கலாமா? தீய காரியத்திற்குப் பிரதி நீயும் தீய காரியம் செய்துவிட்டு அவமானப்பட்டு, உன் நண்பர்களும் நீயும் மேன்மை யிழந்து, சுக மிழந்து, உன் தேசத்திற்கும் சுதர்மத்திற்கும் தீங்கிழைத்து, எப்படியாவது உயிர் தப்புவதைப் பெரிதாக நினையாதே. அப்படிச் செய்வாயாயின் நகர தர்மத்தை நாசம் செய்த நீ காலஞ் சென்று யமனிடம் செல்லும்போது, தர்ம சொருபமான அவன் எவ்வாறு உன்னை வரவேற்பான்? 'க்ருதன் சொல்லுவதைக் கேளாதே; நாங்கள் சொல்லுவதைக் கேள்; நாங்கள் சொல்லுவதைக் கேள், கெட்டுப்போகாதே.'

க்ருதரே! இவ்வாறு நமது சுயராஜ்யமும் சுதர்மமும் பிரசன்னமாய் என் காதில் சொல்லி வருகின்றன. அந்தத் தர்ம உபதேசம் மற்றப் பேச்சுக்களை யெல்லாம் அழுத்திவிட்டு என் காதில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. இப்படியிருக்க நீர் ஏன் வீணாக என்னை உயிர் தப்பித்து ஓடும்படி சொல்லுகிறீர்? என் மனம் மாறாது. மாற்றிவிடலாம் என்று நீர் இன்னும் நினைத்தால், பேசும். நான் 'வேண்டாம்' என்று சொல்லவில்லை.

க்ரு: நான் வேறு என்ன சொல்லப் போகிறேன்! என் பேச்சு முடிந்துவிட்டது.

ஸோ: க்ருதரே! கடவுள் ஆணையென்று உட்பட்டுத் தைரியமா யிருக்கலாம்.

[க்ருதர் - ஸோக்ரதர் சம்பாஷணை முற்றிற்று.]

# ஸோக்ரதரின் மரணம்

இஷக்ராதர்: நீர் ஸோக்ரதர் மரணமடைந்த காலத்தில் கூடவே யிருந்தீரா! அல்லது, சங்கதியை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டீரா?

வீதர்: நான்கூடவே யிருந்தேன்.

இஷெ: அப்படியானால் நமது ஆசாரியர் கடைசியில் என்ன சொல்லி, எப்படி உயிரை விட்டார்? எல்லாம் சொல்லும். அவர் மரண சரித்திரம் கேட்க மிக்க ஆசையாயிருக்கிறது. ஆதன்ஸிலிருந்து அனேக நாளாய் யாரும் நம்மூருக்கு வரவில்லை; சங்கதி சரியாய்ச் சொல்லுவாரில்லை. 'அவர் விஷம் சாப்பிட்டார், இறந்தார்' * என்ற பேச்சுத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. நண்பர்கள் யாராவது சுவாமியுடன் இருந்தார்களா? அல்லது யாரையும் அதிகாரிகள் விடவில்லையா?

வீ: அப்படியல்ல. அனேக நண்பர்கள் கூடவே கடைசிவரை யிருந்தார்கள்.

இஷெ: நடந்ததெல்லாம் விவரமாய்ச் சொல்லக் கோருகிறேன். உமக்கு அவகாசமுண்டா, அல்லது வேறு ஏதாவது அலுவல் இருக்கிறதா?

---

* மரண தண்டனையின் முறை, தலையை வெட்டுவது, தூக்குப் போடுவது, மலையிலிருந்து கீழே தள்ளுவது, நெருப்பு வைத்து எரிப்பது, மின்சாரத்தினால் கொல்லுவது—இப்படிப் பல தேசங்களிலும் பல காலங்களிலும் பலவிதமாக வழங்கி வருகிறது. ஆதென்ஸ் நகரத்தில் ஸோக்ரதர் நாளில் மரண தண்டனை முறை யென்ன வென்றால், தண்டனை விதிக்கப்பட்டவனிடம் குறித்த நாளில் வெகு சீக்கிரத்தில் மரணத்தைத் தரும்படியான மகா கொடூரமான ஒரு விஷபானத்தைக் கொடுத்து, அவன் அதைக் குடிக்கச் செய்வது.





வீ: ஒரு தடையுமில்லை. நடந்ததெல்லாம் சொல்லுகிறேன். ஸோக்ரதர் விஷயத்தைச் சொல்லுவதும் கேட்பதும் மனதுக்கு ஆனந்தத்தைத் தருகின்றன. கேளும்:

"நான் அன்று கூடவே யிருந்தேன். என் மனம் சுவாதீனம் தப்பி ஒருவிதக் கலக்க மடைந்தது. மிகப் பிரியமான நண்பர் ஒருவர் மரணமடையும் காலத்தில் உண்டாக வேண்டிய துக்கமே தோன்றவில்லை. அவர் மன நிலையையும் ஆனந்தத்தையும் கண்டு என் மனத்தில் துக்கமே உண்டாகவில்லை. ஆகா! என்ன தைரியம்! என்ன பெருந்தன்மையுடன் உயிரை விட்டார்! தேவர்கள் எல்லாரும் அவரைச் சுற்றி அவர் ஆத்மா விடுதலை யடைவதைப் பார்க்க வந்து காத்திருந்தது போலவே யிருந்தது. நற்கதியை யடைந்து ஆனந்தப் பதவியை யடைவதற்குத் துக்க மொன்றுமில்லை என்பது கண்கூடா யிருந்தது. சாதாரணமாய், ஆத்ம விஷயங்களைப் பற்றி அவர் சம்பாஷித்தால், மனத்தில் ஒருவித உற்சாகம் எனக்கு உண்டாகும். அன்று அவர் ஆத்ம விஷயங்களையே பேசினார்; ஆனாலும், எனக்கு அவ்வித உற்சாகம் உண்டாகவில்லை. விசனமும் ஆனந்தமும் கலந்த ஒருவித மனோபாவம் என்னைக்கொண்டது. அங்கிருந்தவர்க ளெல்லோரும் இதே மாதிரியாகவே யிருந்தார்கள். ஒரு சமயம் சிரித்தோம்; ஒரு சமயம் அழுதோம். இப்படி சுவாதீனமற்ற மனநிலையோ டிருந்தோம்.

"முதலிலிருந்து சொல்லுகிறேன், கேளும்: சாதாரணமாய், நானும் சில நண்பர்களும் தினமும் காலையில் சிறைச்சாலைக்குப் பக்கத்தில் ஒரு மைதானத்தில் சேர்ந்து பேசிக்கொண்டிருந்து விட்டுச் சிறைச்சாலைக் கதவு திறந்தவுடன் உள்ளே போவோம். முதல் நாள் மாலையில் கிரேதத் தீவிலிருந்து சுவாமி கோயிலுக்கு அபிஷேகம் செய்துவிட்டுக் கப்பல் திரும்பி ஆதென்ஸ் சேர்ந்துவிட்ட தென்று சமாச்சாரம் அறிந்தோ மாகையால், அன்று அதிகாலையிலேயே போனோம். நாங்கள் சிறைச்சாலையண்டை போனதும் வாயிற்காவலாளி வந்து, 'கொஞ்சம் பொறுங்கள்; அதிகாரிகள் வந்து ஸோக்ரதருடைய கால் விலங்குகளைக் கழற்றி

விட்டு, அவருக்கு இன்று விஷ பானம் கொடுக்க உத்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் போனதும் நீங்கள் வரலாம்' என்று சொல்லிப் போனான்.

"அவன் கொஞ்ச நேரங் கழித்துத் திரும்பி வந்து, எங்களை உள்ளே விட்டான். அப்போதுதான் விலங்கும் சங்கிலிகளும் கழற்றப்பட் டிருந்தன. ஸோக்ரதருடைய மனைவி சாந்திபை குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். எங்களைக் கண்டதும் சாந்திபை கண்ணீர் விட்டு, 'ஐயோ! இதுவோ கடைசி முறை நீர் உம்முடைய நண்பர்களுடன் பேசுவது?' என்று சொல்லி அழ ஆரம்பித்தாள்.

" 'க்ருதரே, இவளை யார் அழைத்துப் போவார்கள்?' என்று ஸோக்ரதர் சொன்னதும், க்ருதருடைய ஆட்கள் சிலர் சாந்திபையை அழைத்துப் போனார்கள். அவள் விம்மி விம்மி அழுதுகொண்டும் மார்பில் அடித்துக் கொண்டும் வீட்டுக்குப் போனாள்.

"ஸோக்ரதர் தம் படுக்கையின் மேல் உட்கார்ந்து கால்களை மெதுவாகப் பிசைந்து கொண்டு, 'இந்த விநோதத்தைப் பாருங்கள். சுகமும் நோயும் பரஸ்பரம் விரோதமாயிருந்தும், இரண்டும் சேர்ந்திருக்க முடியாதாயினும், கடவுள் அவைகளை ஒன்றன் பின் ஒன்று தப்பாமல் வரும்படி கட்டிவிட்டிருக்கிறார்! "நீங்கள் ஒருவரோடு ஒருவர் விரோதப் பட்டுக்கூட வாழ மாட்டோம் என்கிறீர்கள். உங்களில் ஒருவர் வாலை ஒருவர் தலைக்குக் கட்டிவிடுகிறேன்" என்று சொன்ன மாதிரியிருக்கிறது. மனிதனுக்கு ஒன்று வந்தால் மற்றொன்று தவறாமல் அதன் பின் வரும். இவ்வளவு நாள் இந்தக் கால் விலங்கு நோயைத் தந்துவந்தது. இப்போது அது எடுத்து விடப்பட்டதும் எவ்வளவு சுகமாயிருக்கிறது' என்றார்.

" 'எவேனர் என்னைப் பற்றி விசாரித்தாரா? அதிக சந்தோஷம். அவரிடம் என் நமஸ்காரங்களைச் சொல்லுங்கள். அவர் நல்ல ஞானியல்லவா? அவரையும் சீக்கிரம்





என்னைப் பின் தொடர்ந்து வரச் சொல்லுங்கள். இன்று நான் உங்களைவிட்டுச் செல்ல வேண்டிய நாள். அதிகாரிகள் உத்தரவு செய்து விட்டார்கள்' என்றார்.

"அப்போது ஸிம்மியர், 'இதென்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? எவேனரை நான் அறிவேன். அவர் மரணமடைய விருப்பமுள்ளவராயில்லை' என்று சொன்னார்.

" 'என்ன! எவேனர் தத்துவ ஞானமடைந்தவர் என்று கேள்விப்பட்டேனே, அப்படியில்லையா? ஞானமடைந்தவன் ஒவ்வொருவனும் இந்த உடலை விட்டுப் போகவே விரும்புவான். ஆனால், பலவந்தமாய் உயிரை மாய்த்துக்கொள்ள மாட்டான். அது தவறாகும்.' இப்படிச் சொல்லிவிட்டுக் கால்களைக் கீழே போட்டு உட்கார்ந்து கொண்டார்.

" 'ஏன் அது மாத்திரம் தவறாகும்? சொல்லுங்கள்' என்று அங்கிருந்தவர்கள் கேட்க, ஸோக்ரதர் சொன்னார்: 'உடலானது, கடவுள் நமக்குத் தந்த ஒரு சிறைச்சாலையாகும். அதிலிருந்து நாமாகத் தப்பியோடக் கூடாது; கடவுளே விடுதலை செய்ய வேண்டும் என்று சில ஞானிகள் சொல்லுவார்கள். இதன் பொருள் விளங்குவது கஷ்டமாயிருக்கலாம். நான் சொல்லுவது என்னவென்றால், நாமெல்லாரும் கடவுளின் பாதுகாப்பிலிருக்கிறோம். நாமெல்லாரும் அவருடைய சொத்து. நம்மை நாம் வதை செய்துகொள்ள நமக்குச் சுவாதீனம் கிடையாது. கடவுளே நமக்கு விடுதலை கொடுக்கும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும்.'

" 'ஞானமடைந்த ஒவ்வொருவனும் மரணத்தை ஆவலுடன் விரும்புவான் என்று நீர் சொன்னது இதற்கு விரோதமில்லையா? நாம் கடவுளுடைய சொத்தாயிருந்து – அவர் ஆதீனத்திலிருந்து – பாதுகாக்கப் பெற்று வருவது உண்மையாயின், எப்படி ஞானியான ஒருவன் அந்தக் காப்பிலிருந்து விடுபட விரும்புவான்? ஏன் மரணமடைய ஆவல் கொள்ள வேண்டும்?' என்று ஒருவர் கேட்டார். அதைக் கேட்டு ஸோக்ரதர், 'ஓகோ! என் மேல் குற்றம் மறுபடியும் சாட்டுகிறீர்கள். ஏன் உயிரைவிடப் போகிறீர்?

ஏன் காப்பாற்றிக் கொள்ள நீர் முயலவில்லை? — என்று என்னைக் கேட்பதற்குப் பதில் இந்தக் கேள்வி கேட்கிறீர்களல்லவா?' என்று நகைத்துக் கொண்டே சொன்னார்.

“அதற்கு அவர்கள், ‘ஆம்’ என்று சொன்னார்கள். ‘அப்படியானால் கேளுங்கள் : கடவுள் காப்பில் நான் இருந்து வந்தேன். அவர் ஆக்ஞை கொடுத்தவுடன் சந்தோஷத்துடன் உயிரை விடுகிறேன். ஆனால் அப்படி உயிரிழந்தவுடன் ஆத்மா அழிந்து போவதாயிருந்தால் நீங்கள் சொன்னதும் சரி. ஆத்மா அப்படி அழியாது. இவ்வுடல் நீங்கிப்போனாலும், கடவுளின் காப்பிலேயே, அவர் பக்கத்திலேயே, அல்லது வேறு இடத்திலேயே, அவருடைய பூர்ண ஆதீனத்திலிருப்பேன் என்பது திண்ணம். ஆகையால் மரணத்தைக் கண்டு துயரப்பட வேண்டியதில்லை’ என்று சொன்னார்.

“‘ஆத்மாவுக்கு அழிவில்லை யென்பதை எங்களுக்கு நன்றாய் விளக்க வேண்டும். நீர் எங்களை விட்டுப் போகு முன்னே இதைப்பற்றி நாங்கள் ஞானமடையும்படி நீர் உபதேசித்தால் நலமாயிருக்கும்’ என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

“‘அப்படியே ஆகட்டும். ஆனால் க்ருதர் ஏதோ சொல்ல விரும்புகிறார் போலிருக்கிறது. அது என்ன, கேட்போம்’ என்றார்.

“‘ஒன்றுமில்லை ஸோக்ரதரே! உமக்கு விஷ பானம் கொடுக்க வேண்டியவன் சொல்லுகிறான் : நீர் அதிகமாய்ப் பேசக் கூடாதாம். பேசினால் தேகத்தில் உஷ்ணம் மேலிட்டு அந்த விஷத்தின் வேகத்தைத் தடுக்குமாம். வேகம் தடுக்கப்பட்டால் மரணம் சுலபமாய் உண்டாகாமல் இரண்டு மூன்று முறை விஷ பானம் கொடுக்க வேண்டி நேரிடுமாம்’ என்று க்ருதர் சொன்னார்.

“‘அவன் கிடக்கட்டும். எவ்வளவு தரம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு தரம் கொடுக்கச் சொல்லும், அதற்காக என்ன?’ என்று ஸோக்ரதர் சொன்னார்.





“‘நீர் இப்படியே பதில் சொல்லுவீர் என்று எனக்குத் தெரியும்’ என்று க்ருதர் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

“‘ஞானியானவன் மரணத்தை ஆவலுடன் விரும்பி அதை எதிர்பார்த்திருப்பான் என்பது உங்களுக்கு விளங்கிற்று?’ என்று ஸோக்ரதர் கேட்டதற்கு, அங்கிருந்தவர்கள் நகைத்து, ‘எங்களை நகைக்கச் செய்கிறீரே! இது நகைக்கும் சமயமன்று. நீர் சொல்லுவதை ஒப்புக்கொண்டு நமது மகா ஜனங்கள் எல்லா ஞானிகளையும் கூப்பிட்டு, “நீங்களே மரணத்தை விரும்புகிறீர்களாமே?” என்று எல்லாருக்கும் ஒரே முறை சந்தோஷமாய் மரணதண்டனை விதித்து, இந்த ஞானிகளுடைய தொந்தரவு ஒழிந்தது என்றிருப்பார்கள்’ என்று சொன்னார்கள்.

“‘அப்படி மகா ஜனங்கள் செய்தால் உத்தமமே. ஆனால் அவர்களுக்கு என்ன காரணத்தினால், எவ்விதத்தில் ஞானியானவன் மரணத்தை விரும்புகிறான் என்பது தெரியாது. மரணம் என்றால் என்ன? நம்முடைய ஆத்மாவும் உடலும் வேறுபடுவதா?’

“‘ஆம்.’

“‘அதாவது மரணம் வாய்த்தவுடன் ஆத்மா உடலினின்று பிரியும். உடல் ஆத்மாவினின்று தனியாகவும் நிற்குமல்லவா?’

“‘ஆம்.’

“‘ஞானிகளுடைய எண்ணமும் வாழ்க்கையும் எவ்விதமிருப்பன வென்று சற்று ஆராய்வோம். நல்ல சுவையுள்ள பதார்த்தங்களை உண்டும் பருகியும், அவைகளால் உண்டாகும் இன்பத்தையும், மற்றும் இதர புலன்கள் வழியாய் மனிதனுக்கு உண்டாகும் சிற்றின்பங்களையும் மதிக்க மாட்டார்களல்லவா? இன்றியமையாத அளவு ஏற்று, மற்றவைகளை வெறுப்பார்களல்லவா?’

“‘ஆம்.’

“‘அதாவது ஞானியின் மனம் உடலைப் பொருந்தினது அன்று. உயிருடனிருந்தாலும், சாத்தியமான வரையில்

உடலையும், அதன் வழிச் சேரும் சிற்றின்பங்களையும் மனத்தினின்று நீக்கி, ஆத்ம விஷயங்களிலேயே அவன் மனத்தைச் செலுத்துவானல்லவா ?'

"'ஆம்.'

"'அதாவது, உயிருள்ளபோது ஞானியானவன் உடலின் பற்றுக்களிலிருந்து தன் ஆத்மாவை விடுவிக்க முயலுகிறான்.'

"'ஆம்.'

"'ஞானத்தை அடைய ஒருவன் முயலும்போது, அவனுடைய ஐம்பொறிகளின் வழியால் அடையக்கூடிய இன்பங்களில் அவன் மனம் சென்று, அந்த முயற்சியில் பலவித இடையூறுகள் உண்டாகின்றனவல்லவா? தவிர, இந்த ஐம்பொறிகளால் மனிதனுக்கு உண்டாகக்கூடிய அறிவெல்லாம் அஞ்ஞானமும் பிழையும் கலந்துள்ளன என்றும் நாம் தெரிந்திருக்கிறோமல்லவா ?'

"'ஆம்.'

"'ஆகையால், மெய்யறிவு அடைய வேண்டுமானால் ஐம்புலன்களை அடக்கி, அவைகளால் உண்டாகும் அவஸ்தைகளிலிருந்து மனத்தை விடுவிக்கவே முயலவேண்டும். ஞானியினுடைய ஆத்மா தன்னைச் சிறைப் படுத்தியுள்ள உடலைவிட்டுத் தனிப்படவே சதா காலமும் விரும்பிக் கொண்டிருக்கும்.

"'உடலுள்ள வரையில் அதன் யோகக்ஷேமத்திற்காகப் பாடுபட வேண்டும். காலமும் முயற்சியும் அதன் பொருட்டுக் கழிகின்றன. நோய்வாய்ப்படும் போதெல்லாம், மனநிலை மாறி, மெய்யறிவு உண்டாவது தடைப்படுகிறது. உடலுள்ள வரையில் காமம், வெகுளி, அச்சம், மயக்கம் இவைகளால் ஞானத்தை அடைவது தடைப்படுகிறது.* உடலும், அதன்

* ஆங்காரப் பொக்கிஷங் கோபக் களஞ்சிய மாணவத்தால்
நீங்கா அரண்மனை பொய்வைத்த கூடம் விண்ணீழல்வளர்
தேங்கார் பெருமதிற் காம விலாசமித் தேகங்கந்தல்
பாங்கா யுனைப்பணித் தெப்படி ஞானம் பலிப்பதுவே.

—என்று பட்டினத்துப் பிள்ளையார் அருளிய பாடலாலுங் காண்க.





அவாவும், ஆசையுமே எல்லாத் தீவினைகளுக்கும், நிலையில்லாத பொருளைத் தேடுவதிலும், பகையிலும் சண்டையிலும் நாம் வீணே காலங் கழிப்பதற்கும் காரணம்.

"'மெய்யறிவை அடைய நாம் முயல அவகாசமில்லாமற் செய்கிறதும் அதுவே. ஒருசமயம் புலன்களை அடக்கி, அறிவை அடையத் தகுந்த நிலையில் மனதை ஒருவன் நிறுத்தினாலும், அடுத்த நிமிஷத்தில் மறுபடியும் உடலானது மேல்நின்று, அந்நிலையைக் கெடுத்து விடுகிறது. ஆகையால் பரிபூர்ணமான மெய்யறிவு ஒன்றுண்டாயின், அது ஒருவனுக்கு வேண்டுமாயின், உடலைவிட்டுப் பிரிந்து ஆத்மா தனித்து நின்றால்தான் அதை அடைய முடியும். உடலுடன் இவ்வுலகில் இருக்கும் வரையில், இன்றியமையாத விஷயங்களில் தவிர, மற்றப்படி உடலின் சம்பந்தமெல்லாவற்றையும் ஒழித்துவர வேண்டும். இப்படி ஆண்டவன் நமக்கு விடுதலையளிக்கும் வரையில் நம்மாலான வரையில் ஆத்மாவைத் தேக சம்பந்தத்தி லிருந்தும், அதனால் உண்டாகும் குற்றங்களிலிருந்தும், விலக்கியே வைக்க வேண்டும். எவன் உயிருடனிருக்கும்போதே தன் ஆத்மாவை உடலிலிருந்து தன்னாலானவரை விலக்கித் தற்சுத்தி யடைகிறானோ, அவன் மரணத்திற்குப் பின் ஆண்டவன் சன்னிதியில் சுத்த ஆத்மாக்களுடைய சமூகத்தில் போய்ச் சேர்ந்து, பூரண மெய்யறிவு அடைவான்.'

[ அதன்மேல் 'ஆத்மாவுக்கு என்றும் அழிவு கிடையாது' என்னும் விஷயத்தைப் பற்றியும், ஆத்மாக்கள் தங்கள் தங்கள் கர்மங்களுக்குத் தக்கவாறு மறு ஜன்மங்கள் அடையுமென்பதைப் பற்றியும், இன்பம் துன்பம் என்கிற இருவகைப் பற்றுக்களையும் ஒழித்து ஆத்மஞான மடைந்தவனே முத்தியடைவான் என்பதைப் பற்றியும் அனுமானப் பிரமாணங்களுடன் வெகுநேரம் சம்பாஷணை ரூபமாய் உபதேசித்தார்.*]

* இந்த அரிய பிரசங்கத்தை இங்கே முழுவதும் மொழிபெயர்க்கவில்லை. வடமொழியில் உபநிஷத்தையும், பகவத் கீதையையும், பீஷ்மாசாரியார் உபதேசத்தையும், தமிழில் திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தார் முதலியோர் அருளிச் செய்த அரிய நூல்களையும் படித்தவர் ஸோக்ரதர் பிரசங்கத்தில் புதிய விசேஷத்தைக் காணார். ஆனால், இந்த

"'ஆகையால் எவனொருவன் தன் வாழ்நாளில் ஐம் புலன்களை அடக்கி, உடல் வழியாய் வரும் சுக துக்கங்களை நீக்கி, ஆத்மஞானம், நடுநிலை, தர்மம், அச்சமின்மை, பற்றின்மை, மெய்ம்மை—இவைகளை வளர்த்து வருகிறானோ அவன் மரணத்தைக் கண்டு பயப்பட வேண்டுவதில்லை. அவன் தன் ஆத்மா நற்பேறு அடையும் என்று தைரியமா யிருப்பான். உடல்விட்டு நீங்க ஆண்டவன் கட்டளை எப்போது வந்தாலும் ஏற்றுக் கொள்ளச் சித்தமா யிருப்பான். என் நண்பர்களாகிய நீங்களும் உங்கள் காலத்தை எதிர் பார்த்திருங்கள். என்னை இப்போதே காலன் அழைக்கிறான். ஆகையால், நான் ஸ்நானம் செய்யப் போகிறேன். விஷத் தைப் பானம் பண்ணுவதற்கு முன்னேயே ஸ்நானம் செய்து விடுவது நல்லது. இல்லாவிடில், பிறகு பிரேதத்தைக் கழுவ நேரும். ஜனங்களுக்கு வீண் தொந்தரவு.'

" இப்படி முடித்தவுடன், க்ருதர் 'அப்படியே யாகட்டும்' என்று சொல்லி, ' உமது நண்பர்களுக்காவது எனக்காவது, குழந்தைகள் விஷயமா யாயினும், மற்றெதைப் பற்றி யாயி னும் நீர் ஏதாவது சொல்ல வேண்டியதுண்டா? நாங்கள் எப்படி உமக்குத் தொண்டு செய்யக்கூடும்? சொல்லும்' என்று கேட்டார்.

"'க்ருதரே! நான் இவ்வளவு நாள் உங்களுக்குச் சொல்லிவந்தபடி நீங்கள் நடந்தால் போதும். உங்களு டைய ஆத்மாக்களைப் பாதுகாத்து, அதைச் சுத்தி செய்து வாருங்கள். அது செய்தால், மற்றவை யெல்லாம் தாமே வரும். இப்போது எவ்வித உறுதியும் எனக்கு நீங்கள்

மெய்யுணர்வை கிரேக்க மகரிஷியான ஸோக்ரதர் 2400 வருஷங்களுக்கு முன் அடைந்து உபதேசித்துவந்தார் என்பதை மாத்திரம் நாம் அறிந்து கொள்ள வேண்டும் பிரசங்கத்தை (முதனூலை)ப் படித்தால், பகவத் கீதையில் அர்ச்சுனனுக்குப் பகவான் உபதேசம் செய்த மொழிகளை ஸோக்ரதர் அறிந்தேயிருக்க வேண்டும் என்று தோன்றும். கிரேக்க தேசத்திற்குப் பாரததேச ரிஷிகளியற்றிய நூல்களும், அவைகளால் உண் டான ஞானமும் சிறிது பாகம் போய்ச் சேர்ந்தே யிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆக்ஷேபணை சமாதானங்களையும், ஸோக்ரதர் பேசின தத்துவார்த்த முழுவதையும் மொழிபெயர்த்தால் பெருகும் என்றும், தமிழ் மக்களுக்கு அவசியமில்லை யென்றும் விடப்பட்டன.





சொல்லாமலிருந்தாலும், உங்கள் வாழ்வை நான் இவ்வளவு நாள் சொன்னபடி நீங்கள் பாதுகாத்து வந்தால், என் குடும்பத்தைப் பற்றியும் உங்கள் குடும்பங்களைப் பற்றியும், நான் உங்களுக்குச் சொல்லாமலே, எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ அவ்விதம் நடந்து கொள்வீர்கள். இன்று நாம் பேசிய விஷயங்களையும் இதற்கு முன் அநேக முறை நாம் பேசிய விஷயங்களையும் நீங்கள் மறந்து, நான் குறிப்பிட்ட வழியில் வாழ்வை நடத்தத் தவறுவீர்களானால், நீங்கள் என் குடும்பத்தைப் பற்றி எனக்கு இப்போது எவ்வளவு வாக்குறுதி செய்தாலும் பயனில்லை அல்லவா?'

"'எங்களால் இயன்ற அளவு செய்கிறோம். தங்களை எவ்விதம் அடக்கம் செய்ய உத்தரவு கொடுக்கிறீர்கள்' என்று க்ருதர் கேட்க, ஸோக்ரதர், 'உங்கள் இஷ்டப்படி செய்யலாம். என்னை எப்படி அடக்கம் செய்யப் போகிறீர் ? நான் உங்களுக்கு அகப்படுவேனா, பார்ப்போம்' என்று சொல்லி நகைத்தார். 'நண்பர்களே, க்ருதருக்கு நான் என்ன சொல்லியும் நம்பமாட்டார்; உங்களுடன் இவ்வளவு நேரம் பேசி, ஆக்ஷேபணை சமாதானங்கள் ஒழுங்காக எடுத்துக் காட்டியும், இன்னும் சில நிமிஷங்களுக் குள் உடலை விட்டு விடுதலை யடைந்து வெளியே போய் விடும் ஸோக்ரதனானவன் நான் என்று அவர் ஒப்ப மாட் டார். கொஞ்ச நேரம் கழித்துக் கீழே கிடக்கப்போகும் பிரேதத்தை நான் என்றும், என்னை அவர் எவ்விதம் அடக்கம் செய்ய விரும்புகிறேன் என்றும் கேட்கிறார். விஷம் பருகின பின் உங்களுடன் இதுவரையில் பேசிவந்தவனாகிய நான் இவ்விடத்தை விட்டு மேலுலகம் சென்றுவிடுவேன் என்று எவ்வளவு சொல்லியும் அவருக்கு விளங்கவில்லை. அவருக்கு நீங்கள் உறுதிமொழி கொடுக்கக் கூடாதா? நியாய ஸ்தலத்தில் எனக்கு அவர் ஜாமீனாக நின்றார். அதாவது, நான் போய்விட மாட்டேன்; இருப்பேன் என்று உறுதி கொடுத்தார். இப்போது நீங்கள் அவருக்கு "நான் இருக்க மாட்டேன்; போய்விடுவேன்" என்பதற்கு ஜாமீன் கொடுங்கள்' என்று சொல்லி நகைத்தார்.

“ ‘இப்படி அவருக்கு நீங்கள் உறுதி சொன்னால்தான் அவர் என் பிரேதம் தீப்பற்றி எரிகிறதைப் பார்த்ததும், அல்லது மண்ணில் போட்டு மூடுவதைப் பார்த்ததும் அழாமல் இருப்பார். “ஸோக்ரதனை எடுத்து மயானம் செல்கிறோம்; ஸோக்ரதனைச் சிதையின்மேல் வைக்கிறோம்; அல்லது, மண்ணில் புதைக்கிறோம்” என்று அவர் சொல்லாமல் இருப்பார். என் பிரியமான க்ருதரே, இவ்விதம் பேசுவதெல்லாம் தவறு. தவறான பேச்சுக்களை உபயோகித்தால், பேச்சு மாத்திரம் கெடுவதல்லாமல், ஆத்ம ஞானமும் கெட்டுப்போய்த் துன்ப முண்டாகும். தைரியமாயும் சந்தோஷமாயும் இருப்பீராக. அழாதீர்! “என் உடலைப் புதைக்கிறேன்”—என்று சொல்லும்; “என்னைப் புதைக்கிறேன்”—என்று சொல்லாதீர். உம் இஷ்டப்படி நீர் எவ்விதம் தகுதி யென்று நினைக்கிறீரோ அவ்விதம் தேகத்தை அடக்கம் செய்யும்’ என்று சொல்லி, ஸ்நானத்திற்குச் சென்றார். க்ருதரும் எங்களை இருக்கச் சொல்லிவிட்டு அவருடன் போனார். நாங்கள் அவ்விடமே உட்கார்ந்திருந்தோம். அன்று அவர் சம்பாஷித்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நம்மைப் பெற்ற தந்தையை இழந்து, நாமெல்லாரும் திக்கற்ற குழந்தைகளாகப் போவதுபோல் தோன்றிற்று. ஸ்நானம் செய்து வந்தபின், அவருடைய மூன்று மக்களையும் அழைத்து வந்தார்கள். ஒருவன் வயது வந்தவன்; மற்றிருவர் சிறு குழந்தைகள்; அவரைச் சேர்ந்த ஸ்திரீகளும் வந்தார்கள். க்ருதரை வைத்துக்கொண்டு, அவர்களுக்குச் சொல்லவேண்டியன எல்லாம் கடைசியாகச் சொல்லிவிட்டார். அவர்களை அனுப்பிவிட்டு எங்களிடம் மறுபடியும் வந்து உட்கார்ந்தார். அப்போது அஸ்தமன வேளையாய்விட்டது. அதன் பிறகு யாரும் அதிகம் பேசவில்லை.

“பின்பு, ஓர் உத்தியோகஸ்தன் வந்து அவர்முன் நின்று, ‘ஸோக்ரதரே, மற்றவர்களைப்போல் நீர் செய்ய மாட்டீர் என்பது எனக்குத் தெரியும். நான் விஷபானத்தைக் கொடுத்து அவர்களைக் குடிக்கச் சொன்னால் அவர்கள்





கோபங் கொண்டு என்னைத் திட்டுவதும் சபிப்பதும் வழக்கம். அதிகாரிகளுடைய உத்தரவை நான் நிறைவேற்ற வேண்டியவனல்லவா? நான் என்ன செய்யக் கூடும்? நீர் அவ்விதமெல்லாம் செய்யமாட்டீர் என்று எனக்குத் தெரியும். இதுவரையில் இவ்விடம் வந்தவர்கள் எல்லாரையும்விட நீர் பெருந்தன்மையும் அன்பும் நிறைந்தவரா யிருக்கிறீர். என்மேல் நீர் கோபங் கொள்ளமாட்டீர். எனக்கு உத்தரவிட்டவர்களே இந்தப் பெருங் குற்றத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். என்னை ஆசீர்வதியும், சுவாமி! நான் வந்த காரியம் உமக்குத் தெரியுமே!’ என்று கண்ணீர் விட்டழுது கொண்டு வெளியே போய்விட்டான்.

“ஸோக்ரதர், ‘அப்பா, நீ சொன்னபடி செய்கிறேன். சுகமா யிருப்பாயாக’ என்று அவனுக்குச் சொல்லிவிட்டு, எங்களைப் பார்த்து, ‘இவன் எவ்வளவு மரியாதையும் அன்பும் உடையவனா யிருக்கிறான்! நான் இவ்விடமிருந்த காலமெல்லாம் இவன் அடிக்கடி என்னிடம் வந்து பேசிப் போவான். மிக நல்ல இருதய முடையவன். எனக்காகக் கண்ணீர் விடுகிறான், பாருங்கள்! க்ருதரே, வாரும்! அவன் சொன்னபடி செய்வோம். விஷபானம் சித்தமாயிருந்தால் அதைக் கொண்டுவரச் சொல்லும், அல்லது சீக்கிரம் சித்தப்படுத்தச் சொல்லும்’ என்று சொன்னார்.

“அதற்குக் க்ருதர், ‘இல்லை, ஸோக்ரதரே, அவசரப்பட வேண்டாம். இன்னும் அஸ்தமன மாகவில்லை. மலைமேல் சூரியன் இன்னும் பிரகாசிக்கிறான். மற்றவர்கள் எல்லாரும் கடைசி நாள் நன்றாய்ச் சாப்பிட்டும், மதுபானம் செய்தும், நண்பர்களுடன் பேசி ஆனந்தித்தும், பிறகுதான் வெகு நேரம் கழித்து விஷத்தைப் பானஞ் செய்வார்கள். நீர் ஏன் அவசரப்படுகிறீர்? இன்னும் வெகுநேரம் இருக்கிறது’ என்று சொன்னார்.

“ ‘நீர் சொல்லும் மனிதர்கள் அப்படிச் செய்வது சரிதான். ஏனென்றால், அவர்கள் அந்தச் சுகங்களை மதித்து உயிருடன் இருக்கவே எப்போதும் விரும்புகிறபடியால், தாமதம் செய்து விஷம் குடிப்பார்கள். நான் அப்படிச்

செய்வது தகுமா? அப்படிச் செய்தால் உயிரை விட மனம் வராமல் இந்த உடலுடன் இன்னும் ஒரு நிமிஷமாவது இரண்டு நிமிஷமாவது இருக்க ஆசைப்பட்டவனாவேன் என்றல்லவா எண்ணப்படுவேன்? அதை நினைக்க எனக்கு வெட்கமா யிருக்கிறது. நான் சொல்லுவதை மறுக்காதீர்' என்று ஸோக்ரதர் மறுபடியும் சொல்ல, க்ருதர், பக்கத்திலிருந்த தம் ஆள் ஒருவனுக்குக் கண் காட்டினார். அவன் வெளியே சென்ற கொஞ்ச நேரத்தில் விஷபானம் கொண்ட ஒரு பாத்திரத்துடன் ஓர் உத்தியோகஸ்தன் வந்தான்.

"ஸோக்ரதர் அவனைக் கண்டதும் புன்னகையுடன், 'நண்பனே, இவ்விஷயமெல்லாம் உனக்கு நல்ல அனுபவம். நான் செய்ய வேண்டியதைத் தயவு செய்து சொல்' என்றார்.

"'இதை நீர் குடித்துவிட வேண்டும்; அவ்வளவுதான். அதன் பின், கால் மரக்கும்போல் தோன்றுகிற வரையில் நடந்துகொண்டிருக்க வேண்டியது. பிறகு, நீர் படுத்துக் கொள்ளலாம். விஷம் தன் வேலையைச் செய்யும்?' என்று சொல்லி, ஸோக்ரதரிடம் விஷ பானத்தைக் கொடுத்தான். அவர் அதைக் கையசையாமல், முகம் மாறாமல், தம் கையில் வாங்கிக்கொண்டு, அதிகாரியை உற்றுப் பார்த்து — அம்மாதிரி அவர் உற்றுப் பார்க்கும் வழக்கம் உமக்குத் தெரியுமே! — 'அப்பா இந்தப் பானம் இவ்வளவு தானா, அல்லது நம்மிஷ்டம்போல் இன்னும் அதிகமாய்ச் செய்துகொள்ளலாமா?' என்று கேட்டார். அதற்கு அதிகாரி, 'எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே நாங்கள் செய்வது வழக்கம்' என்று சொன்னான்.

"'அப்படியா! நல்லது, தேவர்களைத் துதித்து, என்னைச் சுகமாய் அழைத்துப் போகும்படி ஜெபிக்கலா மல்லவா? அப்படியே ஆகக்கடவது' என்று சொல்லி, விஷத்தைப் புன்சிரிப்புடன் வாயில் வைத்துக் குடித்துவிட்டார். அது வரையில் நாங்கள் அநேகமாய்த் துக்கத்தை ஒருவாறு அடக்கி யிருந்தோம். ஆனால், அவர் விஷத்தை எடுத்துக் குடிப்பதைக் கண்டவுடன் எங்களால் பொறுக்க முடியவில்லை. என்னை அறியாமல் என் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.





என் முகத்தை மூடிக்கொண்டு நான் அழுதேன். அவருக்குக் கஷ்டம் வந்ததென்று நான் துக்கப்படவில்லை. இப்பேர்ப்பட்ட நண்பரை விட்டுப் பிரிகிறேனே என்று என் துர்ப்பாக்கியத்திற்காக நான் அழுதேன். எனக்கு முன்னேயே க்ருதர் துக்கத்தைத் தாங்க முடியாமல் அழுது கொண்டே வெளியே போய்விட்டார். அநங்கநந்தர் முதலிலிருந்து கண்ணீர் விட்டுக்கொண்டே யிருந்தவர் கடைசியில் பலமாய்ப் புலம்பினார். அதன் மேல், ஸோக்ரதர் ஒருவர் தவிர, நாங்கள் எல்லாரும் துக்கத்தைப் பொறுக்க முடியாமல் விம்மி அழ ஆரம்பித்தோம்.

"'நண்பர்களே! நீங்கள் செய்வது என்ன? ஸ்திரீகளையெல்லாம் நான் அனுப்பிய காரணம், இம்மாதிரி என் பக்கத்தில் யாரும் புலம்பா திருக்கும்படி யல்லவா? நீங்கள் பொறுத்துக் கொள்ளாமல் இப்படி அழுவது தகுதியன்று. ஆத்மா உடலைவிட்டுப் பிரியுங் காலத்தில் சப்தமில்லாமலிருக்க வேண்டு மென்று சொல்லுவார்கள். தயவு செய்து சாந்தமா யிருங்கள்' என்று ஸோக்ரதர் சொல்ல, நாங்கள் வெட்கப்பட்டு அழுவதை நிறுத்தினோம்.

"அவர் கொஞ்ச நேரம் நடந்துகொண்டே யிருந்து, கால்கள் மரத்துப்போவதாகத் தெரிந்ததும், அதிகாரி சொன்னபடி மல்லாந்து படுத்துக் கொண்டார். அவருடைய பாதங்களை அடிக்கடி தடவிப் பார்த்து, பிறகு அவன், காலை நன்றாய் அமுக்கி, 'அமுக்குவது உமக்குத் தெரிகிறதா?' என்று கேட்டான். அதற்கு ஸோக்ரதர் 'தெரியவில்லை' என்றார். இப்படித் தேகம் வரவர மரத்துப்போக ஆரம்பித்தது. மார்பு வரையில் இப்படி மரத்துப் போனதும், 'நான் போய்விடுவேன்' என்று தாமே தொட்டுப் பார்த்துக்கொண்டு சொன்னார். இடுப்பு வரையில் குளிர்ந்து, போனதும், தம் முகத்தின் மேலிருந்த துணியை யெடுத்து, 'க்ருதரே, அஷ்கலேபர் கோயிலில் ஒரு பலி எனக்காக நீர் சமர்ப்பிக்க வேண்டும். அது செய்ய வேண்டிய கடன். அதை மறவாதீர்' என்று சொன்னார். 'அப்படியே ஆகட்டு'மென்று க்ருதர் சொல்லி, 'இன்னுமேதாவது உமது மனோபீஷ்டம் உண்டா?' என்று

கேட்டார். இதற்குப் பதிலொன்றும் சொல்லவில்லை. கொஞ்ச நிமிஷத்துக்கெல்லாம் தேகம் ஓர் அசைவுற்றது. அதிகாரி துணியை எடுத்துப் பார்த்ததில், உயிர்போய், ஸோக்ரதர் பிணமாய்க் கிடந்தார். வாயையும் கண்ணையும் க்ருதர் மூடினர். இதுதான் முடிவு.

"நாம் கண்ட மானிடர்களுக்குள் சிறந்த ஞானமும் தர்மமும் நல்வினையும் பொருந்திய நமது நண்பர் பரலோக மடைந்த வரலாறு இது" என்று வீதர் சொல்லி முடித்தார்.



மார்க்கஸ் அரேலியஸ்

# ஆத்ம சிந்தனை

# முதற் பதிப்புக்கு ராஜாஜியின் முன்னுரை

உலக முன்னேற்றத்திற்காக அவதரித்த மகாத்மாக்களில் ஒருவரான கிரேக்க முனிவர் ஸோக்ரதரின் சரித்திரத்தையும் உபதேசங்களையும் தமிழில் 1921-ஆம் ஆண்டில் சுருக்கமாக எழுதியதுபோல் அவரைப்போன்ற மற்றொரு சிறந்த ஞானியான ரோமாபுரிச் சக்ரவர்த்தி மார்க்க அரேலியருடைய "ஆத்ம சிந்தனை"யைச் சுருக்கமாகத் தமிழ் மக்களுக்குப் பயன்படும் முறையில் 1928-ஆம் ஆண்டில் எழுதினேன். அப்பொழுது இதை "லோகோபகாரி" ஆசிரியர் தம் பத்திரிகையில் வெளியிட்டார். தமிழ் நாட்டில் தெய்வ பக்தியும் தேச பக்தியும் தருமகுணமும் வளர்ப்பதே தம் வாழ்வின் கடமையாகக் கொண்ட சில பெரியார்களுள் ஒருவரான ஸ்ரீ. நெல்லையப்பர் முதலில் தம் பத்திரிகையில் வெளியான இந்த நூலை இப்போது புத்தக ரூபத்தில் அச்சிட்டு, என் தொண்டுக்குப் புத்துயிர் அளிக்க முன்வந்தது நான் பெருமை அடையக்கூடிய விஷயம்.

மார்க்க அரேலியருடைய சிந்தனையைப்

பகவத் கீதைக்கு ஒரு சிறந்த வியாக்கியானமாகவே கருதலாம். இதிலுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் கீதையிலிருந்து சுலோகங்கள் மேற்கோள்களாக எடுக்கலாம். 'உடல் வேறு; ஆத்மா வேறு. சத்தியமே ஆத்மாவின் சந்தோஷம். உடலின் துன்பத்தைக் கண்டு மனம் தளர வேண்டாம். ஆத்மாவை எந்த நிகழ்ச்சியும் துன்புறுத்த முடியாது' என்று ஸோக்ரதர் உபதேசித்தார். 'உலகம் முழுதும் ஓர் அமைப்பு. தனி உயிரின் சுகத்தையும் துக்கத்தையும் விசுவரூபத்தில் அமைத்து விசால புத்தியுடன் நோக்கின், துவந்தங்கள் தீர்ந்து, சத்தியம் ஒளி பெற்று, சாந்தி உண்டாகும்' என்பதை மார்க்கர் கண்டு எழுதியுள்ளார்.

> *பல வகைப்பட்ட பூதங்களும் ஒரே ஆதாரமுடையன என்பதை*
> *அறிந்தவர் விஸ்தாரமான பிரமத்தை அடைகின்றனர்.*
>
> (*கீதை*: அ. 13, சு. 31)

என்னும் கீதா வாக்கியத்தின் பொருளை மார்க்க அரேலியர் நேரில் கிருஷ்ண பகவானிடம் உபதேசம் பெற்றதுபோல் விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார். மார்க்க அரேலியரின் "*சிந்தனை*"யை அடிக்கடி வாசிப்பதனால் மக்கள் மன உறுதியும் சாந்தியும் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப் புத்தகத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் ஆதரித்து ஸ்ரீ. நெல்லையப்பரின் சிரமம் வீணாகாமற் செய்வார்கள் என்பது என் வணக்கமான வேண்டுகோள்.

*காந்தி ஆசிரமம்*
*திருச்செங்கோடு*
8-12-1935

*சக்கரவர்த்தி*
இராஜகோபாலாச்சாரி



ரோமாபுரிச் சக்கரவர்த்தி மார்க்க அரேலியருடைய

# ஆத்ம சிந்தனை

**கா**லையில் எழுந்ததும் அடியிற் கண்டபடி உனக்குள் சிந்தித்துக் கொள்:

இன்று நான் கலகக்காரனைக் காண்பேன். குரூரமான இம்சையைப் பார்ப்பேன். நன்றி கெட்டவனைக் காண்பேன். மரியாதை யற்றவன், மோசக்காரன், பொறாமைக்காரன் முதலிய எல்லோரையும் சந்திப்பேன். அவர்களின் குற்றங்களுக் கெல்லாம் காரணம், நன்மை தீமை அறியாத அவர்களுடைய அறியாமையே யாகும். ஆனால், நானே நன்மை தீமைகளை நன்கு அறிவேன். நன்மையில் எனக்கு அழகு தோன்றுகிறது. தீமையில் அழகின்மையும் அவலக்ஷணமும் காண்கிறேன். என்பால் ஒருவன் தீங்கு செய்தால், அவன் எனது உறவினன் என்பது எனக்குத் தெரியும். உடல் உறவால் உடன்பிறந்தா னல்லனாயினும், ஆத்ம நேய ஒருமைப் பாட்டால் அவன் எனக்கு உடன் பிறந்தவனே. பரம்பொருளில் ஒரு பாகம் எம்மிருவர் உள்ளத்திலும் இருக்கிறதல்லவா? அவன் எனக்கு என்ன தீங்கு செய்ய முடியும்? என்னைத் தவிர, யாரும் என்னைக் கெடுக்க முடியாது. தீங்கிழைப்பவன் எனது தம்பியே யாதலின், அவன்மீது நான் கோபமோ, வெறுப்போ கொள்ளலாகாது.

உலகத்திலுள்ள நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழப் பிறந்திருக்கிறோம். உடலிலுள்ள கைகளும் கால்களும்

கண்ணிதழ்களும், மேல்வரிசை கீழ்வரிசைப் பற்களும்போல, நாமும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இக் கடமையை மறந்து ஒருவருக்கொருவர் மாருக வேலை செய்வது இயற்கை அமைப்புக்கு முரணுகும். வெளியே காட்டாமல் ஒருவன் மீது உள்ளத்தில் கோபமாவது வெறுப்பாவது கொள்வதும் முரண்படுவதே யாகும்; இயற்கை யமைப்பின் உடன்பாட்டுழைப்பு ஆகாது.

**2.** 'நான்' என்று சொல்லும் இவ்வுருவம் உண்மையில், தசை, மனம் இவற்றின் கூட்டுறவே. ஆகையால் எக்கணமும், இப்பொழுதும்கூட இறக்கும் தருணமே என்று கருது. இவ்வூனுடலைப் பெரிதாகக் கருதாதே. உடல் என்பது ரத்தமும் எலும்பும் தசையும் இவ்வளவே; வேறல்ல. உயிரும்தான் என்ன? வெறுங் காற்றேயாகும். இப்பொழுது இருக்கும் காற்று அடுத்த கணத்தில் இல்லை. அது மாறி மாறி உட்சென்று வெளியே வருகின்றது.

உடலும் உயிரும் தவிர்த்து, சரீரத்தை ஆண்டு வரும் உள்ளமே எஞ்சி நிற்கிறது. சிந்தித்துப் பார். உனக்கு வயதாய் விட்டது. ஏன் இந்த மனம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும்? இங்கும் அங்கும் அலை கடலில் அலையும் துரும்புபோல் ஏன் அல்லற்பட வேண்டும்? உலகத்தில் உடன் பிறந்த மக்களைப்பற்றி ஒரு நினைவுமின்றி உனக்கு நேர்ந்த விதியைப்பற்றி ஏன் வருந்த வேண்டும்? வரப் போவதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

**3.** உலகத்தின் நன்மைக்கே எல்லாம் நடக்கிறது. பூத அணுக்கள் சேருவதும் பிரிவதுமே எல்லாப் பொருள்களின் தோற்றத்துக்கும் மறைவுக்கும் காரணம். அணுக்களாலான மக்கள் தேகங்களும் போவதும், கூடுவதும், பிரிவதும் உலக அமைப்புக்கு அவசியமாகும். விதிவசத்தால் நடப்பதுங்கூட உலக அமைப்புக்கு வேண்டியதே ஆகும். சகலமும் தெய்வாதீனமே. அதற்கு மாருக ஓர் அணுவும் அசையாது. உலகத்தின் ஒரு பாகமாகிய நீ உலகத்திற்காக நடக்கும் எதையும் துக்கமாக எண்ணக் கூடாது. உலக





அமைப்பைக் காப்பதற்கு வேண்டியதும், உலக அமைப்பில் இயல்பாய் உண்டாவதுமான ஒரு நிகழ்ச்சியை அந்த அமைப்பில் ஒரு சிறு பகுதியான நீ நன்மையென்றே கருத வேண்டும். உலகத்திலிருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் சதா காலம் உருவம் மாறி வருவதும் சிதைவு படுவதும் இயல்பாகும். அப்படிச் சிதைவு படுவதும் மாறுவதுமே உலகத்திற்கு உயிராகும். இந்த உண்மையை அறிந்து நீ சாந்தி அடைய வேண்டும். இந்தத் தத்துவத்தைக்கொண்டு உன் வாழ்க்கையையும் நடத்த வேண்டும். புத்தகப் படிப்பைத் தள்ளு. அது உதவாது. மரணத் தருவாயில் கற்றதும் கேட்டதும் திருப்தி அளியாது. அடைந்த சுகங்கள் பற்றி நீ தெய்வத்திற்கு உண்மையில் நன்றியுள்ளவனுனுல், பட்ட துன்பங்களெல்லாம் உலக அமைப்பில் இன்றியமையாத நிகழ்ச்சிகள் என்று உணர்ந்து, சாந்த சிந்தையுடன் உயிர்விட வேண்டும்.

**4.** மனதை உறுதிப்படுத்தாமல் நீ எத்தனை நாட்கள் கழித்திருக்கிருய்? எவ்வளவு காலத்தை வீணுக்கியிருக்கிருய்? நினைத்துப் பார். இனி தாமதிக்கக் கூடாது. இப்போதாவது உண்மையை அறிந்து சாந்த நிலையை அடையவேண்டும். உன்னை ஒரு பாகமாகக் கொண்ட இந்த உலக அமைப்பு எத்தகையது? அந்த அமைப்பை நடத்தும் பராசக்தி எது? அந்தச் சக்தியிலிருந்து பறந்ததோர் பொறி நீ. உனக்குள்ள காலம் மிகக் குறுகியது. அதற்குள் ஞான வெளிச்சத்தை உள்ளேவிட்டு, உன் புத்தியை மூடிக்கொண்டிருக்கும் இருளை நீக்கிக் கொள்ளாவிடில் உனக்குள்ள ஆயுள் முடிந்தே போகும்; அவகாசமே இராது.

நல்ல குலத்தில் பிறந்த நீ, மானிட ஜன்மம் எடுத்த நீ, உனக்கென்று அமைந்த காரியத்தை, தருமமும் ஆடம்பரமற்ற பெருந்தன்மையும் பொருந்திய முறையில் செய்து முடிப்பாயாக. ஜீவகாருண்யம், சுதந்திரம், நியாயம் இம் மூன்றையும் புறக்கணிக்காத முறையில் செய். அதனுல் சாந்தி பெறுவாய். இது என் கடைசி வேலை, இதனுடன்

என் ஆயுள் முடிந்தது என்று எண்ணி ஒவ்வொரு வேலையையும் செய்து முடிப்பாயாக. புத்தியைக் கெடுக்கும் ராகத் துவேஷாதிகளை விட்டு, ஆணவம், பொய்வேஷம், தெய்வத்தின்பேரில் அதிருப்தி, இந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் உன் கடமைகளைச் செலுத்து. தருமத்தினின்று பிறழாமல் உள்ளத்தில் அமைதியை நிறுத்திக்கொண்டு வாழ்க்கையை நடத்தல் உண்மையில் மிக எளிது என்பதைக் காண்பாய். இதற்குமேல் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

ஐயோ மனமே, கேட்டையே தேடுகிறாயே! இதற்கு முடிவு இல்லையா? உன் ஆன்மாவுக்காக நல்லது செய்து கொள்ள உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் தீர்ந்து போய்விடுமே! உன் வயது என்ன? அந்திய காலம் கிட்டிவிட்டதே; இன்னும் உனக்கு அறிவு வரவில்லையே! உன் உள்ளத்தை அநாதையாக விட்டுவிட்டு மற்றவர்கள் உள்ளத்தை நம்பிப் பிழைக்கப் பார்க்கிறாயே, மூட மனமே!

புற உலகத்தில் இதுவும் அதுவும் உன் உள்ளத்தைத் துன்புறுத்துகிறதா? ஏதேனும் நல்ல காரியத்தில் உள்ளத்தைச் செலுத்தித் துன்பத்தை மறப்பாயாக. ஆனால், வாழ்க்கையின் உண்மைப் பொருளை அறியாமல் இதுவும் அதுவும் செய்வதில் உயிரை மாய்த்துக்கொண்டு அமைதி யிழந்து போவது மதியீனம். எல்லாக் காரியங்களும் எல்லா எண்ணங்களும் ஒரு தருமத்திற்குள் அடங்கி நிற்கும்படிச் செய்துகொள்வாயாக. அதுவே அமைதிக்கு வழி.

மற்றவர்கள் உள்ளத்தில் என்ன நடைபெறுகிறது, அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்கள் என்ன நினைக்கவில்லை — என்றிவ்வாறு கவலைப்பட்டுச் சாவதில் துக்கமே விளையும். உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக்கொள். அதுவே சுகம். தன் உள்ளத்தின் நிலையைக் கவனியாமல் மற்றவர்களைப் பற்றிக் கவலைப் படுகிறவனுக்குச் சுகமில்லை.

கோபத்தினால் செய்யும் அக்கிரமங்களைவிட ஆசையினால் செய்யும் அக்கிரமங்களில் பாபம் அதிகம். கோபத்துக்கு





இரையானவன், அதனாலேயே ஓரளவு துன்பப்படுகிறான். மதியை இழக்கும்போது அவன் உள்ளமும் நோவு அனுபவிக்கிறது. காம வேகத்துக்கு ஆளாகியோ, வேறு ஆசைகளால் தூண்டப்பட்டோ ஒருவன் செய்யும் குற்றத்தில் இது கிடையாது. நோதல் இன்றிப் பாப காரியம் செய்கிறான். ஆகையால் அதுவே பெரும் குற்றம்.

5. எப்போதும் மறவாமல் நினைவில் வைக்க வேண்டியது இது: "உலகம் முழுவதும் ஒரு ஜீவ அமைப்பு." அதன் இயல்பு என்ன? அந்த உலக அமைப்பில் ஒரு பாகமாகிய "நான்" என்பதன் இயல்பு என்ன? அதற்கும் இதற்கும் என்ன பரஸ்பர சம்பந்தம்? சமஸ்த ரூபத்திற்கும் "நான்" என்னும் இந்தப் பகுதிக்குமுள்ள சம்பந்தத்தை அறிய வேண்டும். அந்த சமஸ்த ரூபத்தின் இயல்புக்கு இசைந்தே அதன் பகுதியாகிய நானும் நடந்துகொள்ள வேண்டும். அந்த ஜீவ சம்பந்தத்திற்கும் இதற்கும் எதுவும் தடையாக இருக்கக் கூடாது.

6. எந்த நிமிஷத்தில் உயிர் நீங்கிப்போக வேண்டுமானாலும் அதற்குச் சித்தமாய் இருக்குமாறு எல்லா விஷயங்களிலும் உன் எண்ணமும் பேச்சும் செயலும் இருக்க வேண்டும்.

உயிர் நீங்கிப்போவதில் என்ன துன்பம்? மனிதர்களை விட்டுத் தேவர்களுடன் வாழ்வதில் என்ன கஷ்டம்? மனிதர்கள் தீங்கிழைப்பார்கள்; தேவர்கள் தீங்கிழைக்க மாட்டார்கள். தேவர்கள் இருப்பது உண்மையல்லவென்றாலும், அல்லது அவர்கள் இவ்வுலகத்தை நடத்துவது பொய் என்றாலும், அப்போதும்தான் என்ன? தெய்வத்தால் நடத்தப்படாத உலகத்தில் உயிர் நீங்கிப்போவதில் துன்பம் என்ன? ஆனால் உண்மை இதுவல்ல. உலகம் கடவுளால் தான் நடத்தப் படுகின்றது. மேலும் மனிதன் துன்பத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள அவனுக்குப் பூரண சுதந்திரமும் உபாயங்களும் கடவுள் கொடுத்திருக்கிறார். எது உண்மையில் தீங்காகுமோ,

அதிலிருந்து தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ள மனிதனுக்கு வழியுண்டு. எந்தத் தீங்குகளைத் தான் நீக்கிக் கொள்ள முடியாதோ அவை அவனுக்கு உண்மையான துன்பங்களாய் இருந்தால், அவைகளினின்று தப்பவும தெய்வம் மனிதனுக்கு வழி காட்டியிருக்கும். புற உலகங்களிலிருந்து வரும் விஷயம் ஏதாயினும், அது ஆத்மாவைப் பாதிக்காது. ஒரு மனிதனுடைய ஆத்மாவைக் கெடுக்கக் கூடாத ஒரு விஷயம் எப்படி அவனுக்குத் துன்பமாகும்? ஒருவனுடைய ஆத்மாவைப் பாதிக்காத எதையும் உண்மையில் தீங்கு என்று சொல்ல முடியாது. தெய்வம் அவைகளை அறியாமல், அல்லது அறிந்து நீக்க முடியாமல், அல்லது அவைகளினின்று மனிதன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தகுந்த உபாயம் தேடிக் கொடுக்க முடியாமல் விட்டுவிடவில்லை.

உலகத்தில் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் வேற்றுமையின்றித் தாறுமாறாய்ச் சுகமும் துக்கமும் உண்டாகின்றன. இவை உண்மையான சுகமும் துக்கமுமானால் இவற்றைத் தடுக்கத் தெய்வத்தால் முடியவில்லையா? நல்லவர்களுக்குச் சுகமும், தீயவர்களுக்குத் துக்கமும் உண்டாகுமாறு செய்ய முடியாமல் தெய்வம் இப்படி விட்டுவிடவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய சுகமும் துக்கமும், நன்மையும் தீமையும் அவனுடைய சுதந்திரத்தில் இருக்கின்றன. மதிப்பும் அவமதிப்பும், சுகமும் துக்கமும், செல்வமும் வறுமையும் மக்கள் குணத்திற்குத் தகுந்தபடி இராமல், தக்கவர்களுக்கும் தகாதவர்களுக்கும் நேர்கின்றன. ஆராய்ந்து பார்த்தால், இவைகளில் உண்மையான நன்மையும் கிடையாது; தீமையும் கிடையாது. அவைகளைக் கண்டு, 'இவை நல்லவை, இவை தீயவை, இவை இன்பம், இவை துன்பம்' என்று கருதலாகாது.

7. நமக்குள்ள அறிவை உபயோகித்து நாம் சிந்திக்க வேண்டும். உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் எவ்வளவு சீக்கிரம் அழிந்து போகின்றன? மனிதனுடைய தேகம் அழிந்து போகிறது; பஞ்ச பூதங்களுடன் சேர்ந்து





மறைந்து. அவனைப்பற்றிய நினைவுகூடச் சில நாட்களுக்குப் பின் இல்லாமற் போகிறது. உலக விஷயங்களில் உண்மை என்ன? சில நமக்குச் சுகம் தருவனபோல் ஏமாற்றி நம்மை வலையில் இழுக்கும். சில கஷ்டம் தருவனபோல் பயமுறுத்தும். சில நம்முள் அகங்காரத்தை உண்டாக்கும். இவை எல்லாம் உண்மையில் எவ்வளவு அற்பமானவை; பயனற்றவை; இழிவானவை; நிலையற்றவை? புகழ் என்பது உண்மையில் என்ன? எப்பேர்ப் பட்டவர்களுடைய மதிப்பும் பேச்சும் கூடிப் புகழ் என்பது உண்டாகிறது? மரணம் என்றால் என்ன? அதை நன்கு ஆராய்ந்தால் அது பிரகிருதியின் ஒரு இயல்பே தவிர வேறொன்றுமில்லை என்பது புலப்படும். இயல்பாய் நடக்கும் ஒரு விஷயத்தைக் கண்டு குழந்தைகள் அஞ்சும். அறிந்தவர்கள் ஏன் அதைக் கண்டு மனம் கலங்கவேண்டும்? மனிதன் இறப்பது இயல்பு மாத்திரமல்ல; இறப்பதால் பிரகிருதியில் புத்துயிர்கள் உண்டாவதற்குக்கூட வழியாகும்.

அறிவாளியானவன் ஆராய்ந்து பார்க்க வேண்டியது இதுவே: மனிதன் தெய்வத்தை எவ்விதம் அணுகுவான்? தன்னிலிருக்கும் எந்த அம்சம் தெய்வீகமானது? ஒரு மனிதன் எந்த நிலையில் இருக்கும்போது அவனுடைய தெய்வீகமான சுபாவம் மேலிட்டுத் தெய்வத்தை அணுகும்?

8. உண்மையில், தன்னுடைய சுகத்திற்கு ஏது அல்லாத பல விஷயங்களில் மனத்தைச் செலுத்தியும், அயலான் மனத்திலுள்ள எண்ணங்களைத் தோண்டிப்பார்க்கக் கவலை கொண்டும் இருப்பவனுடைய நிலைமை வருந்தத்தக்க நிலையாகும். மனதைத் தனக்குள் செலுத்தி, உள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மாவைக் கண்டுகொண்டு, அதற்கு உண்மையான தொண்டு செய்வதில் சிந்தனையைச் செலுத்துவதே வழியென்பதை அறியாமல், பல முயற்சிகளில் தலையிட்டுக் கவலைப்படுகிறான். தன்னுள் மறைந்து நிற்கும் ஆத்மாவுக்கு நன்மை செய்துகொள்வது எப்படியென்றால், காமமும் அவிவேகமும் மனக் கலக்கமும் தன் உள்ளத்தில்

சேராமல் காத்துக் கொள்வதே. விதியால் வந்த சுகமும், விலக்க முடியாத துக்கமும், உலகத்தை நடத்தும் தெய்வம் கொடுத்த வரப்பிரசாதமென்று வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனிதர்கள் செய்த செயல்களை, அவை தனக்கு நன்மையே யாயினும் தீமையே யாயினும், உறவினர் செய்தது என்று விருப்பத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். எவனாவது ஒருவன் உனக்கு ஒரு தீங்கிழைத்தால், 'நன்மை தீமை என்னும் வித்தியாசத்தை அறியாத ஒருவன் செய்த செயல்' என்று அவன்பால் இரங்கவேண்டும். கண் தெரியாத குருடனுக்கு வெண்மை, கருமை என்பது தெரியாதல்லவா? அவனைக் கண்டு கோபிக்காமல் இரங்குவதைப்போல் நன்மை தீமை என்னும் வித்தியாசம் அறியாதவர்களைக் கண்டும் நாம் இரங்க வேண்டும் அல்லவா?

மூவாயிரம் ஆண்டுகள் பிழைத்துச் செத்தாலும், அல்லது முப்பதினாயிரம் ஆண்டுகளே பிழைத்தாலும் மரணம் என்பது ஒரு க்ஷணத்தைப் பற்றிய நிகழ்ச்சி. அதற்கு மேற்பட்ட விபத்தல்ல. கழிந்த காலங்கள் தீர்ந்து போயின; அவை உனதல்ல. வருங்காலம் உனதல்லவென்று சொல்ல வேண்டியதில்லை. கைக்கு வராத பொருளை ஒருவன் இழந்தான் என்றால் பொருளற்ற பேச்சு. ஆகையால் மரணத்தால் ஒருவன் இழப்பது இப்போது நிகழுங் காலமாகிய ஒரு கணமேயாகும். எவ்வளவு நீண்ட ஆயுளும், மிகக் குறைந்த ஆயுளும் ஒன்றே யாகும். ஒவ்வொரு நாளும் தீர்ந்து தீர்ந்துபோய், எஞ்சி நிற்பது நிகழும் காலம் ஒன்றே. அது எல்லோருக்கும் ஓரளவுகொண்டதே. இதை உணரவேண்டும். தவிர, உலகத்தில் நாம் காணும் விஷயங்கள் அனைத்தும் திரும்பத் திரும்பப் பழைய விஷயங்களே யாகும்; புதியதொன்றுமில்லை. ஒன்றையே நூறு வருஷம் பார்த்தால் என்ன? இருநூறு வருஷம் திரும்பத் திரும்பப் பார்த்தால் என்ன? இதற்காக மரணத்தைப் பற்றிக் கவலைப் படுவானேன்? ஆயுளைப்பற்றி ஆசை கொள்வானேன்?





எந்த நிகழ்ச்சியும், நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோமோ அதன்படியே நல்லதோ கெட்டதோ ஆகிறது. நம்முடைய புற நிகழ்ச்சிகள் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. அவற்றை எவ்வாறாயினும் செய்துகொள்ளும் சக்தி மனதுக்கு உண்டு.

9. உலகம், அதிலுள்ள கோடிக் கணக்கான பிராணிகள், உயிரற்ற வஸ்துக்கள், இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று பரஸ்பர சம்பந்தத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பாகும். உலகத்திலிருந்து ஒருவன் தன்னை வேறுபடுத்திக்கொண்டு வாழ்வது, உடம்பில் ஒரு கொப்புளம் அல்லது பரு உண்டாவது போலாகும். சரீர சம்பந்தம் இருந்தும் அந்தச் சரீரத்தின் அமைப்பில் சரியாய்ச் சேராமல் நோய் இழைப்பது கொப்புளம், அல்லது புண். ஒருவன் உலகத்திலுள்ள ஜீவராசிகளுடன் ஐக்கியப்படாமல் தன்னை வேறுபடுத்திக் கொள்வதும் ஆத்மத் துரோகமாகும். இந்த உலகத்தில் ஒரு பாகமாகிய எனக்கு நேரிடும் எந்தச் சம்பவத்தைக் குறித்தும் நான் வருத்தப்படக் கூடாது. வருத்தப்பட்டால், உலக அமைப்பில் சேருவதற்கு இணங்காமல், உலகம் முழுவதும் அடங்கியுள்ள பராசக்திக்கு அது துரோகமாகும். ஒருவனைத் துவேஷித்தாலும், அல்லது ஒருவன்மேல் கோபங்கொண்டு தீங்கு செய்ய நினைத்தாலும், அது உலகத்தினின்று வேறுபடும் குற்றமாகும். நேர்ந்த இன்பத்தினாலாவது, துன்பத்தினாலாவது மனநிலை கெட்டால், அதுவும் துரோகமாகும். கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும் செயலும் துரோகமாகும். பயனில்லாத செயலும், சிந்தனையும், குறிக்கோளற்ற வாழ்க்கையும் இவ்வாறே துரோகமாகும். எந்தச் சிறிய காரியத்தையும் மனதில் நிலைகொண்ட தருமத்தின்படி செய்ய வேண்டும். அரசன் கட்டளைக்கும் அமைப்புக்கும் கீழ்ப்பட்டு நாம் நடப்பதுபோல், பகுத்தறிவு உள்ள ஒவ்வொருவரும், எல்லா ஆட்சிகளுக்கும் மேலானதும் வழிகாட்டியுமான ஆட்சியும் அமைப்புமான இந்த உலக அமைப்பின் தெய்வீக தருமத்தை அனுசரித்து

நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில், பிரபஞ்ச ஆட்சிக்குத் துரோகம் செய்தவாறாகும். அதனால் ஆத்ம துரோகமாகும்.

**10.** மனிதனுடைய ஆயுளில் கழிந்த காலம் போக உண்மையில் இருப்பது ஒரு கணநேரமே. வாழ்வு என்பது ஆற்று நீரைப்போல் ஓடி ஓடிக் கழிந்துபோகும் ஒரு நிகழ்ச்சியே. அவன் மனதைக் கவரும் விஷயங்களும் நிலையற்றவை. மனிதனுடைய உணர்ச்சியும் தெளிவற்றது. உடலும் அழிந்துபோகும் பொருளால் ஆக்கப்பட்டது. மனமும் ஆற்றோட்டத்தில் ஒரு சுழி போன்றது. விதியும், அறியக் கூடாதது. புகழும் அறிந்தோர் ஆக்குவதல்ல; ஒழுங்கற்றது. சுருங்கச் சொல்லின், உடலுக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் நீரோட்டம்; மனதுக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் நிலையும் உருவமுமற்ற கனவு. ஆயுள் நாளெல்லாம் ஒரு போராட்டம், அல்லது தேசாந்திரியின் யாத்திரை. இறந்த பின் அடையும் புகழும் வெறும் அந்தகாரம். இவற்றினிடையில் மனிதனுக்கு எது வழிகாட்டியாகும்? ஞானம் ஒன்றே. இந்த ஞானம் எதுவென்றால், ஒவ்வொருவன் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத் தன்மையுடைய ஆத்மாவுக்குத் தீங்கு நேரிடாமல் சுத்தமாக வைத்துப் பாதுகாப்பதே. சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேலாக ஆத்மாவை நிறுத்தி வைப்பதே ஞானமாகும். பயனில்லாச் செயல், மோசம், கபடம், இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம். தனக்கு மற்றொருவன், 'இது செய்யவேண்டும்; இது செய்யாமல் ஒழிய வேண்டும்' என்று எதிர்பாராதிருத்தலே ஞானம். எது நேரிட்டாலும், எந்தக் கடவுள் என்னைப் படைத்தாரோ, அல்லது எந்தப் பிரகிருதி அமைப்பில் நான் ஒரு பாகமாய்ப் பிறந்தேனோ, அந்தத் தெய்வம், அந்தப் பிரகிருதியே அதற்குங் காரணமென்றறிந்து, நேரும் சுகம் துக்கம் இரண்டையும் வருத்தமின்றி ஒப்புக்கொள்வதே ஞானம். முடிவில் சாந்த சித்தத்துடன் மரணத்தை எதிர்கொள்வதே ஞானமாகும். மரணம் என்றால் என்ன? எந்தெந்த மூலதாதுக்கள் சேர்ந்து உடல் உண்டாயிற்றோ, அந்தந்தத் தாதுக்க





ளாக மறுபடி உடல் பிரிந்து போவதே மரணம். இதைக் கண்டு ஏன் கலங்க வேண்டும்? நாம் யார்? சில தாதுக்களின் சேர்க்கையினால்தானே நாம் உண்டாயிருக்கிறோம். அந்தத் தாதுக்கள் ஓயாமல் உருவம் மாறியும் அமைப்பு மாறியும் இருந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதைப்பற்றிக் கவலையில்லை. அவ்வாறிருக்க, அந்தப் பொருளின் சேர்க்கையாகிய இந்த உடலின் மாறுதலைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? மரணம் பிரகிருதியின் இயல்பாகும். இயல்பான ஒரு விஷயம் எப்போதும் தீங்காகாது.

கடமைகளைச் செய்து முடிப்பதை ஒத்திப்போட வேண்டாம். ஆத்ம சுத்திக்கு வேண்டிய முயற்சிகளையும் ஒத்திப்போடவேண்டாம். ஒவ்வொரு நாள் கழிந்ததும் உனக்குள்ள ஆயுளில் ஒரு பாகம் கழிந்து போயிற்று. மீதியுள்ள நாட்களிலும் எவ்வளவு காலம் விவேகமும், ஆத்ம சுத்திக்கு வேண்டிய ஞானமும் பெற்றிருப்பாயோ தெரியாது. சரீரத்தைப் பொறுத்தமட்டில், ஜீரண சக்தியும் ஆசைகளும் முன்போலவே இருக்கலாம். அது மட்டும் இருந்தால் என்ன பயன்? விஷயங்களை உணரும் சக்தியும், கடமைகளை விவேகத்துடன் செய்து முடிக்கும் அறிவும் இருக்க வேண்டுமல்லவா? மூப்பில் இவையெல்லாம் குறையும். ஆயுள்மட்டும் போதாது. மரணம் வருவதற்கு முன்னேயே அறிவு போய்விடும். உணர்ச்சி நுட்பம் அழிந்து போய்விடும். மனோபலம் போய்விடும். விவேகம் தீர்ந்து போகும். ஆகையால், ஒத்திப்போடக் கூடாது.

இயற்கை அழகை உணர்ந்து அனுபவிக்கத் தெரிய வேண்டும். குற்றம்போலும் குறைபோலும் தோன்றுவதிலும் உண்மை அழகு இருக்கிறது. பதமாக வெந்த ரொட்டி அங்கங்கே கறுப்புப் புள்ளிகள் கொண்டிருப்பதில் ஒரு பிரத்யேக அழகுண்டு. அதுவே நம்முடைய நாக்கில் தண்ணீர் ஊறச் செய்கிறது. நன்றாகப் பழுத்த பழம் தோல் விரிந்து வெடித்திருப்பதே ஒரு தனி அழகல்லவா? அதை ஒரு குற்றமாக எண்ணுகிறோமா? நெல் கதிர் முற்றிப் பயிர் வணங்கி யிருப்பதின் அழகைப் பாருங்கள். ஏன், காட்டு

மிருகத்தின் முகத்திலும் வாயிலும் பற்களிலுங்கூட அழகு இருக்கிறது. தனித்து நின்றால் இவை கோரமாகத்தான் இருக்கும். ஆனால், அந்த மிருகங்களின் முழுத் தோற்றத்தில் கலந்து நிற்கும்போது, அழகாகவே இருக்கின்றன. பிரகிருதி அழகை அனுபவிக்கத் தெரிந்தவர்களின் கண்களுக்கு அழகில்லாத வஸ்துக்களே இல்லை. ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட அழகை அனுபவிக்கலாம். சிலையில் செய்யப்பட்ட புலி, கரடி, நாய், பன்றி இவைகளை எவ்வாறு மிக்க அழகென்று அனுபவிக்கிறோமோ, அவ்வாறே உயிர்கொண்ட அந்தப் பிராணிகளின் உறுப்புக்களும் அழகாகவே தோன்றும். இயற்கையைப்பற்றி ஞானம் பெற்றவன், விருத்தாப்பிய நிலை அடைந்த ஆண் பெண்களிலும் முதிர்ந்த அழகைக் காண்பான்; இளமைப் பருவங் கூடிய அழகைக் கண்டாலும் அவன் உள்ளம் கற்பு இழக்காது. மாசுபடியாத பார்வை செலுத்தியே அழகை மட்டும் அனுபவிப்பான். இயற்கை எவ்வாறு வேலை செய்கிறது என்பதை உணர்ந்த ஞானி இன்னும் பல விஷயங்களில் மற்றவர்கள் காணாதவைகளைக் காண்பான்.

**11.** உன்னுடைய யாத்திரை முடிந்தது. படகிலிருந்து இறங்கும் தருணம் வந்தது. இறங்கிக் கரை ஏறு. மரணத்தைக் குறித்துப் பயப்படாதே. இந்த உயிரைவிட்டு நீங்கி வேறு உலகம் சென்றால், அதுவும் தெய்வ ஆட்சிக்குள் அடங்கிய உலகந்தான். ஆகையால், ஏன் பயப்பட வேண்டும்? "இறந்தபின் வேறு உலகம் கிடையாது; உயிர் கிடையாது; உணர்ச்சி கிடையாது" என்றாலும் அதைப்பற்றித்தான் கவலை என்ன? இன்பம் துன்பம் என்று அலைந்து இந்த உடலுக்காக எப்போதும் பாடுபடுவதை விட்டுச் சுகமாக இருக்கலா மல்லவா? அழுகிப்போகும் ஈன சரீரத்திற்காக எந்நேரமும் தொண்டு செய்வதிலிருந்து பரிசுத்தப் பொருளாகிய இந்த ஆத்மா விடுபடுவது நன்மையேயாகும். சித்த மயமானதும் ஜோதிப் பொருளுமான ஆத்மா ஏன் அழுகி துர்க்கந்தமாகப் போகும் உடலுக்கு அடிமையாக இருக்க வேண்டும்?





**12.** உனக்கு உள்ள காலம் மிகக் குறைவு. அதை வீணாக்க வேண்டாம். உலகத்துக்கே ஏதேனும் ஒரு காரியம் செய்ய அந்தக் காலம் பயன்படுமாயின் சரி; இல்லாவிடில் அயலாரைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டு காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம். 'அவன் என்ன செய்கிறான்? இவன் என்ன செய்கிறான்? அதை ஏன் அவன் செய்கிறான்? இவன் என்ன நினைக்கிறான்? அவன் உள்ளத்தில் என்ன எண்ணம், என்ன சூழ்ச்சி?' இவைபோன்ற கவலைகளைக் கொண்டு தத்தம் ஆத்ம சுத்தியை மறந்துவிட்டு மற்றவர்களைக் குறித்தே அறிவையும் காலத்தையும் வீணாக்கி விடுகின்றோம். பயனில்லாமல் எதேச்சையாக மனம் செல்லுவதைத் தடுத்துக்கொள்ள வேண்டும். திடீரென்று ஒருவர், "நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே "இதை நினைத்தேன், இது என் மனத்திலுள்ள எண்ணம்" என்று எளிதில் சொல்லக் கூடியவாறு மனதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பிறருக்குச் சொல்லத் தகாத எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும். நீ நினைக்கும் எண்ணங்களெல்லாம் பிறருக்கு நன்மை பயக்கத் தக்கவை, தீங்கற்றவை, சுயநலங் கருதாதவை என்று இருக்க வேண்டும். கேவலம், காமம், இன்பம், துவேஷம், பொறாமை முதலிய தவறான எண்ணங்கள் மனத்தில் உதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தக் காலத்திலும் உன் உள்ளம் உள்ளது உள்ளபடி பலர் அறிய வெளிப்பட்டாலும், அதில் வெட்கப்படக் கூடியது எதுவும் இல்லாதபடி வைத்துக் கொள்வாயாக.

இப்படி மனதைப் பழக்கப்படுத்திக் கொண்டு நன்மையையே நாடிவரும் மனிதன் தன் சரீரத்தில் கோயில் கொண்டிருக்கும் கடவுளின் உண்மை அடியான் ஆவான். தனக்குள் குடியிருக்கும் தேவாம்சமான ஆத்மாவை எந்த இன்பமும் மாசு படுத்தாமலும், எந்தத் துன்பமும் நோவுபடுத்தாமலும் அவன் காப்பாற்றிக் கொள்வான். பிறருடைய துவேஷம், அவமரியாதை, குற்றம் ஆகியவைகளால் தன் மனதைக்

கலங்கச் செய்யவிடான். இவ்வாறு தன் உள்ளத்தை ஸ்திரப் படுத்திக்கொண்டு, ஆத்மாவைத் துன்புறுத்தும் காமக் குரோதாதிகளுடன் போர் செய்து வெற்றி யடைவான்; நடுநிலை கொண்டவனாவான். சுகம், துக்கம், நன்மை தீமை எது நேரிடினும் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வான். உலகத்தின் நன்மைக்கு வேண்டினாலன்றிப் பிறர் செயலும், சொல்லும், எண்ணமும் என்னவென்று கவலைப்படாமல் தன் கடமையைக் கருதி வாழ்வான். தன் செயலையும், சொல்லையும், எண்ணத்தையும் பிழையறக் காப்பான். உலக அமைப்பில் தனக்கு நேர்ந்த சுகம், துக்கம் இரண்டையும் சமமாகவே பாவிப்பான். 'அறிவுள்ள ஜீவகோடிகள் எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் ஆவர்' என்பதை மறக்க மாட்டான். மற்றவர்கள் நலத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பான தருமம் என்று அறிவான். நல்வாழ்வு வாழ்பவர்களுடைய மதிப்பை மாத்திரம் கருதுவான். தரும வழியில் நில்லாத மற்றவர்களுடைய ஒப்புதலையும், பாராட்டுதலையும் நாடமாட்டான். அவர்களுடைய மதிப்பை ஒரு பொருளாகக் கருதாது தள்ளுவான். தங்கள் மதிப்பையே தாங்கள் பெறாத மதியீனர்களுடைய நன்மதிப்பு எனக்கு என்ன பயன் என்று தள்ளிவிட்டு, விசுவரூப உண்மையைக் கண்டு, இயற்கைத் தேவியுடன் ஒத்து வாழும் ஞானிகளின் நன்மதிப்பை அடையத்தான் பாடுபடுவான்.

**13.** மனமொவ்வாத செயலைச் செய்யாதே. சமூக நன்மைக்கு மாறுபாடாகவாவது, விவேகக் குறைவாகவாவது, மனப் புகைச்சலுடனாவது நடந்துகொள்ள வேண்டாம். பேச்சுத் திறமையினால் உண்மையை மறைக்க வேண்டாம். வீண் பேச்சுப் பேச வேண்டாம். பிறர் காரியத்தில் பயனின்றித் தலையிட வேண்டாம். உனக்குள் இருக்கும் பரம்பொருளைக் கௌரவிப்பாயாக. தைரியமும் நீதியும் பொருந்திய மன்னனாக வாழ்வாய். எந்த நிமிஷத்தில் வேண்டினும் உத்தரவு வந்தவுடன் செல்வதற்குத் தயாராக இரு. சாட்சியாவது ஆணைச் சொல்லாவது



N 65

வேண்டாத சத்தியவானாய் இரு. பிறருடைய ஆதரவை எதிர்பாராமல், சிரித்த முகத்துடன், சுதந்திரமாய் வாழ்வாய். பிறருடைய ஆறுதலை வேண்டாமல், உள்ளத்தில் சாந்தத்தை அமைத்துக் கொள்வாய். பிறர்மேல் சாராது நிற்பதே உண்மைச் சுதந்திரம்.

**14.** மனிதனுக்கு உலகத்தில் நன்மை எது? யோசித்துப் பார். நீதி, சத்தியம், தெளிவான புத்தி, தைரியம் இவைகளைவிட வேறு எது சுகம் தரும்? அவனவன் உள்ளத்தை அவனவன் சுத்தமாய் வைத்துக்கொண்டு அறிவுள்ளவனாக நடந்துகொள்வது ஒவ்வொருவனுக்கும் உள்ள சுதந்திரம். தன் செயலுக்கு மீறியது விதி. அதை ஒருவன் தடுக்கவாவது மாற்றவாவது முடியாது. ஆனால் ஒருவனுக்கு நேர்ந்தது நல்லதேயாயினும், தீயதேயாயினும் இரண்டையும் சமமாகக் கொள்ள அவனவன் மனமே காரணம். இவ்விதம் மனிதன் தன் மனத்தை நிறுத்திக்கொள்ளும் வகையினால் எவ்விதத்திலும் சுகம் அடையலாம். இதைத் தவிர்த்து வேறு சிறந்த வழி உண்டென்று உனக்குத் தோன்றினால் உண்மையில் அதனைப் பின்பற்றிப் போவதில் தடையில்லை. ஆனால் மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத் தத்துவமே எல்லாவற்றிலும் உயர்ந்தது. அதைக்கொண்டு மனத்தை அடக்கி, எண்ணங்களைக் காத்து, புலன்களால் இழுக்கப்படாமல் விலகி நின்று, தெய்வத்திற்கடங்கி, உலகத்தின் நன்மையை நாடி நடப்பதே சிறந்தது. மற்றது எல்லாம் அற்பம், விரும்பத் தகுந்ததல்லவென்று நீ கண்டு கொள்வாயானால், பிறகு எதைச் சிறந்ததென்று அறிந்தாயோ அதையே உறுதியாகக் கடைப்பிடித்து, மற்றவைகளில் மனம் போகவிடாதே. மேலான நன்மை பயக்காது என்று கண்டுகொண்ட விஷயங்களில் உன் மனம் செல்ல ஒரு சமயம் விட்டுவிட்டாயானால், பிறகு அதைத் தடுப்பது அரிது. எது கைகண்ட மருந்தோ அதை அடைய முடியாமல் போகும். உலக நன்மையும், மேலான அறிவுக் கிசைந்தது மான ஒரு பொருள் இருக்க, அதை விட்டுவிட்டுப் பொன்



110211

னும், மண்ணும், புகழும், போகமும் தேடிப் போவது மூடத்தனமாகும்.

ஒரு வேளை நினைக்கலாம்: "இச் சுகபோகங்களை நாடினாலும், அதன் கூடவே உண்மைப் பொருளான ஆத்மநிலையையும் காப்பாற்றிக் கொள்ளலாம். சிற்றின்ப வேட்டை என் மனதை முழுவதும் கவரவில்லை. ஆசைகளை அதிகரிக்க விடாமல் அடக்கி நடத்தலாம்" என்று நீ நினைக்கலாம். இது மோசம் போகும் வழியாகும். சில காலம் உனக்கு அடங்கினாற்போலத்தான் இவையிருக்கும். பிறகு நிச்சயம் உன்னை முழுவதும் கவிழ்த்துத் தள்ளிவிடும். இடங் கொடுத்த பின் அவைகளைப் பின்னால் எதிர்க்க முடியாது. மற்ற எண்ணங்களுக்கு இடங் கொடுக்காமல், மனதைச் சுத்தமாயும் சுதந்திரமாயும் அமைத்துக்கொண்டு, எது உறுதிப் பொருள் என்று கண்டாயோ அதையே பின்பற்று. இதுதான் சாதனம்.

"இன்பம் தருவதை ஏன் விலக்க வேண்டும்?" என்று சிலர் வாதிப்பார்கள். ஆனால், ஆராய வேண்டியது இன்பம் என்பது யாது? கேவலம் மிருகப் பிராயமான சுகம் சுகமல்ல. மனிதன் அறிவுள்ள ஜன்மம் எடுத்திருக்கிறான். அந்த அறிவுக்கு இயைந்த உயர்வான இன்பந்தான் உண்மையான இன்பம். உடலுக்கு மாத்திரம் இன்பம் தருவதை ஒரு பொருளாக மதிக்க வேண்டாம். இப்படி உன் அறிவை உபயோகித்து மதிக்கத் தகாததை உறுதியுடன் விலக்கு. ஆனால், அப்படி விலக்குவதிலும் கர்வம் கொள்ளாமல் அடக்கத்துடன் நடந்துகொள்.

சத்தியத்தை விட நேரிடும்படியான எதையும் சந்தோஷம் தரும் என்று ஆசைப்படாதே. அவ்வாறே எந்தப் பொருளில் உன் கௌரவத்துக்கு ஹானி உண்டாகுமோ அது விரும்பத் தகாதது. பிறரை வெறுக்கவோ, விரோதிக்கவோ, அல்லது உண்மையை மறைத்து வேஷம் போடவோ செய்யும் எந்தப் பொருளும் உனக்கு நன்மை தராது. அதைத் தேட வேண்டாம். பிறர் அறியாமல் திரைக்குப் பின்னும் சுவருக்குப் பின்னும் மறைந்து அனு





பவிக்கும் எந்தச் சுகமும் உனக்கு நன்மையல்ல; அதை ஆசைப்படாதே. ஒவ்வொருவன் உள்ளத்திலும் அறத்தைப் பற்றி நிற்கும் தெய்வம் ஒன்று இருக்கிறது. அதை நம்பி, தன் வாழ்க்கையை நடத்துகிறவனுக்கு துக்கம் என்பது கிடையாது. அவன் வனத்தைத் தேடியும் போக வேண்டாம்; அவனுக்குச் சுற்றத்தாரின் கூட்டமும் வேண்டாம். அவன் எதற்காகவும் தேடி அலையமாட்டான். எதையும் வெறுத்து ஓடமாட்டான். அவன் தன் உயிர் உடலில் இருக்க வேண்டும் என்று கவலைப்பட மாட்டான். ஆயுள் நீடித்தாலும் ஒன்றே, உடனே உயிர் நீத்தாலும் ஒன்றே என்று இருப்பான். ஞான வாழ்வு நடத்தி வருபவனுக்கு மரணம் எப்போது வரினும் ஒன்றே; உயிரைச் சந்தோஷமாக நீப்பான்.

**15.** எதிலும் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரும் விவேகம் படைத்திருக்கிறாய். இந்த விவேகத்தை பயபக்தியுடன் உபயோகிக்கக் கடவாய். இதுவே மனிதனைக் காக்கும் பெருந்துணை. இயற்கைத் தருமத்திற்கும் மனித சொரூபத்திற்கும் மாறுபட்ட எண்ணங்கள் மனத்தில் மறுபடியும் தோன்றாதவாறு தள்ளிக் காப்பது இந்த விவேகமே. இதற்கு விஷயங்களை நிதானித்து ஆராய வேண்டும். நல்ல ஜனங்களோடு அன்புடன் நெருங்கிப் பழக வேண்டும். தெய்வபக்தி இருக்க வேண்டும்.

**16.** உன் வாழ்வில் இடையே எது நேர்ந்தாலும் அதை உள்ளது உள்ளபடி கிரமமாய் ஆராயும் தன்மையை நீ அடைய வேண்டும். அதுவே பெருந்தன்மையை உண்டாக்கும். எதைக் கண்டாலும், 'இதனால் உலகத்திற்கு என்ன பயன்? உலக அமைப்பில் இதற்கு என்ன ஸ்தானம்? மனிதனுக்கு இதனால் நன்மை தீமை என்ன?' என்பதை ஆராய வேண்டும். பிரபஞ்சம் முழுவதும் ஒரு பெரிய ராஜ்ஜியம்; உலகத்திலுள்ள பல தேசங்களும் ஆட்சிகளும் அதனுள் அடங்கிய சிறு குடும்பங்களைப் போன்றன என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும்.

ஒரு சம்பவம் நேரிட்டால், "இந்தச் சம்பவம் எத்தகையது? எப்பொருள்கள் சேர்ந்து இது உண்டாயிருக்கிறது? இது எவ்வளவு காலம் இருக்கும் இயல்புள்ளது? இதனுல் என் உள்ளத்தில் பொறுமை, தைரியம், சத்தியம், நம்பிக்கை, சுவாதந்திரியம் முதலிய குணங்கள் உண்டாகின்றனவா?" — என்று இவ்வாறு ஆராய வேண்டும்.

எது நேர்ந்தாலும், "இது ஆண்டவன் செயல். இது நெய்யும் வஸ்திரத்தில் ஊடும் பாவும்போல் உலக வாழ்வின் இயல்பில் நெய்யப்பட்ட ஒரு சம்பவம். இதை ஏன் நான் துக்கமாகப் பாவிக்க வேண்டும்?" என்று சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

எவனுவது தீங்கு செய்தானேயாகில், "இவன் என் குலத்தைச் சேர்ந்தவன்; என் உறவினன்; என் தோழன்; அறிவில்லாதவன். தன் இயல்புக்கு இசைய இவன் நடந்து கொண்டிருக்கிருன். நானே அறியாதவனல்ல. ஒன்று பட்டு வாழவேண்டிய சமூக தருமத்தை நான் மறக்கக் கூடாது. நீதியுடனும் கருணையுடனும் நான் நடந்து கொள்ள வேண்டும். உண்மையில், இன்பமும், துன்பமு மற்ற பொருள்களை நான் அதனதன் பயனை உள்ளபடி அறிந்து, அவைகளை மதிக்க வேண்டும்" என்று இவ்வாறு சிந்திக்க வேண்டும்.

**17.** நடந்துபோனதைப் பற்றிய துயரமும், வரப் போவதைப்பற்றிய கவலையும் விட்டு, நிகழும் காரியங்களில் மனம், திடபுத்தி, தயை இவைகளை அறிவுடன் செலுத்தி, அறநெறி வழுவாது வாழ்வை நடத்து. உன் ஆத்மா கற்பழியாத கன்னியைப்போல் மாசற்றிருக்க வேண்டும். எப்போது மரணம் நேரிடினும் ஆண்டவனிடம் ஒப்புவிக்கத் தகுந்த நிலையில் அது பரிசுத்தமாக இருக்க வேண்டும். ஒன்றை அடையப்போகிறேன் என்று எதிர்பாராமலும், எதைக் கண்டும் பயந்து அதனின்று தப்பிப் பிழைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமலும் தெய்வத்தோடு இயைந்து வாழ்வு நடத்து. உன் பேச்சுக்களில் தைரியமும்,





சத்தியமும் பொருந்தியிருக்க வேண்டும். அப்போதுதான் சுகமாக இருப்பாய். உன் மகிழ்ச்சிக்கு எதனுலும் குறைவு நேராது.

**18.** சஸ்திர வைத்தியன் எப்போதும் தனக்கு வேண்டிய கருவிகளை நிமிஷத்தில் உபயோகிக்க எல்லாவற்றையும் சித்தமாக வைத்திருப்பதுபோல, நீயும் தெய்வாதீன சம்பவங்களும், மனிதர்களும், மனிதர்களுடைய செயல்களும் உன்னைத் தாக்கியவுடன், அவைகளால் உனக்கு மனவேதனை உண்டாகாமல் அவைகளைச் சரிவர ஆராய்ந்து நடந்துகொள்ள, உனக்குத் துணையாகப் பேருண்மைகளை உன் உள்ளத்தில் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி செய்வாயானுல் எந்தச் சிறிய காரியத்திலும் உலகத்தில் மற்றவர்களுக்கும் உனக்குமுள்ள அழியாத தரும பந்தத்தை மறவாமல் நடந்துகொள்வாய். பரம்பொருளைக் கருதாமல் உலக வாழ்வைச் சரிவர நடத்த முடியாது. உலகத்தில் இயற்கை அமைப்பை மறந்துவிட்டுப் பாரமார்த்திக தருமத்தை நடத்தவும் முடியாது. இரண்டும் வெவ்வேறன்று.

**19.** உலகமனைத்தும் ஒரு உயிர், அதில் தான் ஒரு உறுப்பு என்கிற ஞானம் அடைந்து, அந்த ஞானத்திற்கு இசைந்த வாழ்வில் ஒருவன் வாழ்ந்தால், என்ன நேரிடினும் அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ள அவனுக்கு ஆற்றல் உண்டாகிறது. எந்தச் சம்பவம் நேரிடினும் எளிதில் அதைத் தாங்குவதற்கு மனந் தடுமாருமல் காலதேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு வாழ்வை நடத்துவது அத்தகையோனுக்கு எளிதாகும்; அவனுக்கு இப்பொருள் வேண்டும், அப்பொருள் வேண்டும் என்பது கிடையாது. எந்தப் பொருள் இருப்பினும், இல்லாவிடினும் சாந்தத்தை அடைய அவனுக்குத் தன் சாதனத்தால் ஆற்றல் உண்டாகும். என்ன இடையூறு நேர்ந்தாலும் அதையும் தன் ஆத்ம சக்தியின் வளர்ச்சிக்கு ஒரு துணையாகவே கொள்ளுவான். நல்ல தீயின்மேல் போட்ட பொருள்கள் அதை அணைக்காது;

அவைகளே அந்தத் தீயில் எரிந்து சுவாலையை இன்னும் வளர்க்கும். சிறிய சுடரை அணைத்துவிடக் கூடிய பொருள்கள் கொழுந்துவிட்டு எரியும் தீயை அணைக்க முடியாது ; இன்னும் பெரிய சுவாலையாக எரிய உதவும். கொழுந்து விட்டெரியும் நெருப்பைப்போல உன் மனத்தை வைத்துக்கொள்.

**20.** தனிமையை நாடிச் சிலர் ஆசிரமம் கட்டிக்கொள்கிறார்கள் ; சிலர் கடற்கரைக்குப் போகிறார்கள் ; மலைகளிலும் காடுகளிலும், ஜன சஞ்சாரமில்லாத இடங்களிலும் இருக்க விரும்புகிறார்கள். நீயும் அப்படியே செய்ய விரும்புகிறாய். இது அறியாமையினும் அறியாமை. எந்த வேளையில் வேண்டுமானாலும் நீ இருந்த இடத்திலேயே நல்ல தனிமையை அடையலாமே. அமைதியும், உலகக் குழப்பமற்றதுமான தனியிடம் வேண்டுமானால், ஒருவன் தன் உள்ளத்திலே அதைக் காண வேண்டும். அதைப்போன்ற ஏகாந்தம் வெளியே எங்கும் கிடையாது. அதிலும் ஒருவன் தன் உள்ளத்தில் சாந்த சித்தத்தைத் தரும் எண்ணங்களை முன்னரே சேர்த்து வைத்திருந்தானேயானால், வேண்டிய போது ஆறுதலும் அமைதியும் எளிதில் தன் உள்ளத்திலேயே அடைவான். ஆகையால், உன் உள்ளமாகிய தனி ஆசிரமத்தில் அவ்வப்போது மௌனமாக இருந்து மன வலிமையை அடைவாயாக.

இப்படி உன் உள்ளத்தோடு தனியேயிருந்து சிந்திக்குங் காலத்தில், பல விஷயங்களில் மனத்தைச் செலுத்தாமல் மூலாதார உண்மைகளை மட்டும் சிந்திப்பாயாக. அந்த உண்மைகள் அரசாங்கத் துக்கங்களை மறக்கச் செய்யும். லௌகீக விவகாரங்களில் மறுபடியும் கலந்து வாழும்போது வருத்தம் உண்டாகும் விஷயங்கள் நேர்ந்தால், அவற்றிற்கு இது மருந்தாகும்.

நீ ஏன் வருத்தப்பட வேண்டும்? தீயோர் செயலைக் கண்டு வருந்துகிறாயா? அப்படி வருந்தும்போது சிந்திப்பாயாக : “அறிவுள்ள பிராணிகள் பிறந்திருப்பது ஒருவரோ





டொருவர் ஒத்து வாழவே; ஒருவர் செய்த குற்றத்தை மற்றொருவர் பொறுப்பதுதான் கடமை. எவனும் தீய வழியில் இறங்கும்போது மனம் ஒவ்வாமல்தான் இறங்குகின்றான். இதற்குமுன் எத்தனை கோடிப் பேர்கள் ஒருவரை ஒருவர் பகைத்தும் வெறுத்தும் போராடியும், பிறகு இறந்து சாம்பலாய்ப் போயுமிருக்கின்றனர்?” இவ்வாறு சிந்தித்து நீ அமைதி யடைவாயாக.

ஒருவேளை உன் அதிர்ஷ்டத்தைக் கண்டு வருந்துகிறாயா? அப்போதும் நீ யோசிப்பாயாக: இந்த உலகம் தெய்வத்திற்குக் கீழ்ப்பட்டதா? அல்லது, அணுக்களின் சுதந்திரச் சேஷ்டையா? உலகம் தற்செயலல்ல. அது ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு நடந்து வருகிறது என்பதற்கு அளவற்ற காரணங்கள் இருக்கின்றன.

ஒருவேளை உன் உடலை நோய் வருத்துகிறதா? உடல் வேறு; உள்ளம் வேறு. உடலின் நோய் மனத்தை வருத்தாமல் காக்கமுடியும். தன் வலிமையை அறிந்த மனம் உடலின் நோயை ஒரு பொருட்டாகக் கருதாது. சரீரத்தைப்பற்றியும் நோயைப்பற்றியும் சுகத்தைப்பற்றியும் என்னவென்னவோ சொல்லக் கேட்டிருக்கிறாய். நீயும் எழுதித் தீர்த்திருக்கிறாயே; அவைகளை யெல்லாம், நினைவுக்குத் தந்துகொள்.

ஒருவேளை நீ அற்பப் புகழைப்பற்றிக் கவலைகொண்டு வருந்துகிறாயோ? உலகத்தில் எவ்வளவு விரைவில் எல்லாம் அழிந்துவிடும் பார். கழிந்துபோன யுகங்கள் கணக்கற்றவை. வருங்காலமும் அளவிறந்தது. இதற்கிடையில் புகழ் என்றால் என்ன? உன் புகழ் ஒரு சிறு குமிழிபோன்ற, பொருளில்லாத, ஆரவாரமே யல்லவா? நிலையான அபிப்பிராயம் கொள்ளாத அறிவில்லாதவர்கள் உன்னைப் புகழ்கிறார்கள். அவ்விதப் புகழை அடைந்தாலும் அது எம்மட்டில் பரவும்? பிரபஞ்சத்தில் இப்பூமண்டலம் ஒரு சிறு அணுமாத்திரம். இப்பூமண்டலத்தில் நாம் இருக்கும் மூலை எவ்வளவு சிறியது? அதிலும் எத்தனை பேர்? எத்தகையோர் உன்னைப் போற்றுவார்கள்?

ஆகையால் உன் உள்ளம் என்கிற மௌனசாலைக்குள் மறைந்து, ஆத்ம சிந்தனை செய். சஞ்சலப்படாதே. வீண் சிந்தனை வேண்டாம். சுதந்திரனாக இரு. எந்த விஷயத்தைச் சிந்திக்கும்போதும் நீ உலகத்தில் ஒருவன் என்பதையும், மானிடக் குடும்பத்தில் ஒருவன் என்பதையும், ஒரு நாளில் நீ இறந்துபோவாய் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு அந்த விஷயத்தைச் சிந்திப்பாயாக. இரண்டு பெரிய உண்மைகளை எப்போதும் உன் உள்ளத்தில் உறுதியாக அமைத்துக்கொள். அவை எப்போதும் உனக்குப் பயன்படும். ஒன்று: உன் ஆத்மாவை விஷயானுபவ இன்பங்களும் துன்பங்களும் தீண்டா. அவை வெளிப்புறமாகத் தனித்துக் கிடக்கும். சஞ்சலத்திற்குக் காரணம் உன் உள்ளத்திலேயே முளைப்பதுதான். மற்றொன்று: உனக்குப் புலப்படும் சகல உருவங்களும் முடிவில் அழிந்துபோக வேண்டியவை. நீ பார்த்த அளவிலேயே எத்தனை அழிவைக் கண்டிருக்கிறாய்? அதை அடிக்கடி நினைத்துப் பார். மாறுவதே உலகத்தின் இயல்பு. மனிதனின் எண்ணங்களே அவன் வாழ்வு.

**21.** மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பொதுவாய் அறிவு என்பது உண்டு. அதிலிருந்து ஒவ்வொருவனுக்கும் ஓரளவு விவேகம் என்பது உண்டாகிறது. இதனால் 'இது செய்யத் தகுந்தது. இது செய்யத் தகாதது' என்ற பகுத்தறிவு எல்லாருக்கும் பொதுவாகிறது. இதனால் தருமம் அனைவருக்கும் ஒன்றாகிறது. மக்கள் அனைவருக்கும் ஒன்றாதலின், அனைவரும் ஒரு ஆட்சிக்கு உட்பட்டவர்களே ஆவார்கள். எனவே, உலகம் முழுவதும் ஒரு அமைப்பு; ஒரு வரையறைக்குள் அடங்கியதாகும்.

பிரகிருதியி லிருந்துதான் உன் உடலிலிருக்கும் ஒவ்வொரு பகுதியும் உண்டானது. எப்பொருளும் உள்ள பொருளினின்றே உண்டாக வேண்டும். இல்லாமலிருந்து உண்டாவது எதுமில்லை. உன் உடல், நிலத்திலிருந்து ஒரு பாகமும், உயிரிலிருந்து ஒரு பாகமும் உருவம் மாறி உன்





டானதுதான். அவ்விதமே அறிவு உருவமான உன் உள்ளமும் ஒரு மூலப் பொருளிலிருந்தே உண்டாயிருக்க வேண்டும். அதுவே பரம்பொருள். சூன்யத்திலிருந்து எப்பொருளும் உண்டாக முடியாது. இருக்கும் எப்பொருளும் சூன்யமாகாது. ஆகையினால், என் உள்ளம் ஒரு சித்தப் பரம்பொருளில் உண்டாகிய ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்.

**22.** பிறப்பைப் போலவே இயற்கையில் இறப்பும். பூதங்களின் சேர்க்கை பிறப்பாகும்; பிரிவு மரணமாகும். இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பிறப்பின் இயல்பே இறப்பும்.

தங்கள் தங்கள் சுபாவம் போலத்தான் மனிதர்கள் நடந்துகொள்வார்கள். ஆலமரத்தில் பால் இல்லாமல் இருக்க முடியுமா? இவ்வாயுள் எத்தனை நாள் இருக்கப் போகிறது? சீக்கிரத்தில் அனைவரும் மாண்டு போய் எல்லாம் பொய்யாகும்.

**23.** ஒரு துன்பம் நேரிடின் அதைப்பற்றி எண்ணுவதை விடு. எண்ணுவதை விட்டால் துன்பம் நேரிட்ட நினைவு போகும். அந்நினைவு நீங்கியபின் துன்பம் எங்கே?

**24.** என்னுடைய குணத்தைப் பழுது படுத்தாத எதுவும் என்னுடைய வாழ்வுக்குத் தீங்கிழைத்தது ஆகாது. ஆகையால், அது என்னை எவ்விதத்திலும் துன்புறுத்த முடியாது.

**25.** உனக்கு ஒருவன் தீங்கு செய்தானானால், நீ அவனுடைய தீய எண்ணங்களை உன் மனத்திலும் கொள்ளாமல் இருக்க வேண்டும். உன் மனத்தில் என்ன எண்ணம் உண்டாக்க அவன் விரும்புகிறானோ, அதற்கு நீ இடங் கொடாதே. அப்போது அவன் செய்த தீங்கு உன் உள்ளத்தைப் பழுது படுத்தாது. பொருள்களை உள்ளது உள்ளபடி மனக் கலக்கமின்றி ஆராய்வாயாக.

**26.** இரண்டு குணங்களை நீ பெறவேண்டும். ஒன்று: மக்கள் நன்மையைக் கருதி உன் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு செலுத்த வேண்டுமென்று உன் அறிவுக்குத் தோன்றுகிறதோ அவ்வாறே செய். மற்றொன்று: நீ எண்ணின எண்ணம் தவறென்று ஒருவன் எடுத்துக் காட்டி, அது சரியென்று தோன்றினால் உன் எண்ணத்தை விட்டு விடு. ஆனால், நியாயம், பொதுநலம், அல்லது வேறு தகுந்த காரணத்தைச் சரிவர மனத்தில் விசாரித்துத்தான் எண்ணத்தை மாற்ற வேண்டுமே யொழிய சௌகரியம் என்றாவது, ஜனங்கள் பாராட்டுவார்கள் என்றாவது மாற்றக் கூடாது.

**27.** எந்தப் பிரகிருதியிலிருந்து அதன் ஒரு பாகமாக நீ உண்டானாயோ, அதனுள் நீ மறைந்து போவாய். உன்னைப் பெற்றெடுத்த பொருளுடன் மறுபடி நீ சேர்ந்து அதுவாகவே போய்விடுவாய். அதனால் என்ன?

**28.** பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கப் போவதைப்போல் வாழ்க்கையை நடத்த வேண்டாம். மரணம் நிச்சயம். இன்றோ நாளையோ, அது எப்போதும் வரக் காத்திருக்கிறது. உயிருள்ளபோதே, அவகாசமிருக்கும்போதே உள்ளத்தைச் சுத்தப் படுத்திக்கொள்.

மற்றவர்கள் என்ன பேசினார்கள், என்ன செய்தார்கள், என்ன எண்ணுகிறார்கள் என்பதிலெல்லாம் காலத்தை வீணாக்காமல், தன்னையே கவனித்து அறவழியில் நின்றால், ஒருவனுக்கு எவ்வளவு நேரம் மிஞ்சும்! மற்றொருவனுடைய உள்ளத்தில் என்ன தீமை இருக்கிறது என்று ஏன் தேடி அலைய வேண்டும்? உன் நன்மையை நீ தேடு. அதை உத்தேசித்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பிப் பாராமல் நேராகச் செல்.

இறந்தபின் வரப்போகும் புகழுக்கு ஆசைப்பட்டு அலையாதே, நீ இறந்தபின் உன்னைப்பற்றி யார் என்ன சொன்னாலும் உனக்கு என்ன? உன் காதுக்கு அது





எட்டாது. உனக்குப்பின் உயிருடன் இருப்பவர்கள் காதில் விழும். உன்னைப்பற்றி என்ன சொன்னால் அவர்களுக்கு என்ன? ஆகையால், அறிவைச் செலுத்தி அறத்தைச் சோதித்து, உன் வேலையைச் செய். உனக்குப்பின் உலகம் உன்னைப்பற்றி என்ன சொல்லப்போகிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாதே.

**29.** ஒரு பொருளுக்கு அழகு உண்டாயின் அவ்வழகு அதனுள்ளே அமைந்திருக்கிறது. பிறர் போற்றுவதனால் அது உண்டாவதல்ல. பிறர் கண்டு வியப்பதால் அதன் அழகு அதிகமாவதுமில்லை; குறைவதுமில்லை. புலனுக்குத் தோற்றமாகும் பொருள்களின் வெளி அழகே இவ்விதமிருக்க, பேரழகு கொண்ட உண்மைப் பொருளாகிய தருமம், நீதி, சத்தியம், அன்பு, அடக்கம், இவைகளுக்குப் பிறருடைய புகழ்ச்சி வேண்டியதில்லை. இந்த நற்குணங்களில் ஏதாவது பிறர் புகழ்வதால் அழகாகுமா? பிறர் குறை கூறுவதால் பழுதுபடுமா? அழகிய மரகதமணியை ஒருவன் புகழாமல் போனால், அதன் அழகு குறைந்துவிடுமா? தங்கம், தந்தம், பட்டு, யாழ், வாள், புஷ்பம், செடி முதலியவைகளில் இப்படித்தானே அதனதன் அழகு அதனுள்ளேயே அமைந்திருக்கிறது.

**30.** ஏ, பிரபஞ்சமே! உனக்கு எது இசைந்ததோ அதுவே எனக்கும் இசைந்தது. உனக்கு எது சமயமோ அதுவே எனக்கும் தகுந்த சமயம். பிரகிருதியே! உன் அமைப்பில் பக்குவ காலமென்று உண்டானவை யெல்லாம் எனக்கும் பக்குவ காலத்துப் பலனேயாகும். உன்னிடம் இருந்தே எல்லாம் உண்டாகிறது. எல்லாவற்றையும் நீயே தாங்குகிறாய். எல்லாம் மறுபடியும் உன்னையே அடையும். 'என் அருமைத் தேசம், என் அருமை ஊர்' என்று தேசபக்தன் சொல்லவில்லையா? அவ்வாறே உலகம் ஆண்டவனுடைய ராஜதானியாகும்.

'சாந்தி விரும்பினாயானால் பல சங்கற்பங்கள் செய்யாதே' என்றார் ஒரு முனிவர். எது இன்றியமையாத காரியமோ

எது சமூக நன்மைக்கு வேண்டுமோ அதைமட்டும் செய். செய்யவேண்டி நேரிட்டபோது செய். காரியங்களைக் குறைத்துக்கொண்டு, செய்ய வேண்டியதை நன்னெறியில் செய்வதே சாந்தியைத் தரும். நம்முடைய பேச்சுக்களிலும் செயல்களிலும் பத்தில் ஒன்பது பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கிக்கொண்டால் கவலையும் மனக் கசப்பும் மிஞ்சும்; காலமும் வீணாகாது. எந்தச் செயலையும் முதலில் 'இது அவசியமில்லா விஷயமா' என்று ஆராய்ந்து பார். செயல் சிக்கனத்தோடு எண்ணங்களையும் அவ்வாறே ஆராய்ந்து, வேண்டாதவற்றைத் தள்ளிவிடு. எண்ணங்களை ஒழித்தால் செயல் தானாக ஒழியும்.

ஒரு பரீட்சை செய்து பார். கிட்டினது போதும். உலகத்தில் உனக்கென்று வகுக்கப்பட்ட பங்கு உனக்குப் போதும் என்று திருப்தியாக இரு. உன்னுடைய செயல்கள் நியாயமாக இருந்தால் போதும்; மற்றவர்களுடைய காரியங்கள் எவ்வாறாயினும் இருக்கலாம். உன்னுடைய உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தால் போதும்; மற்றவர்கள் உள்ளத்தில் என்ன குற்றம் இருப்பினும் அதைப்பற்றி எண்ணுவதைத் தள்ளிவிடு. இவ்வாறு செய்து பார்; சந்தோஷமுண்டாகும்.

விஷயத்தை ஒருபுறம் பார்த்தாயிற்று; அது போதும். மற்றொரு விதமாகப் பரிசீலனை செய்து பார். சந்தேகப்பட வேண்டாம். உனக்குத் தீங்கு செய்யப்பட்டது உண்மை. அந்தத் தீமை அதைச் செய்தவனைத்தான் பாதிக்கும். உனக்குக் கஷ்டம் நேர்ந்ததா? அதனாலென்ன? இந்த நிகழ்ச்சி முந்திய விதியில் அமைந்து கிடந்ததல்லவா? அது உனக்கென்று ஏற்கெனவே ஏற்பட்டதாயிற்றே. அதற்காகச் சஞ்சலமேன்? ஆயுள் சீக்கிரம் முடிவுபெறும். இந்த நேரம் உன் கையில் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள். ஞானத்தோடும், அறவழியில் நின்றும், பயன்படுத்திக்கொள்.

31. இந்த உலகம் ஆண்டவனால் ஒழுங்காய் அமைக்கப்பட்டதேயாயினும் சரி, அணுக்கள் தற்செயலாய்க் கலந்து





உண்டானதேயாயினும் சரி, எவ்விதத்திலும் ஒழுங்குபட்டு அமைந்து நிற்கிறது. ஒன்றிலிருந்து ஒன்று வெகுதூரத்தில் சிதறி வெவ்வேறாகக் கிடக்கும் அண்டங்களும், அணுக்களும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு ஒழுங்குடன் இருக்கின்றன. உன் உள்ளத்திலும் ஒழுங்கு இருக்கிறது. இவ்வளவு ஒழுங்குடன் நிற்கும் இந்த ஜகத்தை ஆளும் சர்வேசுவரன் ஒழுங்கின்றி இருப்பானா? ஏன் வருத்தம்?

32. உன் உள்ளத்தில் எவ்வளவு கெட்ட எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன? எவ்வளவு அச்சம், எவ்வளவு இரக்கமின்மை, மிருகத்தனம், சோம்பல், இச்சகம் பேசுதல், லோபித்தனம், கொடுமை?

33. வேறு தேசத்திலிருந்து வந்த அன்னியன் ஒருவனுக்கு ஊரிலிருக்கும் விஷயங்கள் தெரியாது. அவ்வாறே நடக்கும் சம்பவங்களின் பொருளை அறிந்து ஒப்புக்கொள்ளாதவன் உலகத்திற்கே அன்னியவானாவான். ஜனங்களை ஒன்றாகக் கட்டுப்படுத்தி அமைந்துவரும் சமூக தருமத்தை ஒத்து நடவாமல் வேறுபடுகிறவன் பரதேசியாவான். அறிவு என்னும் கண்ணை மூடிக்கொள்கிறவன் குருடனாவான். சுகம் தரும் சுவாதந்திரியத்தை விட்டுப் பிறரை எதிர்பார்க்கிறவன் யாசகனேயாவான். நாம் எதிலிருந்து உண்டானோமோ, அதிலிருந்தே சகல சம்பவங்களும் உண்டாகின்றன. தனக்கு நேரிட்ட சம்பவங்களைப் பற்றி வெறுப்புக்கொண்டு விசுவ தருமத்திலிருந்து வேறுபடுகிறவன் உலகத்திற்கு ஒரு புண்ணைப் போலாவான். அறிவுள்ள பிராணிகள் எல்லாம் ஒரு ஜீவ அமைப்பாக இருக்க, தன்னை வேறாக நினைத்து வாழ்பவன் குலப் பிரஷ்டனாவான்.

தெய்வத்தை நம்பி உனக்கு எஞ்சியுள்ள நாட்களை முடித்துக்கொள். நீ படைத்த அனைத்தையும் தெய்வத்திற்குச் சமர்ப்பித்தாய் என்று சந்தோஷமாக இரு. 'மற்றவர்களை நான் அக்கிரமமாக நடத்தவில்லை. எவனுடைய சுதந்திரத்தையும் நான் ஆக்கிரமிக்கவில்லை. நானும்

யாருக்கும் அடிமை யாகாமல் சுதந்திரமாகக் காலம் கழித்தேன்' என்று சந்தோஷமாக இரு.

34. உலகத்தில் எதுவும் நிலையில்லை; நடந்த தெல்லாம் கதையேயாகும்; பிறகு, முற்றும் மறக்கப்பட்டு மறையும். புகழோங்கி வளர்ந்தவர்களும் இப்படி மறைந்து போவார்கள். மற்றவர்கள் கதியோ சொல்ல வேண்டிய தில்லை. உயிர்விட்டுக் கண் மறைந்தவுடன் யாரும் அவர் களை நினைக்க மாட்டார்கள். புகழும் பேரும்தான் என்ன? வெறும் பேச்சு. பின் நாம் கடைப்பிடிக்க வேண்டியது எது? நடுநிலைமை, ஒப்புரவு, வாய்மை, பொறை, எது நேரிடினும், 'அனைத்திற்கும் ஆதியும் மூலமும் எதுவோ அதிலிருந்து இதுவும் வந்தது; இது அவசியமே' என்று நேரிட்டதை எதிர்கொண்டு ஒப்புக்கொள்ளும் தன்மை— இவையே மனிதனுக்கு வேண்டியவை.

35. உலகத்தில் பொருள்கள் மாறி மாறி மறைந்து புதுமையாய் மறுபடியும் தோன்றுவதை ஆராய்ந்து பார். பொருள்களைச் சிதையவிட்டு அவைகளி லிருந்து புதிய புதிய பொருள்களை அமைத்துத் தருவதே இயற்கைச் சக்தியின் இடைவிடாத் தொழில். எதையும் அழித்து அதைப் போன்ற வேறொரு உருப்படி உண்டாக்குவதே பராசக்தியின் விநோத வேடிக்கை. உலகத்தி லிருக்கும் ஒவ்வொரு பொருளும் அதைப்போன்ற புதியன விளைவ தற்கு வித்தாகும்; மண்ணில் புதைத்து முளைப்பது மட்டும் வித்தல்ல.

36. அடுத்த க்ஷணம் இறந்து போவாயே! ஆயினும் உள்ளத்தைச் சுத்தப்படுத்திக் கொள்ளவில்லையே! சாந்தம் அடையவில்லையே! துன்பத்தைக் கண்டு அச்சம் நீங்க வில்லையே! நடுவு நிலைமையே சுகம் தரும் என்பதை இன்னும் அறியவில்லையே!

ஞானமடைந்த பெரியோர்கள் எதை நாடுகிறார்கள், எதனின்று விலகிச் செல்கிறார்கள் என்பதை நன்றாய்க் கவனித்துப் பார்.





37. அடிக்கடி இதை நீ சிந்தித்து நினைவுக்குத் தந்து கொள்வாயாக: இந்த உலகம் முழுவதும் சேர்ந்து ஒரு ஜீவன்; ஓர் உடல்; ஓர் ஆத்மா. சகல ஜீவகோடிகளும், பொருள்களும் சேர்ந்து ஜீவநரம்பு பாய்ந்த ஒரு சரீரக் கட்டாகும். எல்லாவற்றிற்கும் உயிர் ஒன்றே, நிகழ்ச்சி ஒவ்வொன்றும் உலகம் முழுவதும் சேர்ந்து நடத்தும் நிகழ்ச்சியாகும். நாம் காணும் ஒவ்வொரு பொருளும், எல்லாம் சேர்ந்து உண்டாகியதுதான். பிற பொருள்களி னின்று வேறுபட்டுத் தனியாய் எதுவும் உண்டாகாது. எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்து அடர்த்தியாக நெய்யப்பட்ட ஊடும் பாவும் போலும் உலகம் நெய்யப்பட்டு நிற்கிறது.

எபிக்கேதர் சொன்னதுபோல், இந்த உயிர்வாழ்க்கை யாவது என்ன? ஒரு பிணத்தைச் சுமந்துகொண்டு அலைகிறது ஆன்மா; அவ்வளவே அல்லவா?

அழியும் உடலுக்கு எது நேரினும் என்ன தீமை?

உலகம் என்பது என்ன? வேகமாக ஓடிச் செல்லும் ஒரு ஆறு. எது உண்டாயினும், எது நிகழ்ந்தாலும், கண்ணுக்குத் தென்பட்ட உடனே காலவெள்ளம் அதை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. வேறொன்று அதன் இடத்திற்கு வருகிறது. பிறகு, அதுவும் பிரவாகத்தில் சென்று மறைந்து போகிறது.

உலகத்தில் நடைபெறும் சம்பவங்களில் புதியது ஒன்று மில்லை. எல்லாம் பார்த்தவையே. பூவும் பழமும் அதனதன் காலத்தில் தோன்றி மறைவதுபோல் அனைத்தும் நடை பெறுகிறது. வியாதியும் மரணமும், பழியும் மோசமும் துரோகமும், சுகமும் சந்தோஷமும் அனைத்தும் இவ்வாறே. அறிந்தோர் இவற்றினால் மகிழ்ச்சியும் அடையார்; துயரமும் படார்.

'நாளை இறந்து போவாய்; இல்லையேல் அதற்கு மறுநாள் இறப்பாய்' என்று யாரேனும் சோதிடன் சொன்னால், நாளையா அல்லது மறுநாளா என்கிற சந்தேகத்

தைப்பற்றிப் பெரிய வித்தியாசமாக எண்ணி ஆராய மாட்டாய். இதைப் போலவேதான் எத்தனை நாள் கழித்து இறப்பதா யிருந்தாலும், நாளையானாலும் என்ன? சில வருஷங்கள் கழித்தாலென்ன?

வியாதியில் படுத்திருந்தவர்களைப் பார்த்துச் சொஸ்தப் படுத்துகிறேன் என்று சொல்லி எத்தனை வைத்தியர்கள் தாமே இறந்துவிட்டார்கள்! மற்றவர்கள் இறக்கும் நாட்களைச் சொல்லிவந்த எத்தனை சோதிடர்கள் தாமே செத்துவிட்டார்கள்! மரணத்தைப் பற்றியும், மரணமின்மையைப் பற்றியும் சலிப்பின்றி வாதித்துவந்த எத்தனை பண்டிதர்கள் தாமே மாண்டு போனார்கள்! பல்லாயிரக் கணக்கான ஜனங்களைக் கொன்ற எத்தனை போர் வீரர்களும் தாமும் மாண்டார்கள்! தங்களுக்குச் சாவே கிடையாது போல் எத்தனை அரசர்கள் அகங்காரப்பட்டுப் பிரஜைகளின் உயிர்களின் பேரில் அதிகாரம் செலுத்திவந்தார்கள். அவர்களுடைய ஆட்டம் என்னவாயிற்று? இருந்த இடம் தெரியாமல் மறைந்தார்கள். எத்தனை பெரிய நகரங்கள், கலகலவென்று வாழ்ந்தவை, செத்த சவம்போல் மாண்டு போயின. உலகத்தில் எந்த ஜீவனுக்கும் மாண்டுபோக வேண்டியதே முடிவு; சுக்கிலமாக ஆரம்பித்து சாம்பலாக முடியவேண்டியது. இதன் மத்தியில் நியாயமாய், யோக்கியமாய், கூடியமட்டில் லக்ஷணமாய் நடந்துகொள். மரத்தில் உண்டாகிக் கீழே விழுந்துபோகும் பழத்தைப் பார். தன் வாழ்க்கையை எவ்வளவு அழகாகவும் சந்தோஷமாகவும் லகுவாக நடத்தி, மரத்தினின்றும் நழுவி, தான் பிறந்த மண்ணில் மறுபடி அடங்கிப்போகிறது. அதைப் பின் பற்றுவாயாக.

விருத்தாப்பியம் வந்தது, மரணம் நெருங்கிவிட்டது என்றெல்லாம் கவலைப்படுவது ஏன்? வேறு ஒரு தத்துவ ஞானமும் வேண்டாம். எத்தனை நாள் வாழ்ந்தவர்களும் முடிவில் இறந்துதான் போனார்கள். சிறு வயதில் இறந்தவர்களைவிட நீண்டநாள் இருந்து செத்தவர்கள் என்ன லாபம் பெற்றார்கள்? பலர் இறந்ததைக் கண்டு அந்தச்





சவங்களைத் தூக்கி அடக்கம் செய்ததே இவர்கள் பெற்ற லாபம். குறைந்த ஆயுளுக்கும், நீண்ட ஆயுளுக்கும் என்ன வித்தியாசம்? நெடுநாள் பிழைத்தவர்களின் சுகம் என்ன? மூப்பில் அவர்களுக்கு அமைந்த சகாக்களைப் பற்றியும், சுமக்க வேண்டியிருந்த உடலின் நிலையைப் பற்றியும் யோசித்துப் பார். சில ஆண்டுகள் நீடித்து வாழ்ந்ததில் என்ன பயன் ஏற்பட்டது? உலகத்தின் காலப் போக்கைச் சிந்தித்துப் பார். நீ பிறப்பதற்குமுன் எல்லையற்ற காலம், இறந்தபின்னும் எல்லையற்ற காலம். இதன் மத்தியில் மூன்று மாதம் இருந்து செத்தால் என்ன? முன்னூறு வருஷங்கள் இருந்தால்தான் என்ன?

38. பாறையின்மேல் அலைகள் மோதி மோதிப் புரண்டு கொண்டிருந்தாலும் கல்லானது அசையாமல் நிற்கும். அதைப்போல் உன் உள்ளம் அமைதி பெற்றிருக்க வேண்டும். பேரிரைச்சலுடன் அலைகள் மோதினாலும் இறுதியில் அடங்கி ஓய்ந்துகிடக்கும்.

'ஐயோ! என் துர்ப்பாக்கியம்! இந்த விபத்து எனக்கு வந்ததே' என்பாய். அப்படியல்ல நீ எண்ணவேண்டியது. 'ஆ! இத்தகைய விபத்து நேரிட்டபோதிலும், தீரத்துடன் நிகழ்வதைக் கண்டு கலங்காமலும், வருவதை நினைத்து அஞ்சாமலும் இருக்கின்றேனே, நான் என்ன பாக்கியவான்! இதைப்போன்ற கஷ்டம் யாருக்கும் வரலாம்; ஆனால், எல்லோரும் என்னைப்போல் தீரத்துடன் தாங்கமாட்டார்கள். வந்தது விபத்தே யாயினும், எனக்கு வாய்த்த மனநிலை நல்ல பாக்கியம் அன்றோ!' என்று எண்ணிச் சந்தோஷப் படவேண்டும். மனிதனுடைய உள்ளத்தைப் பழுது படுத்தாத ஒரு சம்பவம் எப்படி விபத்தாகும்? வாழ்வின் நோக்கம் கெடாதவரையில் எது நேர்ந்தால் என்ன? நீ எதற்காக வாழ்கிறாய்? இந்த விபத்து உன்னுடைய வாழ்வின் உண்மையான நோக்கங்களுக்கு என்ன தடையாகும்? உன் நடுநிலைமையைக் கெடுக்குமா? உன் பெருந் தன்மைக்குத் தடையாகுமா? தெளிவான அறிவு, விவேகம்,

ஆராய்ந்து செய்தல், சத்தியம், அடக்கம், சுதந்திரம், இத் தகைய குணங்களுக்கு இச்சம்பவத்தால் ஏதாவது கேடு வந்ததா? இக்குணங்களுடைய புருஷனுக்குத் தன் பரிசுத்தமே தனக்கு இன்பம் அல்லவா? எந்த விபத்தும் விபத்தல்ல. அதைப் பொறுக்கும் ஆற்றலுடைமையே பாக்கியம். இதை நினைவில் வை.

காலையில் நேரத்தோடு எழுந்திருக்காமல் ஏன் படுக்கை யில் இருக்க ஆசைப்படுகிறேன்? குளிருக்குப் பயந்து கம்பளி போர்த்திக்கொண்டு படுக்கையில் படுக்கவா நான் உண்டாயிருப்பது? 'செய்ய வேண்டியதைச் செய்ய இன்று என் வாழ்நாளுக்கு ஒருநாள் சேர்க்கப்பட்டது' என்று எண்ணி, சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமல்லவா? படுக்கை யில் கிடப்பது சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால் சுகமாக கிடப்பதற்காகத்தானா உன்னை உண்டாக்கியது? கருமம் செய்ய வேண்டியவனா நீ, அல்லது நிகழ்சிகள் நிகழ வெறும் செயப்படு பொருளாக இருப்பதே உன் உயிரின் பயனா? உன்னைச் சுற்றிலும் இருக்கும் செடியைப் பார், ஈயைப் பார். தத்தம் வேலையை ஒவ்வொன்றும் செய்வதைப் பார். உலக அமைப்பில் அதற்கென்று நியமிக்கப்பட்ட வினையை ஜீவ கோடிகள் ஒவ்வொன்றும், யாரும் ஏவாமல், எவ்வாறு செய்துகொண்டு போகிறது என்பதைக் கவனித்துப் பார். உன் வேலையை நீ செய்ய வேண்டாமா? ஓய்வு வேண்டாமா என்பாய். ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், அதற்கும் அளவு உண்டு. உணவுக்கும் பானத்துக் கும், பசியும் தாகமும் அளவு காட்டுகிறது. அளவுக்குமேல் உண்ணவும் குடிக்கவும் முடியாது. அம்மாதிரி ஓய்வுக்கும் அளவு வேண்டாமா? செய்ய வேண்டிய செயல்களை உன்னால் ஆகக்கூடிய அளவு செய்ய மாட்டாய். ஓய்வு எடுப்பதில் வேண்டியதற்குமேல் எடுத்துக் கொள்ளப் பிரியப்படுகிறாய்.

39. மன நிம்மதியைக் கெடுக்கும் எந்தப் பொருளை யும் விலக்கிக் கொள்வது உண்மையில் எவ்வளவு எளிது. நமக்குள்ள சக்தியை நாம் அறியவில்லை.





புத்திக்கூர்மையை நீ படைக்கவில்லை. அதைப்பற்றி நீ ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் வேறு எத்தனையோ குணங்களைப் படைத்திருக்கிறாய். அவற்றைப்பற்றி நீ சாக்குச் சொல்ல இயலாது. அவற்றைச் செலுத்தி வாழ்க் கையை நடத்து. உண்மை வாழ்க்கை நடத்தவும், நடை பாவனைப் பெருந்தன்மையும், மெய்வருத்தம் பொறுத்தலும், சுகபோகங்களை நீத்தலும் உன்னால் முடியும்படியான காரியங் கள். இவற்றில் குறைவு ஒன்றும் இல்லையே. ஏன் அவற் றில் சிக்கனம் செய்யப் பார்க்கிறாய்? திருப்தியற்றிருக்க யாராவது உன்னைக் கட்டாயப் படுத்துகிறார்களா? பிறர் பொருளில் ஆசை வைக்க ஏதேனும் கட்டாயமா? இச்சகம் பேசும்படி ஏதேனும் நிர்ப்பந்தமா? வீண்பெருமை பேசும் படி ஏதேனும் புறத்திலிருந்து உன்னைக் கட்டாயப்படுத்து கிறதா? இவற்றில் உனக்குப் பிறவிக்குறை ஒன்றும் இல்லையே? நீ படைத்திராத மதி நுட்பத்தை யாரும் உன்னைச் செலுத்தச் சொல்லவில்லை. ஆனால் மற்ற குணங் களைப்பற்றி ஏன் செய்யக் கூடியதைச் செய்யவில்லை. கூர்மையான மூளை இல்லை என்பதில்கூட, பயிற்சியால் அடையக்கூடிய நுட்பத்தை அடைய முயன்றாயா? கவனி யாமல் விட்டது உன் குற்றமே.

40. மரமும் உலோகமும் கொண்டு வேலை செய்யும் தச்சனும் கருமானும் தன்னுடைய தொழிலில் தனக்குள்ள ஆசையினால், குளிப்பதையும் சாப்பிடுவதையும்கூட மறந்து, தொழிலிலேயே கண்ணாய் இருப்பார்கள். தச்சனுக்குத் தன் வேலையிலுள்ள ஆர்வத்தைப்போல், அவன் வேலை செய்யும் பொருளை விடச் சிறந்த பொருளான உன் மனத் தூய்மையில் உனக்கு அதிக ஆர்வம் இல்லையே! நாடகக்காரனுக்குத் தன் நடனத்திலுள்ள மனப்பற்று அளவுகூட உன் நன்மை யில் உனக்கு இல்லையே! உலோபிக்குப் பணத்திலுள்ள ஆசையளவும், ஸ்துதிப்பிரியர்கள் பிறர் புகழ்ந்து பேசுவதை விரும்பும் அளவும்கூட உனக்கு உன் கடமையில் கருத் தில்லையே. இவர்கள் தத்தம் நோக்கங்களிலே வைத்திருக் கும் பற்றினால் உண்ணுவதையும் உறங்குவதையும்கூட

ஆராய்ந்து செய்தல், சத்தியம், அடக்கம், சுதந்திரம், இத்தகைய குணங்களுக்கு இச்சம்பவத்தால் ஏதாவது கேடு வந்ததா? இக்குணங்களுடைய புருஷனுக்குத் தன் பரிசுத்தமே தனக்கு இன்பம் அல்லவா? எந்த விபத்தும் விபத்தல்ல. அதைப் பொறுக்கும் ஆற்றலுடைமையே பாக்கியம். இதை நினைவில் வை.

காலையில் நேரத்தோடு எழுந்திருக்காமல் ஏன் படுக்கையில் இருக்க ஆசைப்படுகிறேன்? குளிருக்குப் பயந்து கம்பளி போர்த்திக்கொண்டு படுக்கையில் படுக்கவா நான் உண்டாயிருப்பது? 'செய்ய வேண்டியதைச் செய்ய இன்று என் வாழ்நாளுக்கு ஒருநாள் சேர்க்கப்பட்டது' என்று எண்ணி, சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமல்லவா? படுக்கையில் கிடப்பது சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால் சுகமாக கிடப்பதற்காகத்தானா உன்னை உண்டாக்கியது? கருமம் செய்ய வேண்டியவனா நீ, அல்லது நிகழ்சிகள் நிகழ வெறும் செயப்படு பொருளாக இருப்பதே உன் உயிரின் பயனா? உன்னைச் சுற்றிலும் இருக்கும் செடியைப் பார், ஈயைப் பார். தத்தம் வேலையை ஒவ்வொன்றும் செய்வதைப் பார். உலக அமைப்பில் அதற்கென்று நியமிக்கப்பட்ட வினையை ஜீவ கோடிகள் ஒவ்வொன்றும், யாரும் ஏவாமல், எவ்வாறு செய்துகொண்டு போகிறது என்பதைக் கவனித்துப் பார். உன் வேலையை நீ செய்ய வேண்டாமா? ஓய்வு வேண்டாமா என்பாய். ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், அதற்கும் அளவு உண்டு. உணவுக்கும் பானத்துக்கும், பசியும் தாகமும் அளவு காட்டுகிறது. அளவுக்குமேல் உண்ணவும் குடிக்கவும் முடியாது. அம்மாதிரி ஓய்வுக்கும் அளவு வேண்டாமா? செய்ய வேண்டிய செயல்களை உன்னால் ஆகக்கூடிய அளவு செய்ய மாட்டாய். ஓய்வு எடுப்பதில் வேண்டியதற்குமேல் எடுத்துக் கொள்ளப் பிரியப்படுகிறாய்.

**39.** மன நிம்மதியைக் கெடுக்கும் எந்தப் பொருளையும் விலக்கிக் கொள்வது உண்மையில் எவ்வளவு எளிது. நமக்குள்ள சக்தியை நாம் அறியவில்லை.





புத்திக்கூர்மையை நீ படைக்கவில்லை. அதைப்பற்றி நீ ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் வேறு எத்தனையோ குணங்களைப் படைத்திருக்கிறாய். அவற்றைப்பற்றி நீ சாக்குச் சொல்ல இயலாது. அவற்றைச் செலுத்தி வாழ்க்கையை நடத்து. உண்மை வாழ்க்கை நடத்தவும், நடை பாவனைப் பெருந்தன்மையும், மெய்வருத்தம் பொறுத்தலும், சுகபோகங்களை நீத்தலும் உன்னால் முடியும்படியான காரியங்கள். இவற்றில் குறைவு ஒன்றும் இல்லையே. ஏன் அவற்றில் சிக்கனம் செய்யப் பார்க்கிறாய்? திருப்தியற்றிருக்க யாராவது உன்னைக் கட்டாயப் படுத்துகிறார்களா? பிறர் பொருளில் ஆசை வைக்க ஏதேனும் கட்டாயமா? இச்சகம் பேசும்படி ஏதேனும் நிர்ப்பந்தமா? வீண்பெருமை பேசும்படி ஏதேனும் புறத்திலிருந்து உன்னைக் கட்டாயப்படுத்துகிறதா? இவற்றில் உனக்குப் பிறவிக்குறை ஒன்றும் இல்லையே? நீ படைத்திராத மதி நுட்பத்தை யாரும் உன்னைச் செலுத்தச் சொல்லவில்லை. ஆனால் மற்ற குணங்களைப்பற்றி ஏன் செய்யக் கூடியதைச் செய்யவில்லை. கூர்மையான மூளை இல்லை என்பதில்கூட, பயிற்சியால் அடையக்கூடிய நுட்பத்தை அடைய முயன்றாயா? கவனியாமல் விட்டது உன் குற்றமே.

**40.** மரமும் உலோகமும் கொண்டு வேலை செய்யும் தச்சனும் கருமானும் தன்னுடைய தொழிலில் தனக்குள்ள ஆசையினால், குளிப்பதையும் சாப்பிடுவதையும்கூட மறந்து, தொழிலிலேயே கண்ணாய் இருப்பார்கள். தச்சனுக்குத் தன் வேலையிலுள்ள ஆர்வத்தைப்போல், அவன் வேலை செய்யும் பொருளை விடச் சிறந்த பொருளான உன் மனத் தூய்மையில் உனக்கு அதிக ஆர்வம் இல்லையே! நாடகக்காரனுக்குத் தன் நடனத்திலுள்ள மனப்பற்று அளவுகூட உன் நன்மையில் உனக்கு இல்லையே! உலோபிக்குப் பணத்திலுள்ள ஆசையளவும், ஸ்துதிப்பிரியர்கள் பிறர் புகழ்ந்து பேசுவதை விரும்பும் அளவும்கூட உனக்கு உன் கடமையில் கருத்தில்லையே. இவர்கள் தத்தம் நோக்கங்களிலே வைத்திருக்கும் பற்றினால் உண்ணுவதையும் உறங்குவதையும்கூட

மறந்துவிட்டுத் தாம் வேண்டும் பொருளை அடைவதிலேயே கருத்தாக இருப்பார்கள். இவர்கள் விரும்பும் பொருளைக் காட்டிலும் உன்னுடைய கடமை உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா ?

**41.** பிறன் ஒருவனுக்கு ஒரு நன்மை செய்தால் அதைக் கணக்கில் குறித்துக்கொண்டு, பிறகு சிலர் அதற்குப் பதில் எதிர்பார்ப்பார்கள். சிலர் இப்படிச் செய்யாராயினும் தாம் செய்த உதவியை என்றும் நினைவில் வைத்துக் கொண்டு, உதவி பெற்றவனைக் கடனாளியாகவே பாவிப்பார்கள். ஆனால், சிலர் தாம் செய்த உதவியை நினைக்கவும் மாட்டார்கள். கொடி முந்திரி அதன் பருவக்காலத்தில் நல்ல பழம் கொடுத்த பின் அதைப்பற்றி மறுபடியும் சிந்திக்காது; தன் இயல்புக்கு இசையத் தன்னால் உதவக் கூடியதை உதவிவிட்டு, பிறகு அதைப்பற்றிக் கருதாது. குதிரை ஓடுவதும் இப்படித்தான். நாயும் இவ்வாறே வேட்டைக்குப் போகும். தேனீயும் தேனைச் சேர்ப்பது இப்படியே. மனிதனும் ஒப்புரவறிந்து உதவியபின் அதைப்பற்றிப் பிறருடன் பேசான். கொடி முந்திரி தான் முன் ஈன்ற பழங்களைப் பற்றி நினைக்காமல் மறுபடியும் அடுத்த பருவத்தில் பழம் தருவதுபோல், இவனும் உதவி செய்தபின் மறுபடியும் தான் செய்யக்கூடிய வேறு உதவியைப் பற்றியே நினைப்பான்.

**42.** வைத்தியன் நோயாளிக்கு மருந்தும் பத்தியமும் நியமிப்பதுபோல், தெய்வம் மனிதர்களுக்குக் கஷ்டம் அளிக்கும். நோயும், அங்கவீனமும், பொருள் கஷ்டமும், இவை போன்ற எல்லாச் சம்பவங்களும், இவ்வாறு விசுவரூப தெய்வத்தின் வைத்திய நியமங்களாகவே கருதப்பட வேண்டும். உடலின் நோய் தீருவதற்காக வைத்தியன் சொல்லும் பத்தியம் உடலின் தனி உறுப்பொன்றுக்குக் கஷ்டமாகவே இருக்கலாம். அதைப்போல் உலக நடைக்கு வேண்டிய சம்பவங்கள் தனி மனிதனுக்குத் துன்பங்களாகவே தோன்றலாம். உலகம் முழுவதும் ஓர் உடல். எல்லோருடைய உடல்களும் சேர்ந்து. ஓர் உலக உடலாகிறது. எல்லாக் காரண காரியங்களும் சேர்ந்து, உலககாரண காரியமாகிறது. அதுதான் உலகம். அதுதான் விதி என்று நீ எண்ணுவது. 'இது என் விதியாயிற்றே' என்று வெறுப்பது, உலகத்திற்கு உலக வைத்தியன் நியமித்த ஒரு பத்தியத்தை வெறுப்பது போலவே யாகும். விவேகமுள்ள ஒருவன் வைத்தியனுடைய கட்டளைகளைச் சந்தோஷமாய் ஒப்புக் கொள்வது போலவே விதியையும் ஒப்புக்கொள்ளவேண்டும். மருந்து கசக்கும்; பத்தியம் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனால் நோய் தீருமென்று அதை ஒப்புக்கொள்ளுகிறோம். உன் உடலின் நோயைத் தீர்க்க எவ்வாறு விரும்புகிறாயோ, அவ்வாறு உலகம் முழுவதும் திரண்ட ஓர் உயிராகக் கருதி, அதன் நன்மையையும் விரும்பு. கஷ்டமாகத் தோன்றினாலும் விதியாக வந்ததைச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளக் கடவாய். அது உலக நலத்திற்காக உலகப் பிரகிருதி செய்து கொண்ட மருந்தேயாகும்.

ஆகவே, உனக்கு எது நேரிடினும், அதை நீ மனக் குறைவின்றி ஒப்புக்கொள்ள இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது: உனக்கென்று ஏற்பட்ட சம்பவம் இது. நீ எந்தக் காரண காரியப் பரம்பரையிலிருந்து உண்டானாயோ, அதில் ஒன்றுபட்டு இணைபிரியாத சம்பவம் இதுவும் ஆகும். ஆகையால் இதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவது: எல்லா ஜீவராசிகளின் க்ஷேமத்திற்கும், உலகம் வளர்ந்து பரிபூரணமாவதற்கும் தனி ஜீவர்களைத் துன்புறுத்துவதுபோலத் தோன்றும் சம்பவங்கள் உண்டாகின்றன. ஒன்றாக அமைக்கப்பட்ட இந்த உலகத்தில் ஒரு பாகத்தை வெட்டிப் பேதித்தால் அதன் சுகமும், அழகும் குறையும். உலக அமைப்பில் நடக்கும் ஒரு விஷயத்தைக் குறித்து நீ தனித்து அதிருப்தியடைவது, ஒரு பாகத்தை வெட்டிப் பேதிக்கும் தோஷமேயாகும். இயற்கைத் தருமத்திற்கு இடையூறு செய்த குற்றமேயாகும்.

**43.** எப்போதேனும் அற நெறியிலிருந்து விலகி வழுவினையானால், அதனால் சோர்வு கொள்ளாதே. 'கெட்டேன்'

என்று முயற்சியை விட்டுவிடாதே. அறவழிக்குத் திரும்பி வந்து சேர்வாயாக. மொத்தத்தில், ‘யோக்கியனாக வாழ்க்கை நடத்தினேன், நான் பாக்கியசாலி’ என்று மகிழ்வாயாக. வழி தப்பித் திரும்பும்போது, பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் குழந்தைகள் வெறுப்புடன் போவதுபோல் நடக்காதே. கண்வலியில் கஷ்டப்படுகிறவன் குளிர்ச்சி மருந்துகளைச் சந்தோஷமாகக் கண்களின் மேல் போட்டுத் துடைத்துக்கொள்வது போலவும், காயம் பட்டவன் ஒத்தடம் போட்டுக்கொள்வது போலவும், சந்தோஷத்துடன் அற வழிக்குத் திரும்புவாயாக. மனத்தில் சாந்தியடைய மெய்யறிவை நாடு. மெய்யறிவைவிட வேறு எந்தச் சாதனமும் மனிதனுக்கு அதிக சுகம் தர முடியாது.

**44.** சித்து, சடம் இவ்விரண்டின் சேர்க்கையால் நான் உண்டாகி யிருக்கிறேன். இரண்டில் எதுவும் சூனியமாக அழிந்து போகாது. எதுவும் சூனியத்திலிருந்து உண்டாக வில்லை. ஆகையால், சூனியமாய்ப் போக முடியாது. இந்த உடலின் ஒவ்வொரு பகுதியும் அழிந்து விகாரப்பட்டு உலகத்தில் வேறு ஒரு பொருளில் சேர்ந்து பயன்பட்டுப்போகும். மறுபடி அவ்வுருவமும் மாறி வேறு பொருள்களாகும். இப்படி அனந்த காலமும் பயன்படுத்தப்படும். இவ்வாறு அல்லவோ ‘நான்’ என்கிற இந்த உடலும் உயிரும் மற்றப் பொருள்களிலிருந்து உண்டானது. அழிவென்பது கிடையாது. முந்தியும் அனந்த காலம்; பிந்தியும் அனந்த காலம். உலகத்திலுள்ள உருவங்கள் மாறிக்கொண்டே வரும். பிரளய காலங்களிலும் கற்பங்களிலும் உலகம் முடிவாவதாக வைத்துக்கொண்டாலும், அதாவது, எல்லா உருவங்களும் சேர்ந்து பிரளய காலத்தில் ஓர் உருவாகி அதனின்று மறுபடி உலகம் உண்டானாலும், இந்த உண்மைக்கு அது விலக்கு ஆகாது.

தத்துவங்கள் தம் வழியே செல்லும். ஒன்றிலிருந்து ஒன்று நியாய விதிப்படி செல்லுமே ஒழிய, அதன் போக்கை நம் இஷ்டப்படி மாற்ற முடியாது. தம் வழியைப் பிடித்துக் கொண்டு நேராகச் செல்லும். இதனால்தான் நேர்மை





என்பது தரும வாழ்க்கைக்குப் பெயர். வழி பிறழாமல் தத்துவ முறைப்படி நடப்பதே தருமம்.

ஒரு மனிதனண்டை வந்துசேரும் பொருள்களைப்பற்றி அவை அவனுடையதென்று சொல்லுவது பிழை. அவனது என்றால் அவனுடைய பிரகிருதியில் ஒரு பாகமாக இருக்க வேண்டும். அல்லது அந்தப் பிரகிருதியின் முடிவாக இருக்க வேண்டும். பொருள்களுக்கும் மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? பொருளை வெறுக்க வேண்டியதுமில்லை; பற்றுதல் கொள்ளவும் வேண்டியதில்லை. மனிதனுடைய நன்மையும் தீமையும் அவற்றில் இல்லை. பொருள்களினின்றும் மன வேறுபாடின்றி ஒதுங்கிய அளவு மனிதன் விடுதலை அடைகிறான். தானே பொருள்களை நீக்கினாலும் சரி, அவன் முயற்சியின்றி வேறு காரணங்களினால் பொருள்கள் அவனை விட்டுப்போனாலும் சரி; மனநிலை கலங்காமல் நின்றால், அது விடுதலைக்கு உதவியாகும்.

**45.** எந்தப் பொருள்களை நீ இடைவிடாமல் சிந்திக்கிறாயோ, அவற்றின் தன்மையை உன் மனம் அடைகிறது. சாயத்தில் தோயும் துணியைப்போல், உள்ளத்திலுள்ள எண்ணங்களில் தோய்ந்த ஆத்மா நிறம் மாறும். ஆகையால், உயிர் வைத்துக்கொண்டு வாழ முடியுமானால் நல்வாழ்வு நடத்தவே முடியும் என்பதைப் போன்ற எண்ணங்களை எப்போதும் எண்ணுவாயாக. எந்தப் பதவியிலும் நல்வாழ்வு வாழலாம். அரண்மனை வாழ்க்கையிலும்கூட ஒருவன் உண்மை வாழ்வு வாழ முடியும். ஒரு பொருள் எதற்காகச் சிருஷ்டிக்கப் பட்டதோ அதற்கிசைய அதன் இயற்கையும் அமைக்கப்பட்டு வளரும். அதுவே அதன் தருமம்; அதுவே அதன் நன்மையும். எனவே, அறிவுள்ள மனிதனுடைய நன்மை ஒப்புரவறிந்து செய்தலே. அதற்காகவே அவன் ஜன்மம். ஜீவனற்ற பொருள்களைவிட உயிருள்ளவை சிறந்தவை. உயிருள்ளவைகளில் அறிவுள்ள பிராணிகள் சிறந்தவை. பிராணிகளின் நன்மைக்காக ஜீவனற்றவை நிருமாணிக்கப் பட்டிருக்கின்றன. அறிவுள்ள பிராணிகள்

தமக்குள் ஒருவருக்கொருவர் பணிசெய்து பயன்பட்டு வாழ்வதற்காகவே பிறந்திருக்கிறார்கள்.

**46.** முடியாதது ஒன்றை எதிர்பார்ப்பது அறியாமையாகும். துராத்மாக்கள் தங்களுடைய இயற்கைக்கு மாறாய் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

**47.** எந்த ஸ்தூலப் பொருள்களாலும் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை; ஆத்மாவிடம் சென்று அதைத் தீண்ட ஸ்தூலப் பொருள்களுக்கு வழியில்லை. அவைகளால் ஆத்மாவை அசைக்கவாவது நடத்தவாவது முடியாது. ஆத்மாவானது பூரண சுவாதீனம் படைத்திருக்கிறது. தன்னைத் தானேதான் நடத்திக் கொள்ளும். வெளியில் நிற்கும் பொருளைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப்பற்றியும் என்ன எண்ணம் உள்ளத்தில் கொள்ளுகிறோமோ அதுவேதான் ஆத்மாவைப் பாதிக்கும். பொருள்களே அதைப் பாதிக்க முடியாது.

**48.** உலகத்தில் அறிவுள்ள பிராணிகளாகிய மனிதர்களுக்கு நன்மை செய்வதும், அவர்கள் செய்வதைப் பொறுப்பதுமே நம்முடைய கடமையாகும். இந்தக் கடமையைப் பொறுத்தமட்டில் அவர்கள் மனிதர்கள். ஆனால், நாம் செய்ய வேண்டிய கருமங்களுக்கு இடையூறு செய்துவரும் மனிதர்கள் சடப் பொருள்களைப்போல் ஆவார்கள். வெயில், மழை, காற்று, அல்லது துஷ்ட மிருகங்களைப்போல் அவர்களைக் கருத வேண்டும். சடப் பொருள்களைப்போலவே அவர்களும் என் முயற்சிக்கு இடையூறுவார்கள். அவர்கள் செய்யும் தீமைகள் சடப் பொருள்களால் உண்டாகும் இடையூறுகளைப் போலவே என் உள்ளத்தின் சக்தியையாவது சுபாவத்தையாவது பாதிக்கக் கூடாது. தடைக்குத் தகுந்தவாறு முயற்சியை மாற்றிக்கொண்டு வேறு வேறு வழிகளில் என் கருத்தை நடத்த எனக்குச் சக்தியுண்டு. மனிதனுக்குத் தன் கருமத்தை நிறைவேற்றுவதற்காக எந்த இடையூறையும் தனக்கு ஒரு சாதனமாகவே மாற்றிக்கொண்டு, வெற்றியடைய ஆத்மாவுக்குச் சக்தியுண்டு.





**49.** பிரபஞ்சத்தில் எது சிறந்த அம்சம்? எல்லாப் பொருள்களையும் தனதாக்கிப் பயன்படுத்திக்கொள்ளும் அம்சம், எல்லாப் பொருள்களையும் தன் ஆட்சிக்குள் அடக்கி ஆளும் அம்சம், அதுவே சிறந்ததாகக் கருதுவாய். அவ்வாறே உனக்குள்ளும் எது சிறந்த அம்சம் என்பதையும் அறிந்துகொள். அந்தப் பொருளும், உலகத்தை ஆண்டு வரும் பொருளும், இரண்டும் ஓர் இனம்; அது வேறல்ல; இரண்டும் ஒன்றே. உலகப் பொருள்களை யெல்லாம் தனதாக்கிப் பயன்படுத்தும் பரம்பொருள் உனக்குள்ளும் இருக்கிறதல்லவா? அதுவே உன் உடல் வாழ்க்கையையும் நடத்துகிறது.

**50.** ஊரைக் கெடுக்காதது ஒன்று ஊரானுக்குக் கேடாகாது. எந்த விஷயத்திலும் இந்த உண்மையை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய ஊருக்கு இதனால் துன்பமில்லை அல்லவா? அப்படியாயின் எனக்காக நான் ஏன் வருந்த வேண்டும்? ஒருவனுடைய செயல் ஊருக்கே துன்பம் தருவதாயின், அவன் அவ்வாறு ஏன் செய்தான்? அவன் எதைத் தவறாக உணர்ந்தான்? இவ் விஷயங்களை விசாரித்தல் தகும். சினங் கொள்வதில் பயனில்லை.

பொருளின் மறைவும், அழிவும் என்ன வேகத்துடன் நடைபெறுகிறது என்பதை அடிக்கடி சிந்திப்பாயாக. பிரபஞ்சமே ஒரு நதிப்பிரவாகம்போல் ஓடிச் செல்கிறது. எதுவும் நிலையில்லை. எத்தனை மாறுதல்கள்! எவ்வளவு விசை! நாம் நிற்கும் நிலை என்ன? முந்தித் தீர்ந்த காலம் அநாதியும் அளவிறந்ததுமானது; வருங்காலமும் எல்லையற்றது. அதன் அகன்ற வாயில் அனைத்தும் விழுந்து அழிந்துபோகும். இப்படி அளவும் எல்லையுமற்ற இரண்டின் மத்தியில் ஏதோ கஷ்டம் வந்தது என்று துயரப்படுகிறோம், கவலைப்படுகிறோம். முந்தியும் பிந்தியும் ஆதியந்தமற்ற அகண்ட கால அளவுகள் கிடக்க, மத்தியில் வரும் இந்த அற்பங்களைப் பொருட்படுத்துவது என்ன அறியாமை!

**51.** எப்போதும் நினைவில் வை: சர்வ வியாபகமான பொருளில் நீ எவ்வளவு அற்பமான பகுதி? பிரபஞ்சத்தில் நீ எவ்வளவு சிறிய பாகம்? அனந்தமான யுகங்களில் எவ்வளவு க்ஷணமாத்திரம் உன் ஆயுள்? உலகத்தின் சம்பவங்களில் உன் வாழ்வு ஒரு அணு மாத்திரம். இதை நினைவுக்குத் தந்துகொண்டால், உனக்கு நிகழும் சுக துக்கங்களைப் பொருட்படுத்த மாட்டாய்; சமநிலை அடைவாய்.

**52.** எனக்கு ஒருவன் தீங்கா செய்தான்? அவனுக்கல்லவோ அது துன்பம்? பிறனுடைய தீச்செயல் என்னை என்ன செய்யும்? அவனுடைய மனோவிருத்தியும் அவனுடைய முயற்சியும் அவனைத் தாக்கும். நன்மையோ தீங்கோ அவனுக்குத்தான் நேரிடும். நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னுடைய ஆத்மா எண்ணம் ஊட்டுகிறதோ, அதை நான் செய்கிறேன். நான் அடைய வேண்டும் என்று உலகத்தை நடத்தும் தெய்வம் எனக்கு எதைத் தருகிறதோ அதை நான் அடைகிறேன். பிறனுடைய தீங்கு என்னைத் தாக்காது.



# 2

**53.** தேவர்களுள் ஒருவனாக நீ வாழ். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஈசுவரனுடைய அம்சம் குடிகொண்டிருக்கிறது. அதுவே உள்ளிருந்து நமக்கு அறிவூட்டி, வழிகாட்டி, எப்பொழுதும் நம்மைக் காத்து வருகிறது. வாழ்வில் தான் பெற்றதைத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டு, எல்லாக் காரியங்களிலும் உள்ளத்திலுள்ள தெய்வம் காட்டும் வழியில் நடப்பதே மனிதன் வானவர்களுடன் வாழ்வதாகும்.

**54.** உலகத்தின் தருமம், ஒருமைப்பட்டு வாழ்வதே. சிருஷ்டியில் ஒன்றுக்கொன்று பயன்படவும், ஒன்றோடொன்று இணங்குமாறும் அனைத்தும் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ்ப்பொருள்கள் ஒன்றை ஒன்று தாங்கும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை எளிதில் கண்டு கொள்கிறோம். இதைப் போலவே மேல்வகைப் பிராணிகளாகிய நாமும் ஒன்றுபட்டு வாழ அமைக்கப்பட்டிருக்கிறோம்.

உன் நெஞ்சை நீ கேள்: இதுவரையில் நீ எவ்வாறு நடந்துகொண்டாய்? தெய்வம், தாய் தந்தையர், சகோதரர்கள், மனைவி, குழந்தைகள், குருக்கள், உபாத்தியாயர், சிநேகிதர்கள், பந்துக்கள், வீட்டு வேலைக்காரர்கள் இவர்களிடமெல்லாம் எப்படி நடந்துகொண்டாய்? 'நான் இதுவரையில் எவர்பாலும் அநியாயம் செய்யவில்லை; தகாத பேச்சும் பேசவில்லை' என்று உண்மையாகச் சொல்ல இயலுமா? அவ்வாறு நடந்து கொண்டாயா? நீ வாழ்ந்த வாழ்க்கையை முற்றிலும் நினைவுக்குத் தந்துகொள். எவ்

வளவு பொறுத்தாய்? துக்கத்தைப் பொருட்படுத்தாமலும் சுகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சமநிலையிலிருந்து வந்தாயா? எவ்வளவு வரையில் அவ்வாறு இருந்தாய்? எவ்வளவில் தவறினாய்? எத்தனை ஆசைகளை விட்டு விலகினாய்? எத்தனை தீமைக்கு நீ நன்மை செய்து கடனைத் தீர்த்தாய்? உன்னுடைய உலக வாழ்க்கை முடியும் காலம் வந்ததே; இதையெல்லாம் கணக்கு எடு.

**55.** இந்திரியங்கள் விரும்பும் விஷயங்கள் நிலையற்றவை; ஐம்பொறிகளால் அடையக்கூடிய அறிவு ஐயம் திரிபு கொண்டது; உயிரும் இரத்த ஓட்டம்தான். இப்படியானால் எதற்காக இந்த உலகத்தில் வாழ்ந்திருக்கவேண்டும்? நல்ல கீர்த்திக்காகவா? நிலையாமையும் அறியாமையும் நிறைந்த இந்த உலகத்தில் கீர்த்திதான் என்ன பொருள்? அதற்குமேல் என்ன இருக்கிறது? முடிவோ, மறுபிறப்போ, அதுவரையில் என்ன கடமை? தேவர்களை வழிபடுதலும், துதித்தலும், மனிதர்களுக்கு உதவுதலும், அவர்கள் செய்ததைப் பொறுத்தலும், செய்யக் கூடாதவைகளைச் செய்யாமல் தன்னைத் தான் அடக்கலுமேயாம். உன்னுடைய சிறிய உடலும் உயிரும் உன்னுடையன. அவற்றைத் தவிர மற்றவை யெல்லாம் உன் ஆதீனமில்லை. உன்னுடைய கவலைக்கும் பொருளல்ல.

**56.** அறவழியில் நீ நின்று, உன் எண்ணமும் செயலும் ஒழுங்கு தவறாமல் இருந்தால் உன் வழி எளிதேயாகும். ஆத்மாவைச் சாந்தப்படுத்தக் கூடியது உள்ளத்துக்கு வெளியில் எதுவும் இல்லை. நடுநிலைமை தவறாத மனமும் செயலுமே அதற்குச் சிறந்த இன்பம். அதற்குமேல் எதையும் அது வேண்டாது.

**57.** இது நான் செய்த ஒரு குற்றமா? அல்லது, என்னுடைய தீச்செயலில் இருந்து உண்டானதா? இல்லையாயின், இது பொதுவாழ்க்கைக்குத் துன்பம் உண்டாக்குமா? இல்லையாயின், இதைப்பற்றி நான் ஏன் சஞ்சலப்படவேண்டும்?





**58.** உன் கடமையை ஆற்றுவதில் வெய்யிலையும் குளிரையும் பார்க்காதே; தூக்கத்தையும் பார்க்காதே. பிறர் போற்றுவதையும் தூற்றுவதையும் கவனிக்காதே. உயிர் போவதையும் பொருட்படுத்த வேண்டாம். இறப்பதுங்கூட மனிதன் செய்யும் கருமங்களில் ஒன்றுதான். உயிர் துறப்பதையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்.

எதையும் ஊடுருவிப் பார். எதிலும் ஒரு சிறப்பான குணமிருக்கும். பொருள்களில் மறைந்து கிடக்கும் நன்மையைக் கவனிக்காமல் விட்டுவிடுவது எளிது. அந்தக் குற்றத்திற்கு இடம் கொடுக்கவேண்டாம்.

**59.** பிறர் செய்த தீமைக்குத் தகுந்த பிரதி, அவரைப் போல் நாமும் செய்யா திருத்தலே.

**60.** கடவுளை மனத்தில் எப்போதும் வைத்துப் பிறருக்கு உபகாரமாக வாழ். உனக்கு இன்பம் தருவதும் மனத்தில் அமைதி உண்டாக்குவதும் இது ஒன்றே. உலகத்தோடு ஒத்துப் பிறருக்கு உபகாரமாய் வாழ்வதில், ஒன்று முடிந்ததும் உடனே மற்றொன்று செய்யத் தொடங்கு. இடை விடாமல் ஒப்புரவறிந்து செய்தலே சந்தோஷம்; அதுவே ஓய்வு.

**61.** அதிருப்தி ஏன்? எதுவும் இயற்கைத் தத்துவத்திற்கு இசையத்தான் முடியும். அதுவன்றி வேறு வழி ஏது? மற்றெந்தத் தத்துவத்திற்குப் பொருள்கள் இசைந்திருக்க முடியும்?

**62.** உலகமானது அறிவில்லாத அணுக்களின் தற்செயலான கலப்பாய் இருக்கலாம். அல்லது, தெய்வத்திற்கு அடங்கி, ஒழுங்கும் ஒற்றுமையும் பொருந்தியதாக இருக்கலாம். இவ்வுலகம் தெய்வாதீனமற்று, ஒழுங்கும் பயனுமற்றதாயின், அதில் இருக்க வேண்டும், இருக்க வேண்டும் என்று ஏன் இன்னும் ஆசைப்படுகிறேன்.

'எப்போது சாம்பலாவேன்' என்பது தவிர, வேறு என்ன கவலை வேண்டும்? அதற்குந்தான் ஏன் கவலை?

நான் என்ன செய்தபோதிலும், செய்யாதபோதிலும் உடல் சிதைவடைந்து, முடிவில் மண்ணோ சாம்பலோ ஆவது நிச்சயம். அப்படியல்ல ; தெய்வமுண்டு, ஒழுங்குண்டு, அமைப்புண்டு என்றால் உலகத்தை நடத்தும் தெய்வத்திடம் விசுவாசமும் பக்தியும் வைத்து அமைதியடை.

63. நேர்ந்த சம்பவங்களினால் உன்னுடைய மனம் அமைதி கெட்டால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மறுபடி அமைதியை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள். ஒரு கணமும் தாமதிக்க வேண்டாம். இவ்வாறு கவனித்து வந்தால், அதுவே பழக்கமாகி, சாந்த சித்தம் கலையாமலே இருக்கும்.

64. நான் எண்ணுகிற எண்ணமாவது, செய்யும் காரியமாவது குற்றம் என்று பிறன் ஒருவன் எனக்கு அறிவுறுத்துவானானால், உடனே மாற்றிக்கொள்வேன். குற்றத்தை எடுத்துக் காட்டியவனுக்கு நன்றியும் செலுத்துவேன். நான் நாடுவது உண்மையைத்தான். உண்மையினால் எக்காலத்திலும் ஒருவன் துன்பமடைந்தது கிடையாது. உண்மையைப் புறக்கணித்து அஞ்ஞானத்தில் இருந்து கொண்டு தன்னைத்தான் மோசம் செய்துகொள்ளுகிறவனே கேடுறுவான்.

65. நான் என் கடமையைச் செய்து முடிப்பேன். பிற விஷயங்களை நான் கவனிக்க மாட்டேன். எனக்கு இடையூறாகும் காரணங்களை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒரு பகுதி, அறிவற்ற பொருள்கள், மற்றொரு பகுதி அறிவுள்ள மனிதர்களில் வழி தப்பியவர்களும், நெறி அறியாதவர்களும். இரு பகுதியினிடமும் சினங்கொள்வது தகுதியல்ல.

66. அசேதனப் பொருள்களிடமும் பகுத்தறிவில்லாத பிராணிகளிடமும் அறிவுள்ள நீ பெருந்தகைமையோடு நடந்துகொள். மனிதர்களுடன் உபகாரஞ் செய்து ஒத்து வாழ்வாய். எல்லா விஷயங்களிலும் தெய்வத்தை வணங்கி





நடப்பாய். இவ்வாறு எத்தனை காலம் செய்து வருவேன் என்று கவலைப்பட வேண்டாம். ஏழரை நாழிகை இப்படி அறநெறி வழுவாது நின்றாலும் போதும்.

67. 'மரணம் வந்ததும், உலகத்தை ஆண்ட சிகந்தர் சக்கரவர்த்தியும் அவன் குதிரைக்காரனும் ஒரே நிலைமையை அடைந்தார்கள். அனைத்திற்கும் காரணமாய் நிற்கும் பரம் பொருளில் இருவரும் சேர்ந்துவிட்டார்கள்; அல்லது, இருவரும் ஒரேவிதமான அணுக்களாகச் சிதறிப் போனார்கள்.

68. 'மார்க்கன் என்ற உன்னுடைய பெயரை எழுதுவது எப்படி ?' என்று ஒருவன் கேட்டால், அவனுக்குச் சாவதானமாய் ஒவ்வொரு எழுத்தாக எழுதிக் காட்டுவாய் அல்லவா ? அதை எழுதத் தெரியாதவர்கள்மேல் கோபித்துக்கொண்டு கூப்பாடு போடுவாயா ? அவ்வாறே இவ்வுலகத்தில் ஒவ்வொரு சமயத்தில் ஏற்படும் கடமையும் பல அம்சங்கள் கூடி உண்டாகும். இதை நினைவில் வைத்துக் கொண்டு, மனந்தடுமாறாமல், கோபம் காட்டுபவரிடம் கோபம் கொள்ளாமல் உன்னுடைய கருமத்தைப் பொறுமையுடன் செய்.

69. ஒருவன் தன் காரியம், தன் சுதந்திரம் என்று கருதக்கூடிய விஷயங்களில் தன் சுகமும் லாபமும் தேடித் தன்னிஷ்டம்போல் செய்கிறான். அதைத் தடுக்க உனக்கென்ன உரிமை ? பிழையைச் செய்தான் என்று ஒருவன் மேல் சினங்கொள்வது இத்தகைய அவனுடைய சுதந்திரத்தைத் தடுப்பதே ஆகுமல்லவா ? தன் லாபத்தைக் கருதித் தன் அறிவுக்கிசைய அவன் செய்வது பிழையாக இருக்கலாம். அப்படியாயின், சினங்கொள்ளாமல் பிழை செய்தவனுக்குப் பிழையைக் காட்டி அறிவுறுத்துவாயாக.

பொம்மலாட்டத்தில் பொம்மைகளை ஆட்டுவதுபோல், ஆசைகள் நம்மை ஆட்டுகின்றன. மனமானது விவேகத்துக்குக் கட்டுப்படாமல் தன்னிஷ்டம்போல் இழுத்துச் செல்கிறது. தேகத்துக்காகப் பாடுபடுவதோ மகா தொந்தரவு.

இந்தப் பாதைகளி லிருந்தெல்லாம் விடுபடுவ தல்லவோ மரணம் ?

உன்னுடைய ஆத்மா சாதாரண மனித ஆத்மாவாக இருப்பது மாறி, அரச ஆத்மாவாகப் போய்விடாமல் பார்த்துக்கொள். பழக்கத்தினால் நீயும்கூடக் கெட்டுப் போகலாம். ஆகையால், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சாதாரண மனிதத் தன்மையை இழந்துவிடாதே. சுயமரியாதையைக் காத்து, நெறி தவறாமல், யோக்கியதையை நழுவவிடாமல், நியாயத்துக்கும் தெய்வத்துக்கும் பயந்து நடத்துகொள். மக்களிடம் அன்பு காட்டு. கடமையைச் செய்வதில் தைரியத்தோடு இருப்பாய். தரும நூல்களில் நீ எதைக் கண்டாயோ அதன்படி நடக்கவே பார். வாழ்நாட்கள் அதிகமில்லை. அறத்திலிருந்து பிழையாத ஒழுக்கமும் மக்களுடன் ஒத்து வாழ்வதுமே வாழ்க்கையைப் பயன்பெறச் செய்வதற்கு வழி. எல்லாக் காரியங்களிலும் உன் தகப்பனார் அந்தோனியாரைக் குருவாக மனதில் அமைத்துக்கொண்டு, அவருடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவாயாக. எந்தக் காரியத்தைத் துவக்கினாலும் ஒரே நெறியைக் கொண்டு சென்றார். சமநிலை தவறாமல் மனத்தைக் காத்துவந்தார். முகத்தில் எப்போதும் சாந்தம் ; எப்போதும் இன்சொல். உலகத்தார் புகழ்ந்து பேசுவதற்காகத் தம் தருமத்தை அவர் விட மாட்டார். அரசியல் விஷயங்களைத் தளராமல் கவனித்தார். எந்த விஷயத்தையும் ஐயம் தீர விசாரித்து, மனத்தில் கொள்வார். எந்தக் காரணத்தைக் கொண்டும் அரைகுறையாகத் தெரிந்துகொண்டு திருப்தியடைய மாட்டார். அவரைப் பற்றி அக்கிரமமாகச் சிலர் குற்றம் சொன்னாலும், அதைப் பொறுப்பார். அவர்கள் பேரில் அதைக் குற்றமாகச் சொல்ல மாட்டார். அவசரப்பட மாட்டார். கோள் சொல்லும் மக்கள் பேச்சைக் கேட்க மாட்டார். மனிதர்களின் சுபாவங்களையும் நடத்தையையும் அறிந்துகொள்வதில் எவ்வளவு நுட்பம்! பிறத்தியார் பேரில் பிழை போடமாட்டார். பயப்படமாட்டார். வீண் சந்தேகம் கொள்ள மாட்டார். சாமர்த்தியமாக வாதிப்பதில் மகிழ்ச்சியடைய மாட்டார். உடுப்பு, உணவு,



பரிவாரம், படுக்கை, வாசம் எல்லாவற்றிலும் எவ்வளவு எளிய வாழ்க்கை நடத்தினார்! வேலை செய்வதில் சளைப்பதே கிடையாது. நண்பர்களிடம் எப்போதும் பிறழாத நட்பு வைத்து வந்தார். பேத அபிப்பிராயம் கொண்டவர்களிடமும், எதிர்த்துப் பேசினவர்களிடமும், சாந்தமும் பொறுமையும் காட்டினார். தாம் கருதியதைக் காட்டிலும் மேலான முறையை யாரேனும் எடுத்துக் காட்டினால், அதைப்பற்றி எவ்வளவு மகிழ்ச்சி யடைவார்! தெய்வ பக்தி படைத்திருந்தார். ஆனால் மூடர்களைப்போல் பேய்க்கும் பிசாசுக்கும் பயப்பட மாட்டார். அவரைப்போல் உன் வாழ்நாளை முடிக்கப் பார்.

**70.** எனக்குள்ளது ஒரு உடலும் ஒரு மனமும். இந்த உடலோ அறிவற்ற வஸ்து. மனம் சேர்ந்தாலொழிய அதற்கு இன்ப துன்பம் கிடையாது. மனமோ தன் செயலை அல்லாமல் வேறு எதுவும் அதைப் பாதிக்காது. தன் செயலைப் பொருந்தின அளவு மனத்திற்குப் பூரண சுதந்திரமுண்டு. அதிலும் நிகழ்காலமே அதற்குக் காலம். இறந்த காலமும் வருங்காலமும், மனத்தைத் தீண்டாதவை. கழிந்ததும் வருவதும், நிகழும் எண்ணமாக வடிவங் கொண்டால்தான் மனத்திற்குள் வரும்.

**71.** ஆசியாவும் ஐரோப்பாவும் பிரபஞ்சத்தில் எவ்வளவு அற்பமான பாகம்? மகா சமுத்திரங்களின் நீரெல்லாம் சேர்ந்தாலும் பிரபஞ்சத்திற்கு ஒரு துளி அளவேயாகும். நிகழும் காலமும் அதில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஊழிக்காலத்திற்கு எம்மட்டுமாகும்? நீளமும் அகலமுமற்ற ஒரு புள்ளி மாத்திரமேயாகும். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் முழுமுதற் காரணத்திலிருந்து உண்டானவை. அல்லது, அவ்வாறு உண்டானவைகளிலிருந்து உண்டானவை. காட்டிலுள்ள துஷ்ட மிருகங்கள், விஷம், முள், கல் முதலிய துன்பம் தருபவை அனைத்தும் அழகும் பெருமையும் பொருந்திய பரம்பொருளிலிருந்தே உண்டானவை. 'எந்தப் பொருளை நாம் வழிபடுகிறோமோ அது வேறு; துன்பம் தரும் இவை வேறு' என்று என்—

இவற்றை வெறுக்காதே. எதைக் கண்டாலும் அதற்கு முதற் காரணமான பரம்பொருளைச் சிந்திப்பாயாக.

72. உலகத்திலுள்ள சகல பொருள்களையும் ஒன்றாகத் தொடுத்திருக்கும் தொடர்பைப்பற்றி அடிக்கடி சிந்தித்துப் பார். ஊன்றிப் பார்த்தால், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எல்லாவற்றுக்குள்ளும் ஒரு உடன்பாடு அமைந்து இருக்கிற தென்பதையும் உணரலாம். ஒன்றோடொன்று தொடர்பு இல்லைபோல் தோற்றம் காட்டினாலும், உண்மையில் தொடர்பு நீங்காமல் நிற்கின்றன. எல்லாப் பொருள்களிலும் இடைவிடாத உடன்பாடு இருந்து வருகின்றது.

73. ஏதேனும் ஒரு கருவி, ஆயுதம், அல்லது பண்டம் ஆகியவற்றை ஒருவன் செய்தால், அது தொழிலுக்குத் தக்கதா என்று பார்த்து அமைத்துவிட்டுப் பிறகு அதன்கூட நிற்கமாட்டான். அதன் சக்தியினாலேயே அது பயன்பட வேண்டும். ஆனால், இயற்கைப் பண்டங்களோ அப்படி யல்ல. அவைகளை உண்டாக்கிய சக்தி அவைகளுக்குள் எப்போதும் மறைந்து நின்றுகொண்டு அதனதன் பயனைப் பரிபூரணமாக்கும். ஆகையால், பராசக்தி உனக்குள்ளும் இருந்துகொண்டு வேலை செய்து வருகிறது. அந்தச் சக்திக்கு இசைய நடந்துகொண்டாயானால், அந்தர்யாமியாய் நிற்கும் பரம்பொருள் உன்னால் ஆகவேண்டியதை எளிதில் உண்டாக்கிக் கொள்ளும்.

74. இன்பமும் துன்பமும் உன் மனத்துக்குள், உன் வசத்திலேயே இருக்கின்றன; புறத்தில் ஒன்றுமில்லை. புறத்தில் சுகத்திற்கும் துக்கத்திற்கும் காரணம் உண்டென்று எண்ணுவாயானால், அதன் பயனாக தெய்வத்தைக் குறை கூறுவாய்; ஜனங்களையும் துவேஷிப்பாய். நியாயத் தவறும் நடப்பாய். அவ்வாறின்றி, இன்பமும் துன்பமும் உள்ளத்தின் ஆதீனமே; உள்ளத்தின் எண்ணங்களே





அவைகளுக்குக் காரணம் என்ற உண்மையை அறிந்து நடந்தாயானால், கடவுளைக் குறைகூறவும் மனிதர்களை வெறுக்கவும் காரணம் இராது.

75 உலகத்திலுள்ள அனைவரும் சேர்ந்து ஒரு கூட்டமாகத்தான் உழைத்து வருகிறோம். ஆனால், சிலர் அறிந்து உழைக்கிறார்கள்; சிலர் தங்களுக்குத் தெரியாமல் தெய்வத்தின் கருத்தை நிறைவேற்றி வருகிறார்கள். சிலர் உறங்கி உணர்வின்றிக் கிடப்பதுங்கூட உலகத்தின் பொது உழைப்பாகும். அவரவர் வழியில் அவரவர் இந்த உலகக் கூட்டுறவில் சேருகிறார்கள். உலக நடையை எதிர்ப்போரும், வேண்டிய அளவு இடையூறு செய்பவர்களும், நாசம் செய்ய முயலுபவர்களுங்கூட உலக நடைக்கு வேண்டியவர்களே. உலகத்தை ஆளும் பராசக்தி எல்லோரையுமே தன் கருவிகளாகக் கொள்ளுகிறது. நீ முடிவு செய்ய வேண்டியது எத்தகைய கருவியானது உனக்கு நலம்? இவ்வளவே. எதிர்த்துச் சேவை செய்வாயா? அல்லது, அறிந்து உடன்பட்டுச் சேவை செய்வாயா?

76. தெய்வம் என் தனி நலத்தைப்பற்றிக் கவனித்து வருகிறதோ இல்லையோ என்று கவலைப்படுகிறேன். எனது நலத்தைப்பற்றித் தெய்வம் கவனிக்கும் என்று நான் எண்ணினால் ஏன் கவலைப்பட வேண்டும்? தெய்வத்திற்கு யோசனை கூறவேண்டுமோ? எனது நலமும் பொதுநலமும் தெய்வத்திற்கு முற்றிலும் தெரியும். என் உண்மை நலனுக்குக் கேடு இழைப்பதில் தெய்வத்திற்கோ, உலகத்திற்கோ என்ன நன்மை? என்னைப்பற்றித் தெய்வத்திற்கு நினைப்பில்லையென்றாலும், உலகத்தின் நன்மையைப் பற்றி யாவது கவனித்தே யிருக்க வேண்டும் அல்லவா? அதன் காரணமாக, எனக்குத் துன்பம் நேரிட்டால் அதை நான் தலைமேற்கொண்டு அனுபவித்தல் வேண்டும்.

77. தெய்வம் நம்மைப் பற்றிக் கவனிப்பது பொய் என்றே வைத்துக் கொள்வோம். எது எனக்கு நன்மை

தரும் என்பது கேள்வி. என் இயற்கைத் தருமத்தின்படி நான் இருப்பதே எனக்குப் பயன் தரும். என் இயற்கைத் தருமம் ஒப்புரவறிந்து செய்தலே. மார்க்கனுக்கு ஊர் ரோமாபுரி; மனிதனாய்ப் பிறந்த எனது தேசம் உலகமே; ரோமாபுரிக்கும் உலகத்திற்கும் எது நலனோ, அதுவே மார்க்கனுக்கும் நலன்.

78. இறந்து போனவர்களை அடிக்கடி சிந்தனையில் வைத்துக்கொள். எத்தனை தொழிலில் ஈடுபட்டோர், எத்தனை ஜாதியைச் சேர்ந்தோர் மாண்டு கவலையற்றுக் கிடக்கிறார்கள்? இவர்கள் இறந்ததால் ஏதாவது துன்பம் உண்டா? மாண்டுபோனவர்கள் பேரையுங்கூட யாரும் நினைப்பதில்லை. அவர்களுக்குத்தான் என்ன துன்பம் நேரிட்டது? இவ்வுலகத்தில் அடையக் கூடிய மேன்மை ஒன்றே: சத்தியமும் நடுநிலைமையும் கொண்டு வாழ்வதும், பொய்யரிடமும் அநீதி செய்பவரிடமும் வெறுப்பின்றி அன்புடன் நடந்துகொள்வதுமே. அதன் பிறகு இறந்தால் என்ன நஷ்டம்?

79. ஜனங்களுக்கு அறிவுறுத்தி அவர்களைத் திருத்து. அவர்களுடைய விருப்பம் நியாயத் தவறாயிருந்தால், அதை நிராகரித்து, நியாயமாய் நடந்துகொள். உன் சொல்லைக் கேளாமல், அவர்கள் மிருக பலம் உபயோகித்து, உனக்கு இடையூறு செய்து உன் காரியம் நிறைவேறாதபடி செய்தால், அதற்காக வருந்தாதே. மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டு அவர்கள் செய்யும் இடையூறுகளை உன் மன உறுதிக்குக் கருவியாகக் கொள். முடியாத ஒரு காரியத்தை நீ செய்ய முடியாது. உன்னாலான முயற்சிதான் உன்னுடைய கடமை. அதை நீ செய்தவுடனே உன் எண்ணம் நிறைவேறிற்றென்றே சொல்லலாம்.

80. எந்த விஷயமாயினும் நாம் இஷ்டப்பட்டால் அது மனத்தில் பிரவேசிக்காமலே செய்துகொள்ள முடியும். அதைப்பற்றி நினைக்காமலே யிருப்பது நம்மால் கூடும்.





நாம் இடங் கொடுத்தாலல்லாது புறப் பொருள்கள் மனத்திற்குள் செல்ல வழியில்லை.

81. தேனீக்களைப் பார். தங்கள் கூட்டத்திற்கு உதவாததை ஒரு தனி ஈயானது தனக்கென்று நாடாது.

82. காமாலை நோயாளிக்குத் தேன் கசக்கும். வெறி நாய் கடித்தவர்களுக்கு நீரைக் கண்டால் பயம். நோயின் பயனாக உண்டான நிலையைக் கண்டு கோபித்தல் தவறாகும். பித்த விஷத்தைக் காட்டிலும் அறியாமை என்னும் விஷத்தின் வேகம் குறைவா? அதன் காரணத்தினால் தானே மனிதன் தவறான எண்ணம் கொள்கிறான்? நான் அவனைக் கண்டு சினம் கொள்ளலாமா?

83. உன் ஆத்ம இயற்கைக்கு உடன்பட்டு நீ நடப்பதை யாரும் தடுக்க முடியாது. உனக்கு நேர்வதெல்லாம் உலக அமைப்பின் கருத்துக்கு இசைந்ததே. ஆகையால், விதியைக் கண்டு வருந்தாதே. நேர்ந்ததெவ்வாறாயினும், அதையொட்டி நீ செய்ய வேண்டியது எதுவோ, அதைச் செய். உள்ளத்தின் சமநிலை இழக்காதே. உன் இன்பம் உன் ஆதீனமே.

84. ஒரு வேலையைச் செய்யப் புகுந்தால், 'இது உன்னால் செய்ய முடியுமா? அல்லது, உன் சக்திக்கு மீறியதா?' என்று யோசித்துப் பார். உனக்குள்ள சக்தியைத் தெய்வம் கொடுத்த கருவியாகக் கருதி உபயோகப்படுத்து. உன் சக்திக்கு மீறியதாகத் தோன்றினால் நீ பின்னின்று, தகுந்த வேறொருவனைச் செய்யவிடு. இப்படி விடுவது அறத்திற்கு மாறாயின் விடவேண்டாம். இல்லையேல் வேறொருவனைத் துணையாகக் கொண்டும், உன் அறிவைக் கொண்டும், அவனையும் செய்யச் செய்து, உலகத்திற்கு உபகாரமாகச் செய்து முடிப்பாய். தனியாகவாவது துணை கொண்டாவது நீ செய்யும் எக்காரியமும் உலகத்திற்குப் பயன்படுமாறு இருக்க வேண்டும்.

**85.** வருங்காலத்தைப் பற்றி மனம் கலங்காதே. வருவன வரும்போது, இப்போதுள்ள அறிவை அப்போதும் செலுத்தி உன் கடமையை ஆற்றலாம். ஆகையால், முன்னரே கவலைப்பட வேண்டியதில்லை.

**86.** உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று நெருங்கி இணைக்கப் பட்டிருக்கின்றன. இத் தொடர்பு தேய்வீகமான சம்பந்தம். எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று கலந்தது; எதுவும் தனிப்பட்டதல்ல. உலகமெல்லாம் ஓர் உடன்பாடு. சகலமும் சேர்ந்து ஒரு ஜீவ அமைப்பு; எல்லாம் ஒரு பிரகிருதி; ஒரு நியமம்.

**87.** அறிவுள்ளவனுடைய இயற்கைக்கு இசைந்ததும் அறிவுக்கு இசைந்ததும் ஒன்றே ஆகும். அறிவுள்ளவனின் இயற்கையும், அறிவுக்கு அதி தெய்வமும் ஒன்றேயாகும்.

**88** மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஓர் உடலின் பல உறுப்புக்கள் போலாவார்கள். ஒன்றாக வாழவே மனிதர்கள் இருப்பது. அவர்கள் இயற்கையும் இதற்கே இசைந்திருக்கிறது. மனித வர்க்கம் என்னும் உடலில் நான் ஓர் உறுப்பு என்று அடிக்கடி சிந்திப்பாயாக. இது உன் மனத்தில் நன்றாகப் பதிய வேண்டும். மனிதர்களில் நானும் ஒருவனாக இருக்க, என் உயிரும் வாழ்வும் வேறு என்று நினைத்தேனானால் உபகாரம் செய்வதில் எனக்கு இன்னும் முழு மகிழ்ச்சி இல்லையென்பது விளங்குகிறது. பிறருக்குச் செய்யும் ஒரு கடமையாக உபகாரம் செய்கிறேனே யொழிய, அப்படிச் செய்வது எனக்கே உபகாரம் என்பதை இன்னும் அறியவில்லை.

**89.** எது நேரினும் நேர்க. என் உடலை அது தாக்குமேயன்றி என் மனத்தைப் பாதிக்காது. எதை அது தாக்குகிறதோ அதற்கல்லவோ அதைப்பற்றிக் கவலை. என் எண்ணத்தில் அது துன்பமானாலொழிய என்னை அது





என்ன செய்யும்? அதைத் துன்பமாகக் கொள்வதும் கொள்ளாமலிருப்பதும் என் சுதந்திரம்!

**90.** யார் எது செய்தாலும், எது சொன்னாலும், நன்றே செய்யக் கடவேன். பொன்னும் மரகதமும் பட்டும் இப்படியேதான். யார் எது சொன்னாலும், எது செய்தாலும், அவை தம் நிறமோ அழகோ மாறுமா?

**91.** அதி சீக்கிரத்தில் எல்லாவற்றையும் விட்டு நீ மறைந்து போவாய். உன்னைவிட்டு எல்லாம் மறைந்து போகும். இதை நன்றாக உணர்ந்தாயா?

**92.** தீங்கிழைத்தவனிடமும் அன்பு செய்வது உன் தருமம். உன் உறவினன் தவறு செய்வதற்குக் காரணம் அறியாமை; மனம் ஒவ்வாமல்தான் தவறு செய்கிறான். இருவரும் விரைவில் இறந்து போவீர்கள். தவிர, உனக்குத் தீங்கும் நேரிடவில்லை. உன் ஆத்மாவுக்கு அவன் செயலினால் ஒரு கேடும் நேரிடவில்லை. உன் குணம் மாறினாலன்றி ஒரு துன்பமும் நீ அடையவில்லை. இவைகளை மனத்தில் வைத்தாயானால், தீங்கு செய்தவனிடம் அன்பு காட்டுதல் எளிதாகும்.

**93.** மெழுகைக்கொண்டு பொம்மை செய்வதுபோல், இயற்கைச் சக்தியானது பிரகிருதிப் பொருளிலிருந்து சகல பதார்த்தங்களையும் உருவாக்குகிறது. ஒன்றை அழித்து உடனே அதன் பொருளிலிருந்து வேறு பொருளை உண்டாக்குகிறது. இப்போது ஒரு குதிரை; பிறகு, அது ஒரு செடியாக மாறும். பிறகு, அது ஒரு மனிதனில் போய்ச் சேரும். பிறகு, அது வேறொன்றாகும். ஒவ்வொன்றும் கொஞ்ச காலம் பிழைத்திருக்கும். ஒரு பெட்டியைச் செய்தால் பெட்டிக்குச் சுகமா? பெட்டியை மரத் துண்டாகப் பிரித்துப் போட்டால் அதற்குத் துயரமா? உன் மரணத்தைப்பற்றி அப்பெட்டியின் உதாசீனத்தை வளர்ப்பாயாக. அதுவே ஞானமாகும்.

94. உனக்கு ஒருவன் பிழை செய்தால் உடனே, 'அவன் எதைக் குறித்து இப்படிச் செய்தான்; எதை விரும்பி, அல்லது எதை ஒழிக்க எண்ணி இவ்வாறு செய்தான்?' என்று சிந்தித்துப் பார். இவ்வாறு ஆராய்ந்து பார்த்தாயானால் அவனுக்கு இரங்குவாய்; சினங்கொள்ள மாட்டாய். அவன் எதை நலமாகக் கருதி விரும்புகிறானோ அதை நீயும் விரும்புகிறாய்; அல்லது, அதைப்போல் வேறொன்றை விரும்புகிறாய். ஆகையால், அதன் பிழையைப் பொறுப்பது என் கடமை. ஒருவேளை உன் முதிர்ந்த அறிவால் நீ அவன் விரும்பும் பொருளைப் பொய்யென்றும், அவன் வெறுப்பதைத் துன்பமல்லவென்றும் கண்டு கொண்டிருப்பாயேல், அவனுக்கு அத்தகைய மெய்யறிவு கிடையாதென்று அவன்மீது இரக்கங் கொள்ள வேண்டும் அல்லவா?

95. உன்னிடம் இல்லாத ஒரு பொருளின்மேல் ஆசை கொள்ளாதே. உன்னிடம் இருக்கும் சிறந்த பொருள்களை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சி அடைவாய். அவை இல்லாதிருந்தால், அவற்றை எவ்வளவு அவாவுடன் தேடியிருப்பாய் என்பதை யோசித்துப் பார். இவ்வாறு சிந்தித்து மனதைத் திருப்தி செய்துகொள். ஆனால், இவ்வாறு சிந்தித்து நீ அடைந்திருக்கும் பொருள்கள்மீது வரம்புமீறிப் பற்று உண்டாக்கிக் கொள்ள வேண்டாம். அவைகளை இழக்க நேரிட்டால் அதிகத் துன்பப்படுவாய்.

96. புலன்களை உள்நோக்கித் தியானஞ் செய். நடுநிலைமை கொண்ட மனத்திற்குத் தியானத்தில் திருப்தி உண்டாகும்.

97. மரணம் என்பது என்ன? உடலில் உடலைத் தவிர வேறு ஒன்றும் இல்லையாயின், அணுக்கள் சிதைவுபடுதல்தானே. உயிர் என்பது வேறாயின், அதுவும் வேறு உடலுக்குச் செல்லும்; அல்லது முடிவடையும்.

98. நோய் என்பது என்ன? பொறுக்க முடியாததாயின், உயிர் நீங்கும்; பிறகு நோய் இல்லை. மனத்தைத் தனக்குள் செலுத்தி அடக்கிக்கொண்டால், அமைதியடையலாம். உடலைப் பாதிக்கும் நோயால் ஆத்மாவுக்குத் துன்பம் இல்லை. மனத்தை வசப்படுத்தி, நோயைவிட்டுத் தனித்து நிற்கச் செய்தால், அதை நோய் துன்புறுத்தாது. உடலுக்குத் தனி உணர்ச்சி இல்லை.





99. அனந்த காலத்தையும் பிரகிருதிப் பொருளையும் நோக்கும் விசாலமான அறிவை உடையவனுக்கு, மனிதனுடைய வாழ்நாள் பெரிதாகத் தோன்றாது. அத்தகையோனுக்கு இறப்பதில் ஒரு துயரமும் இல்லை.

100. நலம் புரிவதும், நிந்தனைக்கு ஆளாவதும் அரசர்களுடைய பெரும் பாக்கியம் போலும்.

101. தேகபலத்தில் உன்னை ஒருவன் வெல்லலாம். ஆனால், ஒப்புரவு, அடக்கம், பொறுமை, சினங்காத்தல் இவைகளில் தோல்வியடையாதே.

102. புலன்களை உன் உள்ளத்தில் புகட்டு. உன் உள்ளமே வற்றாத நீர் ஊற்று; வெட்ட வெட்ட நன்மை உண்டு.

103. யாருடைய புகழ்ப் பேச்சை நீ விரும்புகிறாய்? அவர்கள் எத்தகையோர்? அவர்கள் அறிவு எத்தகையது? சிந்தித்துப் பார். மனிதனுடைய எண்ணங்களும் செயல்களும் அவரவர்களுடைய அறிவுக்கு ஏற்றபடி இருக்கும். அவர்களுமே மனமொவ்வாமல்தான் பிழை செய்கிறார்கள். அவர்கள் மனமொவ்வாமல் செய்வதைப் பிழையாகக் கருத மாட்டாய். அவர்களுடைய பாராட்டுதலையும் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டாய்.

## 3

**104.** உள்ளம் மகிழ்ந்து எவனும் உண்மையைவிட்டுப் பொய்யில் இறங்க மாட்டான். அப்படியே நீதி, நியாயம் அன்பு முதலியவைகளும். இதை எப்போதும் மறவாமல் நினைவில் வைக்க வேண்டும். அப்போது பிழை செய்தவர்களிடமும் தயையுடன் நடப்பாய்.

**105.** உன் தீவினையினின்று தப்புவது சாத்தியம்; பிறர் தீவினையிலிருந்து நீ தப்புவது அசாத்தியம். ஆயினும், எது சாத்தியமோ அதைச் செய்ய மாட்டாய். எது அசாத்தியமோ அதைச் செய்ய முயலுவாய். இது என்ன கேலிக் கூத்து!

**106.** உபகாரம் செய்வது, உபகாரம் பெறுவது, இவை இரண்டன்றி மூன்றாவது ஒரு பொருளை ஏன் தேடுகிறாய்? செய்த நன்மைக்கு மூடர்கள்தாம் நன்மதிப்பும் கைம்மாறும் நாடுவார்கள்.

**107.** உபகாரம் பெறுவதில் யாரும் அலுப்படைய மாட்டார்கள். பிறருக்கு உபகாரம் செய்வதினால் உன் சுபாவ தருமத்தை நீ காப்பாற்றுவாய். அது உனக்கே செய்துகொண்ட உபகாரமாகும். ஆகவே, பிறருக்கு உபகாரம் செய்வதில் அலுப்பு அடையாதே. அது உபகாரம் பெறுவதே ஆகும்.

**108.** பராசக்தி உலகத்தை ஒழுங்குடன் உண்டாக்கியிருக்கிறது. சகலமும் அந்த ஒழுங்கின்படியே நடைபெறுகிறது.





**109.** எல்லாம் உலக அமைப்புக்கு அனுகூலமாகவே நடைபெறும். ஆகையால், மனக் கலக்கமடையாதே. சில காலம் கழிந்தபின் நீ இருக்கப்போவதில்லை. புகழ்பெற்ற உன் முன்னோர்கள் எப்படி மாண்டு மறைந்தார்களோ, அப்படியே நீயும் ஆவாய் என்பதை நினைவில் வைத்துக் கொள். எந்தக் கருமம் இப்போது செய்ய வேண்டுமோ அதைக் கவனித்துச் செய்வாய். நலம் புரிவதும், மனித சுபாவத்திற்கு இசைந்து நடப்பதுமே உன் இயற்கைத் தருமம். இதை மறவாமல், உன் செயல்கள் எக்காரணத்தினாலும் அத்தருமத்தினின்று பிறழாமல் இருக்குமாறு பாதுகாப்பாய். உன் பேச்சும் அவ்வாறே நீதி வழுவாதிருக்கட்டும். ஆனால், அன்பும் அடக்கமும் கொண்டு, பொய் வேஷமின்றிப் பேசுவாயாக.

**110.** நெறி தவறாதவனுக்கு மனத்தில் எப்போதும் மகிழ்ச்சி யிருக்கும். நெறி தவறாமல் இருப்பதற்கு மனத்தைக் காக்க வேண்டும். ஐயமும் பொய்யும் கொண்ட கருத்துக்களை ஒழித்து, உலகத்திற்கு உபகாரம் செய்வதிலேயே மனத்தைச் செலுத்தித் தன் ஆதீனத்தில் இல்லாத புறப் பொருளில் விருப்பும் வெறுப்பும் கொள்ளாமல், உலகப் போக்கில் எது நேரிடினும் மனக்குறை கொள்ளாமலிருக்கும் சுபாவத்தை வளர்த்து வந்தால், அறிவுள்ளவன் நெறி தவற மாட்டான்.

**111.** செடியிலுள்ள இலை தனக்கு வேண்டியதைப் பெற்று வளர்கின்றவாறு பரம்பொருள் என்னும் செடியில் ஒரு இலையாகிய நீயும் பாதுகாக்கப்பட்டு வருகிறாய். மரம் உணர்ச்சியும் அறிவுமில்லாதது; பந்தப்பட்டது. நீ எந்தப் பரம்பொருளின் இலையாக இருக்கிறாயோ அப்பொருள் கட்டுப்படாதது; வரம்பற்ற சுதந்திரமும் அறிவும் நீதியும் கொண்டது. ஒவ்வோர் உயிருக்கும் ஆயுள், பொருள், பாக்கியம், ஆற்றல், முயற்சி, சமயம் இவைகளைச் சமமாகவும் தக்கபடியும் அது கொடுக்கும். சமம் என்றால் ஒவ்வொரு

பகுதியும் சமமாக இராது. ஆனால், எல்லாம் ஒருமித்துப் பார்த்தால் சமம் தெரியும்.

**112.** உன்னுடைய மற்ற அலுவல்களினாலோ, அல்லது வேறு காரணத்தினாலோ நூல்களை ஆராய்ந்தறிய உனக்கு அவகாசம் இல்லையானாலும், பிறருக்கு அருவருப்பு உண்டாகாதபடி நீ நடந்துகொள்வதற்கு என்ன தடை? இன்ப துன்பங்களால் உன் மனம் கலங்காதிருக்கக் காலம் போதா. பொய்ப்புகழை நாடாமலிருக்க முடியவில்லையா? அறிவீனர்களைக் கண்டும், நன்றி யறிவில்லாதவர்களைக் கண்டும் சினங் கொள்ளாமல், அவர்கள் செயலைப் பொருட்படுத்தாமல் இருக்க நூல்கள் எதற்கு?

**113.** இறந்துபோனால் உலகத்தைவிட்டு நீங்குவாய் என்று நினைக்காதே. மாறி வேறு உருவமாய் மறுபடியும் உலகத்தில் அமைவாய். உன் உடலிலுள்ள தாதுக்கள் அனைத்தும் பிரிந்து, மீண்டும் வெவ்வேறு பொருளில் சேரும். அந்தத் தாதுக்கள் உன்னுடையதென்று இப்போது நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படியே உலகத்திற்குந்தான் அவை சேர்ந்தவை. மாறிப்போய் வேறு பொருள்களில் சேர அவைகளுக்கு ஆட்சேபனையில்லை. நீ மட்டும் ஏன் ஆட்சேபிக்கிறாய்? ஆட்சேபிக்கும் உரிமையும் என்ன?

**114.** எது செய்தாலும் மனிதர்களுக்கு உபகாரமாகச் செய்வேனாகவும். எனக்கு எது நேரிடினும் அதைத் தெய்வீகமென்று ஏற்றுக் கொள்வேனாகவும். அனைத்திற்கும் காரணமான ஆதிமூலத்திலிருந்து வந்ததென்று எதையும் நலனாகவே கருதுவேன்.

**115.** கருமத்தோடு கருமத்தையொட்டி உயிர் வாழ்வை ஒழுங்குபடுத்து. ஒவ்வொரு தருமமும் இவ்வாறு உன் உயிர்க் கட்டிடத்தில் நேர்மையுடன் சேருவதால் திருப்தியடைவாயாக. இப்படிச் செய்வதில் உனக்கு ஒருவரும் தடை செய்ய முடியாது. தடை எவ்வளவோ உண்டு





என்பாய். நியாயம், தெளிவான புத்தி, அறிவு இவை உன் ஆதீனம். எந்தக் கருமம் செய்வதில் தடை நேர்ந்தாலும் அத்தடையைக் கண்டு வருந்தாமல், சூழ்நிலையிலுள்ள அசேதனப் புறப் பொருள்களில் அதையும் ஒரு பகுதியாகக் கருதி, சமசித்தத்துடன் எது சாத்தியமோ அதைச் செய்யப் புகுவாயானால், செய்ய முடியாத ஒரு கருமத்திற்குப் பதில், உடனே செய்யத் தகுந்ததும் உன் வாழ்வின் கருமத்திற்கு இசைந்ததுமான வேறொரு கடமை உன்முன் வந்து நிற்கும்.

**116.** உலகப் போக்கில் நடந்ததைப்பற்றி மனக் குறைபட்டுக்கொண்டு வருந்துதல், அல்லது உலக நலனுக்கு மாறுபாடாக நடந்துகொள்ளுதல், இவ்வாறு செய்தாயானால் உலகத்திலுள்ள ஒற்றுமையைக் கெடுத்து வேறாகப் போனவன் ஆவாய். கையோ, காலோ, தலையோ வெட்டுண்டு உடலினின்று வேறுபட்டுக் கிடக்கிறதைப் பார்த்திருக்கிறாயா? அவ்விதமே ஆவாய் நீ, உன் செயலால். உலகத்தில் ஓர் உள் அங்கமாக நீ படைக்கப்பட்டாய். அதை மதியாமல் வெட்டுண்டாய். சரி, வெட்டுண்டபோதிலும் மறுபடியும் சேர்ந்து ஒன்றாகும் திவ்ய சக்தி உனக்கு உண்டு. கடவுள் வேறு எந்தப் பொருளுக்கும் வெட்டுண்டபின் மறுபடியும் ஒன்றுசேரும் சக்தியைக் கொடுக்கவில்லை. ஆனால், மனிதனுக்கு மாத்திரம் ஆண்டவன் இந்தச் சக்தியைக் கொடுத்திருக்கிறான். வேறாய் வெட்டுண்டாலும் மறுபடியும் ஒன்றாகக் கூடி வளர்ந்து முன்போல ஆகும் சக்தி மனிதனுக்கு உண்டு.

**117.** நான் எங்கே போனால் என்ன? எங்கிருந்தால் என்ன! என் உள்ளத்திலிருக்கும் தெய்வம் என்னை விட்டு நீங்காது. அந்தத் துணையைக் கொண்டு என் தருமத்தின்படி நான் நடந்துகொண்டேனானால், என் உள்ளத்தில் சாந்தசித்தம் நிலைக்கும். இவ்வாறிருக்க, ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்தவுடன் உள்ளம் கலங்கி, இயற்கை மாறி, நடுநடுங்கி, அலைந்து, பயந்து, ஏங்கிக் கையை நீட்டுவது தகைமையாகுமா? மனநிலையைக் காப்பதற்குமேல் எந்தப் பொருள் உளது?

**118.** வெள்ளரிக்காய் கசக்கிறதா? எறிந்துவிடு. வழியில் முள்ளா? அவ் வழியை விட்டுத் தள்ளிப் போ, போதும். இப்படிக் கசக்கும் காய் ஏன் இருக்கிறது? முள் எதற்காக உலகத்தில் தோன்றியது? என்ற கேள்விகள் கேட்காதே. மரத்தச்சு அல்லது தோல்வேலைப் பட்டறையில் ஒருவன் போய், 'இங்கே எதற்காக இவ்வளவு குப்பையும் உபயோகமற்ற துண்டுகளும் சீவல்களும்?' என்று கேட்டால் சிரிப்பார்கள் அல்லவா? அதுபோல் பிரகிருதியை ஆராய்ந்தறிந்தவர்கள் உன்னைக் கண்டு சிரிப்பார்கள். தச்சனுக்குத் தன் வேலைக்கு உதவாக் குப்பையைப் போட இடமுண்டு. ஆனால், உலகத்துக் குப்பையைப் போட உலகத்தைத் தவிர்த்து வேறு இடமில்லை. ஆனால், இதுவல்லவோ, பிரகிருதியின் அதிசயம்! போட இடமில்லாத அதன் குப்பையுங் கூடப் புதிய புதிய பொருள்களை உண்டுபண்ணிப் பயன் படுத்திப் பழையனவற்றையும் புதியனவாக்கி, முதுமையை இளமையாக்குகிறது. தன் பட்டறையில் இடமில்லை, உபகரணங்கள் போதாது, வேலைத் திறமை போதாது என்பது பிரகிருதிக்குக் கிடையாது. எதற்கும் இடமுண்டு. எதற்கும் பயனுண்டு.

**119.** பிரகிருதியின் ஒருமைப்பாட்டை அறியாதவன் தன் ஊரை அறியாத மூடனாவான். பிரகிருதியில் தன் கருமம் இன்னது என்பதை அறியாதவன் தன்னையும் பிரகிருதியையும், இரண்டையும் அறியாதவனாவான். தன் இயற்கைத் தருமத்தையும், பிரகிருதியின் ஒருமைப்பாட்டையும் அறியாமல் போனால், தான் எதற்காக இருக்கிறான் என்பதை அறிய மாட்டான். ஒன்றும் அறியாத பலர் போற்றுவதை நாடியும், தூற்றுவதை அஞ்சியும் வாழ்பவனுடைய மடமையை என்னவென்று சொல்வது?

**120.** எங்கும் பரவியிருக்கும் காற்றைச் சுவாசித்து வாழ்ந்தால் மாத்திரம் போதாது. அக் காற்றைப் போலவே எங்கும் பரந்திருக்கும் சித் பொருளையும் உட்கொண்டு வாழ்வாயாக. உயிருள்ளவனுக்குச் சுவாசிக்க எங்கும் காற்று





இருப்பது போலவே அறிவுள்ளவன் உட்கொண்டு வாழ இந்தச் சித் பொருளும் சர்வ வியாபகமாக இருக்கிறது.

**121.** என் உயிரும் உடலும் வேறு; அயலான் உயிரும் உடலும் வேறு. அப்படியே, என் உள்ளம் வேறு; அவன் உள்ளம் வேறு. நாம் அனைவரும் சேர்ந்து வாழுமாறு நம்மைக் கடவுள் படைத்திருந்தாலும், அவனவன் உள்ளத்தின் ஆதீனம் அவனவனுக்கு உண்டு. இப்படியில்லாவிடில், அயலான் ஒருவன் தீய வழியில் சென்றால், அது எனக்குத் தீங்கு இழைக்கும். இது ஒழுங்காகாது. அவனவன் ஆதீனமே.

**122.** சூரியனுடைய கிரணங்கள் நாலா பக்கமும் வீசிப் பரவினாலும், அதன் பிரகாசம் குறைந்து போவதில்லை. இருட்டறைக்குள் ஒரு துவாரத்தின் வழியாக வரும் வெளிச்சத்தைப் பார். அது நேராகப் பாயும். அதற்கு ஏதாவது தடையானால் அதன் மேலேயே தங்கும்; அவ்விடத்தைவிட்டு நகராது. உன் மனத்தின் போக்கும் எண்ணங்களும் அவ்வாறே இருக்க வேண்டும். தளராத நல்லெண்ணம் இருக்க வேண்டும். நேராகச் செல்ல வேண்டும், தடையைக் கண்டால் அதன் மேல் சூரிய வெளிச்சம் தங்குவதுபோல் உன் மனமும் தங்க வேண்டும். பலாத்காரமும் கொடுமையுங் கூடாது. தடையைக் கண்டு வெறுப்பு அடையாமல், அதன்மேல் பிரகாசித்துக் கொண்டே இருக்க வேண்டும். வெளிச்சம் ஊடுருவிச் செல்ல விடாமல் ஏதேனும் தடுத்தால் அது அதன் குற்றமே அன்றிப், பிரகாசிக்கும் கிரணங்களின் தவறு அல்ல.

**123.** மரணத்தைக் கண்டு அஞ்சுகிறவன் எதைக் கண்டு அஞ்சுகிறான்? உயிரும் உணர்ச்சியும் இல்லாமல் போய்விடுவதைக் கண்டா? அல்லது, புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வரும் என்ற பயமா? உணர்ச்சி அற்றுப் போவதனால், எந்த விதமான துக்கமும் இல்லாமல் இருக்க

லாமே? புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வருமாயின் அதனுல் என்ன நஷ்டம்! புதுப்பிக்கப் படுவதில் மரணம் ஏது?

**124.** ஒருவருக் கொருவர் உபகாரம் செய்து வாழு மாறு கடவுள் நம்மைப் படைத்திருக்கிருர். ஆகையால், குற்றங்களைத் திருத்த வேண்டும்: அல்லது, பொறுக்க வேண்டும்.

**125.** மக்களைக் கடவுள் படைத்தது ஒருவருக்கொருவர் தக்கபடி உபகாரம் செய்துகொண்டு கூடி வாழவே; நீதி வழுவாமலும், ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாமலும் இருக்கவே. நெறி தவறி நடப்போன் பல தேவதைகளை ஆராதித்தாலும், தேவாதி தேவனுன பரமேசுவரனை வணங் காதவனே யாவான். உண்மை பேசாதவனும் தெய்வத் துரோகியாவான். பரம்பொருள் உண்மை வடிவம். பொருள் கள் தத்தம் உண்மை நிலையில் ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புடன் அமைந்து, உலகம் நடைபெறுகிறது. உண் மை தவறினுல் அந்த அமைப்புக்குப் பெரிய இடையூறாகும். ஈசுவர நிர்மாணத்திற்கு விரோதமாகும்.

பிரகிருதி என்பது உண்மை; உண்மை என்பது பிரகிருதி. பிரகிருதியே உண்மைக்கு மூலாதாரம். ஆகவே, ஒருவன் மனப் பூர்வமாகப் பொய் பேசி வஞ்சனையும் அநீதியும் செய்தானுனல், அவன் நிச்சயமாகத் தெய்வத் துரோகியாவான். வேண்டாது பொய் பேசுகிறவனுங்கூடப் பிரகிருதி சுபாவத்திற்கு மாறுபாடாக நடந்து, உலகத்தின் ஒழுங்குக்குக் குறைவு உண்டாக்குவதால் அவனும் அப்படியே தெய்வத் துரோகியாவான். தன்னை அறியாமல் உண்மையிலிருந்து தவறுகிறவன், மெய்யும் பொய்யும் பகுத்தறிவதற்கு வேண்டிய அறிவும் வழியும் படைத் திருந்தும், அதைப் புறக்கணித்து, உண்மையை அறியக் கூடாமல் தன்னைத்தானே செய்து கொண்டு, தெய்வ சிருஷ்டியில் ஒழுங்கீனமும் கலகமும் உண்டாக்குகிருன்.





இன்பத்தையே நலனுகக் கருதித் துன்பத்தினின்றும் தப்பப் பார்க்கிறவனும் தெய்வ பக்தி இல்லாதவன் ஆவான். பல துஷ்டர்கள் சுகமும் செல்வமும் அனுபவித்து வந்தும், நல்லோர் பலர் கஷ்டங்களுக்கு ஆளாகியும் இருப்பது கண்டு, 'நன்மை தீமைகளைத் தகுதிக்கு ஏற்றபடி உலகத்தில் புகுத்தவில்லை' யென்று பாமரர்கள் கடவுளைப் பழிப்பார்கள். நன்மை தீமையின் உண்மை இயல்பை அறியாமையால் இப்படிப் பழிக்கத் தோன்றும். துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறவன் இயற்கையில் இன்றியமையாத ஒரு சம்பவத்தைக் கண்டு அஞ்சுகிறவன் ஆவான். எவன் இன்பங்களை அதிகமாக நாடுகிருனே அவன் அநீதி செய்யப் பின்வாங்க மாட்டான். இது நிச்சயமாகத் தெய்வத் துரோக மாகும். ஆகையால், கடவுளிடம் பக்தி கொண்டிருப்பவன் உலகத்தில் எப்படி இன்பம் துன்பம் என்ற இரண்டும் சம மாக நிர்மாணிக்கப் பட்டிருக்கிறதோ அப்படியே தன் வாழ் விலும் இன்ப துன்பம் இரண்டையும் சமாதானத்துடன் கருத வேண்டும். இன்பம் — துன்பம், பிறப்பு — இறப்பு, புகழ்ச்சி—இகழ்ச்சி, இந்தத் துவந்துவங்களைச் சம உணர்ச்சி யுடன் கருதாதவன் தெய்வ பக்தன் ஆகமாட்டான். உலக சிருஷ்டியில் இவ்விரு நிலைகளும் படைக்கப்பட்டிருக்கின்றன. பொருள்கள் சரிவர நிலைபெறவும், மாறவும், ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரவும், அவைகளுள் சக்தி அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தச் சக்திக்கு வரம்பும் அமைக்கப்பட் டிருக்கிறது. இன்பமும் துன்பமும், பிறப்பும் இறப்பும், இன்னும் மற்றத் துவந்துவங்களும் இந்தச் சக்தியோடு ஒட்டியவை. பிரகிருதிக்கு இன்றியமையாத இன்ப துன்பம் என்னும் இரு வகை நிலைகளும் நல்லோர் தீயோர் என்ற வேற்றுமை பார்க்காமல் உலகப் போக்கில் கலந்து வருகின்றன.

**126.** இறப்பது உலகத்தில் இன்றியமையாத நிகழ்ச்சி. அது கடவுள் நியதி; அதை வெறுக்காதே. பாலியப் பருவத்திலிருந்து வளர்ந்து யௌவனம் அடை வதுபோலவே, முடிவில் இறப்பதும் இயற்கையாக வரும்.

ஆகையால், அறிவுள்ளவன் மரணத்தை வெறுக்கமாட்டான்; அசட்டை செய்யவும் மாட்டான். அதன் மெய்ப்பொருளை அறிந்து இயற்கைச் சக்திகளுள் ஒன்ருக அதை ஒப்புக் கொண்டு அதனை எதிர்பார்த்திருப்பான். தாயின் வயிற்றி லிருந்து குழந்தை பிறக்கும் நாளை எதிர்பார்ப்பதுபோலவே, உன் ஆத்மா, அடைபட்டிருக்கும் இவ்வுடலிலிருந்து வெளி யேறுவதை எதிர்பார்ப்பாயாக. இதற்குமேல் இன்னும் ஓர் ஆறுதலையும் உனக்குச் சொல்லுவேன். மரணத்தை மகிழ்ந்து உபசரித்து எதிர்கொள்ளக் காரண மிருக்கிறது. இறந்து போவதால் எத்தகைய மனிதர்களினின்று நீ விடுபடுவா யென்று யோசித்துப் பார். எவர்மீதும் சினங்கொள்ள லாகாது. உண்மை எதைச் செய்த போதிலும் பொறுக்க வேண்டியதுதான். அதுவும் உண்மை. ஆனால் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் மனோபாவமும் உன் மனோபாவமும் எவ்வளவு வேற்றுமை கொண்டவை? அவர்களுடைய கூட்டுறவை நீங்கிப் போவது நன்மையே அல்லவா? உயிருடனிருக்க ஆசைப்பட ஒரு காரணம் இருக்கக்கூடும். தன்னைப்போல் மனோபாவமும் எண்ணங்களும் கொண்ட சத் புருஷர்களுடன் கூடி வாழலாம் என்ற ஆசைதான். ஆனால், நீ எவர்கள் மத்தியில் வாழ்க்கை நடத்த வேண்டியிருக் கிறதோ, அவர்கள் மனோபாவமும் உன் மனோபாவமும் இணக்கமின்றி எவ்வளவு பிணக்குகள் உண்டாகின்றன. "மரணமே, சீக்கிரம் வா, வா! இல்லையாயின், நானுங்கூட அறிவு இழந்து இவர்களைப் போலவே ஆவேன்" என்று மரணத்தை வருந்தி அழைக்க வேண்டி யிருக்கிறது அல்லவா?

**127.** எவன் பிறரிடம் நெறி தவறி நடந்துகொள் கிருனே, அவன் தனக்கே கேடு விளைவித்துக் கொள்கிருன். எவன் பிறருக்கு அநீதி செய்கிருனே, அவன் தன் சுபாவத் தைத் தீமையாக்கிக் கொண்டு தனக்கே அநீதி செய்து கொள்கிருன்.

**128.** மூன்று போதும்: மெய்யறிவுடன் எண்ணங்களை மனத்தில் கொள்வது; உபகாரமான செயல்களைச் செய்வது;





தன் ஆதீனமில்லாமல் நிகழும் நிகழ்ச்சிகளைத் திருப்தியுடன் அங்கீகரிப்பது. கழிந்தவற்றை நினையாமலும், வருபவை பற்றிக் கவலை கொள்ளாமலும், இம்மூன்றையும் நிகழும் காலத்தில் கவனித்தால் போதுமானது.

**129.** எல்லா உயிர்களும் காண்பதும் சுவாசிப்பதும் ஒரே வெளிச்சம், ஒரே காற்று. நிலத்து நிற்க எல்லா உயிர் களுக்கும் ஒரே பூமி. ஓர் உயிர் பல பகுதிகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. இதைச் சிந்தித்தால், பகுத்தறி வுள்ள மனிதர்களின் ஆத்மாக்கள் அனைத்தும் ஒரு பரமாத் மாவின் கூறுகளேயாகும் என்பதை உணரலாம்.

**130.** பிரகிருதிப் பொருள்கள் எல்லாம் தத்தம் இனத்துடன் சேர்வது இயல்பு. மண் இயல்பு கொண்ட பொருள்கள் நிலத்தோடு சேர்ந்துபோக விரும்பும். நீர் இயல்பு உள்ள பொருள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து பெருக முயலும். வாயு ரூபமான தெல்லாம் வாயுவுடன் சேரப் போகும். இந்த இயல்புக்கு மாருகத் தத்தம் இனத்துடன் சேராமல் தனித்து நிற்பது நிர்ப்பந்தத்தினுலேதான். தடை நீங்கினவுடன் இயல்பு மேலிட்டுத் தத்தம் இனத்துடன் சேர்ந்துவிடும்.

இவ்வாறே அறிவென்னும் தத்துவத்தைக் கொண்டன வெல்லாம் தத்தம் இனத்துடன் சேரவிரும்பும். பொருள் எவ்வளவுக்கெவ்வளவு உத்தமமோ, சூக்ஷ்மமோ அவ்வளவுக் கவ்வளவு அதிக வேகத்துடன் இனத்தோடு இனம் சேர இழுக்கும். கட்டிப் பொருள்களைவிட திரவப் பொருள்களின் சேர்க்கை வேகம் அதிகம். திரவப் பொருள்களின் வேகத்தை விட வாயுப் பொருள்களின் சேர்க்கை வேகம் அதிகம். எனவே, ஸ்தூலப் பொருள்களின் வேகத்தைக் காட்டிலும், சித் பொருள்களின் பரஸ்பர ஆகர்ஷண சக்தி அதிகமாகவே இருக்க வேண்டும்.

பகுத்தறிவில்லாத உயிர்களைப் பார். சடப்பொருள்களுக் கில்லாத கூட்டுறவு உணர்ச்சி அவைகளுக்கு உண்டு.

பூச்சிகள், மிருகங்கள், பறவைகள் இவை கூட்டங் கூட்டமாகச் சேர்கின்றன. தாய் தன் குஞ்சுகளை வளர்க்கும். அவைகளுக்குள் ஒருவித குடும்ப வாழ்க்கையையும் அன்பையுங்கூடக் காணலாம். பகுத்தறிவுள்ள மனிதர்கள் நாடு, நட்பு, வீடு, இல்வாழ்வு, கூட்டுறவு என்பவைகளை உண்டாக்கிக்கொள்கிறார்கள். யுத்தம் செய்தாலும் சீக்கிரம் சமாதான உடன்படிக்கைகளை நாடுகிறார்கள். மனிதர்களைவிட உயர்ந்த பிறப்புகளோ, ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலிருந்தாலும், ஒன்றோடொன்று கட்டுப்பட்டு நடப்பதை ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களைப் பார்த்து அறிவாய்.

இப்போது பரிதாபம் எதுவென்றால், பகுத்தறிவுள்ள மனிதர்கள் இந்த இயற்கைக் குணத்தை மறந்து, ஒருவரோடொருவர் வேறுபட்டுப் போராட முயல்கிறார்கள். இனத்துடன் இனம் சேரும் பிரகிருதி வேகம் இதனால் தடைப்பட்டிருக்கிறது. ஆனால், ஒன்று நிச்சயம். இயற்கைச் சக்திக்கு மாறுபாடாக நடக்க ஒரு நாளும் முடியாது. ஆராய்ந்து பார்த்தாயானால், இது விளங்கும். எவனும் உலகத்தினின்று வேறுபட்டுத் தனித்து நிற்க முடியாது. அந்த முயற்சி வீணாகும்.

**131.** கஷ்டம் அனுபவிக்கும்போது துயரப்படுபவன் போல நடந்துகொள்ளாதே. மற்றவர்களுடைய இரக்கத்தையாவது, பாராட்டுதலையாவது விரும்பாதே. உலக வாழ்வில் நலனும் உன் பகுத்தறிவுமே உன் கருத்தில் இருக்க வேண்டும். இதைக் கொண்டு, எதைச் செய்ய வேண்டும், எதை ஒழிக்க வேண்டுமென்று கண்டுகொள்வாயாக.

**132.** இன்று கஷ்டங்களினின்று வெளியேறினேன் என்பாய்! கஷ்டங்கள் உள்ளத்தில்தான் உண்டாயின. புறத்தில் ஒன்றுமில்லை. அவைகளை உள்ளத்தினின்று நீக்குவதே தொல்லைகளை விலக்கிக் கொண்டதாகும்.

**133.** எப்போதும் வெளிப்புறத்தைவிட்டு உள்ளத்தையே கவனிப்பாயாக. அதுவே சாந்தம் அடைவதற்குச்





சாதனமாகும். உலகத்தின் உட்பொருளையும் அதன் இயல்பையும் அறிந்து, அதன் ஒரு பகுதி நீ என்பதை மறவாதிருப்பாயாக. அயலானைக் கவனிக்கும் போதும் அவன் உள்ளத்தை அறிவாயாக அப்போதுதான் அவன் எதை அறிந்து செய்தான், எதை அறியாமல் செய்தான் என்று தெரியும். அவன் வாழ்க்கைக்கும் உன் வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசம் உனக்குத் தெரியவரும்.

**134.** உலகத்தில் நீ ஓர் அங்கம் ஆவாய். உன் செயலெல்லாம் உலக வாழ்வுக்கு இசைந்ததாக இருக்கவேண்டும். உன் வாழ்க்கை உலகத்திற்குப் பயனற்றதானால், அவ்வாழ்க்கை உன்னை உலகத்தினின்று வேறு படுத்தும். உலகத்தின் ஒற்றுமையைக் குலைத்து உன்னை ஊரோடு சேராத கலகக்காரனைப்போல் செய்யும்.

**135.** ஒருவன் உன்மீது குறை சொல்லுகிறான். மற்றொருவன் உன்னைத் துவேஷிக்கிறான். சிலர் உன்னைப் பற்றிப் பகைத்துப் பேசுகிறார்கள். பேசினால் என்ன? அவர்களுடைய உள்ளங்களை ஊடுருவிப் பார். அவர்கள் எத்தகையோர் என்பதை யோசித்துப் பார். அத்தகையோர் உன்னைப்பற்றி என்ன நினைத்தால் என்ன? அதற்காக நீ வருந்தவேண்டிய காரணமில்லை யென்பதைக் காண்பாய். ஆனால், அவர்களை நீ வெறுக்க வேண்டியதுமில்லை. இயல்பில் அவர்கள் உன் நண்பர்களே.

ஒருவனைத் திருத்த முடியாமல்போனால், அவனிடம் வெறுப்புக் கொள்ளாதே. தயை என்பதை உனக்கு ஏன் கடவுள் கொடுத்திருக்கிறார்? தெய்வம் மனிதனிடத்தில் எவ்வளவு தயை காட்டுகிறது பார். தீயவர்களுங்கூட உடல் வலி, பொருள், புகழ் எல்லாம் அடைகிறார்கள் பார். நீயும் தெய்வத்தைப்போல் தயை கொண்டு நடப்பாயாக.

**136.** சக்கரம்போல் எல்லாம் விடாமல் சுழன்று வருகின்றது. மேலே சென்றது கீழாகும். கீழே போனது மேலாகும். ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் எண்ணத்

தின்படியே நடக்கும். அதாவது, அதன் மூல நியமனத்தின் பயனாக ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரும். உலக நிகழ்ச்சிகளில் தவறாத தொடர்பு இருக்கிறது. எதுவாயினும், தெய்வ நியமனமே. அது நலனேயாகும். ஒருவேளை நீ கடவுள் பொய், எல்லாம் தற்செயல், என்றாலும், நீயும் நியமமற்று இருக்கவேண்டிய அவசியமில்லை. சாந்தம் இழந்து கவலைப்பட வேண்டியதில்லை.

சீக்கிரத்தில் சகலமும் மண்ணாய் நிலத்தில் சேரும். பிறகு, அதுவும் மாறி, வேறு உலகமாகவே ஆகும் பிறகு அதுவும் மாறும். இப்படி நடந்துகொண்டே போகும். இவ்வாறு உலகமே மாறி மாறிப் போவதை நினைத்தால் நிலையில்லாத விஷயங்களில் பற்றுத் தீர்ந்துவிடும்.

**137.** ஒருவன் பிழை செய்தவனானால் அவனுக்கே அது கேடாகும். ஒருவேளை, உண்மையில் அவன் பிழை செய்யாமலும் இருந்திருக்கலாம்.

**138.** உலகமெல்லாம் ஓர் உயிர், ஓர் மனம், ஓர் உடல். எது நேர்ந்தாலும் அந்த ஒரு மனத்தில் உண்டான எண்ணந்தான். அந்த ஓர் உடலுக்கு நேர்ந்ததேயாகும். அந்த உயிரில் ஓர் அங்கமாகிய நீ எப்படி ஆட்சேபிக்கலாம்? நீ சொல்லலாம்: 'இது உண்மையல்ல; உலகத்திற்கு ஆத்மா எது? எண்ணம் எது? எல்லாம் அசேதன அணுக்களின் தற்செயல் சேர்க்கையும் பிரிவும்' என்று. இவ்வாறு நீ நினைத்தாலும் எதற்காக நீ மனம் கலங்க வேண்டும்? உன் உள்ளத்தில் கலங்கும் சேதனப் பொருளுக்குச் சொல், "சீ, உனக்கு உயிரில்லை; நீ ஓர் உண்மைப் பொருள் அல்ல; நீ பொய்; நான் ஒரு புல் மேயும் மிருகம் போலவே ஒரு பிராணி" என்று நாஸ்திக தைரியத்தையேனும் சொல்லிச் சும்மா இருப்பாயாக.

**139.** எவனாவது ஒருவன் வெட்கமின்றி நடந்துகொண்டு அதற்காக நீ சினம் கொண்டாயானால், உடனே, உலகத்தில் வெட்கமின்றி நடப்பாரே இல்லாமல் இருக்க





முடியுமா என்று உனக்குள் கேட்பாயாக. இல்லையென்றால், ஏன் கலவரப்படுகின்றாய்? கூடாத ஒரு சம்பவத்தை ஏன் நாடுகிறாய்? உலகத்தில் வெட்கமில்லாதவர்களும் சிலர் இருக்கவே செய்வார்கள். அவர்களில் இவன் ஒருவன். யாராவது திருட்டுத்தனமும் மோசமும் செய்தால் இவ்வாறே சிந்திப்பாயாக. அவ்விதத் துஷ்டர்கள் உலகத்தில் இல்லாமல் செய்ய முடியாது என்பதை நினைப்பூட்டிக் கொண்டால் மோசக்காரனிடமுங்கூட, நீ இரக்கமே கொள்வாய்.

தவிர, இன்னொரு சிந்தனையும் உதவும். பிறர் செய்த ஒவ்வொரு பிழைக்கும் மருந்துபோல் நீ நற்குணம் படைத்திருக்கிறாய். துவேஷிப்பவனைக் கண்டால் அன்பு உன்னிடம் இருக்கிறது. அதற்கு அதுவே மருந்து. அதைக் கொடு. இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் ஒரு பரிகாரம் இருக்கிறது. பிழை செய்தவனை அநேகமாகத் திருத்தலாம். அவன் அரக்கனல்ல; வழி தப்பியவனே ஆவான். அவனுக்து வழி காட்ட உன்னால் முடியும். இன்னும் ஒன்று. ஒருவன் செய்த பிழையால் உனக்கு என்ன துன்பம் நேரிட்டது? எவன் பேரில் நீ சினம் கொண்டிருக்கிறாயோ, அவன் செய்த செயலால் உன் இயல்பு மாறவில்லை. உனக்கு உண்டான கேடும் தீங்கும் உன் உள்ளத்தில் உண்டாயின.

அறியாதவன் அறியாதவனைப் போல்தானே நடப்பான், இதில் என்ன அதிசயம்? அதனை எதிர்பாராதது உன் பிழையே. அவன் தவறி நடப்பானென்று நீ எதிர்பார்க்க உனக்கு அறிவும் காரணமும் இருந்தன. அதை மறந்துவிட்டு அவன் பிழை செய்தானென்று இப்போது நினைக்கிறாய். இது உன் பிழைதானே.

முக்கியமாய், உனக்கு எவனாவது துரோகம் செய்தான், அல்லது செய்த உபகாரத்தை மறந்து நடந்தானென்று நினைத்தாயானால், உடனே உன்னையே சோதித்துக்கொள். பிழை உனதேயாகும். அவன் இயல்பை நீ அறியவில்லையா? அவனை ஏன் நீ நம்பினாய்? நீ உபகாரம் செய்யும்போது

அதுவே உனக்குக் கைம்மாறாக இருக்க, வேறு கைம்மாறு ஏன் எதிர்பார்த்தாய்? உன் இயல்புக்கு இசைய ஒரு கருமம் நீ செய்தால் அதற்குக் கூலி கேட்கலாமா? பார்த்ததற்குக் கண் ஏதாவது உன்னைக் கூலி கேட்கிறதா? நடந்ததற்குக் கால் ஏதாவது பதில் கொடு என்று உன்னைக் கேட்கிறதா? தத்தம் இயற்கைக் கருமத்தைச் செய்துவிட்டுச் சும்மா இருக்கும். அதைப்போல் நீயும் உபகாரம் செய்து வாழத் தான் பிறந்தேனென்று அறிந்துகொண்டு உபகாரம் செய்த பின்னும், அல்லது ஒருமைப்பட்ட வாழ்வில் வேறு எது செய்த பின்னும், உன் இயற்கைக் கருமத்தைச் செய்தாய் என்கிற திருப்தியுடன் சும்மா இருப்பாயாக.

**140.** மனமே! எப்போது நீ ஆனந்த நிலையை அடைவாய்? சகலமும் ஒன்றான நிலையை எப்போது அடைவாய்! சர்வ வியாபகமான அன்பின் ஆனந்தத்தை நீ என்று காண்பாய்? ஆசையற்றுச் சுதந்திரமாக என்று நிற்பாய்? இடம், பொருள், காலம், உறவினர்களின் கூட்டம் இவை ஏன் வேண்டும்? உன் நிலையே உனக்கு ஆனந்தம் என்று தரும்? பராசக்தியை என்று அறிவாய்? பரிபூரண ஆனந்தத்தை என்று அடைவாய்?

**141.** ஒருவன் தவறிப் பிழை செய்தானானால் அவனுக்கு அன்புடன் புத்தி புகட்டித் திருத்துவாயாக. அப்படிச் செய்ய முடியாமல் போனால், தவறு உனதே என்று எண்ணுவாயாக. இதுவும் வேண்டாம்; சும்மா பொறுத்துக் கொள்வாயாக.

**142.** 'உலகமானது அணுக்களின் சேர்க்கையால் உண்டாயிருந்தாலும் சரி; பராசக்தியின் செயலாயிருந்தாலும் சரி; நான் அவ்வுலகத்தில் ஒரு பகுதி. பிரகிருதியின் இயற்கைத் தருமத்திற்கு ஆதீனமானவன். நான் எந்த முழுமையில் ஒரு பகுதியோ, அதற்கு நலன் எதுவோ அதுவே எனக்கும் நலன்!' என்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஒன்றுக்கு யாதாயினும் நலனாக இருந்தால், அது எப்படி அதில் ஒரு





பகுதிக்கு உண்மையில் தீங்காகும்? எந்தப் பொருள்களிலும் தனக்குப் பயன்படாத பகுதி ஒன்று இருக்காது. அதிலும் தனக்கு விரோதமான பொருளை உண்டாக்கிக் கொள்ளுமாறு பிரகிருதியை நிர்பந்திக்கக்கூடிய சக்தி பிரகிருதிக்குப் புறத்தில் ஒன்றுமில்லை. ஆகையால், நான் பிரகிருதி அமைப்பில் ஒரு பாகமாய் இருக்கிறபடியால் எது நேரிடினும் திருப்தி கொண்டிருக்க வேண்டும். ஜீவன்களுக்கு, அதிலும் என் இனமாகிய மனிதக் கூட்டத்தின் வாழ்வுக்குத் தீங்கு உண்டாக்கக்கூடிய எதையும் செய்யாதிருப்பேனாக. அவர்களுடைய க்ஷேமத்தையே கருதுவேனாக. என் உள்ளம் இவ்வெண்ணங்களையே கொள்ளும்படி செய்வேன். உலகத்தில் கூட்டுறவுக்கு விரோதமான செயல்கள் என் உள்ளத்திலும் தோன்றாதவாறு மனத்தைத் திருத்திக்கொள்வேன். இவ்வாறு செய்தால் என் வாழ்க்கை சுகமாக முடியும். அரசனுடைய கட்டளைக்கு அடங்கி மற்றக் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி வாழும் ஒருவனுடைய வாழ்க்கை சுகமாக இருக்கும். இதைப் போலவே என் வாழ்க்கையும் ஒழுங்குபட்டுச் சுகமாக முடியும்.

**143.** ஓர் ஈயைப் பிடிப்பதில் சிலந்திப் பூச்சிக்குப் பெருமை. ஒரு மனிதன் முயலைப் பிடித்தேனென்று பெருமைப் படுவான். மற்றொருவன் ஒரு குருவியை வலையில் பிடித்து விட்டதற்குச் சந்தோஷப்படுவான். வேறொருவன் காட்டுப் பன்றிகளைப் பிடித்துவிட்டு, அதை மிகவும் பெருமையாக நினைப்பான். வேறொருவன் அயல்நாட்டு மக்களை அடிமை கொண்டதற்காகப் பெருமைப்படுவான். மெய்யறிவு அடைந்தவனுக்கு இவை அனைத்தும் ஒரே விதமான கொலையும் களவுமாகத்தான் தோன்றும்.

**144.** பிரபஞ்சத்தில் ஒன்றைக் கொடுப்பதும் பராசக்திதான்; அதை மறுபடி வாங்கிக்கொள்வதும் பராசக்தியே. அறிவுடையோன் விருப்பு வெறுப்பை அடக்கி, 'நீ நினைத்தவாறே கொடு; நீ நினைத்தவாறு எடுத்துக்கொள்' என்பான். இப்படிச் சொல்வதிலும் வீரியம் வேண்டாம்; பராசக்தியிடம் வணக்கமும் அன்பும் கொண்டே சொல்ல வேண்டும்.

**145.** 'நல்லவன் இவ்வாறு இருக்க வேண்டும், அவ்வாறு இருக்க வேண்டும்' என்று ஆராய்ச்சி செய்தது போதும். இனி, நீ நல்லவனாக இருக்கக் கொஞ்சம் முயற்சி செய்வாயாக.

**146.** பராசக்தி எது விதிக்கிறதோ, அதுவே தன்னுள் அடங்கிய தனி ஒருவனுக்கும் நல்லதாகும். எக்காலத்தில் எதைத் தருகிறதோ, அக்காலத்தில் அதுவே நல்லதாகும்.

**147.** சட்டத்தின் தண்டனைக்கு அகப்படாமல் ஓடித் திரிபவன் நாடோடியாவான். அதைப் போலவே வாழ்க்கையில் எவன் துன்பத்தைக் கண்டு துக்கப்படுகிறானோ, எவன் கோபத்திற்கு இடம் கொடுக்கிறானோ, எவன் பயப்படுகிறானோ, எவன் கிடைக்காத பொருள்களின்மேல் ஆசைப்படுகிறானோ, அவனும் சட்டத்திற்கு அடங்க இஷ்டமில்லாமல் ஓடித் திரிபவனைப் போலாவான்.

**148.** துக்கமும் மனக்குறையும் கொள்கிறவன் பலி பீடத்தில் யாகத்திற்காகக் கட்டி இழுக்கும்பொழுது தப்பி யோட முயலும் மிருகம் போன்றவன். தனி அறையில் ஒருவருக்கும் சொல்லாமல் தன் படுக்கையில் இருந்து கொண்டே துயரப்பட்டாலும் இவ்வாறேயாவான். தெய்வச் செயல்களின் பயனை அறிந்துகொள்ளும் பாக்கியம் அறிவுள்ள பிராணிகளுக்குத்தான் உண்டு. பயனை அறியா மற்போனாலும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

**149.** யாராவது செய்த பிழையைக் கண்டு நீ கோபித் தாயானால், உடனே உன்னையே நினைத்துக்கொண்டு ஆராய்ந்து பார். அவன் செய்தவாறே நீயும் பிழைகளைச் செய்கிறாய். யோசித்துப் பார். பணம், இன்பம், புகழ் இவை போன்றவைகளை நீயும் மெய்ப்பொருளாக நினைக்கவே இல்லையா? இதை நன்றாக யோசித்தாயானால் உன் கோபம் சீக்கிரம் மறந்துபோகும். மேலும், அவன் சுதந்திரமாக, வேண்டுமென்று செய்கிறானா என்பதையும்





யோசித்துப் பார். அவன் இயல்பை மாற்ற முடியுமானால், அவ்வாறு மாற்ற முயல்வாய்.

**150.** எது நேர்ந்தாலும், எப்பொருள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், உனக்கு வாய்த்த பொருளுக்கும் சமயத்திற்கும் தகுந்தவாறு நீ செய்ய வேண்டியது எது, சொல்ல வேண்டியது எது என்று அறிந்து அதைச் செய்யவும் சொல்லவும் கடவாய். அது உன் சுதந்திரத்தி லிருக்கிறது. முடிவில், அதற்கு யாரும் எவ்விதத் தடையையும் செய்ய முடியாது. நீ செய்ய விரும்பிய கருமத்திற்குக் குறுக்கே நிற்கும் தடைகளையும் கருதி அதற்கு ஏற்ற உன் கருமத்தை எப்போதும் நீ செய்யலாம். ஆகையால், 'தடை வந்தது; என் கடமையைச் செய்ய முடியவில்லை' என்று சாக்குச் சொல்லாதே. தடைக்குத் தக்க புது உருவம் கொள்ளும் உன் கருமம்.

எந்த வேலையில் எது நேர்ந்தாலும், எது கிட்டினாலும் அத்தருவாயில் உன் பகுத்தறிவுக்குத் தகுந்த கருமத்தைச் செய்து தருமத்தை நிறைவேற்றுவதையே சுகமும் ஆனந்தமுமாக நீ கொள்ளும் வரையில் நீ கஷ்டந்தான் படுவாய். சிற்றின்பத்தில் ஒரு காமாதுரன் எவ்வளவு தீவிர மகிழ்ச்சி யடைகிறானோ அவ்வளவு மகிழ்ச்சி நீ உன் தருமத்தைச் செய்வதில் அடையக் கற்றுக்கொள்ளும் வரையில் நீ துக்கப் படுவாய். தன் பிறப்பின் தருமத்திற்குத் தகுந்தவாறு தான் நடப்பதையே சுகமாகக் கருத வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளுவது எப்போதும் எது நேரிடினும் கூடும்.

**151.** ஒரு ஜட பதார்த்தத்தை நினைத்தவாறு உருட்ட முடியாது. அதன் வடிவுக்கிசைந்த வழியே உருட்டலாம். நீர், நெருப்பு முதலிய அசேதன வஸ்துக்களும், பகுத்தறி வற்ற பிராணிகளும் இப்படியே தாம் நினைத்தவாறு செல்ல முடியாது. தடையும் இடையூறும் அவைகளைக் கட்டுப் படுத்தும். புத்தியும் பகுத்தறிவுமுள்ள நாம் அவ்வாறல்ல. எந்த இடையூறு நேர்ந்தாலும், அதைத் தாண்டிச் செல்ல, அதாவது, அதற்கிசைந்த கருமத்தைக் கண்டு செய்ய மனித

னுடைய பகுத்தறிவின் இயல்பிலேயே சக்தி வாய்த்திருக்கிறது. ஆத்மாவுக்குத் தன் கருமத்தைச் செய்ய முற்றிலும் சுதந்திரமுண்டு. இடையூறுகள் அசேதனமான உடலைத்தான் தாக்கும். சேதனமான ஆத்மாவைப் பாதிக்காது. உள்ளத்தில் தாமாகவே தோன்றும் எண்ணங்களாலேயோ, அல்லது பகுத்தறிவை உபயோகிக்காமல் போவதனாலேயோ தான் எந்தச் சம்பவமும் நம்மைத் துன்புறுத்தும். மற்று, எதுவும் ஆத்மாவைப் பாதிக்காது. மனிதனுக்கே இந்தப் பாக்கியம். மற்றப் பிராணிகளுக்கும் பொருள்களுக்கும் நேர்ந்த துன்பம் அவைகளை உடனே பாதிக்கும். மனிதனுக்கு எது நேர்ந்தாலும், வந்த இடையூறுக்குத் தகுந்தவாறு கடமையும் மாறி, முன்னைவிட அதிக அனுபவமும் ஆற்றலும் அவன் அடைவான். உனக்கு வந்த இடையூறு எதுவும் உலக அமைப்பிற்கு தீங்கிழைக்க முடியாது. உலக அமைப்பைப் பாதிக்காத எதுவும் உலகத்திற்கு ஒரு தீங்காக மாட்டாது. உலகத்திற்குத் தீங்காகாத எதுவும் உலகத்தில் அடங்கிய யோக்கியன் ஒருவனுக்கு இடையூறு ஆகமாட்டாது.

**152.** நோயில்லாத கண்ணானது தன் எதிரில் நிற்பது எதையும் பார்க்கும். பசுமையான பொருள்களை மாத்திரம் பார்ப்பேன்; மற்ற நிறங்களைப் பார்க்க முடியவில்லையென்றால் அது கண்ணில் நோய் இருப்பதற்கு அறிகுறியாகும். அவ்வாறே செவியும் மூக்கும் எந்த ஒலியையும் எந்த நாற்றத்தையும் உட்கொள்ளும். யந்திரத்தில் எப்பண்டமும் அறைபடுவதுபோல் நோயில்லாத வயிற்றில் எந்த உணவும் ஜீரணித்துப்போகும். இவ்வாறே நோயில்லாத உள்ளத்திலும் எது நேர்ந்தாலும் ஜீரணித்துப்போக வேண்டும். அதாவது பொறுமையுடன் அதைத் தாண்ட வேண்டும். என் மக்களுக்கு எது லாபம்? நான் செய்கிறதை ஜனங்கள் புகழ்கிறார்களா? என்பது போன்ற கவலைகள் உண்டானால் மனிதன் நோய்ப் பட்டவனே ஆவான். 'இதைப் பார்க்க முடியும், அதைப் பார்க்க முடியாது' என்று சொல்லும் நோய்ப் பட்ட கண்ணைப் போலவும், 'இதை மெல்ல முடியும், இதை





மெல்ல முடியாது' என்று மறுக்கும் பற்களைப் போலவும் அவன் உள்ளம் ஆரோக்கியமற்ற உள்ளமாகும்.

**153.** எத்தகைய உயர்குணம் உடையவனாயினும், அவன் இறந்தால் மகிழ்கிறவர்கள் சிலர் இருப்பார்கள். ஞானமும், ஆழ்ந்த கருத்தும் கொண்ட ஒருவன் இறந்தால், "அப்பா! இவன் ஒழிந்தான்; இனி நான் சுகமாய் இருக்கலாம் நம்மை இவன் வெளிப்படையாய்ப் பழிக்காவிடினும் மனத்தில் எப்போதும் இகழ்ந்தே வந்தான். இது எனக்கு நன்கு தெரியும்" என்று எவனாவது ஒருவன் கட்டாயம் எண்ணி மகிழ்வான். நல்லோருக்கே இந்தக் கதியானால், பிழைகள் நிறைந்த என்னைப் போன்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்? 'இவர்கள் இறந்து ஒழிந்தால் நலம்' என்று பலர் காத்திருப்பார்கள். இதை நினைத்தாயானால் உன் அந்திய காலத்தில் சமாதானமாய் மரணத்தை எதிர்கொள்வாய். நான் எவர்களுக்காக இவ்வளவு காலம் பாடுபட்டேனோ, தேவர்களை வணங்கினேனோ, கவலைப்பட்டேனோ, அவர்களே நான் என்று தொலைவேனென்று எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய வாழ்வை வாழாமல் உயிர் துறப்பதில் என்ன துயரம்! இன்னும் ஏன் இருக்க வேண்டும்?

இப்படி உயிருடன் வாழ்வதை வெறுத்தாலும், மனிதர்களை வெறுத்து அவர்களிடம் அன்பு குறைந்து பகைமை கொள்ள வேண்டாம். உன்னுடைய தருமத்தை விடாமல், உன்னுடைய அன்பும் நல்லெண்ணமும் சாந்த சித்தமும் எப்போதும் போலவே வைக்கக் கடவாய். உயிரை விடுவதற்கு மாத்திரம் மனத்தைப் பக்குவப் படுத்திக்கொள். மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொள்வாயாக. நோயற்ற சுக மரணத்தில் உடலிலிருந்து உயிர் சுகமாக வேறுபட்டுப் போவதுபோல், உன் உள்ளமும் இனத்தார்கள் தோழர்கள் என்ற பற்றில்லாமல் சுகமாக வேறுபட்டுப் போக வழி தேடு. எந்தச் சக்தி உன்னை அவர்களுடன் அமைத்ததோ, அதே சக்தி இப்போது உன்னை வேறுபடுத்துகிறது. நெருங்கிய தொடர்பும் சுகமாக நீங்கி வேறு வழிப்படுவது பிரகிருதியின் இயல்பு. மரத்தின் இலைகள் உதிர்வதைப் பார்.

**154.** சூத்ரதாரன் உள்ளே இருக்கிறான். அவன்தான் பேசுகிறான்; அவனே உயிர்; அவன்தான் புருஷன். உன்னைச் சுற்றி மூடியிருக்கும் இந்த உடலை நீ என்று எண்ணி மயங்காதே. இந்த உடலில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் கருமேந்திரியங்களை ஆத்மா என்று எண்ணாதே. தச்சனுடைய உளி, வாய்ச்சி முதலியவைகளைப் போல் இவை வெறுங் கருவிகள்தான். உடலிலேயே சேர்த்து அமைக்கப்பட்ட கருவிகள் என்பதுதான் வித்தியாசம். உள்ளே நின்று இவைகளைச் செலுத்தியும் அடக்கியும் வரும் ஆன்மாவை மறந்து விட்டு இக்கருவிகளையே நலனாக எண்ணாதே. மரம் வெட்டுகிறவனுக்குக் கோடாலி, எழுதுபவனுக்கு எழுத்தாணி, வண்டி ஓட்டுபவனுக்குச் சாட்டையைப்போல் இவைகள் ஆன்மாவுக்குக் கருவிகளாகும். நற்பயனும் தீமையும் ஆன்மாவில்தான் உண்டு.

**155.** பகுத்தறிவுள்ள ஓர் உயிரின் இலட்சணங்களைப் பார். தன்னைத் தான் அறிந்துகொள்ளவும், தன்னைப்பற்றிப் பிறருக்கு எடுத்துச்சொல்லவும், தான் வேண்டியபடி தன்னைச் செய்துகொள்ளவும் அதற்கு முடியும். தான் பெற்றதைத் தானே அனுபவிக்கும். தாவரவர்க்கமும் பசுப் பிராணிகளும் பெற்றதை மற்றவர்கள் அனுபவிப்பார்கள்.

ஓர் ஆட்டம், அல்லது ஒரு கூத்தில் ஏதாவது தடை வந்து சேர்ந்தால் அரைகுறையாக நின்று போகும். பகுத்தறிவுள்ள உயிரின் வாழ்க்கை அப்படியல்ல. எது நேர்ந்தாலும், எந்தச் சமயத்திலும், அது பூரணமாக முடியும். நேர்ந்ததற்குத் தக்கப்படி தன் கடமை அதுவென்று முடித்துக் கொண்டு, அதைப் பூரணமாக்கிக் கொள்ளும்.

பிரபஞ்சம் முழுவதும் அதன் அறிவுக்குள் அடங்கும். உலகம், அதைச் சுற்றியுள்ள ஆகாயம், காலம், கல்பம் சகலமும் அது அறியும் பொருளாகும். எதிர்காலம், இறந்த காலம் இரண்டையும் அறியும் பகுத்தறிவுள்ள உயிரின் லட்சணங்கள்: அன்பு, சத்தியம், அடக்கம். ஆன்மாவே





உயர்ந்த பொருள் என்று அறியவும். அதன் அறிவும் உலக நன்மையும் ஒன்றாகவே முடியும்.

**156.** ஆட்டமும் பாட்டும் வேடிக்கையும் பயனற்றவையென்று தள்ளக்கடவாய். தள்ளுவது கஷ்டமாக இருந்தால் காதுக்கும் கண்ணுக்கும் இன்பம் தரும் பாட்டை, அல்லது கூத்தை ஒலி ஒளியாகவும், வெவ்வேறு அபிநயமாகவும் பிரித்துப் பார். பயனற்ற இதுவா என்னை மயக்குமென்றும் யோசித்துப் பார். அப்படிப் பார்த்தால் அவைகளை அற்பமென்று நீயே தள்ளுவாய். நற்குண நற்செயல் தவிர, வேறு எதைக் கண்டாலும் அவ்வாறு பிரித்துப் பார்த்து அது அற்பமாயிருப்பதை அறிந்துகொண்டு, அதன் மோகத்தினின்று விடுவித்துக்கொள். சிற்றின்ப மோகங்களுக்கெல்லாம் இதுவே தகுந்த மருந்து.

**157.** எந்த நிமிஷம் உயிர் நீங்கினாலும் மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொள்வது ஆன்மாவுக்குப் பெருமை. உயிர் இருந்தாலும் உயிர் நீங்கினாலும் சமநிலையுடன் இரண்டுக்கும் தயாராய் இருப்பதே பெருமை. இச் சமநிலை பகுத்தறிவால் உண்டாக வேண்டும். பிறருக்கு அதை எடுத்துக் காட்டினால் அவர்களும் அந்த நிலையை அடையும்படியான வழியில் உன் சமநிலையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அப்படியல்லாமல் உயிர் வாழ்வை வெறுத்து மரணத்தை விரும்பலாகாது. சமநிலையைப்பற்றி ஆடம்பரமும் கூடாது

# 4

**158.** நான் ஒருவனுக்கு ஏதாவது உபகாரம் செய்தேனோ? செய்தேனானால், நானே உபகாரம் அடைந்தவனாவேன்.

**159.** ஒரு கிளையிலிருந்து ஒரு கிளையை வெட்டினால் அது மரத்தினின்றே வேறுபடும். அவ்வாறே ஒருவன் மற்றொருவனிடம் வெறுப்புக்கொண்டு வேறுபட்டானானால் உலகத்தினின்றே வேறுபட்டவன் ஆவான். மரத்தின் கிளை வேறொருவனால் வெட்டப்படும். ஆனால், உலகத்தினின்று வேறுபடும் மனிதன் தன்னைத்தானே அறியாமையால் வெட்டிக்கொள்கிறான்.

கிளை வேறுபடுவதற்கும் மனிதன் வேறுபடுவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. வேறுபட்ட கிளை மறுபடியும் சேர முடியாது. மனிதன் வேறுபட்டால் மறுபடியும் சேர முடியும். இது மனிதனுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் சக்தி. ஆனால், அடிக்கடி பிரிந்து வேறுபட்டோமானால் மறுபடியும் கூடுவது கடினமாகும். தோட்டக்காரனைக் கேட்டால் சொல்லுவான். செடியில் பிறந்த கிளையின் குணம் வேறு; மரத்தோடு ஒட்டி வளர்ந்த கிளையின் குணம் வேறு. உலகத்தாருடைய மனோபாவங்களும் என்னுடைய மனோபாவங்களும் வேறுபட்டிருந்தாலும், அவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்னுடைய கடமை.

**160.** இடையூறு செய்பவர்களின் செயலைக் கண்டு உன் விவேகத்தைக் கெடுத்துக்கொள்ளாமல் ஒழுங்காய்





உன் கருமத்தைச் செய்வாயாக. இடையூறு செய்பவர்களிடம் அன்பு குன்றாமல் இருப்பாயாக. உன் அறிவையும் கருமத்தையும் நெறி தவறாமல் காப்பாய். அதனுடன் உனக்கு இடையூறு அல்லது துன்பம் இழைப்பவர்களிடம் மனம் கோணாமல் காத்துக்கொள்வாயாக எடுத்த காரியத்தை இடையூறுகளுக்கு அஞ்சி விட்டுவிடுவது ஆண்மையற்ற செயலாகும். இடையூறு செய்பவனிடம் சினம் கொள்வதும் ஆண்மை யற்ற செயலாகும். யுத்தத்திலிருந்து பயந்து ஓடுவதும் துரோகம். உலகத்தார் அனைவரும் உனக்குச் சுற்றந் தானே?

**161.** உன்னை ஒருவன் இகழ்ந்தானென்று வைத்துக் கொள்வோம். அது அவனையே பாதிக்கும். அதன் பொருட்டு, உன் செயலும் பேச்சும் இகழ்ச்சிக்கு இடமாகக் கூடாது. ஒருவன் உன்மேல் பகை கொண்டானென்று வைத்துக்கொள்வோம். அதுவும் அவனையே பாதிக்கும். உன் உள்ளத்தில் அவனிடம் அன்பு வைத்து, அவனுக்கு உண்மையை எடுத்துக் காட்ட வேண்டும். அதிலும் அவன் குற்றத்தை அதிகமாக வற்புறுத்தி, அவன் மீது பழி சுமத்த வேண்டாம். உன்னுடைய பொறுமையையும் பெரிதாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். மனதார அவனுக்கு உதவி செய்து அவன் எண்ணத்தை மாற்றி, அவனுக்கு நன்மை செய்ய முயற்சிப்பாய். உன் உள்ளத்தில் கோபம் குற்றம் இரண்டுமில்லாமல் பரிசுத்தமாயிருப்பதைக் கடவுள் காணுமாறு வைத்துக் கொள்ள வேண்டும். உன் தருமத்திற்குத் தகுந்தபடி நீ நடந்து கொண்டால் உனக்கு யாதொரு குறையும் உண்டாக இடமில்லை.

**162.** நம்முடைய சுகம் உள்ளத்திலேயே இருக்கிறது. ஆன்மாவைப் பாதிக்காத விஷயங்களை நாம் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும். எதையும் நன்றாய் விவகரித்து உலகம் முழுவதையும். கருத்தில் வைத்துப் பகுத்தறிய வேண்டும். புறப்பொருள் எதுவும் மனத்தைத் தானாகவே பாதிக்க முடியாது. உன் மனத்தில் உண்டாகும் எண்ணங்

களுக்கு நீயே அதிகாரி. புறப்பொருளால் உண்டாகும் எண்ணங்களை மாற்றி, வேறு எண்ணங்களைக் கொள்ள உனக்குச் சக்தி உண்டு. இவ்வாறு புறப் பொருள்களால் பீடிக்கப்படாமல் மனத்தைக் காக்கவேண்டிய காலவரையும் கொஞ்சமே. சீக்கிரத்தில் உயிர் நீங்கி விடுதலையடைவோம். அதுவரையில் மனத்தைத் தடஸ்தமாக இருக்கச் செய்வதில் அதிக வருத்தமில்லை. இயல்பாக நடந்த விஷயங்களைப் பற்றி ஏன் மனம் வருந்த வேண்டும்? இயல்புக்கு மாருக நடந்தவைகளானுல் உன்னுடைய பிறப்பின் தருமத்தை நினைவில் வைத்துக்கொண்டு அதன்படி நட. அவனவன் நடத்துவதே நெறியாகும்.

**163.** மனத்தில் கோபம் உதிக்கும்போது இந்த விஷயங்களை நினைவூட்டிக்கொள்ள வேண்டும் முதலாவது: மனிதர்களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் யார்? ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து வாழ்வதற்கல்லவோ பிறந்தோம்? பசுக் கூட்டத்தை முன் சென்று நடத்தும் ரிஷபம் போல் அல்லவோ நீ அமைந்திருக்கிருய். வழிகாட்டி நடத்துவதற்குப் பதில் சினம் கொள்ளலாமா? உலகம் வெறும் அணுத்திரளா? தற்செயலா? அல்லது, அனைத்தையும் நடத்தும் பரம்பொருள் ஒன்றுண்டா? அனைத்தும் ஒன்றுபட்டல்லவோ வாழ வேண்டும்? கீழது மேலுக்கும், மேலது கீழுக்கும் துணை செய்து வாழவே படைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது: யார்மேல் நீ சினம் கொள்கிருய்? அவர்கள் சுபாவத்தை நீ அறியாயா? அவர்கள் சாப்பிடுவது என்ன? உறங்குவது எப்படி? அவர்கள் மனோபாவங்கள் எல்லாம் என்ன? அவர்களுக்குள்ள அகங்காரமும் அறியாமையும் உனக்குத் தெரியுமே.

மூன்ருவது: இவர்கள் செய்தது சரியா? தவரு? சரியாயிருந்தால் சினம் கூடாது. தவருயிருந்தாலும் அறியாமையாலல்லவோ செய்தார்கள். அறிந்து செய்திருந்தாலும் மனம் ஒவ்வாமல்தான் செய்திருக்கிருர்கள். சுபாவத்





தில் எவனும் சுதந்திரமாய்த் தவறு செய்ய மாட்டான். ஆகையால், அவர்களைப் பழிப்பது தவருகும். எந்தக் காரணங்களால் அவர்கள் நெறி தவறினுர்களோ, அக் காரணங்களைத்தான் பழிக்க வேண்டும்.

நான்காவது: நீயே எத்தனை விஷயங்களில் தவறியிருக்கிருய்? அவர்களைப்போல் நீ பிழை செய்யாமல் தப்பியிருந்தபோதிலும் அது என்ன பெரிதாகுமோ? பிழை செய்யும் எண்ணம் உனக்கும் இல்லையோ? பயந்தோ, அல்லது உலகத்தார் பழிக்கு அஞ்சியோ, அல்லது வேறு இதைப் போன்ற சிறு காரணத்தாலேயோதான் நீ பிழையிலிருந்து தப்பி நிற்கிருய்.

ஐந்தாவது: அவன் பிழை செய்தானென்று உனக்கு எப்படித் தெரியும்? ஒரு செயலுக்குப் பல காரணங்கள் உண்டு. மற்றொருவன் செய்தது தவறு என்று நிச்சயிக்க எவ்வளவோ விஷயங்களை ஆராய வேண்டும்.

ஆருவது: அதிகக் கோபம் உண்டாகும்போதும், பொறுமை இழக்கும்போதும் ஒன்றை நினைவூட்டிக்கொள். மனிதனுடைய ஆயுள் மிகச் சிறியது. சில நாட்கள் கழிந்த பின் அனைவரும் இறந்தவர்களாவோம்.

ஏழாவது: உன்னை எது துன்புறுத்துகிறது? அவர்கள் செய்த செயல் அல்ல. அவைகளைப்பற்றி நீ கொண்ட எண்ணங்களே உன்னை வருத்துகின்றன. புறப்பொருள் உன் ஆத்மாவைத் தீண்டாது; அவர்கள் செய்த செயல் அவர்களைத்தான் பாதிக்கும். உன் எண்ணங்கள் உன்னைப் பாதிக்கும்; உன்னை ஒரு செயல் துன்புறுத்துகிறதென்று எண்ணுங் காலத்தில், அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள முயற்சிசெய். கோபம் தாஞகவே போய்விடும். மற்றொருவன் செய்த பிழை உன் ஆத்மாவைத் தீண்டாது. அது உனக்கு ஒரு தீமையும் விளைவிக்காது. மற்றவர்கள் செய்த தீங்குகளால் நீ ஒரு திருடனுகவாவது, துஷ்டனுகவாவது போய் விடுவாயா?

எட்டாவது: எதை நீ தீங்காக நினைத்து வருந்துகிறாயோ, அதைக் கண்டு சினங்கொள்வதும் வருந்துவதும் அதைவிடப் பன்மடங்கு தீங்கு உனக்கு.

ஒன்பதாவது: அன்பே வெற்றி யடையும். அதை எதுவும் வெல்ல முடியாது. ஆனால், உண்மையான அன்புக்குத்தான் அந்த வல்லமை. வெறும் நகைப்புக்கும் நடிப்புக்கும் அந்தச் சக்தி கிடையாது. உன் உள்ளத்திலுள்ள அன்பு குறையாமல் சமயம் வாய்த்தபோது இன் சொல்லால் புத்தி கூறிவந்தால் எவ்வளவு வெறுப்புக் கொண்டவனும் உன்னை என்ன செய்யக் கூடும்? அவன் தீங்கிழைத்த போதெல்லாம் "தம்பீ, வேண்டாம். நாம் கூடப் பிறந்தது எதற்கு? நீ செய்வது என்னைப் பாதிக்காது. அது உனக்கே தீங்காகும்" என்று அவனுக்குச் சொல்லுவாய். இதை அவனுக்கு உண்மை அன்புடன், மனத்தில் எவ்விதக் கசப்புமின்றிப் பரிகாசமும் பழிச் சொல்லும் இல்லாமல் அவனுக்குச் சொல்லி வழிகாட்ட வேண்டும். பிரசங்கம் செய்வதுபோலவாவது பக்கத்தில் நின்று கேட்பவர்கள் உன்னைப் புகழ்வதற்காகவாவது உபதேசம் செய்ய வேண்டாம். தனியே நின்று ஆன்மாவுடன் ஆன்மா சம்பாஷிப்பதுபோல் பேசுவாய்.

இந்த ஒன்பது விஷயங்களையும் தெய்வம் தந்த வரங்களாக மதித்து, நினைவில் வைப்பாயாக. உயிருள்ளபோது மனித தர்மத்திற்கு இழைய வாழ முயல்வாய். மனிதர்கள் மீது சினம் கொள்ளக் கூடாது. அதுபோலவே அவர்களைப் பொய்யாகவும் புகழ வேண்டாம். இரண்டும் தீங்கிழைக்கும்; இரண்டும் அபகாரமாகும்.

சினம் கொள்வது ஆண்மை யாகாது. பொறுமையும் இன்சொல்லுந்தான் ஆண்மை. அதுவே வீரம். சினம் கொள்பவன் ஆற்றலும் தைரியமும் இல்லாதவன். எந்த அளவுக்கு மனம் கலங்காமல் இருக்கிறாயோ, அந்த அளவுக்குச் சக்தி யுண்டாகும். ஆண்மையற்றவனே துயரப்படுவான். அவனே சினங்கொள்வான். துயரமும் சினமும் கொள்பவன் கஷ்டத்தைத் தாங்கி நிற்க மாட்டாதவன்.





பத்தாவதாக, இதையும் மனத்தில் வைத்துக்கொள்வாய். மதியற்றவர்கள் பிழை செய்வது இயல்பு. அவர்கள் பிழை செய்யாமல் இருப்பார்களென்று எதிர்பார்ப்பது உன்மத்தமாகும். மற்றவர்களிடம அவர்கள் மதியீனமாக நடந்து கொள்ளும்போது அதைப்பற்றி நீ வருத்த மடைவதில்லை உன்னிடம் மாத்திரம் அவர்கள் வேறுவிதமாக நடப்பதாய் எதிர்பார்ப்பது பெருங் குற்றமல்லவா?

**164.** உன் உடலில் கலந்து நிற்கும் பூதப்பொருள்களில், நெருப்பும் வாயுவும் மேலே சென்று மறைந்துபோகும் இயல்புடையன வாயினும், உன் உடலைவிட்டுப் பிரியாமல் இட்ட இடத்தில் அவை நிற்கின்றன. அவ்வாறே நீரும் மண்ணும் கீழே சென்று நீருடனும் நிலத்துடனும் கலந்து போகாமல், உன் உடலில் அவைகளின் இயல்புக்கு மாறாய் நிற்கின்றன. இவ்வாறு பூதப்பொருள்களெல்லாம் எந்தக் கருமத்திற்கு எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த இடத்தில் நின்று அக்கருமத்தை நடத்துகின்றன உடலினின்று உயிர் நீங்கிக் கலைந்துபோகும் நாள்வரையில் தங்கள இயல்பைத் தடுத்துக்கொண்டு பரம்பொருளின் ஆட்சிக்கு அடங்கி நிற்கின்றன. இப்படியிருக்க, உன் புத்தி மாத்திரம் ஏன் சொல்லுக்கு இணங்காமல் வருந்துகிறது? தனக்கு இட்ட இடத்திலேயே இருக்கமாட்டேன் என்கிறது? பூதப்பொருள்களைப் புறப்பொருள் தாக்கும். மனத்துக்கோ புறப்பொருள் தாக்காமல் தன் தருமத்திற்கு இசைந்து நடக்கும் சுதந்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் தருமத்தில் நிற்காமல் மாறுகச் செல்கிறது. இதுதான் வியப்பு. அநீதியைச் செய்வதும் அடக்கமின்மையும் கோபமும் பயமும் தெய்வத்தின் அதிகாரத்தை மீறி நடப்பதேயாகும். நேர்ந்த ஒரு சம்பவத்தைக் கண்டு துக்கப்படும் மனம், தனக்கிட்ட வேலையைச் செய்யாமல், தெய்வத்தின் அதிகாரத்தை மறுப்பதாகும். பொறுமையும் பக்தியும் சத்தியமும் ஆன்மாவுக்கு இன்றியமையாத கடமையாகும்.

**165.** உனக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால்தான் பிறருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாம். ப

நாட்கள் சிக்ஷைக்கு உட்பட்ட பின் அல்லவோ பிறருக்குச் சொல்லித் தர முடியும்? நல்வாழ்வு போதிப்பதும் இவ்விதமே. பகுத்தறிவு புகட்டுவதைவிட நல்வாழ்வு புகட்டுவது எளிதல்ல.

**166.** நீ எதற்காக வருத்தப்படுகிறாய்? உனக்கு வேண்டியதை யெல்லாம் எளிதில் அடையலாம். கழிந்ததை மறந்துவிடு. வருவனவெல்லாம் தெய்வத்தின் ஆதீனமென்று அதைப்பற்றிய கவலையை ஒழி. நீ கவனிக்க வேண்டிய காலம் நிகழ்காலமே. அதில் பக்தியும் நீதியும் கொண்ட வாழ்வை நடத்த முயல்வாயாக. பக்தி என்றால் உனக்கு நேர்ந்ததை யெல்லாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்வதுதான் உண்மையான பக்தி. நீதி என்றால் உண்மையை மறைக்காமல் பேச வேண்டும். தருமம் தவறாமல் நடக்க வேண்டும், பிறன் ஒருவன் செய்த தவறு, அல்லது சொன்ன சொல், அல்லது நினைத்த எண்ணத்தைக் கருதி உன் செயல் வேறுபடக் கூடாது. உடலுக்கு என்ன நேர்ந்தாலும் உன் செயலும் எண்ணமும் பேச்சும் தருமத்திலிருந்தும் உண்மையிலிருந்தும் தவறாமல் நிற்கவேண்டும். மரணம் நெருங்கி யிருக்கிறது என்பதை அறிந்து ஆன்மாவின் நலத்தையே பெரியதாகக் கருதி, மற்றவர்களை யெல்லாம் பொருட்படுத்தா மலிருக்க வேண்டும். தருமத்திற்கு மாறாக நடப்பதே கேடு என்னும் ஒரு பயத்தை மட்டில் வைத்துக் கொண்டு, மரணத்தைக் கண்டு பயப்படாமல் வாழ்வாயாக. அப்போது உன் ஜன்மம் பயன் பெற்றதாகும். எந்தச் சம்பவத்தைக் கண்டும் திகைக்க மாட்டாய். புறப்பொருளின்மேல் உன் மனத்தை நிறுத்த மாட்டாய். எந்த உலகத்தில் நீ ஒரு பகுதியாகப் பிறந்தாயோ அந்த உலகத்தினின்றும் வேறுபட்டுத் தேசப் பிரஷ்டனைப் போல் அலைய மாட்டாய்.

**167.** மறைந்து கிடக்கும் நம்முடைய எண்ணங்களைத் தெய்வம் நேரில் காண்கிறது. தன்னிலிருந்து உண்டான





ஆன்மாக்களுடன் தெய்வத்தின் உள்ளம் எப்போதும் கலந்து நிற்கும். நீயும் கவலையற்று அறிவுடன் வாழ விரும்பினால், ஆன்மாவை மறைக்கும் உடலை மறந்து, உள்ளே நிற்கும் மெய்ப்பொருளைப் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும். உடலை மறந்து ஆன்மாவை நோக்கும் ஒருவனுக்குத் துணியும், மணியும், வீடும், மாளிகையும், புகழும், செல்வமும் அதிகாரமும், மற்ற நாடக வேஷங்களும் தாமாகவே மறைந்து போகும்.

**168.** பயனற்ற செயல் செய்ய வேண்டாம். செய்வதெல்லாம் நற்பயனைக் கருதிச் செய். நற்பயன் என்பது ஜனங்களுக்கு உபகாரமாகும் தன்மை.

**169.** விரைவிலேயே நீ உடலை விட்டுப் பிரிந்து விடுவாய். இப்போது உன்முன் நிற்கும் பொருள்களில் எதுவும சாசுவதமல்ல. எல்லாம் அழிந்துபோகும். பிரகிருதியில் ஒவ்வொரு பொருளும் அவ்வப்போது அழிந்துபோய், வேறு பொருள் உண்டாவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறது.

**170.** உன்னைப் பொறுத்த மட்டில் உலகமெல்லாம் உன் எண்ணத்தைத் தவிர வேறில்லை. உன் எண்ணம் உன் சுதந்திரத்தில் முற்றிலும் இருக்கிறது. இந்த உண்மையை அறிந்து, உன் உள்ளத்தை அடக்கி ஆண்டு, சாந்தியை அடைவாயாக.

**171.** சகல சுகமும் துக்கமும் விருப்பமும் உள்ளத்தில் உதிக்கும் எண்ணம் தவிர வேறு இல்லை. துக்கம் வந்தபோது இவைகளை நினைவிற்குத் தந்துகொள்: எல்லாம் உலகம் நடைபெறுவதற்காகவே நடக்கின்றன. ஒருவன் செய்த பிழை அவனையே பாதிக்கும்; உன்னைப் பாதிக்காது; புதிதாக ஒன்றும் இல்லை. இப்பொழுது உனக்கு நேரிட்டதைப்போல் முன்பும் நேரிட்டதே. இந்த க்ஷணத்தில் வேறு பலருக்கும் நேரிட்டிருக்கிறது. மானிடர் எல்லோரும் ஒரு குடும்பம். அவர்களுடைய உறவு மிக நெருங்

கிய உறவாகும். அது உடல் சம்பந்தமல்ல. உயிருக்கு உயிருடனுள்ள பாந்தவ்யம். உடலில் நிற்கும் உள்ளமானது தெய்வத்தினின்று உற்பத்தியான பொருள். அது தேவாம்சம் உன்னுடையது என்பது ஒன்றுமில்லை. உடலும் மகனும் மகளும், உயிரும் கடவுளினின்று வந்த பொருள்கள். எல்லோரும் அவருடைய பொருள்களேயாவர்.

**172.** கழிந்ததும் வருவதும் மனிதனுடைய காலமல்ல. தற்காலமே மனிதனுக்கு உரித்தான காலம். அதை அவன் வீணாக்குகிறான். தன் வசமில்லாத முதலிரண்டைப்பற்றி வருந்தியும் கவலைப்பட்டும் தன் வசமுள்ள காலத்தை வீணாக்குகிறான்.

**173.** எதைப்பற்றியாவது மிக்க கவலைகொண்டவர்களையும், கஷ்டப்பட்டவர்களையும், பெரிய புகழ் பெற்றவர்களையும் நினைத்துப் பார். அவர்கள் எல்லோரும் இப்பொழுது எங்கே? அவர்களுடைய பெருமையும் பகைமையும் இப்பொழுது எங்கே? புகையும் சாம்பலுமாய்ப் போன ஒரு கதைதான். அக் கதையைக்கூடச் சிலர்தான் சொல்லுகிறார்கள்; அதுவும் விரைவில் மறக்கப்படும்.

**174.** பல விஷயங்களைப் பற்றிக் கவலைப் படுவதில் என்ன பயன்? கடவுளுக்கு அடியனாகி நீதியும் அடக்கமும் கொண்டு வாழ்வதல்லவோ பெருமை? இவ்வாறு பக்தி கொண்ட வாழ்வை அடக்கத்துடன் வாழவேண்டும். அடக்கம் உள்ளத்தில் இருக்கவேண்டும். புறத்தில் அடக்கங்காட்டி, உள்ளத்தில் அகம்பாவம் கொண்டு இருப்பது அகம்பாவத்திலும் பெரிய அகம்பாவம்.

**175.** 'தெய்வம் தெய்வம் என்று சொல்லுகிறாயே; தெய்வத்தை எங்கே கண்டாய்?' என்று கேட்பார்கள். தெய்வத்தைத் தெய்வத்தின் செயல்களால் கண்ணாலேயே காணலாம். நம்முடைய உயிரைத்தான் நாம் கண்ணால் பார்க்கிறோமா? ஆனால், நாம் அதை உண்டென்று எண்ணி





அதையே பெரிதாக மதித்து, ஒவ்வொரு செயலிலும் அதற்குச் சேவை செய்யவில்லையா? அப்படியே தெய்வத்தையும் அதன் செயல்களினால் எனது அனுபவத்தில் சதா பார்த்து வணங்குகிறேன்.

**176.** வாழ்வைக் காப்பது விவேகம். எப்பொருளிலும் காரியம் எது? காரணம் எது? என்று பார்த்து நியாயமாக நடந்து, சத்தியம் பேசி வந்தால், நெறி பிறழாமல் வாழ்வு நடக்கும்.

**177.** ஒரு சூரியனுடைய ஒளி எங்கும் பரவி நிற்கிறது. சுவரும் மலையும் பல பொருள்களும் குறுக்கே நின்றாலும் வெளிச்சம் ஒன்றே. அவ்வாறே பல்வேறு பொருள்களின் உருவங்கள் தனித்தனியே நின்றாலும் எல்லாம் ஒரு பிரகிருதிப் பொருளே. பலப்பல உயிர்களாகப் பிராணிகள் பிரிந்து பிரிந்து நின்றாலும், அனைத்தும் ஓர் உயிரே. பல ஆன்மாக்களாகக் காணினும் சர்வ வியாபகமான பரமாத்மாவே பல்வேறாகக் காண்கிறது, எல்லாவற்றுள்ளும் ஒரே பரம் பொருள்தான் ஊடுருவி விளங்குகிறது.

**178.** காலம் எல்லையற்றது. அதில் உனக்கு மிகச் சிறிய பாகம் கிடைத்திருக்கிறது. பெரிய பிரபஞ்சத்தில் உன் உடல் எத்துணைச் சிறிய பாகம்? பரமாத்மாவின் அளவு என்ன? அதில் நீ எத்துணை அற்ப பாகம்? நீ நடக்கும் நிலமுங்கூட மகா பெரிய உலகத்தில் எவ்வளவு சிறிய பாகம்? பராசக்தியின் எண்ணத்தை நிறைவேற்றுவதே வாழ்வு; மற்றவை யெல்லாம் அற்பம்.

**179.** உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிப் பயன்படுத்துவதே பெருமை. அதில்தான் சகல நற்பயனும் உண்டு. மற்றவை அனைத்தும் நிலையற்றவை; வெறும் புகையாய்ப் போகும்.

**180.** நீ இவ்வுலகத்தினின்று ஐந்து வருஷம் முன்பு போனால் என்ன? பின்பு போனால் என்ன? எந்தச் சக்தி

உண்டாக்கிறார். அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம்? நாடகத் தலைவன் நடிகனைப் போ என்பதில் என்ன பிழை? "ஐயோ! நாடகம் முழுவதும் ஆடவில்லையே" என்பாய். நாடகம் முடியவில்லையென்பது உண்மை. ஆனால், முடியாத நாடகமே நாடகம். நாடகத் தலைவன் இட்ட முடிவே முடிவு. நாடகத்துக்காவது நாடகத்தின் முடிவுக்காவது நீ தலைவன் அல்லன். ஆகையால், கலங்காமல் உடலைவிட்டு நீங்குவாயாக. சாந்தி அடைவாய். தெய்வமே சரண்!

## முற்றும்

110211